


கவிச்சித்தரின்

# கார்கில் கதை

க.பொ.இளம்வழுதி



கவிச்சித்தர்

# க.பொ. இளம் வழுதி

அவர்களின் படைப்பு வரிசை

## கவிதைகள்

- சிவப்பு நிலா
- குறு நூறு
- சிவப்புச் சிந்தனைகள்
- வண்ணத் தமிழ்
- வேர்கள்
- ஆண்டவன் அறுபது
- நிறங்கள்
- சில்லுகள்
- வாக்குமூலம்

## வரலாறுகள்

- வெற்றியின் அறிமுகம்
- இலக்கை நோக்கி
- வைகறைப்புள்

## பிற நூல்கள்

- ஆரங்கள்
- தமிழைத்தேடி

கவிச்சித்தரின்

# கார்கில் கதை

க. பொ. இளம்வழுதி

மீனா புத்தகப் பண்ணை
29, வில்லியம் லே-அவுட்,
இரண்டாவது தெரு, கே. கே. ரோடு,
விழுப்புரம்—605602.
போன் : 23375, 24424

# நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கவிச்சித்தரின் கார்கில் கதை |
| ஆசிரியர் | : | க. பொ. இளம்வழுதி |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | போர் வரலாறு |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 1999 |
| (C) உரிமை | : | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | : | 10.5 வெள்ளைதாள் |
| நூலின் அளவு | : | 1×8 கிரௌன் |
| எழுத்து | : | 10 புள்ளி |
| பக்கங்கள் | : | 216 |
| கட்டு | : | சாதா அட்டைக் கட்டு |
| நூல் வெளியிடுவோர் | : | மீனா புத்தகப் பண்ணை<br>29, வில்லியம் லே-அவுட்<br>இரண்டாவது தெரு,<br>கே. கே. ரோடு,<br>விழுப்புரம்-605602. |

---

| | | |
|---|---|---|
| விலை | : | ரூ. 47-00 |

---

| | | |
|---|---|---|
| அச்சிட்டோர் | : | வெற்றி அச்சகம்<br>91, டாக்டர் பெசன்ட் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14.<br>தொலைபேசி எண் : 8550759 |

# பதிப்பின் நோக்கம்

கவிச்சித்தர் க. பொ. இளம்வழுதி அவர்களின் படைப்புக்கள் ஒவ்வொன்றும் தனித்தனி சுவையும் பயனும் நல்கிப் படிப்போர் நெஞ்சுள் பதியம் போட்டுக் கொண்டிருப்பவை.

எது தேவையோ, அதைத் தேர்ந்தெடுத்து எழுதுவது அவருடைய தனித்தன்மை.

கவிதைதான் அவருடைய களம். அவர் பெற்ற வெற்றி களின் (சிறந்த நூல்களுக்கான பரிசுகள்) தளமும் அது தான். 'சிவப்பு நிலா' தொடங்கி 'வாக்கு மூலங்கள்' வரை கவிதை நூல்களையே படைத்தளித்தவர். முதன்முதலாக 'வெற்றியின் அறிமுகம்' என்னும் வாழ்க்கை வரலாற்று நூலைப் படைத்தார். அதை வெளியிட்டு மகிழ்ந்தோம்.

மக்களிடையே நாட்டுப்பற்றுக் கனல் பற்றிப் படர்ந்திட பொரியாக இருந்தது, நடந்து முடிந்த கார்கில் போர். அது நமக்குச் செய்தி! வருங்காலத்தவர்களுக்கு அதுவே வரலாறு. (கருத்து. முரசொலி).

மாணவர்களிடையே வரலாற்றுணர்வைத் தூண்டப் பயன்படும் இந்நூலை, வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டுமென்பதே, வெளியீட்டின் நோக்கம்.

விழுப்புரம்

பதிப்பகத்தார்

# நூல் வாயில்

கதை கேட்பதும், கூறுவதும், சிறுவர் முதியவர்களுக் கிடையில் மகிழ்ச்சிப் பாலம் கட்டும் உறவு நேரம். உறவுகள் வாழும் வரை கதைகள் பிறந்து கொண்டும், வாழ்ந்து கொண்டுந்தானிருக்கும். ஆனால் காலத்திற்கேற்ப சிறுவர் களுக்குக் கூறும் கதைகள் மாற வேண்டும். எத்தனை காலத்திற்குத்தான் 'முயலும் ஆமையும்' கதையையே கூறிக்கொண்டிருப்பது? அறிவியல் வளர்ந்து ஆகாயத் தையே அளந்து கொண்டிருக்கும் காலத்தில், ஊதல் ஒலி கேட்கும் தூரம் ஓடுவதற்குள் முயல் தூங்கி எழுவதாகக் கூறுவதும், அதை அப்படியே இந்தக் காலக் குழந்தைகள் எதிர்க் கேள்வி கேட்காமல் கேட்டுக் கொள்ள வேண்டும் என எதிர்பார்ப்பதும் பெரியவர்கள் செய்யும் பிழை!

புதுசுகளைத் தேடி சிறுவர்களின் சிந்தைதான் அலை கிறதேயன்றி, பெரியவர்கள் என்னவோ இன்றும் தேய்ந்த பாட்டையேத் தேடித் தேடி நடந்து கொண்டிருக்கிறார் கள்! அதனால்தான் இங்கே மக்கள் தொகை மட்டுமே வளர்ந்து கொண்டிருக்கிறது. இதுவே நிலைமை என்று நீடித்தால் அறிவியல் கண்டுபிடிப்புக் கணக்கு மட்டில் எண்ணிக்கை ஏணியில் ஏறமுடியாமல் தளர்ந்து விழுந்து கொண்டிருக்கிறது. ஏற்றிவிட வேண்டும் என்று எண்ணு பவர்கள்தாம் குறைவாக இருக்கிறார்கள்!

கட்சிகளில் இளைஞர் அணியில் நாற்பது வயது வரை பதவி வகிக்கலாமாம். சிறுவர் என்பதற்கும் அப்படி வயது வரம்பு ஏதாவது இருக்க வேண்டுமே? அதற்கான ஆதாரத்தை நான் அரசியல் சட்டத்தில் தேடவில்லை. நவம்பர் 14—குழந்தைகள் தினமல்லவா? அதனால் பதினான்கையே சிறுவர்களுக்கான வயது வரம்பாக எண்ணிக் கொண்டேன். ஒரு மாறுதலுக்காக என்றில்லாமல், வருங்காலத் தலைமுறைக்கு வரலாறு தெரிந்திருக்க வேண்டும், அது அவர்களுடைய நாட்டுப் பற்றை வளர்க்கத் துணை செய்யும் என்ற நம்பிக்கையோடுதான் கார்கில் கதையைக் கூறியிருக்கிறேன்.

கனமான செய்திகளைச் சிறுவர்களால் உள்வாங்கிக் கொள்ள முடியுமா என்றெல்லாம் நான் அதிகமாக எண்ணிக் குழம்பவில்லை. காரணம் இக்காலச் சிறுவர்களின் அறிவுக் கூர்மையிலும், எதையும் புரிந்து கொள்ளும் ஆற்றலிலும் நம்பிக்கையுள்ளவன் நான். நமது நாளைய மதிப்புத்தான் அன்றைக்கு இன்று குறைந்திருக்கிறதேயன்றி அறிவு மட்டும் வளர்ந்து கொண்டுதானிருக்கிறது. பெரியவர்கள்தாம் இன்னும் எவ்வளவோ வளர வேண்டியிருக்கிறது, எண்ணத்தில்.

கார்கில் கதை, சிறுவர்களுக்காகத்தான் கூறப்பட்டதென்றாலும், பெரியவர்களும் கேட்டு வைக்கலாம். நாட்டுப் பற்றுக்கு வயது வரம்பு இல்லையல்லவா? படிக்க வேண்டுமென்பது விருப்பத்திற்குட்பட்டது. ஆனால் நாட்டுப் பற்று...?

இந்த நூலை வெளியிட உவந்து முன் வந்த பதிப்புச் செம்மல் திரு. மு. இலட்சுமணன் அவர்களுக்கும், திருத்தம் பார்த்துதவிய கடலூர் செந்தமிழ்ச் சோலை இலக்கிய அமைப்பின் தலைவர், புலவர் இரா. அரங்கநாதன் இல.இ.

அவர்களுக்கும், நூலை உருவாக்க உழைத்த அனைத்துத் தொழிலாளத் தோழர்களுக்கும் நன்றி.

அட்டைப் படத்தை அழகுற அமைத்துக் கொடுத்த ச. அன்பரசன் அவர்கட்கும் நன்றி.

கார்கில் போரில் இன்னுயிர் துறந்து வரலாற்றில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமது படை வீரர்களுக்கு இந் நூலைப் படைத்து அமைதிகொள்கிறேன்.

38, அண்ணாநகர்
கடலூர்-607001
பேசி : 04142-21222.

க. பொ. இளம்வழுதி

## கவிச்சித்தரின்

# கார்கில் கதை

## தாத்தா வந்தார்

கூடத்தில் தொலைக் காட்சிப் பெட்டித் திரையில் காட்சிகள் மாறிக் கொண்டிருந்தன. பார்வை ஏதும் பதியா திருந்தாலும், நிகழ்ச்சியின் ஒலி மட்டில் செவிகளை நாடிச் சென்று கொண்டிருந்தது. ஆம் அப்போது தொலைக் காட்சி நிகழ்ச்சியை யாரும் பொருட்படுத்திப் பார்த்துக் கொண்டிருக்க வில்லை. மலர்விழி ஏதோ படித்துக் கொண்டிருந்தாள். மணிவண்ணன் எழுதிக் கொண் டிருந்தான். ஆசிரியர் கொடுத்த வீட்டுப் பாடமாக இருக்கலாம். வாண்டுகளான முத்துவும், முல்லையும் கூடத்திலிலேயே அடிபிடி (கிரிக்கெட்) ஆட்டம் ஆடிக் கொண்டிருந்தனர். அவர்கள் போட்ட கூச்சலில், தொலைக் காட்சியின் ஒலி, எடுபடாமல் இருந்தது. அடுப் பறையில் அம்மா வழக்கம் போல் சமையல் வேலையில், ஈடுபட்டிருந்தாள். மின் தடையால் தொலைக் காட்சி 'இச்' என்ற ஒலியுடன் ஓய்வெடுத்துக் கொண்டது. அடுத்த நொடி யார் டி. வி.யை நிறுத்தியது என்று எல்லாருமே ஓரே நேரத்தில் குரல் எழுப்பினார்கள்.

தேவையில்லா விட்டாலும் இப்படி ஒன்றைத் தேடி வைத்துக் கொள்வது நமது வழக்கமாகி விட்டது. எல்லா ரும் கேள்வி எழுப்பியது அம்மா மட்டுந்தான் அடுப்பறையி லிருந்து எட்டிப் பார்த்து விட்டு (Current cut) மின்சாரம் இல்லை. என்று நின்றும், நிற்காமல் தள்ளாடிய மின் விசிறியைக் காட்டினாள். ஆமாம் என்று குரல் கொடுத் தனர் அனைவரும்.

தெரு வாயிலில் மூன்று சக்கர வண்டி வந்து நிற்கும் ஒலி கேட்டது. மலர் விழியும், மணிவண்ணனும் உட்கார்ந் திருந்த நிலையிலேயே நிமிர்ந்தும், வளைந்தும் தெருப் பக்கம் பார்த்தனர். முல்லையும் முத்துவும் தெரு முகப் பறைச் சீலையை விலக்கிய படி ஓடினார்கள். அவர்கள் வெளியே வரவும், தாத்தா வண்டிக்கு வாடகையைக் கொடுத்து விட்டு மதிற் கதவைத் திறக்கவும் சரியாக இருந்தது. தாத்தாவின் கையில் இரண்டு மூன்று பைகள்!

முல்லையும் முத்துவும் மகிழ்ச்சி பொங்க "தாத்தா வந்துட்டாங்கோ" என்று முழங்கியபடி தாத்தாவை நோக்கி வேகமாக ஓடினார்கள்.

"மெல்ல வாங்க! விழுந்து விடப் போறீங்க, என்று பதற்றத்தோடும், பாசத்தோடும் எச்சரித்தபடி தாவி நடந்தார் தாத்தா. முல்லை தாத்தா கையைப் பிடித்த படி தொங்கித் தொங்கி நடந்து வர, முத்து, தாத்தா கையிலிருந்து இரண்டு பைகளைப் பறிக்காத குறையாக வாங்கிக் கொண்டு, தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வாத்தைப் போல் நடந்து வந்தான். தாத்தா வருகையை அறிந்து கொண்ட மலர் விழியும்; மணிவண்ணனும் எழுந்து நின்றார்கள். தாத்தா உள்ளே கால்வைத்ததும் வாங்க தாத்தா என்று வரவேற்றனர். மணிவண்ணன் ஓடிப் பையை வாங்கிக் கொண்டான்.

மலர்விழி அடுப்பறைக்கு ஓடி தாத்தாவின் வருகையை அம்மாவுக்குத் தெரிவித்தாள். கையைப் புடவை முனை

யில் துடைத்தபடி வந்த அம்மா "வாங்கப்பா! என்று வரவேற்று" முல்லை! தாத்தா கையை விடு. தொங்காதே! என்று எச்சரித்தாள். கூடத்தில் தந்தை உட்கார சாய்வு நாற்காலியை இழுத்துப் போட்டாள். அதற்குள் உள்ளே எடுத்து வந்த பைக்குள் என்ன இருக்கிறதென்று ஆய்ந்து கொண்டிருந்தான் முத்து. அதைக் கவனித்த அம்மா அவனை அதட்டினாள்.

"தந்தை உட்காராமல் நின்று கொண்டிருப்பதைப் புரிந்து கொண்ட அன்னம், தந்தைக்குக் கை, கால் கழுவ குவளையில் தண்ணீர் முகந்து வைத்து விட்டு, துடைத்துக் கொள்ள தந்தையிடம் துண்டையும் நீட்டினாள். தந்தை நகர்ந்தவுடன் முத்துவைப் பார்த்து" டேய்! என்ன பழக்கமிது? பையை ஆராயக் கூடாதென்று உனக்கு எத்தனை முறை கூறியிருக்கின்றேன்? என்று மீண்டும் அதட்டிய பின்னரே முத்து பையை விட்டு அகன்று வந்தான்.

தாத்தா கை, கால் கழுவிக் கொண்டு வந்ததும் உட்காரச் சொல்லி விட்டுக் குடிக்க வெந்நீர் கொண்டு வந்து கொடுத்தாள். வியர்க்கும் நேரத்தில் மின்சாரம் இருக்காதே என்று அலுத்துக் கொண்டே உள்ளே சென்று கை விசிறியை எடுத்து வந்து கொடுத்த அன்னம், அப்பா! ஊரில் அண்ணா, அண்ணி, பிள்ளைகள் எல்லாம் நல்லா இருக்காங்களா?" என்றாள்.

"எல்லாம் நல்லா இருக்காங்க, நீங்க எப்படிம்மா இருக்கீங்க?" என்று நலன் உசாவினார் தந்தை.

"நல்லா இருக்கோம் அப்பா! கொஞ்சம் இருங்க என்று கூறிவிட்டு அடுப்பறைக்குப் போனாள் அன்னம்!

எதிரே நின்றிருந்த பெரிய பேரப் பிள்ளைகளைப் பார்த்து "என்ன மலர்விழி! மணிவண்ணன் நல்லா படிக்கிறீர்களா?" என்று வினவினார்.

"படிக்கிறோம் தாத்தா!" என்றனர் இருவரும்.

"மலர்விழி! உங்கள் பள்ளியில் இப்போ தமிழ் கற்றுத் தருகிறார்களா?"

இந்த (Year) ஆண்டுதான் Primary C!ass-2க்கு தமிழ் கற்றுத் தருகிறார்களாம் என்றாள் மலர். "அப்பா இல்லையா? ஞாயிற்றுக்கிழமைதானே. இன்றும் அலுவலகத் திற்குப் போய்விட்டாரா?" என்று கேட்டபடி அருகில் இருந்த கிழமை (வார) இதழை எடுத்துப் பிரித்தார்.

அன்னம் தேநீர் கொண்டுவந்து வைத்து, "சாப்பிடுங் கள் அப்பா!" என்று கூறி நின்றாள். தந்தை தேநீர் அருந்துவதைக் கவனித்தபடி "அப்பா! இருமல் எப்படிப்பா இருக்கு? சித்தப்பா, பெரியப்பா வீட்டில் எல்லாம் நல்லா இருக்காங்களா?" என்று பிறர்நலன் கேட்டாள்.

"எல்லாரும் நல்லா இருக்காங்கம்மா! அவருக்குத் தோள் வலி எப்படி இருக்கு? இன்று விடுமுறைதானே ஓய்வெடுக்காமல் இப்படி உழைத்தால் எல்லா வலிகளும் ஆள்தேடி அலையாமல் இவரிடமே வந்து குடியேறிவிடும்" என்று மருமகன் மீதுள்ள அக்கறையை வெளிப்படுத்தினார் தனகோடி!

"என்னப்பா செய்வது? நான் சொன்னால் அவர் எங்கே கேட்கிறார்? வேலை, வேலை! இதுதான் அவரு டைய வாயிலிருந்து வரும் மந்திரச் சொல். நீங்கள் ஓய்வெடுங்கப்பா! நான் சீக்கிரமா சமையலை முடித்துவிட்டு வந்துவிடுகிறேன்.' என்று கூறிவிட்டு அடுப்பறைக்குள் நுழைந்தாள் அன்னம்.

சற்று நேரத்தில் மருமகன் மாணிக்கவாசகம் உள்ளே நுழைந்தார். பாய்ந்தோடி அப்பாவிடம் தாத்தாவின் வருகையைத் தெரிவித்தார்கள். ஆளுக்கு ஒரு கையைப் பிடித்து அழைத்து வந்தனர் இருவரும். "தாத்தா எங்களுக் குக் கதை சொல்வாரே!... என்றாள் முல்லை.

அப்பாடா! எனக்கு விடுதலை, என்று கூறியபடி கூடத்திற்கு வந்து "வாங்க மாமா? எப்பொழுது வந்தீர்கள்? நான் பத்து மணிக்குத்தான் ஆபீசுக்குப் போனேன். அவசரமான வேலை, கொஞ்சம் வந்துவிட்டுப் போங்க, என்றார் பி.ஏ. அதுதான் போய் வருகிறேன் என்றார் மாணிக்கவாசகம்.

முல்லையும் முத்துவும் படுக்கைக்குப் போகும் நேரத்தை மிக்க ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தார்கள். "தாத்தா வந்திருக்கிறார்— நல்ல கதைகள் சொல்வார்" என்றான் முத்து.

"ஆமாம்! அமாம்! முன்னே சொன்னாரே 'குதிரை முட்டைக் கதை' ரொம்ப சிரிப்பா இருந்துச்சு இல்ல?" என்று கடந்த காலத்தை நினைவுபடுத்தினாள் முல்லை.

"இன்று நல்ல சண்டைக் கதையாகச் சொல்லும்படி கேட்கலாமா?"

"சண்டைக் கதை வேண்டாம். சிரிப்புக் கதைதான் நல்லா இருக்கும்."

முத்து, முல்லை உரையாடலைக் கேட்டபடி எட்டிப் பார்த்த அன்னம், அடுப்பறையில் இருந்தபடியே, "கதை கேட்பது இருக்கட்டும், பொழுது போயிற்றே புத்தகத்தை எடுங்கள்," என்று ஆணையிட்டாள் ஒருவரை ஒருவர் பார்த்து உதட்டைப் பிதுக்கியவாறு புத்தகத்தை எடுக்க ஓடினார்கள் முல்லையும் முத்துவும்.

இரவு ஒன்பது மணி. உணவை முடித்துக் கொண்டார்கள். தொலைக்காட்சியில் செய்தி கேட்டுக் கொண்டிருந்தார் தாத்தா. பொறுமையாகத் தாத்தா பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தார்கள் இருவரும். அன்னம் வந்தாள்—

அப்பா. உங்களுக்குப் படுக்கை போட்டிருக்கிறேன். முல்லை! முத்து! நீங்கள் உங்கள் படுக்கைக்குப் போங்க. தாத்தாவைப் படுக்க விடுங்க என்று அதட்டினாள் அம்மா!

நாங்கள் தாத்தாவோடுதான் படுப்போம். அம்மா வோடு படுக்க மாட்டோம். தாத்தா எங்களுக்கு நல்ல நல்ல கதைகளெல்லாம் சொல்வாங்களே என்றனர் இருவரும்.

தாத்தாவும் அவர்களுக்கு ஆதரவாக "அவர்கள் என்னுடன்தான் படுத்துக் கொள்ளட்டுமே, விடும்மா" என்று கூறி, "வாங்க படுக்கலாம்" என்று எழுந்தார் தாத்தா.

"ஆய்...... தாத்தா கதைச் சொல்லப் போறாங்கோ! என்று கூச்சலிட்டபடி தாத்தாவைத் தொடர்ந்தார்கள் இருவரும்.

போங்க போங்க— அப்புறமா கவனிக்கிறேன் என் றாள் அம்மா சிரித்தபடி.

படுக்கையறைக்குப் போனதும், சரி, படுங்க! என்று கூறி விளக்கை அணைக்கப் போனார் தாத்தா.

தாத்தா, தாத்தா! விளக்கை அணைக்காதீர்கள் கதை சொல்லுங்கள் என்றனர் இருவரும்.

கதையைக் காதுதானே கேட்கப் போகிறது! கண்ணுக்கு வேலை இல்லையே! விளக்கு எதற்கு? என்றார் தாத்தா விளக்கு எரிந்தால் விரைவில் தூங்க மாட்டார்களே என்பது தான் அவர் கவலை.

"சரி தாத்தா, கதை சொல்லுங்கள்." என்று உடன் பாட்டுக்கு வந்தார்கள் இருவரும்.

"தாத்தா பேய்க் கதை கூறுங்கள்! என்றான் முத்து. "பேய்க் கதை வேண்டாம். பயமா இருக்கும். சிரிப்புக் கதையே சொல்லுங்கள் தாத்தா என்றாள் முல்லை.

"சண்டைக் கதை கூறுங்கள்" என்று மாற்றுத் திட்டம் கொடுத்தான் முத்து.

"தொலைக்காட்சியில்தான் நிறைய சண்டைக் கதை காட்டுகிறார்களே, இதில் நான் வேறு சண்டைக் கதை கூற வேண்டுமா?" என்றார் தாத்தா.

"சரி தாத்தா, நீங்களே ஒரு நல்ல கதையாகக் கூறுங்கள்! என்றாள் முல்லை.

அப்பொழுது உள்ளே நுழைந்த மணிவண்ணன் "தாத்தா! கார்கில், கார்கில் என்கிறார்களே, அந்தச் சண்டையைப் பற்றிக் கூறுங்களேன். என்றான்.

"சரி அதையும் நீங்கள் தெரிந்து வைத்துக் கொள்வது நல்லதுதான். கார்கில் கதையையே கூறுகிறேன். சரி தானே?" என்றார் தாத்தா.

இருங்க தாத்தா நான் அக்காவையும் கூட்டி வருகிறேன். என்று ஓடினான் மணிவண்ணன். சிறிது நேரத்தில் இருவரும் தலையணையுடன் வந்து ஒரு புறமாகத் தரையிலேயே படுத்துக் கொண்டார்கள்.

நான் கூறப்போவது நடந்த கதை உண்மையான கதை, சூடாக நடந்து முடிந்த கதை இது. கவனமாகக் கேளுங்கள் என்று கதையைத் தொடங்க ஆயத்தமானார்.

"சொல்லுங்க, சொல்லுங்க—சீக்கிரம் சொல்லுங்க!... என்று அவசரப்படுத்தினார்கள் சிறுவர்கள்.

"பாரதநாடு தெரியுமா?"

தெரியுமே!" பாருக்குள்' ளே நல்ல நாடு

நம் பாரத நாடுன்னு கூட பாட்டு வருதே அது தானே தாத்தா?

"ஒரு அம்மா தலையிலே முடி வைத்துக் கொண்டு காலை சேர்த்து வைத்துக்கொண்டு, கையை இப்படி வைத்

தாற்போல் படம் புத்தகத்தில் இருக்கே அது தானே தாத்தா?'

ஆமாம். பாட்டாசு, படமாக எல்லாம் நம் நாட்டை அடையாளம் காட்டிக் கற்பிப்பார்கள்.

''பாரத நாடும், இந்தியாவும் வேறு வேறா தாத்தா?''

''இரண்டும் ஒன்றுதான்.''

''நாடு என்றால் என்ன தாத்தா?''

''நாம் வாழ்கிறோமே இது வீடு! இப்படிக் கோடி கணக்கான வீடுகளைக் கொண்டது நாடு.

''நாடுன்னா வீடு மட்டுந்தானா?''

வீடு, அதில் வாழும் மக்கள். வீடுகள் உள்ள ஊர் அதைச் சார்ந்த காடு, மலை, நதி—அவற்றுள் வாழும் உயிரினங்கள் அதாவது விலங்குகள் எல்லாம் அடங்கிய பகுதிதான் நாடு.

தாத்தா தாத்தா இந்தக் கதைக்குப் பெயர் என்ன? முல்லை கேட்டாள்.

''அதுதான் அப்பவே சொல்லிட்டாங்களே கார்கில் கதைன்னு'' மணிவண்ணன் குறுக்கிட்டுக் கூறினான்.

நீ—சும்மா இரு எங்களுக்குத் தாத்தா சொல்லட்டும். என்றான் முத்து.

நானே கூறுகிறேன். 'கார்கில் கதை'!

''கார்கில் கதையா? புதுசா இருக்கே? வெளி நாட்டுக் கதையா தாத்தா?''

கதையில்கூட வெளிநாட்டு மோகந்தானா? இது வெளி நாட்டுக் கதை இல்லை. நம் நாட்டுக் கதை நமக்கும், பக்கத்து நாடான—பாக்கிஸ்தான்காரர்களுக்கும் நடந்த சண்டை குறித்த கதை.

"சண்டைக் கதையா? சரி சரி சொல்லுங்க முல்லை இனி குறுக்கே பேசக் கூடாது. தாத்தா கதை சொல்லட்டும்."

இந்தக் குட்டிச்சாத்தான்கள் இன்று கேட்டுக் கொள்ளட்டும்—நாம் நாளைக்குக் கேட்டுக் கொள்ளலாம்." என்று கூறி எழுந்தாள் முல்லை.

"நானும் வருகிறேன். இதுகளோடு நம்மால் கதை கேட்க முடியாது" என்று முத்துவும் எழுந்தான்.

போங்க, போங்க, தாத்தா எங்களுக்குத்தானே கதை சொல்ல வந்தாங்க. நீங்க ஏன் வந்தீங்க? என்று வினா தொடுத்து உரிமை கொண்டாடினான் முத்து.

"நாளைக்கு நாங்க பார்த்துக் கொள்கிறோம். என்று கூறிவிட்டு வெளியேறினான் மணிவண்ணன். மலர்விழியும் அவனைத் தொடர்ந்து வெளியேறினாள்.

சட்டமன்றத்தை நினைத்துக் கொண்டாளோ என்னவோ தாத்தா சிரித்துக் கொண்டார்.

நீங்க சொல்லுங்க தாத்தா! நாங்க கேட்கிறோம். என்றனர் முல்லையும் முத்துவும்.

"கவனமா கேட்கணும். இது எப்படி நம்ம வீடோ, அதே மாதிரி நாம் வாழ்வது நம் நாடு.

## நமது நாடு

"நம்ம நாடு எது?"

அதுதான் 'பாரதம்' என்னும் இந்தியா! இந்தியா நமது நாடுன்னு கூடத் தெரியாதா? என்று சீண்டினான் முத்து.

கேளுங்கள் இந்தியா நமது நாடு நமக்குப் பக்கத்து வீடு மாதிரி இருக்கும் நாடு. பாக்கிஸ்தான் அது நமது அண்டை நாடுகளுள் ஒன்று.

'அண்டை நாடுன்னா?'

பக்கத்து நாட்டைத்தான் அண்டை நாடு என்று கூறுவார்கள்.

"பாக்கிஸ்தான் என்றீர்களே—கிரிக்கெட் விளையாடு வாங்களே அவங்கா நாடா?"

"ஆமாம்."

தாத்தா பக்கத்து வீடு மாதிரி இருப்பது அண்டை நாடுன்னு சொன்னீங்க. எதிர் வீடு மாதிரி இருக்கும் நாட்டை எதிர் நாடுன்னு சொல்லலாமா தாத்தா?

அப்படிச் சொல்லக் கூடாது. எதிர் நாடுன்னா எதிரி நாடுன்னு ஆகிவிடும். நம் நாட்டைச் சுற்றி இருப்பது எல்லாமே அண்டை நாடுதான் என்றார் தாத்தா.

சும்மா சும்மா பேசாதே உனக்கு ஒன்றும் தெரியவில்லை என்றான் முத்து.

நீ பேசாதே—தாத்தா சொல்லட்டும் என்று கூறியபடி நெருங்கி வந்து அவன் தலையணையில் தலையை வைத்தாள் முல்லை.

"போ, போ உன் தலையணையில் படு." என்று தள்ளி விட்டான் முத்து. முல்லை நகரவில்லை.

"பாருங்க தாத்தா என் தலையணையில் படுத்துக் கொண்டு நகர மாட்டேங்கிறாள்." என்று புகார் கூறினான் முத்து.

"முல்லை! நீ உன் தலையணையில் படு! உங்களுக்குக் கதை வேண்டுமா, வேண்டாமா?" என்றார் தாத்தா.

விலகிப் படுத்த படி "வேண்டும், வேண்டும்" என்றாள் முல்லை. தாத்தா தொடர்ந்தார்.

நமது அண்டை நாடான பாக்கிஸ்தான், நம் நாட்டுக்குள் படைவீரர்களையும், கூலி ஆட்களையும், கலகக்

காரர்களையும் அனுப்பி நம்முடைய மலைகளைப் பிடித்துக் கொண்டது.

"முல்லை என் தலையணையைப் பிடித்துக் கொண் டாளே அப்படியா தாத்தா?" முத்து விளக்கம் கேட்டான்.

"அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்." என்றார் தாத்தா.

"கலகக் காரர்கள் என்றால் யார் தாத்தா?"

"அடுத்தவங்க பொருளைத் தன்னுடையது என்றும் தனக்கு வேண்டும் என்றும் வம்பு செய்பவர்கள் தான்."

பின்னர் என்ன நடந்தது தாத்தா? என்னைப் போல் தள்ளி விட்டுட்டாங்களா?

"தள்ளிவிட சண்டைப் போட வேண்டியதாகி விட்டது."

"அவர்கள் வரும் போதே அடித்து விரட்டி இருக்க வேண்டியது தானே தாத்தா? ஏன் சும்மா இருந்தாங்க?"

"நல்ல கேள்வி தான்! அவர்கள் நாம் பார்க்காத நேரத்தில் திருட்டுத்தனமாக உள்ளே நுழைந்து மலை மேல் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள்.

அப்ப. அவங்க வந்ததை எப்படி, எப்போ கண்டு பிடித்தார்கள் தாத்தா?" முல்லை கேட்டாள்.

"இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் எல்லைக் கோடுன்னு ஒன்று உண்டு. நம் வீட்டுக்கும் பக்கத்து வீட்டுக்கும் இடையில் மதிற் சுவர் இருக்கிறதே அப்படி. அவங்க நுழைந்த இடம் மலை. மலையில் குளிர் அதிகம் பொங்கலின் போது குளிருமே அப்படியா தாத்தா?" முத்து கேட்டான்.

அப்படி அல்ல. ஐஸ் மாதிரி குளிர். இப்படியே நாம் அங்கே போனால் ஐஸ் மனிதர்களாகி விடுவோம். நம்மால்

பேச முடியாது. நடக்க முடியாது. ஒன்றுமே செய்ய முடியாது. அப்ப யே கல் மனிதர்களாகி விட வேண்டியது தான். கல்லென்றால் ஐஸ் கல்.

"ஐயய்யோ!" இருவரும் ஒரே குரலில் அச்சத்தை வெளியிட்டார்கள்.

"படை வீரர்கள் என்றால் யார் தாத்தா?"

"கூர்க்கா நம் வீட்டைக் காக்கிறாரே அப்படி நம் நாட்டைக் காப்பவர்கள் படை வீரர்கள்."

பள்ளிக்கூடத்தில் வாட்ச்மேன் இருக்காறே? அவரைப் போலவா?

வீடு, பள்ளிக்கூடம் போன்ற இடங்களைப் பாதுகாப்ப வர்கள் 'வாட்ச்மேன்' கூர்க்கா. இதற்கெல்லாம் ஒருவர் இருவர் போதும். ஆனால் நாட்டைக் காக்க நிறைய பேர் வேண்டும். அவங்கதான் படை வீரர்கள். கூர்க்காவும், வாட்ச்மேனும் ஒரு தடி மட்டும் வைத்திருப்பார்கள். ஆனால் படை வீரர்கள் துப்பாக்கி, பீரங்கி எல்லாம் வைத் திருப்பார்கள். புதுப்புது கருவிகள், வாகனங்கள் எல்லாம் அவர்களிடம் இருக்கும்.

புதுவிதமான போர்க் கருவிகள் என்றால் என்ன தாத்தா? புதுக் கத்தி, புதுத் துப்பாக்கியா?

இல்லை, இல்லை. ராக்கெட், தட, தடன்னும் சுடும் மெஷின் கன் போன்றவை.

"நாம் தீபாவளியின் போது வெடித்தோமே ராக்கெட் அதைப் போன்றதா தாத்தா ராக்கெட்.

அவர்களிடம் இருப்பது பெரியது. வெடித்தால் நம் வீடெல்லாம் இடிந்து விழுந்து விடும்.

"அப்படியா?"

ஆமாம்!

''எப்பொழுது சண்டை போட்டார்கள்'''

பள்ளிக்கூடம் விடுமுறை விட்டார்களே அது எப்போ?

சனி, ஞாயிறு!

''அது சரி, நிறைய நாள் விடுமுறை விட்டாங்களே!''

''பெரிய லீவா தாத்தா?''

''ஆமாம்,''

மே மாதம்'' என்று கூச்சலிட்டான் முத்து.

''தாத்தா என்னைத்தானே கேட்டாங்க? நீ ஏன் சொன்னாய்? என்று சிணுங்கினாள் முல்லை.

''இதற்கெல்லாம் அழலாமா? யார் சொன்னா என்ன? என்று ஆறுதல் கூறிய தாத்தா தொடர்ந்தார். மே மாதத்தில் தான் பாக்கிஸ்தானிலிருந்து ஆட்கள் வந்து நம் மலைகளில் இருப்பது தெரிந்தது.

''நம் படை வீரர்கள் கண்டுபிடித்தார்களா தாத்தா'' முத்து கேட்டான்.

நான் முன்னே சொன்னேன் இல்லையா, மலையில் குளிர் அதிகம் என்று. அதனால் நம் வீரர்கள் அப்போது அங்கே காவல் காக்கவில்லை. அதனால் அவர்களால் அப்போது கண்டுபிடிக்க முடியாமல் போய் விட்டது.

''யார் தான் கண்டுபிடித்தது?

## கண்டுபிடித்தது யார்?

''சொல்கிறேன், ஆடு மேய்ப்பவர்கள் இரண்டு பேர் அவங்கதான் முதன்முதல் பாகிஸ்தான் ஆட்கள் மலையில் இருப்பதைப் பார்த்து விட்டு வந்து, நம் படையிடம் கூறினார்கள்.

அவங்களுக்கு எப்படி தெரிந்தது. ஆடு மேய்க்கும் போது தாடி, தொள தொள சட்டை, காலைப் பிடித்திருக் கும் 'சுர்த்தா' கால் சட்டை போட்ட ஆட்கள் அங்கே நடமாடியதைப் பார்த்திருக்கிறார்கள். பாகிஸ்தான்காரர் கள் அப்படித்தான் இருப்பார்கள் என்பதால் சந்தேகப் பட்டு, நம் படையிடம் வந்து கூறினார்கள்.

"அவங்க பேரு என்ன தாத்தா?"

"பெயரா? அது உங்களுக்குப் புரியாதே?"

"புரியும். சொல்லுங்க."

"ஒருத்தர் பெயர் தாஷி நாம் கியால்.

"இன்னொருவர் பெயர் மொரப் செரிங்."

"இதுதான் பெயரா? நல்லாவே இல்லையே!"

"உன் பெயரைக் கேட்டா அவங்களும் அப்படித்தான் கூறுவார்கள்."

"அப்புறம் எப்படி சண்டை போட்டாங்க?" அதைச் சொல்லுங்க தாத்தா என்றான் முத்து.

அந்த இரண்டு பேரும் கூறியதை நமது இராணுவத் தால் நம்பவும் முடியவில்லை. நம்பாமல் விடவும் முடிய வில்லை.

"ஏன் தாத்தா?"

"இதற்கு முன் எப்போதும் அங்கே யாரும் நுழைந்த தில்லை."

"அதுதான் நுழைந்துவிட்டார்களே!"

எதற்கும் பார்த்து விட்டுதான் வருவோமே என்று ஒரு இராணுவ வீரரை அவர்களோடு அனுப்பி பார்த்து வரச் சொன்னார் பெரிய அதிகாரி. ஆடு மேய்ப்பவர் களும் அந்த வீரரை அழைத்துச் சென்று முன்பு பாகிஸ்தானி

யரைப் பார்த்த இடத்தைக் காட்டினார். ஆனால் அப்போது அங்கே யாருமே இல்லை.

"என்னய்யா விளையாடறீங்களா? யாரையோ பார்த்ததாகக் கூறினீர்களே, இங்கேயாரையும் காணோமே என்றார் கோபமாக வந்த வீரர்.

சாப்! நாங்க சத்தியமா இங்கே ஆளுங்களைப் பார்த்தோம். எங்கே போனாங்களோ தெரியவில்லை. எங்கேனும் ஒளிந்து கொண்டருப்பாங்க என்றார்கள் அந்த இருவரும்.

பொய் சொல்லாதீங்கய்யா. நீங்க ஆளைப் பார்த்தீங்களா, உங்க ஆடுகளைப் பார்த்து ஆளென்று நினைத்துக் கொண்டீர்களா?

"என்னங்க, ஆளுக்கும், ஆட்டுக்கும் எங்களுக்கு வித்தியாசம் தெரியாதுங்களா? ஆட்களைத்தான் பார்த்தோம். தாடி வைத்திருந்தது கூடத் தெரிந்திருந்தது."

"இப்போ காணோமே!" பொய் சொன்னீங்க என்ன நடக்கும் என்று தெரியுமா? என்று மிரட்டினார் இராணுவ வீரர்.

என்னங்க... எங்களுக்கும் வேலை இருக்கு உங்களிடம் தேடி வந்து ஏன் பொய் சொல்லப் போகிறோம். என்றனர் இருவரும்.

சரி விடுங்க. இனி நல்லா பார்த்து உறுதி செய்து கொண்டு வந்து சொல்லுங்க. உங்களுக்கு பாட்டல்...... கிடைக்கும் என்று கூறிவிட்டு வந்த வழியே திரும்பிவிட்டார் அந்த வீரர்.

அடுத்த நாள் அந்த இரண்டு மேய்ப்பர்களும் இராணுவ முகாமுக்கு மூச்சு வாங்க ஓடி வந்தார்கள். அதிகாரியிடம் தாங்கள் மலை மீது ஆட்களைப் பார்த்ததாகக் கூறி, உடனே போனா அவங்களை பார்க்கலாம் என்றார்கள்.

"சார், இந்த ஆட்கள் கூறியதைக் கேட்டு நேற்று சென்று ஏமார்ந்து வந்தேன். தூரத்தில் வேறு ஆட்களின் ஆடு மேய்வதைப் பார்த்து விட்டுத்தான் இவர்கள் பாக்கிஸ்தான் ஆட்கள் என்கிறார்கள் என்றார் முதல் நாள் இவர்களோடு சென்று வந்த வீரர். ஆனால் அதிகாரி மேய்ப்பவர்கள் கூறியதில் உண்மை இருப்பதாகவே நம்பினார்.

"அவர் நல்லவரா தாத்தா? நம் படை வீரர்கள் எல்லாருமே நல்லவர்கள் தாம்." அதிகாரி அவர்களோடு இரண்டு வீரர்களை அனுப்பிப் பார்த்து வரும்படிக் கூறினார். நால்வரும் சென்று பார்த்தபோது, மேய்ப்பர்கள் காட்டிய இடத்தில் ஆட்கள் நடமாடிக் கொண்டிருப்பதை நம் வீரர்கள் பார்க்க முடிந்தது. கூர்ந்து பார்த்து உறுதி செய்து கொண்டு முகாமுக்குத் திரும்பி தலைவரிடம் பார்த்ததை கூறினார்கள்.

ஏன் தாத்தா அப்பொழுதே ஓடிப்போய் அவர்களைப் பிடித்து உதைத்துக் கொண்டு வர வேண்டியதுதானே? ஏன் சும்மா திரும்பி வந்தார்கள்? என்றான் முத்து.

அவங்க எத்தனை பேர்? என்ன ஆயுதம் வைத்திருக்கிறார்கள். எங்கு மறைந்திருக்கிறார்கள் என்பதை எல்லாம் தெரிந்து கொள்ளாமல், எதிரிகளிடம் செல்லக்கூடாது. இவர்கள் இரண்டு பேர் தானே?

"இவங்கதான் வீரர்களாயிற்றே! துப்பாக்கி வைத்திருப்பார்கள்தானே! அப்புறம் ஏன் பயப்பட வேண்டும்?"

எதிரிகள் மலை மேல் இருந்தார்களே. நாம் ஏறும் போது பார்த்தால் அவர்கள் சுட்டுவிடுவார்களே! அவர்கள் பதுங்கிக் கொள்ள வசதியான இடத்தில் இருப்பார்கள். சரியாகத் தெரிந்து கொள்ளாமல், ஆள் குறைவாகச் சென்றால் சரி வருமா? போனால் சாகத்தான் வேண்டியிருக்கும் என்றார் தாத்தா.

"செத்துடு வாங்களா?" ஐய்யய்யோ? என்று அலறினான் முத்து.

"அதனால்தான் நம் வீரர்கள் அப்போது அவர்களைப் பிடிக்கப் போகாமல் திரும்பி வந்தார்கள். திரும்பி வந்து தங்கள் தலைவரிடம், ஆள் நடமாட்டம் இருப்பதைத் தெரி வித்தார்கள்.

அப்படியா? எத்தனை பேர் இருப்பார்கள்?

சரியாகத் தெரியவில்லை. நாங்கள் இரண்டு பேர் களைத்தான் பார்த்தோம். என்றார் வீரர்.

"அப்படியானால் ஐந்து பேரோ, பத்து பேரோதான் இருப்பார்கள்... போங்க! அவனுங்க கழுத்தைப் பிடித்து இழுத்து வாங்க" என்று கூறி ஒரு குழுவை அனுப்பி வைத்தார்.

ஆனால் எதிரிகளோ எண்ணிக்கையில் அதிகமாக இருந்தார்கள். அது மட்டுமல்ல மலைக் கற்களைக் கொண்டு தடுப்பு ஏற்படுத்திக் கொண்டது மட்டுமல்ல, எஃகுத் தகட்டால் தங்கள் மீது துப்பாக்கிக் குண்டுகள் தாக்காதபடியும் ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள்.

ஐய்யய்ய! அந்த அதிகாரிக்குக் கணக்கே தெரியாதா? சுத்த மக்கு என்றான் முத்து.

அப்படி எல்லாம் பேசக் கூடாது. நம் தோட்டத்தில் எறும்புப் புற்று இருக்கிறதே, அதற்குள் எத்தனை எறும்புகள் இருக்குமென்று நமக்குத் தெரியாதல்லவா? வெளியே மேயும் பத்து, இருபது எறும்புகளைப் பார்த்து விட்டு அவ்வளவுதான் என்று நினைக்கின்றோமில்லையா? அப்படித்தான் அவரும் நினைத்து விட்டார். என்றார் தாத்தா.

தாத்தா! எனக்குத் தூக்கம் வருகிறது. மீதிக் கதையை நாளைக்குச் சொல்லுங்களேன் என்றான் முத்து. முல்லையோ அப்போது தூங்கி விட்டிருந்தாள்.

"சரி, நீ தூங்கு, என்று கூறிச்சிறிது நேரம் பேசாதிருந் தார். முத்து தூங்கியதும், செய்தித் தாளை எடுக்க விளக்கைப் போட்டார். அவருக்குப் படித்தால்தான் தூக்கம் வரும். விளக்கு எரிவதைப் பார்த்ததும் மணிவண்ணன்—தாத்தா இருக்கும் அறைக்கு வந்தான். அவனைப் பார்த்ததும்," என்ன மணி! என்று குரல் கொடுத் தார் தாத்தா.

"தாத்தா! எனக்கு இந்த கார்கில் கதையை முழுதாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. காஷ்மீர் சிக்கல் தோன்றிய வரலாற்றை எனக்கு முழுதாகக் கூறுங்கள்—எங்கள் ஆசிரியர் கட்டுரை எழுத வேண்டு மென்று கூறியிருக்கிறார்—என்றான் மணிவண்ணன்.

சரி மணி! எனக்கு இன்று அசதியாக இருக்கிறது— நேரமும் ஆகிவிட்டது நாளை சொல்கிறேனே! என்றார் தாத்தா

' சரி தாத்தா! நாளையே கூறுங்கள்" என்று கூறிவிட்டு அறையை விட்டு வெளியேறினான் மணிவண்ணன்.

தாத்தாவுக்கும் தூக்கம் வந்து விட்டது. அவரும் சிறிது நேரத்தில் தூங்கி விட்டார்.

## கார்கில் போரின் மூலம்?

மறுநாள் இரவு சாப்பாடு முடிந்ததும் முல்லை, முத்து, மணிவண்ணனோடு, மலர்விழியும் தாத்தா அறைக்கு வந்து விட்டாள் கதை கேட்க!

"என்னம்மா! நீயுமா? என்றார் வியப்புடன்.

"ஆமாம் தாத்தா! செய்திகளில் அதிகமாக அடிபட்ட, கார்கில் போர் குறித்து எல்லாச் செய்திகளையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் வந்தேன்

வினாடி வினாப் போட்டியில் கலந்து கொள்ள விருக்கிறேன். முழு விபரம் தெரிந்தால்தானே எந்தக் கேள்வியானாலும் பதில் கூற முடியும்? என்றாள் மலர்விழி!

''நல்லதம்மா! இளைய தலைமுறைக்கு வரலாற்றறிவு அவசியம் தேவை. எதை எதையெல்லாமோ படித்து நேரத்தை வீணாக்காமல், வரலாற்று நூல்களைப் படிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்'' என்றார் தாத்தா.

தமிழில் வரலாற்று நூல் பஞ்சம் தீரவில்லை என்று எங்கள் ஆசிரியர் கூறினார் தாத்தா.

உங்கள் ஆசிரியர் கூற்றைத் தவறென்று கூறமாட்டேன். ஆனால் வெளிவந்திருக்கும் நூல்களைப் படித்தாலே போதுமே! வரலாற்று நூல்களை வாங்கிப் படிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்வது நல்லது. வளரத் துடிப்பவர்களுக்கு வழிகாட்ட வல்லதும் ஊக்க மூட்டுவதும் வரலாற்று நூல்களே! என்றார் தாத்தா.

''இனி மாதம் ஒரு புத்தகமாவது வாங்க வேண்டும் தாத்தா...''

''நல்லது அப்படியே செய்! இந்த வாண்டுகளுக்கு வரலாற்றுச் செய்திகளெல்லாம் பிடிபடாது. 'அவர்' களுக்கு ஏதேனும் கதை கூறி தூங்க வைத்துவிட்டு, அதன் பின் கார்கில் கதையைத் தொடங்கலாம்'' என்றார் தாத்தா.

''ஆமாம், அதுதான் சரி என்று வழி மொழிந்தான் மணிவண்ணன்.

அவை கூடியது. பொடிசுகள் இரண்டும் தாத்தா மடியில் இடம் பிடிக்க போட்டியிட்டனர். அதைப் பார்த்த அன்னம் அதட்டினாள். யாரும் தாத்தா மடியில் உட்காரக்

கூடாது. கீழே உட்காருங்கள் என்று கட்டளை பிறப்பித்தாள்.

அம்மா குரலைக் கேட்டவுடன் இருவரும் தரையில் தாத்தா முன் அமர்ந்து ''தாத்தா கதை சொல்லுங்க என்று நச்சரித்தனர். தொல்லை தாளாத தாத்தா'' அமைதியாக இருங்கள். கதை ஆரம்பமாகப் போகிறது என்று அறிவிப்புக் கொடுத்துவிட்டு விநோதரச மஞ்சரியில் படித்த அவிவேக பூரண குரு கதையிலிருந்து'' வாடகைக்கு மாடேறிப் போனது, என்ற கதையைக் கூறத் தொடங்கினார். குழந்தைகளின் ஊம்—ஊம்—ஊம் குரல் விசை தீர்ந்த பொறியைப் போல் மெல்ல ஒடுங்கத் தொடங்கி சிறிது நேரத்தில் நின்று விட்டது.

தூண்டில்காரன், மிதக்கும் தக்கையையே பார்த்துக் கொண்டிருப்பதைப்போல் இவர்கள் எப்போது தூங்குவார்கள் என்று பார்த்துக்கொண்டிருந்த மணிவண்ணன். மெல்ல தாத்தாவை நெருங்கி வந்து தாத்தா அவர்கள் தூங்கி விட்டார்கள். கார்கில் கதையை முதலிலிருந்தே தொடங்கள் என்றான் மணிவண்ணன்.

''சரி மணி! நீ எந்த வகுப்புப் படிக்கிறாய்? என்று கேட்டார் தாத்தா.''

''ஏன் தாத்தா திடீரென்று நான் படிக்கும் வகுப்பைப் பற்றிக் கேட்கிறீகள்?'' என்றான் மணிவண்ணன்.

பயப்படாதே! பாடத்திலிருந்து கேள்வி ஏதும் கேட்க மாட்டேன். நான் சொல்வதை உன்னால் புரிந்து கொள்ள முடியுமா? என்பதற்காகத்தான் கேட்டேன் உன் சமூக வியல் பாடத்தில் போர் குறித்த பாடங்களும் இடம் பெற்றிருக்கிறதல்லவா?

நம் சரித்திரப் பாடத்தில் சண்டை இல்லாமலா? நீங்கள் கூறுங்கள் எல்லாம் எனக்குப் புரியும் என்றான் மணி.

"உண்மைதான் இக் காலப் பிள்ளைகள் எங்களைப் போலவா இருக்கிறீர்கள்?" வயதுக்கு மீறிய செய்திகளை யெல்லாம் கேட்கிறீர்கள்; பார்க்கிறீர்கள்; பெரிய மனிதரைப் போல் பேசவும் செய்கிறீர்கள்; என்றார் தாத்தா.

"எங்களுக்கு எவ்வளவோ வசதிகள் கிடைத்திருக்கிறதே! தொலைக் காட்சி, கணிப் பொறி, மின்னணுவியல் எல்லாம் நீங்கள் படிக்கும்போது இருந்ததா?"

"எங்களில் பலருக்கு வானொலி கூட கிடையாது." "எங்கள் காலத்தில் தகவல் தொடர்பு அறிவியல் எவ்வளவோ வளர்ந்திருக்கிறதே தாத்தா அதனால்தான் உங்கள் காலத்தில் எங்கள் வயது பிள்ளைகளைவிட நாங்கள் அறிவு வளர்ச்சி பெற்றிருக்கின்றோம்" என்றாள் மலர்விழி.

"உண்மைதான். இப்படியெல்லாம் எங்களுக்கு அப்போது பேசத் தெரியவில்லையே! ஆனால் ஒன்று நாங்கள் நூல்களையும், இதழ்களையும் படிக்கப் பழகியிருந்தோம்." என்று கூறிவிட்டு கதைக்கு வந்தார் தாத்தா.

## பிளவின் விளைவு

"அறுபது ஆண்டுகளுக்குமுன் நம் நாட்டைப் பிரிட்டிஷ் இந்தியா என்றுதான் குறிப்பிடுவார்கள். ஆசியா கண்டத்தி லும் ஆப்பிரிக்க கண்டத்திலும் பல நாடுகள் ஆங்கிலேயர் களின் ஆட்சிக்குள்தான் அடங்கிக் கிடந்தது. இந்தியாவில் விடுதலை வித்து விழுந்து இலைவிட்டது திலகர், கோகலே, மோதிலால் போன்ற தலைவர்களின் உழைப்பால் கிளை விட்டது. தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய காந்தியடி களின் வழிகாட்டுதலாலும், தொண்டாலும், ஆயிரமாயிரம் தன்னலந் துறந்த தொண்டர்களின் போராட்டத்தாலும் வெள்ளையர்கள் இந்தியாவை விட்டு வெளியேற ஒப்புக் கொண்டிருந்த கால கட்டம்.

"வெள்ளையனே வெளியேறு! என்றுகூட ஒரு போராட்டம் நடந்தது இல்லையா தாத்தா!" என்றான் மலர்.

ஆமாம், அது நடந்து ஐந்தாண்டுகளுக்குப் பிறகுதான் வெள்ளையர்கள் வெளியேறினார்கள். நம் நாட்டின் ஆட்சி உரிமையை நம்மிடம் ஒப்படைத்து வெளியேற முடிவு செய்திருந்தபோதுதான், இப்போது தேர்தல் நேரத்தில் அதிகமாகப் பேசப்பட்டதே, அந்த மதவாத நச்சு விதை அப்போதுதான் தூவப்பட்டது. இந்து—முசுலிம் என்று இந்திய மக்களை அரசியல்வாதிகள் இரண்டு படுத்தி அரசியல் ஆதாயம் பார்க்கத் துடித்தார்கள்.

"யார் தாத்தா அவர்கள்?"

முசுலிம் தலைவர்களுள்சிலர் தான்.

"யார், என்ன சொன்னார்கள் தாத்தா?"

ஜனாப் மகமதலி ஜின்னா தலைமையில் முசுலிம் தலைவர்கள் சிலர் முசுலிம்கள் அதிகம் வாழும் பகுதியைத் தனி நாடாகப் பிரித்துத் தர வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசிடம் கோரிக்கை வைத்து. அக் கோரிக்கையை வென்றெடுக்க மதக் கலவரத்தைத் தூண்டி விட்டார்கள்.

"இங்கேயெல்லாம் கலவரம் நடந்ததா தாத்தா?"

இங்கே இல்லை—வடநாட்டில்தான் கலவரம் அதிகமாக நடந்தது.

அண்ணல் காந்தியடிகள் மதத்தின் பெயரால் நாட்டைத் துண்டாடக் கூடாது என்று அறிவுரை கூறிப் பார்த்தார். மத நல்லிணக்கத்திற்காக நடந்தார். உண்ணா நோன்பிருந்தார். ஜின்னா பிடிவாதமாக இருந்தார். மௌலானா அபுல் கலாம் ஆசாத் போன்றவர்கள் அண்ணலின் கருத்தை ஆதரித்தும் மற்ற முசுலிம் தலைவர்கள் நாட்டைத் துண்டாடுவதிலேயே கருத்தாக இருந்தார்கள்.

நேரு, பட்டேல் ராஜாஜி எல்லாம் என்ன சொன்னார் கள்? பிரிவினை வேண்டுமென்றார்களா, வேண்டாமென் றார்களா? தம் தலைவர்கள் காந்தியடிகளின் கருத்தையே ஆதரித்தார்கள். ஆனால் ஜின்னாவின் பிடிவாதத்தால் விடுதலை தள்ளிப் போகிறதே என்ற வருத்தம் இருந்தது. நம்ம ராஜாஜி தான் துணிந்து பிரிவினையை ஆதரித்துக் கருத்துக் கூறினார்.

"ஏன் அவர் ஆதரித்தார்?"

தாமதம் தவிர்க்கப் பட வேண்டும் என்பது ஒரு காரணம் இவ்வளவு முரட்டுத் தனமாகப் பிரிந்து போக வேண்டு மென்பவர்களைக் கட்டாயத்தால் சேர்த்து வைத்திருக்க முயல்வது நல்லதல்ல என்பது இரண்டாவது:

"காந்தியடிகள் என்ன செய்தார்?"

"வள்ளலார் சொன்னதைத்தான் செய்தார்.

"வள்ளலார் என்ன சொன்னார் தாத்தா?"

"கடை விரித்தேன், கொள்வாரில்லை—கட்டிவிட்டேன், என்றார். அதைத்தான் அண்ணல் செய்தார். எவ்வளவு எடுத்துக் கூறியும் கேட்காததால்-அண்ணலின் ஒற்றுமை எண்ணம் நிறை வேறாத ஆசையாகி விட்டது. பிரிட்டிஷ் இந்தியா—இந்தியா—பாக்கிஸ்தான் என இரண்டு நாடாகப் பிரிந்து பாக்கிஸ்தான் 14-8-1947 அன்றும், இந்தியா 15-8-1947 அன்றும் 'யூனியன் ஜாக்' கொடியை இறக்கி விட்டு, பிறைக் கொடியையும், மூந்நிற அசோக சக்கரக் கொடியையும் ஏற்றினார்கள்.

"இதுவரை சொன்னதில் பல எங்கள் பாடத்தில் வந்தி ருக்கிறது. காஷ்மீர் பிரச்சினை எப்படி ஏற்பட்டது? அதைக் கூறுங்கள்" என்றான் மணி.

"பொறுமையாகக் கேள். தெருக்கதவைத் திறந்து கொண்டுதானே அறைக் கதவைத் திறக்கப் போக முடியும்? என்றார் தாத்தா.

"அவன் அப்படித்தான் தாத்தா, எதிலும் அவசரப் படு வான்" என்றாள் மலர்விழி.

"விடுதலை பெற்றபின் இந்து முசுலிம் கலவரம் நின்று போய் விட்டதா தாத்தா?"

"நாடு விடுதலை பெற்றதும் வெள்ளையர்கள் மட்டில் வெளியேறவில்லை. நாம் வெளியேறச் சொல்லாத முசுலிம் களும் இந்தியாவை விட்டுப்பாகிஸ்தானுக்குப் போனார்கள்.

"போனாங்க என்கிறீர்கள். நம்ம தெருவிலேயே அகமது இருக்கிறானே?"

"நாம் போகச் சொல்லவில்லை. மத உணர்வோடு பிரிவினையை ஆதரித்த முசுலிம்கள் தாம், தாமாகவே பாக்கிஸ்தானுக்குப் போனார்கள்."

"அதேபோல் பாக்கிஸ்தான் பகுதியிலிருந்து இந்தியா வுக்கு வந்தார்களா தாத்தா?"

"அங்கேயே இருப்பது தங்களுக்குப் பாதுகாப்பானது அல்ல என்று நினைத்த இந்துக்கள். இந்தியாவுக்கு வரத் தான் செய்தார்கள்."

"அதன்பின் கலவரம் ஓய்ந்து விட்டதா தாத்தா?"

'எங்கே ஓய்ந்தது? அப்பொழுதுதான் உச்சகட்ட கலவரங்களே நடந்தன.

"அரும்பாடு பட்டுக்கலவரங்களை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தார்கள். இதற்காக காந்தியடிகள் ஏன் உயிரையே பணயம் வைத்தார்."

காந்தியை ஒரு மதவாதிதான் சுட்டுக் கொன்றானாமே உண்மையா தாத்தா?

"உண்மைதான்." காந்தியடிகளின் உயிர் பறிக்கப் பட்டதைக் கேள்விப்பட்ட ஆங்கிலேயர். "நாங்கள் காந்தி யடிகளின் உயிரை இவ்வளவு நாட்கள் காப்பாற்றி உங்களி

டம் ஒப்படைத்தோம். இந்தியர்களாகிய நீங்கள் அவர் உயிரைக் காப்பாற்றிடாமல், இவ்வளவு விரைவில் போக்கடித்து விட்டீர்களே என்று கூறினாராமே உண்மையா தாத்தா?

''கூறிய வார்த்தை உண்மையோ, பொய்யோ கருத்து சரிதானே?'' தாத்தா சிறிது நேரம் அமைதியானார்.

'தாத்தா'' இனிமேலாவது கார்கிலுக்குப் போகலாமா? மணிவண்ணன் கேட்டான்.

## கதைக்குப் பயணம்

''சரி, புறப்படுவோம்.''

இந்தியா விடுதலையடைந்தபோது இப்போது இருப்பதைப் போன்று கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை ஒரே நாடாக இல்லை. திட்டுத் திட்டாக இருந்த நாட்டைக் குட்டிக் குட்டி மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். அவை தத்தம் விருப்பப்படி தனித்திருக்கவோ அல்லது பாக்கிஸ்தான்—இந்தியா இரண்டில் ஒன்றுடன் இணைந்துவிடவோ அவற்றுக்கு உரிமையிருந்தது.

''இந்தியாவின் முதல் துணைப் பிரதமராக விளங்கியவர் சர்தார் வல்லபாய் பட்டேல். இந்தியாவின் இரும்பு மனிதர் எனப்பட்ட இவரிடம் உள்துறை இருந்தது. அவருடைய துணிவான, திறமையான நடவடிக்கையால் துண்டு நிலங்கள் பண்ணையாவதைப் போல் அகன்ற இந்தியாவை உருவாக்க, குறுநில மன்னர்களை உடன்பட வைத்தார்.''

''நான் கூட கதையில் படித்திருக்கின்றேன். 56 தேசத்து மகா ராஜாக்களைப் பற்றி'' என்றான் மணிவண்ணன்.

''ஏன் தாத்தா! அவ்வளவு மன்னர்களா இருந்தார்கள்? என்று வியப்போடு கேட்டாள் மலர்விழி!

"என்னம்மா! ஐம்பத்தாறு என்றதையே இவ்வளவா என்று கேட்கிறாய்? பிரிட்டிஷ் இந்தியாவில் மொத்தம் ஆறுநூறு மன்னர்கள் இருந்திருக்கிறார்கள் இங்கே? "

"என்ன தாத்தா? உண்மையாகவா? இவ்வளவு மன்னர்களா? வியப்பை வெளிப்படுத்தினான் மணிவண்ணன்.

தாத்தா சிரித்துக் கொண்டே கூறினார் "நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையையன்றி வேறில்லை போதுமா?

"ஏதோ சந்தேகம் கேட்டுவிட்டேன் தப்பா தாத்தா?"

"தப்பில்லை. கதையைக் கேளு. இந்த அறுநூறு குறுநில மன்னர்களுள் ஒருவர்தான் ஹரிசிங். இவர்தான் காஷ்மீரின் அந்த நாள் மன்னர்.

"ஹரிசிங்கா?" என்று வியப்போடு கேட்டாள் மலர்விழி.

புரிகிறது. உன் வியப்புக்குக் காரணம். முசுலீம்கள் அதிகமாக வாழும் நாடு என்று தானே பாக்கிஸ்தான் காஷ்மீர் மீது உரிமை கொண்டாடுகிறது. அதற்கு எப்படி ஒரு சிங் மன்னராக விளங்கினார் என்பதுதானே உன் வியப்புக்குக் காரணம்?"

"ஆமாம் தாத்தா! சரியாக கூறி விட்டீர்கள்."

"நாம் காஷ்மீர் என்று பொதுவாகக் கூறினாலும் ஜம்மு—காஷ்மீர் என்பதுதான் சரி. அந்தப் பகுதிதான் ஹரி சிங் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இவற்றுள் ஜம்மு என்ற பகுதியில் இந்துக்களும், காஷ்மீர் பகுதியில் முஸ்லீம்களும் அதிகம் வாழ்ந்தார்கள். இந்தியர்களை வெள்ளையர்கள் ஆண்டதைப் போல் தமிழகத்தை மராட்டியர்களும், தெலுங்கர்களும் கூட ஆளவில்லையா? அப்படித்தான் ஹரிசிங்கும், அவருடைய முன்னோர்களும் ஜம்மு—காஷ்மீர் மன்னராக விளங்கினார்கள்.

"சரி தாத்தா. ஹரிசிங் பிள்ளைகள் யாராவது இப்போது இருக்கிறார்களா?" மலர்விழி கேட்டாள்.

"இல்லாமல் என்ன? டாக்டர் கரண்சிங் என்று கேள்விப்பட்டிருக்கிறாயா?"

"பிரதமராகக் கூட கொஞ்ச நாள் இருந்தாரே அவரா தாத்தா?" மணிவண்ணன் கேட்டான்.

"இல்லை, இல்லை, அவர் சரண்சிங். நான் கூறுவது கரண்சிங்."

"கரண், சரண்"— எப்படி குழப்புது நம்மை.

"கேள்விப்பட்டது போலிருக்கிறது. சரியாக நினைவுக்கு வரவில்லை," என்றாள் மலர்விழி.

"அதற்குத்தான் செய்தித்தாள் படிக்க வேண்டும் என்பது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் வாஜ்பாய் அவர்களை எதிர்த்து லக்னோ தொகுதியில் காங்கிரஸ் நிறுத்திய வேட்பாளர் பெயர் என்ன தெரியுமா?"

பிரதமர் தொகுதி என்பதால் அவரை எதிர்த்துப் போட்டியிடுபவர் யார் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள் என்று கூறி ஆசிரியர் கூறினார்கள். அவர் பெயர் கரண்சிங் தான். அவருக்கும் காஷ்மீர் மன்னர் ஹரிசிங்குக்கும் என்ன சம்பந்தம்? மலர்விழி வினவினாள்.

"ஹரிசிங்கின் மகன்தான் டாக்டர் கரண்சிங். இவர் மத்திய அமைச்சராகக்கூட இருந்திருக்கிறார்."

"அப்படியா...? என்று வியப்போடு கேட்டனர் இருவரும்."

"என்ன வேடிக்கை பாருங்கள். மன்னர் மந்திரியாகிறார்" என்று கூறிச் சிரித்தார் தாத்தா."

''பாகிஸ்தானில் பிரதமரையே கைதி ஆக்கி விட்டார்களே தாத்தா'' என்றாள் மலர்.

''கதைக்குப் போகலாம். வெள்ளைக்காரர்கள் இந்தியாவை விட்டு வெளியேறிய போது காஷ்மீர் மன்னர் என்ன செய்தார்?'' என்றான் மணிவண்ணன்.

''அவர் நல்லதையே செய்தார். தம் ஆட்சிக்குள் இருந்த நிலப்பரப்பை இந்திய ஒன்றியத்தோடு இணைத்துக் கொள்ள இசைந்து 1947-ஆம் ஆண்டு அக்டோபர் 26-ஆம் நாள் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார்.

''நல்லவர்தான் ஹரிசிங்.''

''அப்போது பாகிஸ்தான் ஏதும் கேட்கவில்லையா?''

''ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டதும் அதன் தூண்டுதலால் காஷ்மீரில் பாக் ஆதரவு முசுலீம்கள் சில இடங்களில் கலவரம் செய்தார்கள்.

''கலவரக்காரர்கள் என்ன சொன்னார்கள்?''

''என்ன சொல்வார்கள்? காஷ்மீரை பாக்கிஸ்தானோடு சேர்க்க வேண்டும் என்பவர்கள் தானே கலவரம் செய்தார்கள். அவர்கள் வேறென்ன சொல்வார்கள்?''

''அதன் பின் என்ன நடந்தது?'' மலர்விழியின் வினா இது.

''பெருந்தன்மை பிழைபட்ட இடம் இதுதான்.''

''விளக்கமாகச் கூறுங்கள் தாத்தா!'' என்றான் மணி.

''இப்போது நான் ஒரு கேள்விக் கேட்கின்றேன், அதற்கு நீங்கள் பதில் கூறுங்கள் பார்க்கலாம்?''

''என்ன தாத்தா நீங்க...கதை சொல்கிறேன் என்று தொடங்கி, இப்போ எங்களிடம் கேள்வி கேட்கிறேன் என்கிறீர்களே?'' என்றான் மணிவண்ணன்.

"கதையைப் புரிந்து கொள்வதற்கும், ஊன்றிக் கவனிப்பதற்கும் இப்படி குறுக்குக் கேள்வி கேட்டால் நல்லது தானே? தூக்கம் வந்தாலும் கலைந்து விடுமல்லவா?" என்றார் தாத்தா."

"நாம்மட்டில் தாத்தாவைக் கேள்வி கேட்கிறோம் இல்லையா? தாத்தா கேட்டால் கூற வேண்டியதுதானே? நான் சொல்கிறேன். நீங்கள் கேள்வியைக் கேளுங்கள் என்றாள் மலர்விழி."

"பார்த்தாயா தம்பி! கி.பி. 2000 பெண்களின் ஆளுமையோடுதான் பிறக்கப் போகிறது. இனி நீங்க ஒதுக்கீடு கோர வேண்டிய நிலை ஏற்படும்" என்று கூறிச் சிரித்தார் தாத்தா.

"கேள்வியைக் கேட்கிறேன். இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் யார்? நான் கேட்பது விடுதலை பெற்ற பிறகு, புரிகிறதா?"

"ராஜாஜி!" என்றான் மணிவண்ணன்.

"தவறு, இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல்தான் ராஜாஜி. விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலும், பிரிட்டிஷ் இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலும் ஒருவரே!

"நான் சொல்றேன் தாத்தா! லார்டு மவுண்ட்பேட்டன் என்றாள்" மலர்விழி.

"சரியாகச் சொன்னாயம்மா, மதிப்பெண் தரட்டுமா?"

"நாம் வினாடி வினா போட்டியா நடத்துகிறோம்?" என்று தன் தோல்விக்குத் திரைபோட முயன்றான் மணி.

"வேண்டாம் தாத்தா! கதையைச் சொல்லுங்கள் என்றாள் மலர்விழி." தாத்தா வேறு என்னவோ சொன்னீர்களே? என்று இழுத்தான் மணிவண்ணன்.

"மறக்கவில்லை— அதற்குத்தானே வருகிறேன்" "வெள்ளைக்காரர்கள் இந்தியாவை விட்டு வெளியேறிய போது காஷ்மீர் மன்னர் தன் நாட்டை இந்தியாவோடு இணைத்து ஒப்பந்தத்திலே கையெழுத்துப் போட்டாரில்லையா?"

"ஆமாம். அதைத்தான் முன்பே கூறிவிட்டீர்களே! விட்ட இடம் தெரியாமல் தடுமாறினார் தாத்தா— சில நொடிகளில் நினைவுபெற்றவராகத் தொடர்ந்தார்." இந்தியா விடுதலை பெற்றதும் இராஜாஜியே முதல் கவர்னர் ஜெனரலாக நியமித்திருக்கலாம். வெள்ளையரோடு நமக்குப் பகைமை இல்லை நாம், நமது உரிமைக்காகத்தான் போராடினோம். யாருக்கும் எதிராக அல்ல. எல்லாரும் நண்பர்களே என்பதை மெய்ப்பிக்கும் வகையில், எந்த வெள்ளையரை வெளியேறு என்றோமோ, அதே வெள்ளையரை நாம் விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாக ஏற்றுக் கொண்டு பெருந்தன்மையை வெளிப்படுத்தினோம்.

"அதனால் என்ன தாத்தா?"

"காஷ்மீர் இந்தியாவுடன் இணைவதற்கு ஒப்பந்தம் செய்தாரல்லவா ஹரிசிங்?"

"ஆமாம்."

அந்த ஒப்பந்தத்திற்கு எதிராகச் சிலர் ஆங்காங்கே கலகம் செய்தார்கள் அல்லவா?

"ஆமாம்."

"அதை மவுண்ட்பேட்டன் பயன்படுத்திக் கொண்டார்."

"என்ன செய்தார் அவர்?"

"காஷ்மீர் சிக்கலுக்கு முதல் முடிச்சுப் போட்டவரே அவர்தான்."

"அப்படியா? போறபோக்கில் கொளுத்திப் போட்டு போட்டுவிட்டாரா தாத்தா?"

"உன் மொழியில் கூறுவதானால் அப்படித்தான் கூற வேண்டும். காஷ்மீர் கலவரத்தைக் காரணம் காட்டி மவுண்ட்பேட்டன் பிரபு ஹரிசிங்குக்கு ஒரு கடிதம் எழுதினார்.

"என்ன எழுதினார்?"

"காஷ்மீர் மக்களின் விருப்பத்தை வாக்கெடுப்பின் மூலம் அறிந்த பிறகே காஷ்மீரை இந்திய யூனியனோடு சேர்ப்பது குறித்து முடிவு செய்யலாம் என்று எழுதினார்.

"அறுநூறு குறுநில மன்னர்கள் தத்தம் நாட்டை இந்தியாவுடனும், பாகிஸ்தானுடனும் இணைத்தார்களே, அங்கெல்லாம்கூட வாக்கெடுப்பு நடத்தித்தான் இணைத்தார்களா?" மலர்விழியின் வினா இது.

"நீ கேட்ட இந்தக் கேள்வியை அன்று பிரதமராக இருந்த பண்டித ஜவகர்லால் நேரு கேட்டிருந்தால் சிக்கல் அன்றே அவிழ்ந்திருக்கும்.

"நேரு ஏன் கேட்கவில்லையாம். மணிவண்ணன் கேட்டான்.

"உங்களுக்குத்தான் தெரியுமே, நேருவுக்குக் குழந்தை உள்ளமென்று. வெளுத்திருப்பதை எல்லாம் பால் என்று எண்ணுவது என்பார்களே அப்படி, சுண்ணாம்புநீரை இவர் மோர் என்று எண்ணிவிட்டார்.

"ஐயய்ய! என்ன இந்த நேருவுக்கு ஒன்றுமே தெரியாதா?"

அப்படிக் கூறக்கூடாது. அவரைப் போன்ற படிப்பாளிகளையும், அறிவாளிகளையும் நாம் பார்க்க முடியாது.

நேரு ஒரு போராட்ட வீரர். இலட்சியவாதி, தன்னலந் துறந்தவர், அஞ்சாநெஞ்சுடையவர், சிறந்த எழுத்தாளர், பேச்சாளர். பல ஆண்டுகள் நாட்டுக்காகப் போராடி சிறையிலிருந்தவர். உலகமே அவரை மதித்தது. அவர் சொல் கேட்டது.

மேலும் தொடரவாய் திறந்த தாத்தாவை, மணி வண்ணனின் இந்த வினா தடுத்து நிறுத்தியது.

"பின்னர் ஏன் நேரு, மவுண்ட் பேட்டனைனக் கேள்வி கேட்காமல் விட்டார்?"

"அதுதான் கூறினேனே அவருக்குக் குழந்தை மனம் என்று அவர் யாரையும் ஐயப்பட மாட்டார். அப்படியே நம்பி விடுவார். சூதும் வாதும் அறிந்தவராக இருந் திருந்தால் கேட்டிருப்பார். மற்றவர்கள் கடுமையாகக் கருதுவதைக் கூட அவர் எளிமையாக எடுத்துக் கொள்வார், அப்படிப்பட்ட இயல்பு அவருடையது.

"அவர்தான் அப்படி; சரி, மற்றவர்கள் கேட்டிருக்க வேண்டியது தானே? நீங்கள் சொன்னீர்களே இரும்பு மனிதர் என்று, அவர்தானே மற்ற மன்னர்களையெல்லாம் இணங்க வைத்து இந்தியாவோடு இணைத்தார். அவர் காஷ்மீரையும் அப்படிச் செய்திருக்க வேண்டியதுதானே?"

"அவர் தன் கடமையைச் செய்யாமல்" இல்லை. நடக்கும் பக்கத்தில் இருக்கிறதே ஆந்திரா, அதன் தலை நகர் எது தெரியுமா?

"ஐதராபாத்!"

"அந்த ஐதராபரத்தை 1947-இல் ஆண்டு கொண் டிருந்தவர் நிசாம் மன்னர். அவர் இந்தியாவோடு இணைய மறுத்தார். அங்கேயும் கூலிப் படையினர் கிளர்ச்சி செய் தார்கள்...பட்டேல்தான் அவர்களை அடக்கி ஐதரா பாத்தை இந்தியாவோடு இணைத்தார்."

"அதேபோல் காஷ்மீர் கலவரத்தையும் அடக்க வேண்டியதுதானே?" இது மலர்விழியின் கேள்வி.

"அதைத்தான் பட்டேல் செய்தார். படைகளை அனுப்பி காஷ்மீரின் மூன்று மாவட்டங்களை இந்தியாவின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார். எஞ்சியிருந்தது இரண்டே மாவட்டங்கள்தான். அவற்றையும் ஓரிரு வாரங்களில் நம் கைக்குள் கொண்டு வந்திருப்பார். இந்தியப் படைகளும் அதற்கான திறமையோடும், தயாரிப்போடும் இருந்தன. ஆணையிட்டிருந்தால் அதைச் செய்து முடித்திருப்பார்கள். அந்த நல்ல நேரத்தில் நேரு ஒன்றைச் செய்தார்."

"என்ன செய்தார் தாத்தா?"

"காஷ்மீர் பிரச்சினையை ஐ. நா மன்றத்திற்குக் கொண்டு போய் விட்டார்."

"அது தவறா தாத்தா?"

"தவறாகத்தான் போய் விட்டது! பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் ஆயிற்றென்பார்களே அப்படி ஆகி விட்டது—காஷ்மீர் பிரச்சினை மவுண்ட் பேட்டன் போட்ட முடிச்சுக்கு மேல் ஐ. நாவும் ஒரு பெரிய முடிச்சாகப் போட்டு விட்டது.

"ஐ. நா. மன்றம் என்ன செய்தது தாத்தா?"

"1948-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 13-ஆம் நாள் ஐ. நா. ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது, அதன்படி இந்தியாவும், பாக்கிஸ்தானும் போர் நிறுத்தம் செய்ய வேண்டும். பாக்கிஸ்தான், தான் காஷ்மீரில் கைப்பற்றிய இடத்தை விட்டு வெளியேற வேண்டும். மக்களின் கருத்தை அறிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பதுதான் தீர்மானத்தின் கருத்து."

"அதன் பிறகு என்ன நடந்தது?"

"ஐ. நா. தீர்மானப்படி பாக்கிஸ்தான் காஷ்மீரில் தான் கைப்பற்றிய பகுதியிலிருந்து வெளியேறாமல், தன் கட்டுப் பாட்டிலேயே வைத்துக் கொண்டது."

"அப்புறம்?"

"தீர்மானத்தைப் பாக்கிஸ்தான் மதிக்கவில்லை. நமக்கும் காஷ்மீரில் தேர்தல் நடத்த வேண்டிய தேவை எழாமற் போய் விட்டது. அப்போது ஐ. நா வின் தலைமைச் செயலாளர் போர் நிறுத்தத்திற்காக ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதற்கு நமது பிரதமர் சரியான பதில் கூறினார்."

"என்ன கூறினார்?"

"போர் நிறுத்தம் என்பது சமாதானமல்ல. ஒரு போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து, மற்றொரு போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு நாம் போய்க் கொண்டு, மீண்டும் பாக்கிஸ் தான் தாக்குதலை ஆரம்பிக்கக் காத்திருக்க முடியாது." என்று மரத்தில் ஆணி அடித்தாற்போல் கூறி விட்டாரே.

"அதுதான் சரி. அப்புறம்?"

"பாக்கிஸ்தான் ஆட்சியாளர்களின் சிந்தனை ஓட்டத்தை நாம் புரிந்து கொண்டிருந்தாலும். கொள்கை, கோட்பாடு, உலகம் நம்மீது வைத்திருக்கும் நம்பிக்கை ஆகியவற்றைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய கட்டா யந்தான் நம்மைக் கட்டிப் போட்டிருந்தது."

"ஐதராபாத்தையும், கோவாவையும் இந்தியாவோடு இணைத்ததைப் போன்று, காஷ்மீரையும் அன்றே இணைத் திருந்தால், சிக்கல் அப்போதே அறுபட்டுப் போயிருக்கும், அன்று விட்டோம். இன்றும் தொடர்கிறது."

"செய்ய வேண்டியதை முறைப்படி காலத்தில் செய்யத் தவறியதால், இந்தியா காஷ்மீரைத் தன் கட்டுப் பாட்டில்

வைத்திருக்கவும், மக்களை இந்தியச்சார்பாளராகவே தொடர்ந்து இருக்கச் செய்வதற்குத் தனிச் சலுகைகளை வழங்கிட ஏராளமான பணத்தைச் செலவிட வேண்டிய தாயிற்று.''

''அது என்ன தனிச்சலுகை?''

''அதுவா...? அதெல்லாம் இப்போது அரசியலில் மாட்டிக் கொண்டிருக்கிறது. அவற்றையெல்லாம் பின்னர் தெரிந்து கொள்வீர்கள். இப்போது அவற்றையெல்லாம் அலசத்தேவையில்லை. இந்த அளவில் அதை நிறுத்திக் கொள்வோம்.

''சரி! தாத்தா! அதை விட்டு விடுவோம். அதன் பின் நடந்ததைக் கூறுங்கள்''

''காஷ்மீர் பிரச்சினையால் பாக்கிஸ்தானுக்கு இந்தியா 'நிரந்திர எதிரி' என்றாகி விட்டது. நமக்குத் தலைவலியை உண்டாக்கும் செயல்களில் அது முனைப்புக் காட்டிச் செயல் பட்டு வருகிறது. நாம் பேசிக் கொண்டிருக்கும் இந்த நேரம் வரை பாக்கிஸ்தான் தொல்லை தருவதைத் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது.

''இன்னும் என்ன செய்கிறது? அதுதான் கார்கில் சண்டை கூட முடிவுக்கு வந்து விட்டதாகத் தொலைக் காட்சி செய்தியில் கூறினார்களே?''

''மழை விட்டும் தூரல் விடவில்லை என்று கேள்விப் பட்டிருக்கின்றாயா?''

''பாட்டி அடிக்கடி அதைச் சொல்லக் கேட்டிருக் கிறேன்.''

''சண்டை நிற்கும். ஆனால் காஷ்மீரில் குண்டுகள் வெடிக்கும் கொலைகள் விழும். ஆளைக் கடத்துவார்கள் மக்களைக் கூட்டம் கூட்டமாக வெடி வைத்துக் கொல்வார்

கள். பாக்கிஸ்தான், பால்குடிக்காத பூனையாக பாவனை செய்து கொண்டு-தூண்டி விடும்-ஆயுதம் கொடுக்கும்-ஆட்களை அனுப்பும்-எல்லா உதவிகளையும் கலகக் காரர்களுக்குச் செய்து கொண்டிருக்கும் இருக்கிறது!''

''பாக்கிஸ்தான் ரொம்ப மோசம் தாத்தா! அங்கே இருப்பவர்களை யெல்லாம் குண்டு போட்டு ஒழிச்சுட்டா அதன் பிறகு இப்படியெல்லாம் செய்ய மாட்டார்கள் இல்லையா தாத்தா?'' மணிவண்ணன் கோபமாகவே இதைக் கூறினனான்.

''போடா மக்கு! நாம் குண்டு போட்டா, அவங்க மட்டும் நம்மீது குண்டு போட மாட்டாங்களா?'' என்றாள் மலர்விழி

இப்போதும் அதைத்தானே காஷ்மீரில் செய்து கொண்டிருக்கிறார்கள்?''

''நிறுத்துங்கள் உங்கள் சண்டையை. போர் கூடாது என்பதால் தான் நேரு, காஷ்மீர் பிரச்சினையை ஐ. நா சபைக்கே கொண்டு போனார். 'சமாதான சகவாழ்வு' என்றொரு முழக்கத்தை உலகின் முன் வைத்தவர்களே நாம் தான்.''

''அப்படி என்றால் என்ன தாத்தா?''

''அமைதியாக நட்புறவோடு அனைவரும் வாழ்வோம்'' என்பது தான் அதன் பொருள்.

''அப்படி நாம் மட்டில் நினைத்தால் போதுமா?''

''ஒரு கையால் ஓசை எழுப்ப முடியாது தான். நாம் போரை விரும்பாவிட்டாலும்! போர்தான் தீர்வு, என்று எண்ணுபவர்களின் பக்கத்தில் இருக்கின்றோம்.''.

''அதனால்தான் குண்டு போட்டு ஒழிக்க வேண்டும் என்று கூறினேன். சரிதான் தாத்தா?''

"தம்பி! அவசரப்படாதே! நமக்கென்று ஒரு கொள்கை யுண்டு. இந்தியா அமைதியை விரும்பும் நாடு. அன்னால் காந்தியடிகளின் அகிம்சை என்னும் துன்புறுத்தா கொள்கை தான் நம்முடையது. புத்தரும், அசோகரும் பிறந்த மண் நம்முடையது. இப்பெரியார்களின் கொள்கைகளில் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருந்த காரணத்தால் தான், நேரு படைப் பெருக்கத்திலோ, ஆயுதக் குவிப்பிலோ ஆர்வம் காட்டவில்லை.

'உலகமெல்லாம் அப்படி இருந்தால் நாமும் அப்படியே இருக்கலாம்."

"யாராவது வழி காட்ட வேண்டுமல்லவா? வழி காட்டுபவர்களாக நாம் ஏன் இருக்கக் கூடாது? என்று எண்ணிச் செயல்பட்டவர்கள் நம் தலைவர்கள்."

"முன்னே செல்பவர்களின் கால்களில் தானே முள் தைக்கும்?"

"அது தான் தைத்துக் கொண்டிருக்கிறதே! மணி. பாக்கிஸ்தான் இராணுவம் நம்மீது போர் தொடுப்பதால் அந்த நாட்டு மக்களை எல்லாம் நாம் பகைவர்களாக எண்ணக் கூடாது."

"ஏன் எண்ணக் கூடாது?"

"மக்களில் பெரும்பாலோர் நல்லவர்களே! போரை விரும்பாதவர்களும், நம்மோடு நட்போடு இருக்க விரும்பு பவர்களும் பாக்கிஸ்தானில் இருக்கத்தான் செய்கிறார்கள்."

"நல்லவர்கள் என்கிறீர்களே, அவர்கள் ஏன் நம்மீது அவங்க நாடு போர் தொடுப்பதைத் தடுக்கக் கூடாது?"

"மணிவண்ணன் கேட்பது சரிதானே தாத்தா? மலர்விழி முதன் முறையாக மணிவண்ணன் கருத்தோடு ஒத்துப் போனாள்

"கேள்வி சரி! ஆனால் பாக்கிஸ்தானில் நிலவும் சூழ்நிலைதான் சரியில்லை. பாக்கிஸ்தானில் நம் நாட்டில் உள்ளதைப் போல் மக்களாட்சி மலரவில்லை. தேர்தலில் வென்றவர்களை அந்த நாட்டு இராணுவம் ஆள விட வில்லை. ஆள்பவர்கள் இராணுவத்தின் சொல்படி நடந்தால் தான் கொஞ்சமாவது காலந்தள்ள முடியும் என்பதே அங்குள்ள நிலை.

கடந்த ஐம்பதாண்டுகளில் அங்கே ஐந்து முறை இராணுவ ஆட்சி ஏற்பட்டிருக்கிறது.

"அப்படியா? வியப்போடு கேட்டாள் மலர்விழி."

"அது அவங்க" உள்நாட்டு விவகாரம் அதைப் பற்றி நாம் ஏன் பேச வேண்டும்? பாக்கிஸ்தான் மக்களைப் பற்றி நமது முன்னாள் பிரதமர் கூறியதைக் கேளுங்கள்.

"என்ன சொன்னார்!

"பகைவனை வென்று வெற்றி மாலை சூடுவோம்." என்னும் சிறு கையேட்டில் அவர் கருத்து இடம் பெற்றிருக்கிறது?

"யார் தாத்தா அது?"

"1965 இல் பிரதமராக இருந்த லால் பகதூர் சாஸ்திரி பாக்கிஸ்தான் மக்களுடன் நமக்குப் பகைமை இல்லை. அவர்கள் நன்கு இருக்க வேண்டும் என்றும் வளம்பெற வேண்டும் என்று விரும்புகிறோம். அவர்களுடன் சமாதான மாகவும், நேசபாவமாகவும் இருக்க விரும்புகிறோம். சுதந்திரம், ஜனநாயகம், சமாதானம் என்பவைகளில் நம்பிக்கை வைக்காத ஒரு ஆட்சியின் மீதுதான் நமக்குப் பகைமை." இது தான் நமது பிரதமர் கூறியது.

"மணி! கேட்டுக்கோ! நம் பிரதமரே நல்லா, தெளிவா கூறி இருக்கார், மக்கள் மீது நமக்குப் பகைமை இல்லை என்று சரிதானே?"

"நான் கூறியது தப்புதான் அக்கா!"

"உணர்ந்தால் சரி...என்றாள் மலர்விழி."

## கடந்த காலம்

"தாத்தா! பாக்கிஸ்தான் இதுவரை எத்தனைமுறை இந்தியாவோடு போர் தொடுத்திருக்கிறது?"

"கொஞ்சம் பொறுங்கள் நினைவு படுத்திக் கூறுகிறேன். சிறிது நேரம் சிந்திக்கிறார். "முதன் முதலாக 1947 ஆம் ஆண்டு தாத்தா தொடங்கும் போதே குறுக்கிட்டான் மணிவண்ணன்.

'தாத்தா' பாக்கிஸ்தான் எப்பொழுது விடுதலை பெற்றது என்று கேட்கவில்லை. போர் தொடுத்ததையே கேட்கிறோம். நீங்க 1947 என்று தொடங்குகிறீர்களே? அது விடுதலை பெற்ற ஆண்டுதானே? தாத்தா புன்முறுவல் பூத்தபடி சொன்னார்.

"மணி! நீ கூறுவதும் சரிதான். நான் கூறத் தொடங்கியதும் சரிதான். கொஞ்சம் பொறுமையாக நான் கூறவதையும் கேள். பாக்கிஸ்தான் விடுதலைபெற்ற 75-வது நாளே காஷ்மீருக்காக நம்மீது போர் தொடுத்தது."

75-வது நாளிலேயா?... வியந்து கேட்டாள் மலர்விழி.

"ஆம் காஷ்மீரை ஹரிசிங் இந்தியாவோடு இணைத்த போது கலவரம் தொடங்கியதே அதைத் தூண்டி விட்டதே பாக்கிஸ்தான். தான்-கலவரத்தை அடக்கச் சென்ற நம் படைக்கு எதிராகத் தன் படையை 22-10-1947 அன்று முசாபராபாத் வழியாக காஷ்மீருக்குள் நுழைத்தது பாக்கிஸ்தான் இது முதல் போர்.

தளபதி அயூப்கான் பாக்கிஸ்தானின் சர்வாதிகாரியாக இருந்தபோது 1965 செப்டம்பர் மாதம் இந்தியாவின் மீது போர் தொடுத்தார். இது இரண்டாவது முறை.

பாக்கிஸ்தானின் ஒரு பகுதியாக இருந்த கிழக்கு வங்கம் ஷேக் முஜிபுர் ரெஹ்மான் தலைமையில் விடுதலைப் போராட்டம் நடத்தியது. வங்கதேசம் மலர்ந்த அந்த காலக்கட்டத்தில் அதையே காரணமாகக் கொண்டு 1971-ஆம் ஆண்டு டிசம்பரில் மூன்றாவது முறையாக நம் மீது போர் தொடுத்தது.

கடந்த மேமாதம் தொடங்கி நடந்ததே கார்கில் போர், அது நான்காவது முறையாகத் தொடுத்த போர்.

"இந்த நான்கு போரிலும் யார் தாத்தா வெற்றி பெற்றது?" மணிவண்ணனின் ஆர்வம் வினாவாக வெளிப்பட்டது.

"முதல் போரில் நம் ராணுவம் வெற்றிபெறும் நிலையில் தான் இருந்தது. நம் பிடையின் முன்னேற்றத்தை அன்றைய பிரதமர் நேரு தடுத்து நிறுத்தி விட்டார். இதனால் காஷ்மீரில் மட்டில் 83000 கி. மீ. பரப்பை பாக்கிஸ்தான் பிடித்துக் கொண்டது. கொள்கையின் பெயரால் ஓராயிரத்திற்கும் மேற்பட்ட நம் படை வீரர்களின் உயிரை பலி கொடுத்தது தான் நாம் முதற்போரில் பெற்ற ஆதாயம். நல்ல வேளை. சர்தார் வல்லபாய் பட்டேல் உள்துறை அமைச்சராக இருந்தார். இல்லையென்றால் பாக்கிஸ்தான் காஷ்மீரை முழுதாகவே விழுங்கி ஏப்பம் விட்டிருக்கும்."

"என்ன தாத்தா! நேரு இப்படி செய்துவிட்டார்? மணிவண்ணன் குரலில் வருத்தம் இழையோடியது."

"தம்பி! பட்டேல் நம் நாட்டுத் தலைவர் நேருவோ உலகத் தலைவர்களுள் ஒருவர் உலகத்திற்கெல்லாம் அறி

வுரை கூறி அமைதி காக்க உழைத்தவர். அவரால் அப்படித் தான் நடந்து கொள்ள முடியும்.''

''ஆமாம் தாத்தா. எங்கள் ஆசிரியர் கூட கூறினார், ஏதோ புதிய கொள்கைத் திட்டத்தைக் கூட கொடுத்தாராமே? அதன் பெயர் கூட... ஒரு பாதியில் வடக்கே பாயும் நதியின் பெயர் ஒட்டிக்கொண்டிருக்கும் என்றாள் மலர்விழி.

''அதுவா'' பஞ்சசீலக் கொள்கை என்று அதற்குப் பெயர் நல்ல திட்டந்தான்.

''அப்படி என்றால் என்ன தாத்தா?''

''அதைக் கூறத் தொடங்கினாள், அது வேறு கதையாகி விடுமே! என்று தயங்கினார் தாத்தா.

''பரவாயில்லை கூறுங்கள்'' என்றாள் மலர்விழி.

''சொல்லுங்கள் தாத்தா!'' என்று மணிவண்ணனும் வற்புறுத்தினான்.

சரி. ஒன்று செய்வோம். மணிவண்ணன் கேட்ட கேள்விக்கு மட்டில் பதில் கூறிவிடுகிறேன். பஞ்சசீலம், அதன் தொடர்பான செய்திகளை நாளை கூறுகிறேன். நேரமாகி விட்டதல்லவா? என்றார் தாத்தா.

''அப்படியே செய்யலாம் தாத்தா'' என்று இருவரும் இசைவு தெரிவித்ததும், தாத்தா தொடர்ந்தார்.

''இரண்டாவது போரில் யாருக்கும் முழு வெற்றி கிடைக்கவில்லை. உலக நாடுகளின் கோரிக்கைக்கு இணங்கியும், நமதுநட்பு நாடான சோவியத் ரஷ்யாவின் அழைப்பை ஏற்றும் அமைதிப் பேச்சுக்காக 4.1.1966 அன்று நமது பிரதமர் லால்பகதூர் சாத்திரி சோவியத் நாட்டின் டாஷ்கண்ட்டிற்குச் சென்றார்.

அங்கே பாக். அதிபர் அயூப்கானுக்கும்—நமது பிரதமருக்கும் இடையே 10.1.1966 அன்று மாலை 4.00 மணிக்கு

ஒரு உடன்பாடு கையெழுத்தாயிற்று. அதன்படி அவரவர் போரில் கைப்பற்றிய பகுதிகளை விட்டுக் கொடுத்துவிட்டு 5.8.1965 அன்று எந்த நிலையில் இருந்தார்களோ அங்கே திரும்பிவிட வேண்டியதாயிற்று.

"அப்போது நம் படை பாகிஸ்தானின் இடங்களைப் பிடித்திருந்ததா தாத்தா?"

"பாகிஸ்தானில் எந்த இடத்தையும் பிடிக்கவில்லை. காஷ்மீரில் பழைய யுத்த நிறுத்த எல்லைக் கோட்டுக்கு அப்பால், கணவாய்ப் பகுதிகளை நம் படை கைப்பற்றி யிருந்தது. அதை நாம் விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று அப்பொழுது மற்றொரு பேரிழப்பும் நமக்கு ஏற்பட்டது."

"அது என்ன தாத்தா?"

"டாஷ்கண்ட் உடன்பாட்டில் கையொப்ப மிட்டபின் சோவியத் பிரதமர் கோசிஜின் அளித்த விருந்தில் கலந்து கொண்டுவிட்டு, இரவு பத்து மணிக்குத் தம் மாளிகைக்குத் திரும்பிய சாத்திரி, அன்று நள்ளிரவு கடந்து 1.25மணிக்கு மாரடைப்புக்கு ஆளானார்.

"மாரடைப்பு என்றால் என்ன தாத்தா? இது மணி."

"அதுவா உயிரைப் பறிக்கும் உடலுறுப்பு விபத்து என்றுதான் கூறவேண்டும். இதயத் துடிப்பு இயங்காத நிலை. மாரடைப்பு ஏற்பட்டால் பிழைப்பது அரிது.

"நமது பிரதமர் சாத்திரி பிழைத்தாரா இல்லையா?"

"இல்லை. அன்னிய மண்ணில் அவர் ஆவி பிரிந்து விட்டது."

"ஐயோ பாவம்!" என்றனர் இருவரும் சிறிது நேரம் அங்கே அமைதி நிலவியது. மணிவண்ணன்தான் அமை தியை உடைத்தான்.

"அடுத்த போரில் என்னவாயிற்று தாத்தா?"

"1971-ஆம் ஆண்டு நடைபெற்ற வங்கதேசப் போரில் இந்திய வீரர்கள் மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியானார்கள். இந்தியா 93,000 பாக்கிஸ்தான் இராணுவ வீரர்களைச் சிறை பிடித்தது. அவர்களை போர்க் கைதிகளாக வைத்திருக்க முப்பத்தேழு கோடி ரூபாய்களைச் செலவிட்டது.

"ஆட்களைத்தான் பிடித்ததா? நிலத்தைக் கைப்பற்றவில்லையா? என்றான் மணிவண்ணன்.

"நிலத்தையும் கைப்பற்றியது. பாகிஸ்தான் பிடித்து வைத்திருந்த காஷ்மீர் பகுதி உட்பட 5619 சதுர மைல் பரப்பளவுள்ள நிலப்பரப்பை இந்திய வீரர்கள் போராடிக் கைப்பற்றினார்கள்."

"Weldone" என்றாள் மலர்விழி.

"அப்படித்தான் செய்யணும்" என்றான் மணிவண்ணன்.

"பாக்கிஸ்தான் நமது நிலப்பரப்பில் எதையாவது பிடித்துக் கொண்டதா தாத்தா?

"ஆமாம்— போர் என்றால் இரண்டு பக்கமும் இழப்பும் நிலப் பிடிப்பும் இருக்கத்தான் செய்யும். அவர்கள் நமது நாட்டில் 121 சதுர மைல் பரப்பளவு நிலத்தைக் கைப்பற்றியிருந்தார்கள். சிம்லா ஒப்பந்தப்படி அந்த 121 சதுர மைல் இடத்தைப் பெற்றுக் கொண்டு, நாம் கைப்பற்றியிருந்த 5619 சதுர மைல் பரப்பு நிலப் பகுதியை அவர்களுக்கு விட்டுக் கொடுத்தோம்."

"போங்க தாத்தா! இந்தியா இப்படிச் செய்தது சரியில்லை. யாராவது ஐயாயிரத்தை நூறுக்காக விட்டுத் தருவார்களா?" என்றான் மணிவண்ணன்.

"தம்பி! விட்டுக் கொடுத்தால்தான் எங்குமே இணக்கம் காணமுடியும். இன்று இந்த அளவில் நிறுத்திக் கொள் வோம், என்ன...?" என்றார் தாத்தா.

"சரி." என்று எழுந்தாள் மலர்விழி. அவளைத் தொடர்ந்தான் மணிவண்ணன். முத்துவும் முல்லையும் அப்போது ஆழ்ந்த உறக்கத்திலிருந்தனர்.

போகும்போது மணிவண்ணன் மலர்விழியிடம் கேட் டான் "அக்கா! சண்டையிடாமல் நாடுகள் இருக்க முடியாதா? ஏன் இப்படி அடிக்கடி சண்டையிட்டுக் கொள் கின்றன? தாத்தா சொன்னாரே மூவாயிரம் பேர்கள் இறந்தார்களென்று, அவர்களுடைய அம்மா, அப்பா, நம்மைப் போன்ற பிள்ளைகள் எல்லாம் எவ்வளவு வருத்தப் பட்டிருப்பார்கள்?" அவன் குரலில் நெகிழ்வு தெரிந்தது.

"ஆமாம் மணி! எனக்குக்கூட என்னவோபோல்தான் இருக்கிறது. ஆமாம் இவ்வளவு இரக்கப்படும் நீ, முன்பு ஏன் மக்கள் மீது குண்டு போட்டு அழிக்க வேண்டும் என்று கூறினாயே ஏன்?"

அப்போது வந்த ஆத்திரத்தில் அப்படிக் கூறிவிட்டேன். அதுதான் தவறென்று அப்போதே கூறிவிட்டேனே

"இப்படித்தான் சிலர், தவறுகளைப் பின்னர் உணர் கிறார்கள்" என்றாள் மலர்விழி.

## வெள்ளை ரோஜா—நேரு

மறுநாள் விடுமுறையாதலால் மாலை 4-00 மணிக்கே கதை கேட்க தாத்தாவிடம் வந்து விட்டார்கள். ஏதோ புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த தாத்தா வேறு வழி யின்றிப் படிப்பதை நிறுத்தி விட்டுக் கதையைத் தொடர ஆயத்தமானார். மா பாரதத்தில் கிளைக் கதைகள் வரு

வதைப் போல் கார்கில் கதையில் லடாக் கதை கிளைக் கதையாக முளைத்து வந்தது.

நேரு ஒரு நேர்மையான தலைவர். காந்தியின் கொள் கையில் ஆழ்ந்த பற்றுடையவர். உலகை ஒரே குடும்பமாகக் காண விழைந்தவர்.

''புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட
வோரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்''

என்றாரே பாவேந்தர், அப்படிப் போரில்லாத உலகைக் காண ஆசைப்பட்டவருக்குப் படை, போர் என்பதெல்லாம் எப்படி ஏற்புடையதாக இருக்கும்? அதனால்தான் இந்தியப் படையின் முதல் தலைமைத் தளபதியாக இருந்த சர் ராப் லாக் ஹ்றாட் என்பவர் இந்தியாவுக்காகத் தயாரித்தளித்த பாதுகாப்புத் திட்டத்தை நேரு ஏற்கவில்லை. ''இந்தியா, துன்புறுத்தாக் (அகிம்சை) கொள்கையைக் கடைப்பிடிக்கும் நாடு. அண்டை அயலாரால் நமக்கு எந்தக் கேடும் வந்து விடாது. இராணுவத்தைக் குறையுங்கள்'' என்றார் நேரு.

ஆசிய, ஆப்பிரிக்கா நாடுகளிடையே நட்பையும், நல்லுறவையும் வளர்க்கப்பாடுபட்டவர். இதே நோக்கத் திற்காகப் 'பாண்டுங்' மாநாட்டை முன்னின்று நடத்தியவர் நேரு. அவர் எண்ணத்தில் உருப்பெற்ற பஞ்சசீலக் கொள் கையை ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் எல்லாம் ஆகா, ஓகோ என்று புகழ்ந்து வரவேற்றன. அந்த வரவேற்பிற்குள்ளேயும் பொல்லாத எண்ணப்புற்று இருக்குமென அவரால்எண்ணிப் பார்க்க இயலாமற் போய் விட்டது. பூவை விரும்பிய அவருக்குப் பூநாகம் பற்றித் தெரியாமற் போய் விட்டது.

''பஞ்ச சீலம் என்றால் என்ன என்பதையே கூற வில்லையே தாத்தா?'' என்று குறுக்குக் கேள்விக் கேட்டான் மணிவண்ணன்.''

"உனக்கு அவசரம். கயிலை மலை கண்ணுக்குத் தெரிந்தாலும் கையால் எட்டித் தொட்டு விடும் தூரத்தில் இருப்பதில்லை. அப்படித்தான் கதை நிகழ்வுகளும், ஒரு கருத்தை எட்டிப் பிடிக்க, வேறு பல நிகழ்வுகள் பேச்சுக் களைத் தொட்டுக் கொண்டுதான் அந்த இடத்தை எட்ட முடியும், இனி பஞ்ச சீலத்தைப் பார்ப்போம்."

**பஞ்ச சீலக் கொள்கைகள் :**

(i) ஒவ்வொரு நாடும் மற்ற நாட்டையும், அதன் ஆளுமையையும் மதித்து நடக்க வேண்டும்.

(ii) ஒரு நாட்டை, மற்ற நாடு கைப்பற்ற முயலக் கூடாது.

(iii) ஒரு நாட்டின் உள் நாட்டு செயல்பாட்டில் மற்ற நாடுகள் தலையிடக் கூடாது.

(iv) நாடுகளிடையே ஒப்புடைமையையும், ஒன்றுக் கொன்று உதவுதல்.

(v) அமைதியான தோழமை வாழ்வு (சமாதான சக வாழ்வு)

"கேட்க என்னவோ நன்றாகத்தான் இருக்கிறது இதை எல்லா நாடுகளும் ஏற்றுக் கொண்டனவா?" என்றாள் மலர்விழி.

"பொதுவாக ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் இக்கொள் கையை வரவேற்றன. ஏற்றுக் கொண்ட நாடுகளுள் ஒன்று மக்கள் சீனா."

"சீனா கூட நம் நாட்டோடு சண்டையிட்டதாமே உண்மையா தாத்தா?"

"யார் சொன்னது?" தாத்தா கேட்டார்.

"யாரோ சொன்னாங்க, நினைவில்லை." இது மணி.

"நீ கேள்விப்பட்டது உண்மைதான்" என்றார் தாத்தா.

"சீனாதான் பஞ்ச சீலக் கொள்கையை ஏற்றுக் கொண்ட நாடென்றீர்களே, அது எப்படி போர் தொடுத்தது?" என்று கேட்டாள் மலர்விழி.

"சிறியவளாக இருந்தாலும், என்ன கேள்வி கேட்டு விட்டாள்?" என்று வியந்து கொண்டார் தாத்தா.

எந்த நாடும் இந்தியாவோடு போருக்கு வராது என்று தான் பஞ்ச சீலக் கொள்கையைத் தந்த நேரு நினைத்திருந்தார். அது மட்டுமல்ல, சீனா, சோவியத் ரஷ்யாவைப் போல இந்தியாவின் நட்பு நாடு. சீன நாட்டோடு நமக்குப் பிணக்கு ஏற்பட போவதுமில்லை. சீனா நம்மோடு மோதும் நிலை வரப் போவதுமில்லை என்று நேரு நினைத்ததைப் போன்றே நாடும் நம்பிக் கொண்டுதானிருந்தது. சீனாவுக்கு இந்தியா செய்த உதவியைப் போல் வேறெந்த நாடும் செய்யவில்லை.

"இந்தியா சீனாவுக்கு என்ன உதவி செய்தது?"

## சீண்டியது சீனா

சீனாவின் ஒரு சிறு பகுதியைத் தேசிய சீனா என்ற பெயரில் ஐ. நா.வில் இடம் பெற வைத்திருந்தது. அமெரிக்கா. உண்மையான செஞ்சீனாவை ஐ.நா அவைக்குள் அனுமதிக்க அமெரிக்காவும் அதன் சார்பு நாடுகளும் விரும்பாததே இதற்குக் காரணம் இந்தியாதான் எது நீதி என்பதை எடுத்துரைத்து செஞ்சீனாவுக்கே இடமளிக்க வேண்டுமென்று ஐ. நா. அவையில் வாதாடியது. தீர்மானம் கொண்டு வந்தது. நமது தூதர் வி. கே. கிருஷ்ணமேனன் இதற்காக வாதாடியே இளைத்துப் போனார் என்று கூடக் கூறலாம். கொரியப் போரின்போது சீனாவின் மதிப்பு

பாழ்பட்டுப் போய் விடக்கூடாதென்பதற்காக இந்தியா தான் சீனாவுக்கு அரண் செய்தது. இதனாலெல்லாம் சீனா நம்மோடு உண்மையான நட்புறவு கொண்டிருக்குமென்று தான் நம்பிக்கொண்டிருந்தோம். நாம் மட்டுமல்ல, நம் நிலையில் யாராக இருந்தாலும் அப்படித்தான் எண்ணி யிருப்பார்கள் எண்ண முடியும்.

சீனப்போர் தொடர்பாக, தமிழக அரசின் செய்தித் துறை 1962-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் ஒரு சிறு தகவல் குறிப்பேட்டை வெளியிட்டது. அதில் இடம்பெற்ற கருத்து இது. "நாம் உள்ள சுத்தியோடு இருந்தோம். இரட்டை வேடம் போடலாம் என்னும் எண்ணம் நம் நெஞ்சில் கிஞ்சித்தும் ஏற்படவில்லை. சுருக்கமாகச் சொல்வதானால் நம்மை வைத்து மற்றவர்களை எடை போட்டோம். புரிகிறதா மலர்விழி! இதுதான் நடந்தது.,

சீன படையெடுப்பால் நாம் 38000 சதுர கி.மீ. நிலத்தை மட்டில் இழக்கவில்லை; ஆசிய ஜோதி மனிதருள் மாணிக்கம் என்று போற்றப்பட்ட பண்டித நேரு அவர்கள் உள்ளம் பாதிக்கப்பட்டது. உடல் நலன் குன்றியது. துள்ளுநடை யும், வெள்ளுடையும், நெஞ்சை அள்ளும் பேச்சுமாக உலா வந்த நேரு, தான் நம்பிக்கை மோசம் போனதால் சீனப் போருக்குப்பின் ஒடுங்கிப் போனார்.

"சுத்த மோசம் இந்த சீனர்கள். நன்றி கொன்றவர் கள்." என்றான் மணிவண்ணன்.

"மணி! நீ மீண்டும் தவறாகப் பேசுகிறாய்." என்றாள் மலர்விழி.

"போ அக்கா, எனக்கு அப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது. என்னதான் இருந்தாலும் சீனா அப்படிச் செய்திருக்கக் கூடாது." என்றான் மணிவண்ணன்.

"அன்றிருந்த தலைவர்களின் பண்பு அப்படிப்பட்டது. என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டுமேயன்றி, சீனமக்

களை ஒட்டுமொத்தமாகக் குற்றம் சொல்லக் கூடாது. இப்போதுள்ள சீனத்தலைவர்களிடம் . மாற்றம் தெரிய வில்லையா? இன்னொரு செய்தியையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

''சீனா ஏன் படையெடுத்தது? அதைச் சொல்ல வில்லையே என்றான் மணிவண்ணன்.

''நீ சும்மா இருடா! குறுக்கே பேசாதே. தாத்தா நீங்க சொல்லவந்ததைச் சொல்லுங்கள்'' என்றாள் மலர்விழி.

''மணி உன் கேள்விக்கும் பின்னர் பதில் கூறுகிறேன். முதலில் இதைக் கேட்டுக்கொள்ளுங்கள். நான் கூற நினைத்ததை மறந்துவிடப் போகிறேன். என்று கூறிவிட்டுத் தொடர்ந்தார்.''

அப்போது சீன நாட்டின் பிரதமராக இருந்தவர் சூ—என்—லாய். இவர் நேருவின் அழைப்பின் பேரில் நல்லெண்ணப் பயணமாக இந்தியாவுக்கு வந்திருந்தார்.

ஏன் தாத்தா இல்லாததை எல்லாம் கூறுகிறீர்கள்? கொஞ்சம் சூடாவே கேட்டான் மணிவண்ணன்.

தாத்தாவுக்கு என்னவோ போலாகிவிட்டது. இந்தச் சின்னப் பயல் நம்மைப் பார்த்து இல்லாததைக் கூறுவதாகக் கூறிவிட்டானே! நாம் கூறியதில் என்ன தவறு கண்டு விட்டான்? என்று உள்ளுக்குள் எண்ணியபடி தாழ்ந்த குரலில் ''என்னப்பா கூறுகிறாய்?'' என்றார்.

''என்ன தாத்தா...சூஎன்லாய் இந்தியாவுக்கு வந்தார் என்று கூற வேண்டியது தானே? நல்லெண்ணப் பயணம் என்று அவர்களிடம் இல்லாததை ஏன் கூறினீர்கள். என்றான் மணி.

''அதுதானா...?நான்கூட என்னமோ ஏதோ என்று எண்ணி விட்டேன். தாத்தா, நீங்ககூட பஞ்சசீல கொள்கை யைக் கடைப்பிடிக்கிறீங்க ஆனால் அந்த சூ—என்—லாய்

தான் ஏற்றுக்கொண்ட பஞ்சசீலக் கொள்கையை மீறி நடந்து கொண்டார்? என்று கேட்டாள் மலர்விழி.

"கேள்வி சரி நான் எங்கே பஞ்சசீலக் கொள்கையைக் கடைப்பிடித்தேன்? நான் எந்த நாட்டுக்கும் பிரதமர் இல்லையே?"

"என்ன தாத்தா! மறந்து விட்டீர்களா? பாக்கிஸ்தானில் ஐந்து முறை இராணுவ ஆட்சி ஏற்பட்டிருக்கு; மிச்சச் சொச்ச மக்களாட்சியிலும் இராணுவமே மேலாண்மை செய்து வந்திருக்கிறது என்று சொல்லிவிட்டு அது அவர்கள் உள் நாட்டு விவகாரம், நாம் அதைப்பற்றி ஏன் பேச வேண்டும்? என்று நிறுத்திக் கொண்டீர்களே அது பஞ்ச சீலக் கொள்கையில் ஒன்றுதானே?

"கெட்டிகாரப் பெண்ணம்மா நீ! நல்லா நினைவு வைத்திருக்கிறாயே! அப்படித்தான் இருக்க வேண்டும் ஒரு காதில் வாங்கி மறுகாதில் விடக்கூடாது. என்ன மணி வண்ணா! நீ எப்படி...?"

"நானும் கேட்பதை மறக்க மாட்டேன். நீங்கள் கூறுங்கள்."

"எங்கே விட்டோம்...?"

"நான் கூறுகிறேன். சூ என் லாய் இந்தியாவுக்கு வந்தாரே அந்த இடத்தில் விட்டோம். எப்படி என் ஞாபக சக்தி?"

"மணி... நீயும் கெட்டிக்காரன்தான்," என்று அவனுக்கும் பாராட்டுக் கூறிவிட்டுத் தொடர்ந்தார். "சூ என் லாய் இந்தியாவுக்கு வந்தபோது நமது நடிகர்திலகம் சிவாஜி கணேசன் இருக்கிறாரே தெரியுமா?"

"என்ன தாத்தா, அவரைப் போய்த் தெரியுமா என்று கேட்கின்றீர்கள்? கட்டபொம்மன் என்றாலே எனக்குச் சிவாஜி நினைவுதானே வரும்" என்றான் மணி.

"எனக்குக் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. நினைவு தான் வரும்" என்றாள் மலர்விழி.

"பரவாயில்லையே! இந்தக் காலத்துப் பிள்ளைகள் அவரை எங்கே நினைவு வைத்திருக்கப் போகிறீர்கள் என்று நினைத்துக் கேட்டுவிட்டேன். அந்தச் சிவாஜிகணேசன் சூ என் லாய்க்கு ஒரு மோதிரம் போட்டார்.

"மோதிரமா? சிவாஜியா? அவர் ஏன் சூ என் லாய்க்குப் போய் மோதிரம் போட்டார்?" மணி கேட்டான்.

"நட்பு நாட்டின் பிரதமர் நம் நாட்டிற்கு விருந்தாளியாக வந்திருக்கின்றாரே நாமும் அவருக்கு ஒரு பரிசளிப்போமே என்றுதான் மோதிரத்தைப் பரிசாக அவர் விரலில் மாட்டிவிட்டார்."

"அதுஎன்ன மோதிரம் தாத்தா?" என்றாள் மலர்விழி.

"சொல்கிறேன். தங்க மோதிரந்தான். அந்த மோதிரத்தில் இந்தியா பொறிக்கப்பட்டிருந்தது."

"சிவாஜி இந்தியாவை சூ என் லாய் கையில் கொண்டு போய் போட்டுவிட்டாரா?" என்றான் மணிவண்ணன்.

"மணி! நீ பெரிய ஆளா வருவே— பாரேன் என்றார் தாத்தா."

"எல்லாப் பசங்களுமே பெரிய ஆளாகத்தானே தாத்தா வளர்கிறார்கள்."

'ஆள் வளர்வதைக் கூறவில்லை. அறிவு வளர்வதைக் கூறுகிறேன். நீ. ராஜாஜி சென்னையின் முதல்வராக இருந்த போது சட்டப் பேரவையில் ஏ. கோவிந்தசாமி கேள்வி கேட்டதைப் போல் கூர்மையாக வினவுகிறாயே அதைக் கூறினேன்.

"அது யாரு தாத்தா கோவிந்தசாமி? எனக்குத் தெரியவில்லையே?

அவரா...? சாதாரண குமாஸ்தாவா இருந்து, அரசிய லுக்கு வந்து—உயர்ந்து அமைச்சராகவே ஆனவர். அவரைப் பற்றிப் பின்னர் தனியே கூறுகிறேன். இப்போ இந்தக் கதையை முதலில் முடிப்போம். கேளுங்கள் சிவாஜி போட்ட மோதிரத்தை உற்றுப் பார்த்த சூ என் லாய் சிரித்துக் கொண்டே கூறினாராம்...''

''என்ன கூறினார்? அதை முதலில் சொல்லுங்கள்,''

''அதைத் தானே கூற வருகிறேன்.'' உங்கள் இந்தியா இப்பொழுது என் கையில்'' என்றாராம் சூ என் லாய். அதைக் கேட்டு நம்மவர்களும் அவரோடு சேர்ந்து சிரித்தார் களாம்.

''அப்படியா சொன்னார்?''

''ஆமாம். பல ஆண்டுகளுக்குப் பின் சீனா இந்தியா மீது படையெடுத்தபோது இதைக் கூறி ஆற்றுப் போனார் நமது நடிகர் திலகம்.

சீனா படை எடுத்ததற்கான காரணத்தைக் கூறுவ தாகக் கூறினீர்களே, இன்னும் அதைச் சொல்ல வில்லையே!... என்று நினைவூட்டினாள் மலர்விழி.

''கூறுகிறேன்... இமய மலை இருக்கே...தாத்தா முடிக்க வில்லை—மணிவண்ணன் குறுக்கிட்டான்.

''என்ன தாத்தா! இமயமலையைத் தெரியாதவர்கள் இந்தியாவில் என்ன, உலகத்திலேயே இருக்க மாட்டார் களே!''

''மண்ணும் இமய மலை எங்கள் மலையே!''

''மாநில மீதது போறபிறி திலையே!'' என்று பாரதியார் கூட பாடி இருக்கிறாரே'''

''நம்ம பரமசிவன் கூட அந்த மலையில்தான் இருப்ப தாகப் பாட்டி கூடக் கூறினார்களே!''

"கயிலை நாதன், கயிலாச வாசன் என்றெல்லாம் கூட கதை சொல்லும்போது குறிப்பிடுவார்களே!"

"மணி! அது என்ன நம்ம பரமசிவன்? அவர் என்ன உன்னுடைய வகுப்புத் தோழனா?...என்றார் தாத்தா.

"அவன் இப்படித்தான் தாத்தா! சாமியைப் போய் நம்ம பரமசிவன் என்று எவ்வளவு சாதாரணமாகக் கூறுகிறான் பாருங்கள்?"

"அக்கா! அங்கதான் நீ தப்பு செய்யறே! நான் நம்ம பரமசிவன் என்றது அலட்சியத்தால் அல்ல. உரிமையினால்.

"பரமசிவன் என்ன சீனாக்காரனுக்கா கடவுள்? அவர் நம்ம கடவுள்தானே?"

"மலர் மணி கூறுவது சரிதான். கடவுளைத் தோழனாகக் கருதுவதிலும் தவறில்லை. பாரதி கண்ணனை சீடனாகவும் சேவகனாகவும் கருதி பாடவில்லையா?"

"நண்பனாய் மந்திரியாய், நல்லாசிரியனுமாய்."

பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய் என்று பாடியிருக்கிறானே பாரதி!

"அப்படியா பாடியிருக்கிறார் பாரதியார்?"

"நீ தான் ஆங்கிலப் பள்ளியில் படிக்கப் போய் விட்டாயே! உனக்கெப்படி தமிழில் உள்ளது தெரியும்? செய்திக்கு வருவோம் புராண காலந்தொட்டே நமது உரிமையாக இருந்து வரும் இமய மலைமீது உரிமை கொண்டாடித் தான் சீனா இந்தியா மீது படை எடுத்தது.

"அடடா" மோசமானவர்களாக இருக்கிறார்களே! என்றாள் மலர்விழி.

"இமய மலையின் லடாக் நேபா பகுதிகளின் மீது சீனா அரசு உரிமை கொண்டாடியது."

"அது எங்களுடையதுதான் என்று இந்தியா கூற வேண்டியதுதானே?"

"கூறியது. சீனாவின் கோரிக்கையிலுள்ள தவறுகளை ஆதாரத்தோடு எடுத்துரைக்கவும் முன் வந்தது."

"பிறகென்ன? பேசாமப் போக வேண்டியதுதானே?"

"சீன அரசும் பேச்சு வார்த்தைக்கு இணங்கி வருவது போல் வந்தது. அது ஒரு சூழ்ச்சியின் அங்கம் என்பது பின்னர்தான் புரிந்தது. பேச்சு வார்த்தை முடியாத நிலையிலேயே சீனா துப்பாக்கியால் பேசத்தொடங்கி விட்டது."

"சுட்டுவிட்டார்களா?"

"ஆமாம். நம் எல்லைக்குள் கால்வைத்துச் சுடத் தொடங்கின்ார்கள்."

"நம் படை திருப்பிச் சுடவேண்டியதுதானே?"

"சுடத்தான் செய்தது. நாம் தயாராக இல்லாத நிலை. அவர்களோ போருக்குத் திட்டமிட்டிருந்தார்கள். நம் வீரர்களின் எண்ணிக்கையோ குறைவு. அதற்காகச் சும்மா இருந்து விடவில்லை. நம் படை வீரப்போர் புரிந்தது. சீனர்களின் முன்னேற்றத்தைத் தடுத்தது. உலகின் முன் தன்னை நியாயவாதியாகக் காட்டிக் கொள்ள நமது மண்ணில் அதன் ஆசை அளவாக 38000 ச. கி.மீ. பரப்பைப் பிடித்துக் கொண்டு போர் நிறுத்தம் செய்தது சீனா."

"அப்படி என்றால் சீனாவும் பாகிஸ்தானைப் போல் இந்தியாவின் பகை நாடுதானே தாத்தா?"

"மணிவண்ணா! உன் தமிழ்ப் பாடத்தில் திருக்குறள் வந்திருக்கிறதா?

"ஓ... இருக்கே!"

"என்ன அதிகாரம்?"

"செய்நன்றி அறிதல் "

அந்த அதிகாரத்தில் தானே

"நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று." என்ற குரல்
இடம்பெற்றிருக்கிறது?

"தாத்தா. நீங்க என்ன சொல்லப் போறீங்க என்று எனக்குப் புரியுது. சீனாக்காரன் படையெடுத்ததை மறந்து விட்டு, அந்த நாட்டோடு நட்பை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லப் போகிறீர்கள். அதுதானே தாத்தா?"

"உனக்கு அரசியல் வாதியின் மூளை அப்படியே இருக்கிறது. சரியாகத் தான் கூறுகிறாய். இந்தியா சீனாவோடு நல்லுறவை வளர்த்துக் கொள்ளத்தான் நடவடிக்கை எடுத்து வருகிறது."

"நன்றி மறந்த சீனத்தோடு எப்படி தாத்தா நட்பு பாராட்டி நல்லுறவை வளர்கக முடியும்?"

"நம்பிக்கையோடும், நல்லெண்ணத்தோடும் முயன்றால் எதுவும் முடியும்."

"பாட்டி சொன்னது நினைவுக்கு வருகிறது தாத்தா!"

"என்ன சொன்னா உன் பாட்டி?"

"நீரும் எண்ணெய்யும் திரவப் பொருளாக இருந்தாலும், ஒரே பாத்திரத்தில் ஊற்றி வைத்தாலும் இரண்டும் ஒன்றுடன் சென்று கலக்காது. தனித்தனியாகத்தான் இருக்கும். அப்படிச் சில மனிதப் பிறவிகளும் உண்டு, என்றுதான் கூறினார்கள். அது தவறா தாத்தா?"

"பாலும் நீரும் ஒன்றாகக் கலப்பதில்லையா? சில உவமைகள் ஒரே மாதிரியான நிகழ்வாக இருந்தாலும் கூட, சில சூழ்நிலைகளுக்குப் பொருந்திவராது. மலர்விழி! சீனத் தலைவர்களிடமும் மனமாற்றம் ஏற்படலாமில்லையா?

"சரி தாத்தா. கதைக்குப் போகலாம்" என்றாள் மலர்விழி.

"தாத்தா, தாத்தா! என்று குறுக்கிட்டான் மணிவண்ணன்,"

"என்ன சொல்லப்பா?"

"சீனாவுடன் நமது படைகள் போரிட்டு, அவர்கள் முன்னேறுவதைத் தடுத்ததாகக் கூறினீர்களே, அந்தச் சண்டையில் யாரர்வது செயற்கரிய செய்திருப்பார்களே அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏதேனும் நினைவு இருக்கிறதா தாத்தா?"

"சினிமாவில் கதாநாயகன் ஒரு ஆளாக நின்று பலரை அடித்து வீழ்த்துகிறானே. அப்படிப்பட்ட செய்தி வேண்டும் போல் தெரிகிறது" என்றார் தாத்தா.

"அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன். வீரச் செயல் புரிந்தவர்களைப் பற்றி கூறுங்கள் தாத்தா?"

"தமிழ்ப் பாடத்தில் வருவதைப் போன்றில்லா விட்டாலும் வியக்கும்படி நமது வீரர்கள் சிலர் போராடித் தான் இருக்கின்றார்கள். முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நடந்தது, கனவு போல் இருக்கிறது. நினைவு படுத்தித்தான் கூற வேண்டும். இன்று இந்த அளவில் முடித்துக் கொள்வோம். நான் நினைவு படுத்தி நாளை கூறுகிறேன் சரி தானே?"

"சரி தாத்தா" இருவரும் புறப்பட்டுப் போனார்கள்.

தாத்தா தலையைச் சாய்க்கக் கட்டிலுக்குப் போனார்.

# கள விளையாட்டு

மாலை நேரம் 4-30 மணிக்கெல்லாம் ஏதோ தனிப் பாட வகுப்புக்கு (Tution) வருவதைப் போல் வந்து உட்கார்ந்து விட்டார்கள். மலர்விழியும் மணிவண்ணனும் வந்ததைப் பார்த்த முல்லையும், முத்துவும் முந்திக் கொண்டு விட வேண்டுமென்று ஓடி வந்து எல்லாரையும் ஒதுக்கி விட்டு முன்னால் வந்து உட்கார்ந்தார்கள்.

''போங்க, போங்க. நீங்க போய் ஹாலில் விளையாடுங்கள்'' என்று விரட்டினான் மணிவண்ணன்.

''போக மாட்டோம். நாங்களுந்தான் கதை கேட்போம். பாருங்க தாத்தா'' என்று சிணுங்கினாள் முல்லை.'' நான் போக மாட்டேன் என்று காலை நீட்டிக் கொண்டான் முத்து.

'இது எங்களைப் போன்ற பெரியவர்களுக்கான கதை, நீங்க சின்ன 'கிளாஸ்' படிக்கிறவங்க. இதெல்லாம் உங்களுக்குப் புரியாது. பெரிய கிளாஸ் படிக்கிறவங்களுக்குத்தான் புரியும் இந்தக் கதை. நீங்க படுக்கப் போகும் போது தாத்தா வேறு கதை சொல்வார்'' என்றான் மணிவண்ணன்.

''மணி! ஏன் அவர்களை விரட்டுகிறாய்? கதை அவர்களுக்குப் புரியாவிட்டால், தானே எழுந்து போய்விடப் போகிறார்கள். இது உனக்கும் விளையாட்டு நேரந்தானே?

நீங்களும் போய் விளையாடுங்களேன். படிக்கும் நேரத்தில் விளையாடப் போகிறீர்களா?''

''இல்லை தாத்தா! சரியாக ஆறு மணிக்கெல்லாம் புத்தகத்தை எடுத்து விடுவோம். தாத்தா என் நண்பன் அகமது, அவன் தங்கை நசீமாவும் கூட வருவதாகக் கூறியிருக்கிறார்கள். மணி பேசிக் கொண்டிருக்கும் போதே அவர்கள் இருவரும் வந்தார்கள்.

''வாங்க, வாங்க'' சரியாக வந்து விட்டீர்கள் என்று வரவேற்றான் மணிவண்ணன்.

''தாத்தா கதை சொல்லுங்க!'' என்றனர் வாண்டுகள் இருவரும்.

''சரி. பெரியவங்க கேட்கிறீர்கள். சொல்கிறேன் என்று தொடங்கினார் தாத்தா.''

1962-ஆம் ஆண்டு. வழக்கம்போல் மணிவண்ணன் குறுக்கிட்டான். அதைத்தான் முன்பே கூறி விட்டீர்களே...?

''எப்போது சொன்னேன்?''

''சொன்ன மாதிரி இருந்தது தாத்தா...மணி, குரலை இழுத்த வாறு கூறினான்.

''தமிழ்நாடு அரசு குறிப்பேடு வெளியிட்டதே அதைக் கூறுகிறான் தாத்தா'' இது மலர்விழி.

''அந்த ஆண்டு, அக்டோபர் மாதம் 23ஆம் தேதி இரவு நேரம்.''

''அக்டோபரா? அது'' 'North East Mansoon Season' ஆயிற்றே தாத்தா என்றாள் மலர்விழி.

''ஆமாம் வடகிழக்குப் பருவக் காற்றால் இந்தியாவின் கடலோரப் பகுதிகளுக்கு அது தான் மாரிக்காலம். சீனர்கள் பருவம் பார்த்து தான் போரைத் தொடங்கினார்கள்.

அவர்கள் தான் முன்னேற்பாடுகளை முடித்துக் கொண் டிருந்தவர்களாயிற்றே! பனி, மழை, குளிர் எல்லாவற்றை யும் எதிர்கொள்ளும் ஏற்பாட்டுடன் தானே அவர்கள் இருப் பார்கள்? மலைப் பாறைகள் பனியை ஆடையாக அணிந்து கொண்டிருந்தன.

லடாக் பகுதியில் 'ஹாட்ஸ் பிரிங்' என்ற இடத்தில் இந்திய முகாம் ஒன்றிருந்தது. சாதாரண ஆயுதங்களுடன் சில வீரர்கள் அந்த முகாமைக் காத்து வந்தார்கள். அதைத் தாக்குவதற்காக சீனர்கள் வருவதாக முன் கூட்டியே நமது வீரர்களுக்குத் தகவல் கிடைத்து விட்டது. நம் வீரர்கள் இப்போது தங்களைத் தயார் செய்து கொண்டார்கள். எதிர்பார்த்தபடியே சிறுது நேரத்தில் சீன சிப்பாய்கள் கைக் குண்டுகளை வீசியபடி இந்திய முகாமை நோக்கி ஓடிவந் தார்கள். நெருங்கி வரட்டுமென்று காத்திருந்த நம் வீரர் கள் சுடத் தொடங்கினார்கள். முன்னதாக நம் வீரர்களில் கேம்காம் என்பவர் ஒரு பள்ளத்தில் பதுங்கிக் கொண்டிருந் தார். மற்றவர்கள் வேறு இடத்தில் மறைவாக நின்று கொண்டு சுட்டார்கள். இரண்டு இடத்திலிருந்து சுடப் படுவதை அறிந்த சீன சிப்பாய்கள் இரண்டு குழுக்களாகப் பிரிந்தனர். ஒரு குழு கேம்காம் மறைந்திருந்த பள்ளத்தை நோக்கி வந்தது. கேம் காம் இப்போது தனியாளாகத்தான் இருந்தார் எதிர்த்துத் தாக்க வருவதோ ஒரு குழு.

"ஐயய்யோ! பாவம் கேம்காம் என்ன ஆனார்?"

சுட்டுத்தள்ளி விட்டிருப்பார்களே!

"பதறாதே! கூறுகிறேன். உன்னைப் போல் அவர் பதற்றம் படவில்லை" துணிவோடு பகைவர்களை எதிர்த்தார்.

'எம்.ஜி.ஆர் மாதிரியா?' இது மலர்விழி வினா

ரஜினி மாதிரிதான் என்றான் மணி.

கேம்காமின் துப்பாக்கி ஓயவில்லை. தீபாவளியன்று வெடிக்குமே சரவெடி, அப்படிசுட்டுச் கொண்டே இருந்தார். சீன சிப்பாய்கள் சிலர் மாண்டனர். தன் தோழர்களின் பக்கம் நோட்டம் விட்டார். அந்தோ! அவர்களில் இருவர் இறந்துவிட்டிருந்தனர்.

''அச்சச்சோ!'' என்ற இரக்க ஒலியோடு எப்படி நாட்டுக்காகத் தம் உயிரையே விட்டிருக்கிறார்கள்? வீரர்களின் ஈகத்தை வியந்தாள் மலர்விழி.

''நீ சும்மா இரு! அப்புறம் என்ன நடந்தது சொல்லுங்க தாத்தா!'' அவசரப் படுத்தினான் மணி.

''நீ மட்டும் அப்பப்போ குறுக்கே பேசவில்லையா? நானும் கேட்பேன் தான்'' என்று எதிர்ப்பு தெரிவித்தாள்.

''நடந்ததைக் கேளுங்கள்! சரியான நேரத்தில் கேம்காம் துப்பாக்கியின் வயிறு காலியாகி விட்டது.

''வயிறு காலியாகி விட்டதா?''

''ஆமாம். துப்பாக்கியின் வயிற்றிலிருந்த .வெடிப் பொருள் தீர்ந்து போய்விட்டது.''

''மருந்து இல்லாவிட்டால் சுட முடியாதே?'' அப்புறம் என்ன செய்தார்?

''கேள்! உயிரைத் துச்சமென மதித்து பள்ளத்திலிருந்து துள்ளிக் குதித்து வெளியே வந்தார்.

''கோழிக்குஞ்சு முட்டையை உடைத்துக் கொண்டு வெளிவருமே அப்படியா?'' என்றான் மணி.

''இல்லை. கூண்டைத் தகர்த்து வெளிவரும் புலியைப் போல் வந்தார்.''

''வெளியே வந்து என்ன தான் செய்தார்?''

''கைவசமிருந்து இரண்டு வெடிகுண்டுகளை எதிரிகளை நோக்கி வீசினார். குண்டு வெடித்துச் சிலர் இறந்தனர்.

சிலர் புகை மண்டலத்தில் மூச்சுத் திணறி ஓடினார்கள். இதனால் எதிரிகளின் சினம் எல்லை மீறியது. ஒரு ஆள், நம்மைச் சின்னாப்பின்னப் படுத்திவிட்டானே என்ற ஆத்திரத்தில் சரமாரியாகச் சுட்டுத் தள்ளினார்கள். கேம்காம் கைவிரல்களை குண்டுகள் ரத்தத்தில் நனைத்தன. எதுவும் செய்ய முடியாத நிலை, எதிரிகளிடம் பிடிபட வேண்டும் அல்லது குண்டுக்கு இரையாக வேண்டும் இரண் டையுமே கேம்காம் விரும்பவில்லை.

''அப்போ என்னதான் செய்தார் கேம்காம்?''

அதிகமாக சிந்திக்கவில்லை. அதற்கு நேரமும் இல்லை அவருக்கு. அடிபட்ட கையோடு பக்கத்தில் தெரிந்த பெரிய தொரு பள்ளத்தில் உருண்டார். சில நொடிகளில் நாற்பது அடிகள் கீழே ஓடிக் கொண்டிருந்த ஓடையில் அவர் உடல் மிதந்தது.

''இறந்து விட்டாரா?''

''இல்லை, இல்லை, நல்ல வேளையாகப் பிழைத்துக் கொண்டார். ஆனால் கால் எலும்புதான் முறிந்து விட்டது.

''அடடா! முதலில் கையில் குண்டுபட்ட காயம் வேறே, இப்போ கால் எலும்பும் முறிந்து விட்டதா? எவ்வளவு வலித்திருக்கும்?''

''அவரால் நடக்கவே முடியவில்லை.''

''என்னதான் செய்தார். ஆர்வத்தோடு கேட்டான் மணி ''

''உண்மையான வீரன் எந்த சூழ்நிலையிலும் மனத்தைத் தளர விட மாட்டான். நம்பிக்கையையும் தவற விட மாட்டான், தெரியுமா?''

''படத்தில் பார்த்திருக்கிறோம் தாத்தா; இருவரும் ஒரே நேரத்தில் கூறினார்கள்.

"முழங்கைகளையே காலாக்கிக் கொண்டார். தவழ்ந் து தவழ்ந்து ஒரு மைல் தூரம் கடந்து விட்டார். கடுமையான குளிர். உண்ண உணவுமில்லை. உயிரே போய் விட்டாலும் பரவாயில்லை என எண்ணும்படியான வலிவேறு. இரண்டு நாட்கள் அப்படியே கிடந்தார் மயக்க மடைந்து. மூன்றாம் நாள் ஒரு சுபேதார் கண்களில் பட்டார் கேம் காம். மயக்கத்தைத் தெளிய வைத்து இராணுவ முகாமுக்குக் கொண்டு வந்தார். இராணுவ மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். அப்போதும் உடல் தேறியவுடன் வீட்டிற்குச் செல்ல வேண்டுமென என எண்ணவில்லை அந்த மாவீரன். காயங்கள் ஆறியதும் மீண்டும் போர் முனைக்குப் போகவே அவர் மனம் துடித்தது.

"தாத்தா! நம் புறநானூற்று வீரர்களின் கதைகளைப் போலல்லவா இருக்கிறது கேம் காமின் கதை!"

"அப்படிப் பட்டவர்களைத் தான் வீரர்கள் என்று கூற முடியும்."

அலுவலகத்தில் அவசரமாகக் கூடுதல் வேலை செய்ய வேண்டியிருந்தாலே சிலர் விடுப்பு எடுத்துக் கொண்டு வீட்டிலேயே தங்கி விடுவார்கள். ஆனால் கேம் காம்...? பள்ளத்தில் விழுந்தாலும் நம் உள்ளத்தில் உயர்ந்தே நிற்கின்றார். இந்தியா வீரம் விளைந்த மண்ணம்மா!"

"அது என்ன தாத்தா இறந்த காலத்தில் கூறுகிறீர்கள்?"

"காலந்தான் இறக்குமேயன்றி, வீரம் இறப்பதில்லை. கார்கிலும் நமது படை வீர வித்துக்களை ஊன்றியுள்ளது.

"தாத்தா! சீனப் போரில் கேம்காம் போல் வேறு யாரேனும் செய்தார்களா?

"செய்யாமல் என்ன? வாய்ப்பு கிடைத்தால் நம் வீரர் களைப்போல் சாதனை புரிய வல்லாரில்லை என்றே கூற லாம். வாய்ப்புதான் எல்லாருக்கும் கிடைப்பதில்லை.

"தாத்தா, தாத்தா! இன்னும் ஒன்றேனும் கூறுங்களேன்?"

"கார்கில் போருக்குப் போக வேண்டாமா?"

"போகலாம் தாத்தா."

மலர்விழி சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?" சீறினான் மணி.

"இல்லை...கார்கில் போருக்குப் போகலாம் என்றாயே அதைக் கேட்டுத்தான் சிரித்தேன்...

உன்னால்தான் போகமுடியாது. பார் நான் பெரியவனான பின் போருக்குப் போகிறேனா இல்லையா என்று" அறைகூவல் விடுத்தான் மணிவண்ணன்.

"போடா...! நீயே போகும்போது நான் மட்டும் போகமாட்டேனா?" பெண் புலியாகச் சீறினாள் மலர்விழி.

"இதுவொன்றும் குழாயடிச் சண்டையில்லை நீ போக. இராணுவம் தெரியுமா?"

"இராணுவமென்ன, பெண்கள் விண்ணுக்கே சென்று திரும்பியிருக்கிறார்கள் தெரியுமா? பெண்களும் படையில் சேர்ந்து பணியாற்றுவது உனக்குத் தெரியாதா?"

"சும்மா சொல்லாதே! தாத்தா பெண்களும் படையில் சேரலாமா? ஐயப்பட்டுக் கேட்டான் மணி.

"இப்போதென்ன, சுபாஷ் சந்திர போசின் தேசிய ராணுவத்தில்கூட பெண்கள் இருந்திருக்கிறார்கள். கேப்டன் லட்சுமி என்று கேள்விப்பட்டிருக்கிறாயா?

"இல்லை தாத்தா."

மணி! ஆண் பெண் என்னும் வேறுபாட்டு யுகம் கடந்து விட்டது. இனி எதிலும் பெண்களை விலக்கி வைக்க முடியாது.

"நல்லா சொல்லுங்கள் தாத்தா! இவன் தான் மாவீரன் என்று நினைப்பு" என்றாள் மலர்.

"தாத்தா! இன்னும் ஒருவரைப் பற்றி மட்டும் கூறிவிட்டு கார்கில் கதையைத் தொடங்குங்கள் கெஞ்சினான் மணி.

இதுவரை அமைதியாகவே உட்கார்ந்திருந்த அகமது "ஆமாம் தாத்தா கூறுங்கள்" என்றான்.

"சரி. இன்னும் ஒன்றுமட்டுந்தான் கூறுவேன். அதற்கு மேலும் கேட்கக் கூடாது." என்ற கண்டிப்புடன் தாத்தா தொடர்ந்தார்.

"மக்மகான் எல்லையில் லோஹித் என்றொரு இடம். அங்கே கிபுட்டு என்றொரு சிறிய காவல் நிலையம் இருந்தது. அதில் குறைந்த அளவிலேயே வீரர்கள் இருந்தனர். ஒரு நாள் திடீரென்று மிகப் பெரிய சீனப்படை இந்த நிலையத்தைத் தாக்க வந்தது.

அப்போது இரவு நேரம். அந்த நிலையத்திலிருந்த வீரர்களுள் ஒருவர் பாட்சி சிங். இவர் பகல் நேரத்திலேயே ஒரு செய்தியை மற்றொரு காவல் நிலையத்திற்குத் தெரிவிக்கச் சென்றிருந்தார். இவரது காவல் நிலையத்தைச் சீனர்கள் தாக்க வந்தது அவருக்குத் தெரியாது. அதில் இருந்த இந்திய வீரர்கள் சீனர்களின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல்; நிலையத்தைக் கைவிட்டு விட்டு வெளியேறி விட்டார்கள். இதுவும் பாட்சி சிங்குக்குத் தெரியாது. அவர் திரும்பி வந்தபோது இருட்டிவிட்டது. உருவத்தையன்றி, முகம் அடையாளம் காண முடியாத நிலை. சிங் முகாமை நெருங்கி வந்தபோது அங்கே மூன்று சீனர்கள் இருந்தார்கள். அவர்களை நமது வீரர்கள் என்றே இவர் எண்ணிக் கொண்டு கூடாரத்திற்கு வந்து விட்டார்.

கண்ணி வைக்காமலேயே கௌதாரி கையில் வந்து சிக்கியதைப் போல், இந்திய வீரர் ஒருவர் வலிய வந்து

சிக்கியதை எண்ணி மகிழ்ந்தவாறு சீனர்கள் பாட்சி சிங் என்ன செய்கிறார் பார்ப்போம் அவர் பேச்சில் ஏதும் தமக்கு வேண்டிய தகவல் கிடைக்குமா என எதிர்பார்த்துக் காத்திருந்தனர். சற்று நேரத்திற்குப் பின் துப்பாக்கியை நீட்டியவாறு பாட்சி சிங்கை சூழ்ந்து கொண்டனர்.

அப்புறம் என்ன நடந்தது? ஆர்வத்தில் பொறுமை யிழந்து கேட்டான் மணிவண்ணன்.

''அப்பொழுதுதான் பாட்சி சிங்குக்கு உண்மை நிலை புரிந்தது. தங்களது நிலையம் தற்போது எதிரிகளின் பிடிக்குள் வந்திருக்கிற தென்பதையும், இந்திய வீரர் கள் எவரும் இந்த முகாமில் இல்லை என்பதையும் உணர்ந்தார். வகையாக சீனர்களின் கையில் சிக்கிக் கொண்டோமே என்று தன்னைத் தானே நொந்தபடி அசை வற்று நின்றார். கொஞ்சம் அசைந்தாலும் போதும் சீனர் களின் துப்பாக்கி முனைக் கத்திகள் சிங்கின் குருதியைச் சுவைத்திருக்கும்.

பாட்சி சிங்கைத் தம் முகாமுக்குக் கொண்டு செல்ல அவரை முன்னே செல்ல விட்டு, அவருக்குப் பின்னால் மூன்று சீன வீரர்களும் நீட்டிய துப்பாக்கியுடன், சென்ற னர். தூக்கிய கையோடு சிறிது தூரம் அமைதியாகச் சென்றார். அப்போதும் அவர் அச்சத்திற்கு ஆட்படவில்லை. அவர் மூளை ஒரு திட்டத்தைத் தயாரித்துக் கொண் டிருந்தது. எதிர்பாராத நேரம், ஒளியின் வேகத்தில் திரும்பி னார். மூன்று துப்பாக்கி முனைகளையும் ஒன்றோடொன்று மோதும்படி தட்டிவிட்டார். விண்வெளிக்கலத்தைப் போல் பாய்ந்தார். இதை சற்றும் எதிர்பார்க்காத சீன வீரர் கள் திகைத்துப் போய் செயலற்றவரானார்கள். தன்னிலை யுணர்ந்த சீன சிப்பாய்கள் பாட்சி சிங்கை நோக்கிச் சுட்டார்கள்.

''அடடா! குண்டு அவர் மேல் பாய்ந்து விட்டதா?'' கவலையோடு கேட்டான் மணிவண்ணன்.

"ஆம் குண்டு பாய்ந்தது. ஆனால் உயிரைப் பறிக்கும் இடத்திலல்ல. தோளில்தான் பாய்ந்தது.

"அவரைப் பிடித்து விட்டார்களா?"

"இல்லை, காயத்தோடு இருளில் கலந்து மறைந்து வாலாய் என்ற பாதுகாப்பான இடத்தை அடைந்தார்."

"காயத்தோடேயா?"

"போரில் போர் வீரர்களுக்குக் குண்டடி படுவதென்பது, நாம் நடக்கும் போது காலில் கல் தடுப்பதைப் போன்றது. அதையெல்லாம் பெரிது படுத்திக் கொண்டிருக்க மாட்டார்கள். துணிவு, விரைந்து செயல்பாடு, வீரம் மூளைபலம் ஆகியவற்றால் மூன்று துப்பாக்கி ஏந்திய பகைவர்களை ஆயுதமின்றியே ஒரு இந்திய வீரன் வென்று வந்தான். இப்படிப்பட்ட வீரவிளையாட்டுக்கள் தான் சிறந்த காவியங்களுக்குக் கருவாகக் கூடியவை."

"நம்ம மணியாக இருந்தால் அந்தக் கூடாரமே பாத்ரூம் நாற்ற மடித்திருக்கும்." என்று கிண்டல் செய்தாள் மலர்.

"பாருங்கள் தாத்தா. நான் ஒன்றும் அப்படியெல்லாம் இருக்க மாட்டேன். பாட்சி சிங்கைப் போல் எதிரிகளுக்குத் தண்ணி காட்டிவிடுவேன்." என்று வீரம் பேசினான் மணி.

"இனி கார்கிலுக்குப் போகலாமா?"

"போகலாம் தாத்தா!"

## கார்கில்...?

"கார்கில் என்பது ஏதோ ஒரு ஊர் அல்லது குறுகிய நிலப் பரப்பு என்று மட்டும் எண்ணிவிடக்கூடாது. இந்த அரங்க எல்லையின் நீளம் 740 கி. மீ. அதிலும் பனி படர்ந்த

பகுதியை இடைவிடாமல் எப்போதும் பார்வையில் பதிய வைத்துக் காத்துக் கொண்டிருப்பது சற்றுக் கடினமே?

"இதைவிட நீண்ட எல்லையை உலகில் நாடுகள் பல காக்க வில்லையா?"

"நாமுந்தான் காக்கின்றோம். எல்லையின் நீளம் மட்டுமே உனக்குத் தெரிகிறது. அந்த எல்லை எப்படிப் பட்டது. காலநிலை அங்கெல்லாம் எப்படி இருக்கும்? சாலைகள் எப்படி என்பதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் இதையெல்லாம் பார்க்க வேண்டும். கார்கில் எல்லை எப்படிப் பட்டது? தட்ப வெப்பம் எப்படி என்று தெரியுமா?"

"தெரியாது. சொல்லுங்க தாத்தா?"

"உலகிலேயே குளிரான பகுதி எது தெரியுமா?"

"சிரபுஞ்சி!" என்றான் மணிவண்ணன்.

"கை கொட்டிச் சிரித்தாள் மலர்விழி.

"ஏன் சிரிக்கிறாய்? தவறு என்றால் நீ கூறு பார்க்கலாம்?"

"எனக்குத் தெரிய வில்லை. சும்மா இருக்கிறேன் என்னையும் உன்னைப்போல உளறச் சொல்கிறாயா?"

சரி உங்களுக்குத் தெரிய வில்லையல்லவா? நானே கூறிவிடுகிறேன். சோவியத் நாட்டிலுள்ள சைபீரியா தான் உலகிலேயே அதிக குளிரான இடம் ஜார் மன்னர் ஆண்ட காலத்தில் அரசியல் தலைவர்களைத் தண்டித்து அங்குதான் அனுப்பி வைப்பார்கள். இலெனினைக்கூட அங்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

"ஆங்கிலேயர்கள் இந்திய விடுதலை வீரர்களை அந்த மானுக்கு அனுப்பினார்களாமே அப்படியா?"

''அனுப்பியா வைத்தார்கள்? அந்தமான் சிறையிலல்லவா அடைத்து வைத்தார்கள். சைபீரியாவுக்கு அடுத்து மிக குளிரான இடம் திராஸ்—கார்கிலின் அங்கம் இங்கே குளிர் காலத்தில் (—) 60 டிகிரி இருக்கும் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்..

''அப்பப்பா? நம்மால் தை மாத குளிரையே தாங்க முடியவில்லை. பாவம், நம் வீரர்கள் அந்தக் குளிரில் சண்டை வேறு போட வேண்டும்.

''என்ன செய்வது? எதையும் எதிர்கொண்டுதானே ஆகவேண்டும்? இப்படிப்பட்ட இடத்திற்கு எதிரிகள் எப்படி வந்திருப்பார்கள், எவ்வளவு நாட்கள் ஆகியிருக்கும்? எண்ணிப் பாருங்கள்.

''குளிர் குறைவான காலத்தில் வந்துவிட்டிருப்பார்களா தாத்தா?''

சரியாகக் கணித்தாய். பயிற்சி பெற்ற பாகிஸ்தான் படைவீரர்களும், கூலிப்படையினரும் கார்கில் பகுதியின் திராஸ், படாலிக், கக்சர் பகுதிகளுக்கு பாக்கிஸ்தான் எல்லையைத் தாண்டி 25 முதல் 30 நாட்கள் கால்நடையாகத்தான் வந்திருக்கிறார்கள்.

''கால்நடை என்றால் வீட்டு விலங்குகள் என்று என்னுடைய தமிழ்ப் பாடபுத்தகத்தில் இருக்கிறதே, அப்படி என்றால் அவர்கள் ஆடு, மாடு மாதிரி குனிந்தே நடந்து வந்தார்களா?''

''அப்படி அல்ல. கால்நடையாக வந்தார்கள் என்றால் நடந்தே வந்தார்கள் என்றுதான் பொருள். எந்த வண்டியிலும் வரவில்லை.''

''இவ்வளவு நாட்கள் நடந்து வந்தவர்களை நம் எல்லைக் காவல் படை கண்டுபிடித்திருக்க வேண்டியது தானே? குற்றச்சாட்டாகக் கூறினான் மணிவண்ணன்.

வேடிக்கைப் பார்ப்பவர்கள் வேலை செய்பவர்களைக் குறை சொல்வது போன்றதுதான் இது. நம் நிலையில் அவர்கள் இல்லை. களத்தில் நிற்பவர்களுக்குத்தான் கடினமும், எளிமையும் புரியும். நாம் பேசும் நிலையிலும், படை வீரர்கள் இடர்களை எதிர்கொண்டு செய்ய வேண்டிய நிலையிலும் இருப்பவர்கள். அவர்கள் நிலை என்ன என்பதை ஆய்ந்துணராமல் நாம், நம் விருப்பப்படி பேசுவது முதிர்ச்சிக் குறைவின் அடையாளமாகும்.''

''நான் கூறியது தவறுதான். நிலைமை என்னவென்று தெரிந்து கொள்ளாமல் கேட்டுவிட்டேன் நீங்கள் சொல்லுங்கள் தாத்தா'' என்றான் மணி மன்னிப்புக் கேட்பதைப் போன்று.

''நீ சிறுவன். பெரியவர்கள் சிலரும் இப்படித்தான் கேட்கிறார்கள். கேள்வியைத் தவறு என்று கூறவில்லை. குற்றச்சாட்டாகக் கூறுவதைத் தவிர்க்கலாம். மணி எதிரிகளின் வெற்றி பெறுவது அவர்களது பலத்தால் மட்டுமல்ல; மறுதரப்பின் பலவீனத்தாலுந்தான்.

''எதிரி குண்டாகவும், நாம் ஒல்லிக்குச்சியாகவும் இருந்தால் அவர்கள் வெற்றி பெறுபவர்கள்தானே தாத்தா.''

''உடல் பலத்தை மட்டுமே நம்பி போரிட்ட காலம் கடந்து நூறாண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. இது மூளை பலத்தோடு போரிடும் காலம்.''

''மூளையோடு எப்படிப் போரிடுவது தாத்தா?''

''சிலர் மொழிபெயர்ப்பதைப் போலிருக்கிறது நீ புரிந்து கொண்டது. மூளை பலம் என்பது அறிவியல் கண்டுபிடிப்புக் கருவிகள். ஒரு காலத்தில் வாள், வேல் வில்லம்புகள்தான் போர்க்கருவிகள். இன்றைய போர் அவற்றாலா நடைபெறுகிறது?''

''இல்லை— துப்பாக்கி, பீரங்கி...''

"அதற்கு மேலும் போயாச்சு. ஆயிரக்கணக்கான கி.மீ. தூரம் சென்று குறிதவறாமல் தாக்கும் போர்க் கருவி களெல்லாம் இன்று பயன்படுத்தப்படுகின்றன. அணுகுண்டு வெடித்தே அரை நூற்றாண்டாகிவிட்டதே!"

"பலவீனம் என்கிறீர்களே அது என்ன தாத்தா?"

உனக்கு ஆங்கிலத்தில் சொன்னால் புரியும் எனக் கருதுகிறேன். (Weakness) வீக்னஸ்.

"எனக்குப் புரியவில்லையே தாத்தா?" இது மணி.

"தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் போராட்டம் தொடங்கி விட்டதா? நம் நாட்டவரே, இந்தியாவுக்கு எதிராகவும் பகை நாட்டாருக்கு ஆதரவாகவும் செயல்பட்டால் அது நமது பலவீனம்."

"அப்படிக்கூடச் செய்வார்களா?"

"செய்கிறார்களே! அஸ்ஸாம் மாநிலமிருக்கிறதே அங்கே 'உல்பா' என்றொரு போராட்டக்குழு இருக்கிறது."

"போராட்டக்குழு என்றால்— நம்ம ஊர்களில் கொடி களைப் பிடித்துக் கொண்டு, கூச்சல் போட்டபடி ஊர்வலம் போவார்களே அப்படியா?" மணியின் கேள்வி.

"அது வேறு போராட்டக்குழு. தீவிரவாதிகள் என் பார்கள் அவர்களை. அவர்கள் கொடி பிடிக்க மாட்டார் கள்— கூச்சல் போட மாட்டார்கள்."

"என்னதான் செய்வார்கள்?"

"துப்பாக்கியைப் பிடிப்பார்கள். குண்டு எறிவார்கள்— கொலை செய்வார்கள்."

"கொடியவர்கள்!" என்றாள் மலர், வெறுப்போடு.

"அவர்கள் நம் நாட்டின் இராணுவ நடமாட்டம் குறித்து பாக்கிஸ்தான் ஐ.எஸ்.ஐ.க்கு உளவு கூறுவதாகக் கூட செய்தி வந்திருக்கிறது.

"ஐ. எஸ். ஐ' என்றால் என்ன தாத்தா?"

"இன்டர் சர்வீசஸ் இண்டலிஜென்ஸ் என்பதன் சுருக்கந் தான் ஐ.எஸ் ஐ. இது பாக்கிஸ்தான் நாட்டின் உளவு நிறுவனம். இதிலிருந்து வந்தவர்தான் பாக். இராணுவத் தளபதியாக இருந்து, இன்று பாக்கிஸ்தானின் சர்வாதிகாரி யாக மாறியிருக்கும் பர்வீஸ் முஷரப்."

"ஓகோ...அவர்தானா இவர்?"

"கார்கில் கதை நகர மாட்டேங்கிறதே? அங்கே செப்டம்பர் தொடங்கி குளிர்காலம் என்று கூறினே னல்லவா?"

"ஆமாம், ஆமாம்" என்றனர் அனைவரும்.

## ஊடுருவல்

"பாக்கிஸ்தான் நம் எல்லைக்குள் ஊடுருவுவதும், நம் படை அவர்களை விரட்டியடிப்பதும், அடிக்கடி நிகழும் செயலாக இருந்தது உலகமறிந்த செய்தி. ஆனால் கடைசி யாக 1971-ஆம் ஆண்டு போருக்குப் பின் பாக் படைகள் கார்கில் வழியாக ஊடுருவல் செய்யவில்லை. அங்கு நிலவும் குளிர்தான் அதற்குக் காரணம். அதே காரணத்தால் அப் பகுதியில் நம் படையின் கண்காணிப்பிலும் தளர்ச்சி இருந் திருக்கிறது. குளிர் காலத்தில் இப்பகுதியில் உள்ள பாது காவல் முகாம்களைக் காலி செய்து விடுவதுதான் வழக்க மாம். குளிர் குறைந்ததும் மீண்டும் முகாமுக்குச் செல்வார் களாம். இந்த நடைமுறையைத் தெரிந்து கொண்ட பாக்கிஸ்தான், தன் சூழ்ச்சித் திறத்தோடு அதை நன்கு பயன்படுத்திக் கொண்டது."

"சரிதான். நல்லா மூளை வேலை செய்திருக்கிறது!" என்றாள் மலர்விழி.

"இப்போது பாக்கிஸ்தானைத் தன் பிடிக்குள் வைத்திருக்கின்றாரே முஷரப், அவர் இந்தியாவில்தான் பிறந்தார்."

"அப்படியானால் அவர் இந்தியரா?"

இல்லை, இல்லை. அவருக்கு இந்தியா என்றால் வேப்பங்காய். 1971-ஆம் ஆண்டில் நடந்த போரில் மிகக் கேவலமாக இந்தியப் படைகளிடம் தோற்றார்களல்லவா, அதனால் மூண்ட பழி வாங்கும் எண்ணம் அவர்களிடம் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது. அதனால் எப்படியாவது இந்தியாவிடமிருந்து காஷ்மீரைக் கைப்பற்றி விட வேண்டுமென்ற வெறி அவர்களிடம் மேலோங்கியிருந்தது. அதனால்...

"அதனால் என்ன செய்தார்கள்?" மணிவண்ணனின் கேள்வி இது?"

"கடந்த 1998-ஆம் ஆண்டே பாக்கிஸ்தான் படை கார்கிலில் ஊடுருவும் திட்டத்தைத் தீட்டியது."

"அது என்ன திட்டம்?"

பாக். தனது படைகளை இராணுவ உடையிலே ஊடுருவச் செய்தால், உலகின் கண்டனத்திற்கு ஆளாக நேரிடுமென்று கருதி, மாறு வேடத்தில் அனுப்ப முடிவெடுத்தது."

"என்ன மாறுவேடம்? சாமியார் வேடமா?"

"காஷ்மீர் விடுதலை விரும்பிகளே போராடுவதாக உலகை நம்பச் செய்து விடலாமென்ற நப்பாசையில் இராணுவ உடைகளைக் களைத்து விட்டு, சல்வார் கம்மீஸ், தாடி, குல்லாவோடு தீவிரவாதிகளின் தோற்றத்தோடு அவர்களைக் கார்கில் சிகரத்திற்கு அனுப்பி வைத்தது."

"அது எப்போது நடந்தது தாத்தா?"

"வெளி வந்திருக்கும் செய்திகளின்படி, 1998-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலேயே இவர்கள் ஊடுருவும் வேலையைத் தொடங்கி விட்டிருக்கிறார்கள்."

"அப்போதே வந்தவர்கள் கார்கிலில் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?"

"அனுப்பும் போது அவர்களுக்கு இடப்பட்ட வேலை, கார்கிலில் 3500 மீட்டர் உயர சிகரங்களில் பதுங்கு குழி களை அமைக்க வேண்டுமென்பதுதான்."

"பதுங்கு குழி என்றால் என்ன?"

"போரில் முக்கியமானது பதுங்கு குழிதான். எதிரி களின் கண்களுக்குப்படாமல் இருந்து கொண்டு தாக்குவதற் கும், தாக்குதலிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கும் இந்தப் பதுங்கு குழிகள்தான் பாதுகாப்பு."

"இராணுவ வீரர்களுக்கு அவர்களுடைய உடையில் லாமல் சாதாரண உடையில் வேலை செய்வது பிடிக்காதே; கஷ்டமாகக் கூட இருக்குமே!" என்றாள் மலர்.

"பிடிப்பதும், கஷ்டமென்பதும் உடையில் இல்லை. பாக். படைவீரர்கள் கார்கிலுக்கு அனுப்பப்பட்டபோது தாங்கள் திரும்பி வருவது உறுதியில்லை என்பதால் புறப் படும்போது தத்தம் குடும்பத்தாரிடம் கண்ணீரோடுதான் விடைபெற்றார்களாம்."

"அடடா!" இரக்கப்பட்டாள் மலர்விழி.

இராணுவ வீரர்களின் நிலையே இதுதானே. என்றைக் குப் படை வீரர் உடையைப் போட்டுக் கொண்டார்களோ, அன்றே அவர்கள் உயிர்மீதான பற்றை வெளியேற்றி விடு கிறார்கள் என்பதுதான் உண்மை."

"அதன் பின் என்ன நடந்தது?

"நாம் சற்றுத் தளர்ந்திருந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஊடுருவிய பாக் படையினரும் கூலிப்படை, தீவிர வாதிகளும் கார்கில் பகுதியில் சிகரங்களில் 'சங்கர்' எனப் படும் தற்காலி அரண்களை அமைத்துக் கொண்டனர். மலைக்கற்களைக் கொண்டு மறைவிடங்களைத் தயார் செய்து கொண்டனர். மடாயன்; திராஸ் மற்றும் கார்கில் பகுதியை இணைக்கும் நெடுஞ்சாலைப் பகுதியின் சிகரங் களில் பல இடங்களில் கண்காணிப்புக் கோபுரங்களையும் அமைத்துக் கொண்டனர். அது மட்டுமல்ல 16,000 அடி உயரத்தில் மண்ணாலேயே ஒரு ஹெலிகாப்டர் தளத்தைக் கூட அமைத்துக் கொண்டார்கள்! இவற்றைக் கொண்டே அவர்களுடைய ஆயத்தப் பணி எவ்வளவு திட்டமிடப் பட்ட தென்பதை எவரும் அறிந்து கொள்ளலாம்.

"ஆமாம் தாத்தா!"

"இதற்கே வியப்படைகிறாயே, நமது படைகள் 4700 முனையைப் பிடித்தபோது, அவர்களுக்கே வியப்பை ஏற்படுத்தும்படி அங்கே மூட்டை மூட்டையாக பருப்பு, அரிசி, கோதுமை மாவு குவித்து வைக்கப்பட்டிருந்ததாம், மேலும் விமான எதிர்ப்பு துப்பாக்கி ஒன்றும் கண்டெடுக்கப் பட்டிருக்கிறது. அங்கிருந்த உணவுப் பொருள்கள் ஏறத்தாழ ஆறுமாதங்களுக்குப் போதுமானதாக இருந்த தென்றால் அவர்களுடைய ஆயத்த நிலை எப்படிப்பட்ட தென உணர முடியும்.

"ஆமாம் தாத்தா! இவ்வளவு செய்திருக்கிறார்களே எவ்வளவு நாட்களாகி இருக்கும்?"

"தாத்தா தீவிரவாதி, தீவிரவாதி என்கிறார்களே அவர்கள் யார் தாத்தா?"

காஷ்மீர் தீவிரவாதிகள் இரண்டு வகையினர். ஒரு குழு காஷ்மீரைப் பாக்கிஸ்தானோடு சேர்க்க வேண்டுமென்று,

பாக் ஆதரவோடு இந்தியாவை எதிர்த்துக் கலவரம் செய்து கொண்டிருப்பது. மற்றது காஷ்மீரை தனி நாடாக்க வேண்டுமென்று இந்தியா, பாக்கிஸ்தான் இரண்டையும் எதிர்த்துக் கொண்டிருப்பது.

"இந்தக் குழுக்களுக்கெல்லாம் என்ன பெயர் தாத்தா?"

"ஹிஸ்ப் உல் முஜா ஹதீன்."

"லஸ்கர் எ தெய்பா."

"ஹர்கத் உல் முஜா ஹிதீன்."

"தாரிக் எ ஜிகாத்" இவை எல்லாமே பாக்கிஸ்தான் ஆதரவுக் குழுக்கள். இவற்றின் பெயரால்தான் பாக்கிஸ் தான் கார்கிலுக்குள் நுழையத் துணிந்தது. கார்கிலில் தன் படைகள் நுழையவே இல்லை என்று சாதித்தது பாகிஸ்தான்.

"பாக்கிஸ்தான் கூற்றை உலகம் நம்பவில்லை. கார்கிலில் ஊடுருவியிருப்பது யார் என்பதை வல்லரசுகள் அறிந்து வைத்திருக்கின்றன.

## உளவுப் படை?

"எங்கள் மிஸ் சொன்னாங்க, எல்லா நாடுகளுக்கும் 'ஸ்பை' இருப்பாங்களாமே?"

உண்மைதான். எல்லா நாட்டிலுமே உளவுப் படை வைத்திருப்பார்கள். அவை அடுத்த நாட்டில் என்ன நடக் கிறதென்று உளவு பார்த்து தம் நாட்டுக்குத் தகவல்களைத் தெரிவிக்கும். கார்கிலில் என்ன நடந்தது என்பது குறிப் பாக வல்லரசு நாடுகளுக்குத் தெரியும்...ஆனால் தங்கள் நாட்டின் நலன், நட்பு இவற்றால் உண்மையை ஒப்பவும் தெரிந்த தகவல்களை வெளியிடவும் அவை விரும்புவ

தில்லை. எல்லாம் தெரிந்த அமெரிக்காவே இப்போது தானே பாக்கிஸ்தானின் ஊடுருவலை வெளிப் படையாகக் கண்டிக்கிறது.

"அமெரிக்காவின் உளவுப்படை பெயரென்ன?"

"அதுவா, சி. ஐ. ஏ. என்று சுருக்கமாகக் கூறுவார்கள்.

"நம் நாட்டுக்கும் உளவுப் படை உண்டுதானே? அதற்கென்ன பெயர்?

"இங்கே உளவுப் பிரிவுகள் பலவுண்டு. எல்லாருக்கும் தெரிந்தவை சி. பி. ஐ. என்னும் மத்திய புலனாய்வுப் பிரிவு, ரா (Raw) என்றொரு ஆய்வு அமைப்பும் உண்டு.

இராணுவத்தில், உள் நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் முக்கிய செய்திகளைத் திரட்டி படைத் தலைமைக்கு நேரடியாகவே அனுப்பும் பிரிவும் உண்டு. அதேபோல் ஒவ்வொரு பிராந்தியத்திலும் (பகுதி) ரகசிய தகவல்களைத் திரட்டி அப்பகுதி இராணுவத் தலைமைக்கு அனுப்பும் உளவுப்படை உண்டு. இவ்வலுவலகத்திற்குக் கிடைக்கும் தகவல்களில் முக்கியம் எனக் கருதுவதை, பகுதி அலுவலகம் நாட்டின் தலைமை இராணுவ அலுவலகத்திற்கு அனுப்பும்.

மற்றொன்றும் உள்ளது. ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் (Area) இயங்குவது இது. அது திரட்டும் தகவல்கள் அதன் அலுவலகத்திலேயே வைத்துக் கொள்ளப்படும்.

மலைப்பகுதி காவல் படையான இந்தோ—திபெத்தியன் எல்லைக் காவல் படையிலும் ஒரு உளவுப் பிரிவு உண்டு. இவற்றைத் தவிர்த்து ஜம்மு & காஷ்மீர் மாநில அரசின் சார்பில ஒரு உளவுப் பிரிவு செயல்படுகிறது. இது திரட்டித் தரும் தகவல்களில் பாதுகாப்பு தொடர்பான செய்திகளை மட்டில் அது மத்திய அரசுக்குத் தெரிவிக்கும்."

"இவ்வளவுதானா? இன்னும் இருக்கிறதா தாத்தா?"

"ஒவ்வொரு மாநில அரசுக்கும்கூட உளவு காவற் படை பிரிவு உண்டு. ஏன் இவ்வளவு போதாதா?"

போதும் தாத்தா போதும். இவ்வளவு இருந்தும்......

"பாகிஸ்தானியர்கள் ஊடுருவியதைக் கண்டு பிடிக்க முடியாமற் போய்விட்டதே—அதை நினைத்தால்தான் வருத்தமாக இருக்கிறது." மலர்விழியின் கருத்து இது.

உளவறிபவர்களையே உளவு பார்ப்பதும் உண்டு. ஒரு குற்றத்தை யாருக்கும் தெரியாமல் செய்வதென்பது அரிதே யாகும். குற்றத்தைக் கண்டுபிடிக்க உள்ளவர் அறியாமல் குற்றம் புரிவது வேறு. பின்னர் குற்றங்களைக் கண்டு பிடிக்க உதவுபவர்கள் (informer) தகவல் தெரிவிப்பாளர் களே. கள்ளச் சந்தை. கடத்தல் குற்றங்கள் பெரும்பாலும் குற்றவாளிகளின் கூட்டாளிகள் தரும் செய்தி மூலமே கண்டு பிடிக்கப்படுகின்றன. இப்படித் தகவல் தெரிவிப்பவர் களுக்கு அரசுத்துறை பரிசும் வழங்குகிறது.

"பரிசா?" மணிவண்ணன் கேட்டான்.

"ஆமாம். ஆனால் பலரறிய மேடையில் அல்ல. யாருக் கும் தெரியாமல் பணப்பரிசு வழங்கப்படும்."

"சரி தாத்தா, இப்போது நாம் பேசும் 'informer' செய்திக்கும், கார்கில் கதைக்கும் என்ன தொடர்பு?"

"தொடர்பு இருக்கிறது. இதோ இந்த சால்வையைப் பார். இதன் மூலையில் ஒரு துண்டுத் துணி தைக்கப்பட்டி ருக்கிறதே அதில் உள்ள எழுத்தைப் படித்துச் சொல்...?"

தாத்தா போர்த்தியிருந்த சால்வையை இழுத்துப் படிக்கிறார்கள்.

"காஷ்மீர். 100% உல்' என்று இருக்கிறது தாத்தா."

"உங்களுக்குத்தான் தெரியுமே கம்பளம் நெய்யும் மூலப் பொருள் எதிலிருந்து கிடைக்கிறதென்று?"

"செம்மறி ஆட்டிலிருந்து கிடைக்கிறது. நாங்கள்தான் அதை எல். கே. ஜி. யிலேயே படித்திருக்கிறோமே! பா பா பிளாக் ஷீப் ஹேவ் யூ எனி உல்?

"எஸ் சார் எஸ் சார் திரீ பேக்ஸ் ஃபுல்" என்று.

"நம்ம ஊர் செம்மறி ஆடுகளிடமிருந்து கம்பளி பெற முடியாது. காஷ்மீரில் வளர்க்கப்படும் ஆடுகளிடமிருந்து தான் கம்பளி கிடைக்கிறது. இங்கே கறிக்காக ஆடு வளர்க்கி றார்கள். அங்கே கம்பளிக்காக ஆடு வளர்க்கிறார்கள்.

"ஆமாம். அங்குள்ள ஆடுகளுக்கு எவ்வளவு முடி இருக் கிறது!"

"காஷ்மீர் இடையர்கள் செம்மறி ஆடுகளை மேய்ச்ச லுக்காக கார்கில் மலைப் பகுதிக்கு ஓட்டிச் செல்வார்கள். அவர்களுக்கு மலைப் பாதைகள் எல்லாம் தெரியும். நம்மு டைய எல்லைக் காவல் படை செல்லாத இடங்களுக்கெல் லாம் கூட இவர்கள் ஆடுகளை மேய்ச்சலுக்காக ஓட்டிச் செல்வார்கள். நம் எல்லைக் காவல் படையின் கண்களுக் குத் தப்பியவர்கள் கூட, இவர்களின் பார்வையில் படாமல் தப்ப முடியாது."

"அப்படியானால், அவர்கள் பார்த்ததை நம் படை யிடம் கூற வேண்டியதுதானே?"

"தெரிவிப்பார்கள். அதற்காக நம் படை வீரர்கள் அந்த இடையர்களுக்கு மது புட்டிகளைக் கொடுப்பார் களாம்."

"ஓகோ... லஞ்சமாக மதுவா?"

"அவர்கள் கொடுப்பது லஞ்சமல்ல. அன்பளிப்பு."

"கார்கிலில் ஊடுருவியவர்களைப் பற்றி, அந்த இடையர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே! பின் ஏன் அதை நம் படைக்குத் தெரிவிக்கவில்லை?"

"அதற்கும் ஒரு காரணம் கூறப்படுகிறது."

"அது என்ன காரணம்?"

"தகவல் கூறும் ஆட்டிடையர்களுக்கு மதுப்புட்டிகளைப் பரிசளிக்கும் பழக்கத்தைச் சிக்கனம் கருதி நிறுத்திவிட்டாராம். அதனால் ஆடு மேய்ப்பவர்களும், தாங்கள் கண்டதை நமது இராணுவத்திற்குக் கூறாமல் விட்டுவிட்டார்களாம்.

"தாத்தா! பணக்கார நாடுகள் உளவு அறிய விண்கோள்களை அனுப்பி வைத்திருக்காம். அது உலகைச் சுற்றி வரும்போதே படங்களை எடுத்து அனுப்புமாம். நம்ம கார்கிலில் பாக்கிஸ்தான் நுழைந்திருந்ததைக்கூடப் படமெடுத்து அனுப்பியிருக்கும். தெரிந்திருந்தும் அவை தான் நமக்கு கூறவில்லை என்று என் நண்பன் எட்வர்ட் அப்பா சொன்னதாகச் சொன்னான். அது உண்மையா தாத்தா?"

உன் நண்பன் கூறியது பொய்யல்ல. ஆனால் ஒரு நாடு தன் விண்கோள் மூலம் அறியும் செய்திகளை மற்ற நாடுகளோடு பகிர்ந்து கொள்ள வேண்டுமென்பது கட்டாயமில்லை. அதனால் தெரிந்தாலும் கூற மாட்டா!"

"கூறினால் என்ன?"

"மணி...! ஒன்றைச் சொல்லலாம் என்பது வேறு சொல்லித்தான் தீர வேண்டுமென்பது வேறு."

"அது எப்படி?— அது என்ன வேறு, இது என்ன வேறு?

"நீ அவசரமாகப் பேருந்து நிலையத்திற்கு நடந்து சென்று கொண்டிருக்கிறாய். உங்கள் தெருக்காரருடைய மூன்று சக்கர வாடகை வண்டி, ஆளில்லாமலேயே உன்னைக்

கடந்து செல்கிறது. நீ நடந்து செல்வதையும் ஓட்டுநர் பார்த்துக் கொண்டுதான் செல்கிறார். அவர் செய்ததைக் குற்றமென்று கூறுவாயா?...''

''அது எப்படிக் குற்றமாகும்? அவர் ஓட்டுவது வாடகைக்கு, சும்மா தான் போகிறோமே, யாரையாவது ஏற்றிச் சென்று விட்டால் குறைந்தா போய் விடுவோம் என்றெண்ணினால், அவர் தொழில் கெட்டுப் போகாதா? அவரும் வாடகைக்குத் தானே வண்டியை எடுத்து ஓட்டுகிறார்? பெட்ரோல் சும்மாவா தருகிறார்கள்?...''

''நன்றாக நீதி உரைக்கிறாய் மணி! இந்த நீதி நீ குறை கண்டாயே தகவல் சொன்னால் என்ன என்று, அதற்கும் பொருந்தும். விண்கோள் ஒன்றும் காக்கைக் குருவிகளைப் போல் சும்மா பறக்கவில்லை. பலநூறு கோடி ரூபாய்களைச் சாப்பிட்டு விட்டுத்தான் பறக்கின்றன. அவற்றோடு தகவல் பரிமாற்ற ஒப்பந்தம் செய்திருந்தால் தகவல் தெரிவித்திருப்பார்கள். நாம் இதற்காக ஒப்பந்தம் ஏதும் செய்து கொண்டிருக்க வில்லையே.''

''ஓகோ! உளவு விண்கோளும் ஆட்டோ போல்தானா?''

''அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்? உனக்குப் புரிய வேண்டுமென்பதற்காகக் கூறினால் விண்கோளை ஆட்டோவில் ஏற்றி விடுகிறாயே?''

''கடைசியாக ஊடுருவலை எப்படித்தான் கண்டு பிடித்தார்களாம்?...

''அதைத்தான் முதல் நாளே கூறிவிட்டேனே, ஆட்டிடையர்கள் மூலந்தான் செய்தி கிடைத்ததென்று.''

தாத்தா நாங்கள் புறப்படுகின்றோம். அம்மா சீக்கிரமா வந்து விடுங்கள் என்று சொல்லி அனுப்பினாங்க என்று எழுந்தான் அகமது. நசீமாவும் எழுந்து அவன் கையைப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

நல்லது பிள்ளைகளா! போய் வாங்க! என்றார் தாத்தா. மணியும், சரி என்று கூறி அனுப்பினான்.

''தாத்தா! இடையர்கள் தகவல் சொன்னதாகக் கூறினீர்களே, அவர்கள் யார்? எப்படித் தெரிந்தது என்பதை யெல்லாம் சொல்ல வில்லையே?''

''அதை நீங்கள் கேட்க வில்லையா? ஒன்று செய்யுங் களேன்...''

''என்ன செய்ய வேண்டும்?''

''முதல் நாள் கதையை முத்துவிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்களேன்.''

''அந்தப் பெரிய மனிதனிடமா? காக்கை நரிக் கதை யையே அவனால் சரியாகக் கூற முடியாது. 'அவர்' கார்கில் கதையைக் கூறுவாரா? என்ன தாத்தா இது? கிண்டலும் கெஞ்சலும் இழைந்தது மலர்விழி கூற்றில்.

''ஆமாம் தாத்தா! அவன் எதையாவது உளறி வைப் பான்'' என்றான் மணிவண்ணன்.

''கூறியது கூறல் குற்றம்'' என்றார் தாத்தா.

''சுருக்கமாகக் கூறினாலே போதும்! என்றாள் மலர்விழி.

''சரி சரி என்ன கூறினாலும் விடப் போவதில்லை நீங்கள். என்று பழைய செய்திகளை கூறி, கதையை மீண்டும் நாளை தொடரலாமென்று அவர்களை அனுப்பி வைத்தார் தாத்தா.

''ஊம்...தாத்தா பாட்டி என்றால் கதை சொல்லும் கருவி என்றாகி விட்டது... ஏதோ கவலையை மறந்து - பிள்ளைகளோடு இருக்க - இதுதானே முதியவர்களுக்கு உதவுகிறது என்றவாறு ஓய்வெடுத்தார் தாத்தா தனகோடி.

# களம் - 2

## போர்த் திட்டம்

வழக்கத்திற்கு மாறாக இன்று பகலில் கதை கேட்க வரவில்லை. இரவு உணவை முடித்துக் கொண்டுதான் மலர் விழியும், மணிவண்ணனும் கதை கேட்க தாத்தா அறைக்கு வந்தார்கள். காரணம் அன்று ஞாயிறு. மாலை வரை! இல்லை, இல்லை இரவு எட்டு மணிவரை என்று கூடச் சொல்லலாம் மிக முக்கியமான வேலை அவர்களுக்கு. என்ன வேலை என்கிறீர்களா? வேறு என்ன? தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒன்று விடாமல் பார்ப்பதுதான்.

இதில் சிறுவர்களை மட்டில் பிரித்துப் பேசக் கூடாது! பெரியவர்களிலும் சிலர் அப்படித் தானே இருக்கிறார்கள். ஞாயிறு மாலை என்றால் சாலையில் கூட போக்குவரத்து குறைவாகத் தானே இருக்கிறது! புதுநகரமைப்புக் குறுக்குத் தெருக்களில் ஆள் நடமாட்டமே இருக்காது.

இந்தியாவிலேயே திரைப்படப் பித்தர்களாக இருப் பவர்கள் தமிழர்களும், ஆந்திரர்களும் தாம் போலும்! வெளிநாட்டுக் காரர்களோ தமிழர்களின் திரைப்பட மோகத்தைப் பார்த்து, தாஜ்மகாலை விட அதிகமாக வியக் கிறார்கள். அவர்கள் தாம் நம் நிலையை எண்ணி வருத்தப் படுகிறார்கள். ஆனால் நம்மவர்கள்...? எதிர்காலஎண்ணமே இல்லாமல் புதியதோர் உலகத்தையல்லவா சமைத்துக் கொண்டிருக்கிறார்கள்! தாத்தா மனதுக்குள்ளேயே பேசிக்

கொண்டார். பின்னே...இதையெல்லாம் வெளிப்படை யாகவா பேச முடியும்? கேட்பது யார்?

"தாத்தா! தாத்தா! என்ன தாத்தா நாங்கள் வந்து உட்கார்ந்திருக்கிறோம் நீங்கள் ஏதோ சிந்தனையில் பேசா திருக்கிறீர்கள்? இருவரும் சேர்ந்தே குரல் கொடுத்துத் தாத்தாவுக்குத் தன்னுணர்வைக் கொண்டு வந்தார்கள். மெழுகு மாளிகைக்குள் மத்தாப்பு கொளுத்திக் கொண் டிருக்கும் தமிழர்களை எண்ணி அவர் கவலைப் படுவதை சிறுவர்களால் எப்படிப் புரிந்து கொள்ள முடியும்?

கதையைத் தொடங்கலாம். சுற்றி வளைக்காமல் இன்று கார்கிலுக்குப் போய்விட வேண்டியதுதான் என்றார் தாத்தா. அப்போதுதான் உள்ளே ஓடிவந்த முத்துவும் முல்லையும் நாங்களும் வருகிறோம் தாத்தா. எங்களையும் கூட்டிக்கொண்டு போங்க. பஸ்சுக்கு அம்மா விடம் காசு கேட்டு வாங்கி வரட்டுமா? என்றனர் குழந்தைகள்.

மூவரும் சிரித்துவிட்டனர். முல்லைக்கும் முத்துவுக்கும் சிரித்தது ஏனென்று புரியாததால், "ஏன் சிரித்தீர்கள்?" என்று அழுதாள் முல்லை.

"ஒன்றுமில்லை— அழாதே. நாங்கள் எங்கேயும் வெளியே போகவில்லை. தாத்தா கதையை எங்கே நிறுத் தினாரோ அங்கேதான் போகலாம் என்று கூறினார் தாத்தா. கூச்சல் போடாமல் உட்கார்ந்து கதையைக் கேளுங்கள்" என்று அன்பாகப் பேசினாள் மலர்விழி.

"ஆமாம். ஏதாவது கூச்சல் போட்டீங்க... இழுத்துக் கொண்டுபோய் அம்மாவிடம் விட்டுவிடுவேன்" என்று மிரட்டினான் மணிவண்ணன். மிரட்டுவதுதான் ஆண் களின் அடையாளமோ? தாத்த தொடர்ந்தார்.

"வாஜ்பாய், இந்தியா—பாக்கிஸ்தான் உறவு இடை வெளியைக் குறைத்து— நட்புறவை வளர்க்க முயற்சி மேற்

கொண்டார். நேயக் கரத்தை நீட்டி, லாகூருக்குப் பேருந்து பயணம் மேற்கொண்டார். பாக். பிரதமர் நவாஸ் ஷரீப்போடு பேசி அறிக்கை வெளியிட்டனர். இதன் மூலம் பாக்கின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்திவிடலாமென நம்பியது இந்தியா. வாகா எல்லையில் வாஜ்பாய் அவர்களைக் கட்டித்தழுவி வரவேற்ற அதே கையால், பாக்கிஸ்தான் இராணுவம் நமது எல்லைக்குள் ஊடுருவ அனுமதித்து ஒப்பமிட்டிருந்தது நமக்குத் தெரியாமற் போய்விட்டது. நாம் திறந்த மனத்தோடு கைகளை நீட்டினோம்— அவர்களோ கரவு மனத்தோடு கை குலுக்கினார்கள்.''

''ஏன் அப்படிச் செய்தார்கள்?''

''ஸ்ரீநகர்-லே பள்ளத்தாக்கு 1-ஏ தேசிய நெடுஞ்சாலையை எப்படியாவது தங்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டால், எல்லையில் போரைத் துவக்கும்போது இந்தியப் படைக்கு எவ்வித உதவியும் வரமுடியாமல் தடுத்துவிடலாம் என்பது பாக்கிஸ்தானின் எண்ணம்— திட்டம்.

''போர்க்களத்திற்குப் போகலாம் என்றீர்கள். மீண்டும் பாக்கிஸ்தானுக்கே போய்விட்டீர்களே தாத்தா?''

''தம்பி! போர் பாக்கிஸ்தானில் தானே உருவாயிற்று. அங்கே போகாமல் கார்கிலுக்குப் போக முடியாதே!''

''டேய் மணி! சும்மா கதையைக் கேளுடா! முந்திரிக் கொட்டை மாதிரி அடிக்கடி குறுக்கே பேசிக் கொண்டிருக்காதே!

''ஐயத்தை கேட்கட்டும் மலர் கேள்வி கேட்பதுதான் அறிவு வளர்ச்சியின் அறிகுறி'' என்றார் தாத்தா.

''மணி கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தான். தாத்தா தொடர்ந்தார். பாக் ஊடுருவியிருப்பது நமது படைக்குத்

தெரிந்ததும், உறக்கம் கலைந்த அரிமாபோல் எழுந்தது இந்தியா.

"அரிமா என்றால் என்ன தாத்தா? மலர்விழி கேட்டாள்.

"லயன்" என்றார் தாத்தா. சிங்கம் என்றான் மணி.

தொடக்கத்தில் எதிரிகள் எவ்வளவு பேர், எங்கெங்கே ஒளிந்திருக்கிறார்கள் என்பது தெரியாததால், நம் படை வீரர்களை ஊடுருவல்காரர்கள் வசதியான இடத்தில் மறைந்து கொண்டு சுட்டுத் தள்ளிவிட்டார்கள். இழப்பு நேர்ந்ததும் நம் படைத் தலைவரே போர் முனைக்குச் சென்று நிலைமை என்ன என்று மதிப்பிட்டு வந்தார்.

சாதாரண தாக்குதல் பயனிளிக்காதென்று முடிவு செய்தார். மிகக் கடுமையான தாக்குதலைத் தொடுத்தா லன்றி நிலைமை திருந்தாதெனக் கருதினார்.

இப்போதே நிலைமை கட்டு மீறியிருக்கிறது. ஊடுருவல் காரர்களை விரட்ட தரைப்படைப் பிரிவோடு (Division) பூரங்கிப் படையையும் அனுப்பி வைத்தார். இந்த நடவடிக்கைக்கு விஜய் (Operation Vijay) என்று பெயர் சூட்டப்பட்டது.

"தரைப்படைக்குக் கூடுதல் வலு சேர்க்க வேண்டு மென்று எண்ணினார் படைத்தலைவர் வீ. பி மாலிக். விமானப் படையையும் களத்தில் இறக்க வேண்டுமென விரும்பினார். விமானப் படைத் தலைவர் ஏ. ஓய். டிப்னி சோடு பேசினார். அவர் ஒப்புக்கொண்டதும். இந்தியப் பாதுகாப்புக் குழுவில் நிலைமையைத் தெளிவு படுத்தினார். முதலில் இக்குழு போரில் விமானப் படையை ஈடுபடுத்துவ தற்கு அனுமதி மறுத்து விட்டது."

"ஏன்?" பொறு! கூறுகிறேன்.

தலைமைத் தளபதி வற்புறுத்தியதற்குப் பின் குழு ஒப்புதளித்தது. நமது பிரதமர் ஒரு திடமான முடிவை எடுத்தார். கார்கிலை பாக். ஆக்கிரமிப்புச் செய்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாதென்று தெளிவாகக் கூறி விட்டார்.

''போர்களின் வெற்றி என்பது படை பலத்தில் மட்டும் இல்லை. படைத்தலைமை வகுக்கும் வியூகம், உத்திகள் அரசு எடுக்கும் முடிவுகள். மக்கள் கொடுக்கும் ஒத்துழைப்பு ஆகியவற்றையும் பொறுத்திருக்கிறது.''

''உத்தி, முடிவு என்றால் என்ன தாத்தா?''

''நான் கூறுவதைக் கேட்டுக்கொண்டே வா, புரியும்.''

''விமானப் படையைப் போரில் ஈடுபடுத்த பாதுகாப்புக் குழு அனுமதி மறுத்தது என்று கூறினேன் அல்லவா?''

''ஆமாம், ஏன் என்று கேட்டதற்கு 'பொறு' என்றும் கூறினீர்கள்'' என்றான் மணிவண்ணன்.

''விமானப் படையை ஈடுபடுத்தினால் போர் விரி வடைந்துவிடும் என்று குழு நினைத்தது.''

''அப்படி என்றால்...?''

''போர் வலுக்கும், பாக்கிஸ்தானும் தன் விமானப் படையை நுழைக்கும். ஒரு எல்லையில் நடக்கும் சண்டை பலமுனைகளுக்கு விரிவடையும், பின்னர் பெரும் போராகவே வெடித்து விடலாம் என்பதுதான் குழுவின் அச்சம்.

''ஓ...கோ...! வாஜ்பாய் அனுமதி கொடுத்தாரே எப்படி.?

நமது எல்லைக்குள் விமானப்படையைப் பயன்படுத்த நமக்கு உரிமை உண்டு. அதை எந்த நாடும் தவறு என்றும்

கூறிவிட முடியாது. அதனால்தான் நம் படைகள் எல்லை தாண்டித் தாக்க வேண்டுமென்றபோது, கூடாதெனத் தடுத்து விட்டார்.

''அப்படி என்றால் சரிதான் தாத்தா! வாஜ்பாய் சரியாகத்தான் சொல்லியிருக்கிறார்.'' என்றான் மணி.

''பெரிய மனிதர் சர்ட்டிபிகேட் கொடுக்கிறார்! என்று இடித்தாள் மலர்விழி.

மலை உச்சியில் பதினெட்டாயிரம் அடி உயரம்வரை ஊடுருவி—மறைந்திருக்கும் எதிரிகளை, நம் தரைப் படை அங்குலம் அங்குலமாக, தாக்குதலை எதிர்கொண்டு ஏறிச் சென்று விரட்டுவதென்பது மிகக் கடுமையான வேலை. முன்பே நம் வீரர்கள் பலரை நாம் இழந்து விட்டிருக்கிறோம் எனவே விமானப் படையின் உதவி தவிர்க்க முடியாத தேவையாகி விட்டது.

''நம் விமானப் படையும் சண்டை போட்டதா?''

''நமது போர் விமானங்களும். ஹெலிகாப்டர்களும் மலை முகடுகளில் தூக்கத் தொடங்கின. அதிலும் முதலில் நமக்கு அடி கிடைத்தது.''

''அடியா? நமக்கா? என்ன ஆச்சு?''

நமது விமானப் படையின் மிக் 27, மிக் 21-இரு போர் விமானங்களையும், எம். ஐ 17 ஹெலிகர்ப்டர் ஒன்றையும் பாக்கிஸ்தான் ஏவுகணை மூலம் சுட்டு வீழ்த்தி விட்டது.

''என்ன தாத்தா? பாக்கிஸ்தான்கிட்ட போய் நாம் அடி வாங்குகிறோம்? ஆத்திரத்தோடும், அவசரத்தோடும் கேட்டான் மணிவண்ணன்.

''மணி! போர் என்பது சினிமா சண்டைக் காட்சியைப் போன்றதல்ல. கதைத் தலைவர் ஒப்புக்குக் கொஞ்சம் வாங்கிக் கொண்டு, பின்னர் அனைவரையும் அடித்துத்

துவைத்து விரட்டுவதைப் போன்றதல்ல எதிரிகளோடு சண்டை போடுவது? நடிப்பு வேறு, நடப்பு வேறு. உண்மையான சண்டையில் இரண்டு பக்கமும் அடி விழத்தான் செய்யும். நம் விமானப் படை ஹெலிகாப்டர் பாக்கிஸ்தான் வேவு விமானத்தைச் சுட்டுத் தள்ளியதே தெரியாதா?''

''பதிலடி கொடுத்து விட்டோமில்லையா? அப்ப சரி.'' என்று ஆறுதலடைந்தான் மணிவண்ணன்.

''பாக்கிஸ்தான் எப்படி நமது விமானங்களைச் சுட்டு வீழ்த்தியது'' என்று கேட்டாள் மலர்விழி.

பாக்கிஸ்தான், கார்கிலில் டைகர் மலைக்கு 2.5 கி.மீ. தொலைவில் இரு முகாம்களை அமைத்துக் கொண்டு, நம் எல்லை மலை உச்சியியில் ஊடுருவியிருந்த தீவிரவாதிகளுக்கும், பாக். படையினருக்கும் தேவையான உணவு மற்றும் ஆயுதங்களை அனுப்பி வைத்துக் கொண்டிருந்தது. இந்த முகாம்களை நமது விமானப்படை அழித்துவிட்டது. இவ்விரு முகாம்கள் மட்டுமன்றி மேலும் பல முகாம்களையும் நம் படை விமானங்கள் குண்டு வீசித் தாக்கி அழித்து விட்டன.

அப்போதுதான் நம் விமானம், ஹெலிகாப்டர்களைப் பாக்கிஸ்தான் வீழ்த்தியதா?

''நம் படை விமானம் ஒன்று பழுதடைந்து வீழ்ந்தது. மலை உச்சியிலிருந்த எதிரிகளிடமும் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் இருந்தன.''

''நம் விமானங்கள் எதிரிகளை அழிக்கவில்லையா?''

''ஏன் இல்லை. குண்டு மழை பொழிந்து ஊடுருவல்காரர்களைக் கதிகலங்க வைத்து விட்டது. எதிரிகளின் பதுங்கு குழிகளையும், அவர்களுக்கு உதவிகள் (Supplies) வரும் வழிகளையும் தடுப்பதற்கு அனுப்பப்பட்ட மிக்ரக ஜெட் விமானங்கள் மூலம் அதிக பலன் கிட்டவில்லை.

எனவே மிராஜ் ஜெட் விமானங்கள் களத்திற்கு அனுப்பப் பட்டன.

"மிக்கிற்கும்,மிராஜூக்கும் என்ன டிபரன்ஸ் தாத்தா?"

"மலர்விழியால் ஆங்கிலம் கலக்காமல் பேச முடியாதே! சொல்கிறேன்" என்றார்.

'மிக்' விமானத்தால் தாக்குதல் தொடுக்க மட்டுந்தான் முடியும். மிராஜ் விமானம் தாக்குவதோடு எதிரிகளின் நிலைகளைக் கண்டறிந்து, தகவல் திரட்டக்கூடிய ஆற்றலும் உண்டு. மிராஜ் விமானம் திரட்டிய தகவல் மூலம் டைகர் சிகரத்தைச் சுற்றி வளைத்திருந்த எதிரிகளின் நிலைகள் பலம் இவற்றைத் துல்லியமாகக் கண்டறிந்து இலக்கைக் குறி தவறாமல் நம்மால் தாக்க முடிந்தது. அது மட்டுமல்ல, இரவு பகலாக இடைவிடாமல் விமானங்களும் பீரங்கிகளும் மாறி மாறித் தாக்கியதால் மலைமேலிருந்து கொண்டு நம் தரைப் படையைத் தாக்கிக் கொண்டிருந்த எதிரிகளைப் பதுங்கு குழிகளை நோக்கி ஓடவைத்து நம் வீரர்கள் மலை மீது ஏற வைக்க முடிந்தது. ஆம் ஊடுருவல் காரர்களைப் பதுங்கு குழிகளில் முடக்கி வைத்து நம் வீரர் களைத் தாக்குதலிலிருந்து காப்பாற்றியது இந்த உத்தி எதிரிகள் முடங்கிக் கிடந்த நேரத்தில் நம் படைகள் விரைந்தும், பாதுகாப்பாகவும் மலை மேல் ஏறினார்கள். உயரே தங்களை நிலை நிறுத்திக் கொண்டு தாக்குதல் தொடுத்தார்கள். இனியும் வெற்றி நம்மை நெருங்கி வரா மல் இருக்க முடியுமா?"

"எதிரிகளிடமிருந்து எல்லா இடங்களையும் நம் படை கள் மீட்டு விட்டனவா?"

"கடுமையான போருக்குப் பின் ஒவ்வொன்றாக நம் படைகள் நிலைகளை மீட்கத்தான் செய்தன. ஆனால் ஒவ்வொரு நிலை மீட்பின் போதும் நாம் கொடுத்த விலை அதிகந்தான்."

"அப்படி என்றால்...? காசு ஏதாவது கொடுத்தார் களா?"

"போடா மண்டு! காசு கொடுக்கவில்லை. நம் வீரர்கள் தங்கள் இன்னுயிரைத்தான் தந்தனர்.

"அப்படி என்றால் காசு செலவேஇல்லையா தாத்தா."

"செலவில்லாமலா? ஏராளமான பொருளிழப்பு நமக்கு! அந்தச் செய்திகளைப் பின்னர் கூறுகிறேன். எதிரிகள் பிடித் திருந்த இடங்களில் டோலோலிங் முகடும் ஒன்று. இதை மீட்கும் போரில்தான் நாம் அதிகமான வீரர்களை இழக்க வேண்டியிருந்தது. கார்கில்-லே-ஸ்ரீநகர் தேசிய நெடுஞ் சாலை 510 கி.மீ. நீளமுள்ள முக்கிய சாலை. இதையொட்டி இருப்பதுதான் டோலோலிங்."

"தேசிய நெடுஞ்சாலை என்றால் என்ன தாத்தா?"

"அது வேறொன்றுமில்லை. சென்னை திருச்சி, புதுவை விழுப்புரம் சாலைகளைப்போல் நாடு முழுவதும் பல நீள மான சாலைகள் நடுவணர சால் பராமரிக்கப்படுகின்றன. அவை ஸ்ரீநகர்-லே நெடுஞ்சாலை I ஏ. நம் சென்னை திருச்சி நெடுஞ்சாலை எண் 45 புதுவை-விழுப்புரம் நெடுஞ் சாலை எண் 45 ஏ. தே.நெ. (N H)

"மற்றதெல்லாம்...?"

மாநில அரசின் நெடுஞ்சாலை, நகராட்சி சாலை, ஊராட்சி ஒன்றியச் சாலை, ஊராட்சி சாலை என்று அவற்றின் ஆட்சி எல்லைக்குட்பட்ட சாலைகளுக்குப் பெயருண்டு.

"பராமரிப்பது என்றால் என்ன?"

' பழுது பார்த்து நல்ல நிலைமையில் வைத்திருப்பதைத் தான் பராமரித்தல் என்கிறோம்.

"விட்ட இடத்திற்குப் போகலாம் தாத்தா!"

## டோலோ லிங் மீட்பு

குன்று குழந்தைகளைத் தன் மடியில் உட்கார வைத்திருக்கும் மலையடிவாரத்தைப் பள்ளத்தாக்கு என்று குறிப்பிடுகிறோம். டோலோ லிங், 5140 முனை, டைகர் சிகரம் இந்த மூன்றும் குந்தியிருக்கும் குழிந்த பகுதியில் நீரா? கண்ணாடி ஓடையா என்று எண்ணத்தக்க தெளிவோடு ஓடும் சிறிய நதி ஒன்றுண்டு. ஊடுருவல்காரர்கள் இங்கே வருவதற்கு முன், இந்த நதியின் சலசலப்பே அங்கே செவிகளுக்குள் போகும் ஓசை ஊர்வலம்.

மூன்று சிகரங்களின் வியர்வையே வழிந்து வந்து கலந்ததால் உருவாகி ஓடுவதுதான் இந்த முஸ்கி நதி. இந்நதி நடக்கும் நிலந்தான் முஷ்கோ பள்ளத்தாக்கு. இந்த நதிக் கரையில் நின்று கொண்டு அண்ணாந்து பார்த்தால் டோலோ லிங் பதினான்காயிரம் அடி, 5140 முகடு பதினைந்தாயிரம் அடி, புலி மலை பதினெட்டாயிரம் அடி.

டோலோ லிங்கைக் கைப்பற்றி விட்டால், வெற்றித் திருமகள் நாமிருக்கும் பக்கம் திரும்பி வரத் தொடங்கி விடுவாள். ஆனால் எதிரிகளுக்கு இருக்கும் வாய்ப்புகள் பாதுகாப்பு இவற்றை நோக்க நம் படைகளின் முன்னிருக்கும் பணி எவ்வளவு கடினமானது. இன்னல் தரவல்லது என்பதை எல்லாராலும் மதிப்பிட்டு விட முடியாது. நாம் கையில் பிடித்து எழுதுகின்றோமே எழுதுகோல், அதைப் பிடித்து எழுதும் போது அது எவ்வளவு செங்குத்தாக இருக்குமோ அதை விடவும் சற்று செங்குத்தானது (80° சாய்வானது) அந்தச் சிகரம். அதில்தான் எதிரிகளின் துப்பாக்கி ராக்கெட் குண்டுகளுக்கு மார்பைக் காட்டிக் கொண்டு மலை ஏற வேண்டும் நம் படை வீரர்கள். அதுவும் அடி அடியாக மலையை அணைத்தபடி மேலே ஏற வேண்டும் எண்ணிப் பாருங்கள். எவ்வளவு கடுமையான பணியை நம் வீரர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பது

ஓரளவு விளங்கும். இதுவொன்றும் சபரி மலையோ, திருப்பதி மலையோ அல்ல. தவறினால் பள்ளத்தாக்கில் தான் உடல் கிடக்கும்.

"அம்மாடி! எவ்வளவு கடினமான வேலை!" வியந்தாள் மலர்.

"நானாக இருந்தால் சரசரவென்று ஏறி விடுவேன் தெரியுமா?" என்றான் முத்து.

"போடா...! பொடிப்பயலே! அவங்க எப்படிப்பட்ட ஹீரோ! அவர்களே எவ்வளவு கஷ்டப்பட்டிருக்காங்க! இவர் சரசரவென்று ஏறி விடுவாராம். இது ஒன்றும் அல்வா சாப்பிடும் வேலை இல்லை, தெரிந்து கொள்" என்று மட்டந் தட்டினான் மணிவண்ணன்.

"போ...போ. உன்னால்தான் முடியாது. நானும் முல்லையும் போட்டி வைத்து மாடியில் ஏறும்போது நான் தான் 'வின்' (Win) பண்ணேன் தெரியுமா?" என்றான் முத்து.

"சரி உங்கள் சண்டையை நிறுத்துங்கள்" என்று அவர்களை அமைதிப்படுத்தி விட்டு தாத்தா தொடர்ந்தார். முல்லை அடுக்கடுக்காகக் கொட்டாவி விட்டுக் கொண்டிருந் தாள். இமைகள் தானே மூட, அவள் வலிந்து திறந்தாள்.

டோலோ லிங்கைக் கைப்பற்றும் நடவடிக்கைக்கும் பொறுப்பதிகாரியாக இருந்தவர் நம் வீரர் லெப்டினென்ட் கர்னல் விசுவநாதன் என்பவர்தான். இவர் ஒருவர் மட்டுமே ஐந்து எதிரிகளை அழித்துள்ளார். வீரப் போர் புரிந்தபடி இவர் உச்சியை அடைந்தபோது எதிரிகளின் குண்டுக்கு அவர் இரையாக நேர்ந்தது. அவரோடு மேஜர் ராஜேஷ் அதிகாரி, கேப்டன் விவேக் குப்தா முதலானோரும் தாய் நாட்டிற்காக இன்னுயிர் ஈந்து இதயத்தில் இடம் பெற்றார்கள்.

டோரலோ லிங் வெற்றி எவ்வளவு கடுமையான போராட்டத்தின் மூலம் ஈட்டப்பட்டதென்பதை நம்மால் ஓரளவே உய்த்துணர முடியும். நன்கு பயிற்சி பெற்ற படை வீரர்களுக்கே கூட அச் சிகரத்தில் ஏற பதினொரு மணி நேரம் ஆகுமென்றால், அந்த மலையில் ஏறுவது எவ்வளவு கடினம் என்பதை எவரும் உணரலாம். இப்படி, இன்னல் இடையூறுகளுக்கிடையே ஏறிய நம் படையின் ஒரு பிரிவு இடையில் ஓரிடத்தில் சிக்கிக் கொண்டு பதினாறு நாட்கள் அல்லல்பட்டது. அவர்களுக்குப் பாதிப்பு நேர்ந்து விடக் கூடாதென்பதற்காக நமது தாக்குதல் வேகத்தைக் கூட தளர்த்த வேண்டியதாயிற்று என்றால் பார்த்துக்கொள்ளுங் களேன் என்றார் தாத்தா.

"அடடா!" என்று இரக்கப்பட்டான் மணி.

"இருபத்தைந்து கிலோ எடைப் பொருளையும் சுமந்து கொண்டு, கடுங் குளிரையும் தாங்கிக் கொண்டு மலை மேல் ஏறும் போது, மலையேறிப் பழக்கப்படாதவர்களுக்கு மூச்சே திணறும்."

"ஏன் அப்படி?"

"ஒரு ஐம்பது கிலோ எடையுள்ள பொருளை தலையில் சுமந்து நடப்பது எளிதா? தரையில் உருட்டிச் செல்வது எளிதா? சொல்லுங்கள் என்றார் தாத்தா."

"தலையில் சுமந்து செல்வது கடினமாக இருக்கும். உருட்டிச் சென்றால் சுமையே தெரியாது" என்றான் மணி.

"நாம் நடப்பது சுமையை உருட்டிச் செல்வதைப் போன்றது. நமது உடல் எடை சுமையாகத் தெரிவதில்லை. ஆனால் மாடிப்படிகளில் ஏறும் போது நம்மை நாமே தூக்கிக் கொண்டு ஏறுகிறோம். அதனால் மூச்சு வாங்கும், இல்லையா?"

"கொஞ்சம் உயரம் ஏறினாலே மூச்சு வாங்கும் போது உயரமான மலையில் ஏறும்போது எவ்வளவு கடினமாக இருக்கும்?"

"இருபத்தைந்து கிலோ எடைப் பொருள்களை எடுத்துச் செல்வார்கள் என்றீர்களே! என்ன எடுத்துச் செல்வார்கள்? சாப்பாடு தானே?"

"சாப்பாடுந்தான்."

"நம்மைப் போல் சோறு, இட்லி, தோசை தானே?"

"அவர்களின் ஒரு நாள் உணவின் அளவு 1.7 கிலோ."

"என்னதான் சாப்பிடுவர்ர்கள்?"

"சப்பாத்தி, புலவு, காய்கறி, ரவா இனிப்பு, சாக்லெட், வெல்லம், புட்டியில் அடைக்கப்பட்ட உணவுப் பண்டங்கள் என்று பல சத்துக்களும் அடங்கிய உணவு இருக்கும்."

"மலை மேல் சண்டைக்குப் போகும் போது இவற்றை எல்லாம் எடுத்துச் சொல்வார்களா?"

"உனக்கு எப்போதும் சாப்பாட்டு நினைப்பு தான்?"

"சாப்பாடும் தேவைதானே அம்மா! சப்பாத்தி, புலவு இவற்றையெல்லாம் எடுத்துப் போக முடியுமா?

"முடியாதுதான். இருபத்தைந்து கிலோ எடுத்துச் செல்வதாகக் கூறினீர்களே தாத்தா?"

"எடுத்துச் செல்லும் எடையில் மூன்றிலொரு பங்கு தான் உணவு. எட்டே கிலோ கிராம் எடை தான் உணவு. அதில் வெல்லம் ஒரு கிலோ, சாக்லெட் ஐந்து கிலோ, பிஸ்கட் இரண்டு கிலோ. அவ்வளவுதான். வீரர்களுக்குக் களத்தில் உணவை விட போர்க்கருவிகள் தாம் முக்கியம்! ஒருவர் உணவு ஏதுமின்றி சிகிரெட்டை மட்டில் புகைத்த படி மூன்று நாட்கள் இருந்திருக்கிறார் தெரியுமா?"

"பாவம் தாத்தா?" மீதி எடையில் என்ன தாத்தா இருக்கும்?"

"கேட்டுக் கொள்ளுங்கள், தலைக் கவசம் இருக்கே அதன் எடை தெரியுமா?"

"தெரியாது தாத்தா?"

"கவசமே ஒரு கிலோவும் இருநூறு கிராமும்."

"கவசம் என்றால் என்ன தாத்தா? இது மலரின் வினா."

"தெரியாதா?" அப்பா வண்டியில் போகும் போது தலையில் மாட்டிக் கொண்டு போகிறாரே...?

"ஹெல்மெட்டா தாத்தா."

"ஆமாம். அதுவேதான் கவசம் 1.2 கிலோ ஆச்சா?" துப்பாக்கியின் எடை 4.5 கிலோ, நூறு சுற்றுச் சுடத் தேவைப்படும் வெடிப் பொருள் 3.2 கிலோ. தூங்குவதற்கான விரிப்புப் பை 2.00 கிலோ. கயிறு, கோடரி 1.5 கிலோ, பனி உடை 7.5 கிலோ.

டோலோ லிங்கைக் கைப்பற்ற நம்படைகள் ஒருமுறை, இரு முறையல்ல, பல முறை முயன்றுதான் முடித்தார்கள். பீரங்கி, துப்பாக்கி கொண்டே எதிரிகளை விரட்டி விடலாம் என்று தொடக்கத்தில் எண்ணிய தவறை, தாக்குதலின் போது தான் உணர்ந்தார்கள். ஊடுருவல் செய்திருந்தவர்கள் மனத்தளவிலும் பலமாகவே இருந்தார்கள். போராட்டத்தை வேகப்படுத்த அண்ணல் காந்தியடிகள் கூறினாரே [Do or die] 'டூ ஆர் டை' என்று, அந்த முடிவோடு தான் அவர்கள் இருந்தார்கள்."

"'Do or Die' என்றால் என்ன தாத்தா?"

"ஐய! இது கூடத் தெரியவில்லையா? Do என்றால் செய் or என்றால் அல்லது Die என்றால் செத்துப் போ" மலர்விழி பொருள் கூறினாள்.

"தாக்குதலில் முன்னேற்றம் தெரியாததால் படைபலம் பெருக்கப்பட்டது. மேலும் போர்க் கருவிகள் கொண்டு வரப்பட்டன. போர் வியூகம் மாற்றப்பட்டது. கிரெனெடியர்கள் எனும் குண்டு எறியும் படையினர் சிகரத்தில் பலவேறு நிலைகளில் நிற்க வைக்கப்பட்டனர். அவர்களுக்கும் பின்னால் இராசபுத்திரத் துப்பாக்கிப் படைப் பிரிவினர் நிறுத்தப் பட்டனர். தாக்குதலை எங்கிருத்து தொடங்குவதென்பதும் முடிவு செய்யப்பட்டது. முகடுகளின் சரிவில் நமது வீரர்கள் பதுங்கிக் கொண்டார் கள். இவை எல்லாம் ஒத்திகைப்படியே நடந்தன.

"ஒத்திகை என்றால்...?"

பயிற்சி தான். டோலோ லிங் போன்ற வேறொரு மலையில், யார் யார் எங்கெங்கு நிற்க வேண்டும், மறைந்து கொள்ள வேண்டும் எந்தத் திசையில் ஏற வேண்டும். சுட வேண்டும் என்பதையெல்லாம் இங்கே வருவதற்குச் சில நாட்களுக்கு முன்பே செய்து பார்த்துக் கொண்டு தான் இப்போது போர்க்களத்தில் செயற்படுத்தினார்கள்.

"என்ன தாத்தா, கிரிக்கெட்டில் பீல்டிங்கில் ஆட்களை நிறுத்துவதைப் போலிருக்கிறதே. பயிற்சிவேறு நடத்தியிருக் காங்க போல் அதனால் தான் மிலிட்டிரியிலும் கேப்டன், கிரிக்கெட்டிலும் கேப்டன் இருக்காங்களா?" என்றான் மணிவண்ணன்.

"கிரிக்கெட் என்பது விளையாட்டுப் போர் இது மண் ணைக்காக்கும் அசல் போர். அதில் காயந்தான் சிலருக்கு ஏற் படும். இதில் உயிரே போய்விடும். ஆனால் இரண்டிலுமே வெற்றிக்குத் தேவைப்படுவது வியூகந்தான்.

"வியூகம் என்றால் என்னமோ என்று நினைத்தேன். ஃபீல்டிங்தானா அது?" என்றான் மணிவண்ணன்.

மேலும் விளக்குவதைத் தவிர்த்துத் தொடர்ந்தார் தாத்தா.

"தாத்தா, தாத்தா ஒரு சந்தேகம்." என்றான் மணிவண்ணன் என்ன? வழுக்கு மரம் போல் சறுக்கிக் கொண்டே இருக்கிறதே கதை? சொல்லு...என்றார் தாத்தா.

"நமது வீரர்கள் இருபத்தைந்து கிலோ பொருள்களை எடுத்துச் செல்வதாகக் கூறினீர்கள் வேறு படைக் கருவிகள், மற்ற பொருட்களையெல்லாம் யார் தாத்தா எடுத்துச் செல்வார்கள்?

"இராணுவத்தில் போர் புரியும் வீரர்கள் மட்டுமன்றி மற்ற தொழில் தெரிந்தவர்களும் இருப்பார்கள்.

"மற்ற தொழில் என்றால்—என்ன தாத்தா?

"அதைத்தானே சொல்ல வருகிறேன். விட மாட்டேன் என்கிறாயே! சலவைத் தொழிலாளி, முடிதிருத்துபவர்கள் செருப்புத் தைப்பவர்கள் இப்படி...

"அவங்க அந்த வேலையைத் தான் இராணுவத்திலும் செய்வார்களா?"

"பொதுவாக அப்படித்தான். போர் நடக்கும் போது அவர்கள் வேறு வேலைகளையும் செய்வார்கள். அப்படித் தான் கார்கில் போரில் அவர்களும் பயன் படுத்தப் பட்டார்கள்.

"எதற்குப் பயன் படுத்தினார்கள்?"

"கனமான ஆயுதங்களை மலை மேல் போரிடும் நமது வீரர்களுக்குக் கொண்டு செல்லும் வேலை இவர்களிடந்தான் ஒப்படைக்கப்பட்டது. ஒரு போர் வீரர் முன்னே செல்கிறாரென்றால், அவர் பின்னால் இவர்கள் நான்கு பேர் ஆயுதங்களை எடுத்துச் சென்றார்கள்.

"அப்படியா?"

இந்தத் தாக்குதல் அணியில் 90 வீரர்கள் இருந்தார்கள். அவர்களுள் பலர் விளையாட்டு வீரர்கள்.

''எல்லாரும் கிரிக்கெட் பிளேயரா தாத்தா? என்றான் மணி.

''ஏன் கிரிக்கெட் ஒன்றுதான் விளையாட்டா?'' வேறு விளையாட்டே இல்லையா?

''நம்ம இந்தியா கிரிக்கெட்டில்தானே வென்று வருகிறது. அதனால்தான் கேட்டேன்.

''கபடியில் வென்றது தெரியாதா? டென்னிஸ் ஆட்டத்தில் வெல்லவில்லை? ஒரு காலத்தில் இந்தியா என்றாலே உலகத்திற்கே ஹாக்கி விளையாட்டுதான் நினைவுக்கு வரும் அந்த அளவுக்கு ஹாக்கி விளையாட்டில் இந்தியா செல்வாக்குப் பெற்றிருந்தது. வெற்றி, வெற்றி, வெற்றிதான்.

''அப்படியா?'' கண்களில் மகிழ்ச்சி பொங்கக் கேட்டான் மணிவண்ணன்.

''ஆமாம். கொஞ்சம் கொஞ்சமாகப் பாக்கிஸ்தான் தலையெடுத்தது நம் இடத்தைப் பிடிப்பதில் அது அதிக முனைப்புக் காட்டியது. சில போட்டிகளில் நம்மை வென்றது பாக்கிஸ்தான்.

''இந்தப் பாக்கிஸ்தான் என்ன தாத்தா எதிலுமே நமக்கு போட்டியாக வருகிறது?

''விளையாட்டு என்பதே போட்டியில் வளர்வது தானே! போட்டி இல்லா விட்டால் எப்படி?''

''இப்போதெல்லாம் நம் நாடு ஹாக்கியில் வெற்றி பெற வில்லையே தாத்தா? ஒலிம்பிக், உலகக் கோப்பை, ஆசிய சோப்பை ஒன்றுமே நம்மிடம் இல்லையே.'' என்றான் மணி வருத்தத்தோடு.

''நமக்குப் பின் ஹாக்கி விளையாடத் தொடங்கிய மேலை நாடுகள், தங்கள் திறமையை நன்கு வளர்த்துக்

கொண்டு விட்டன. ஜெர்மன், ஆலந்து, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா இவைதானே தாத்தா இன்று ஹாக்கியில் பெஸ்ட்டீமா இருக்கிறது?''

ஏன் மலேசியா, கொரியா கூடத்தான் இந்த விளையாட்டில் முன்னேறி இருக்கின்றன. ஆப்பிரிக்க நாடுகளும், அரபு நாடுகளும் கூட வளர்ந்து வருகின்றனவே.

தாத்தா...! நாம் போரிலிருந்து விளையாட்டிற்குப் போய் விட்டோம். என்று நினைவு படுத்தினாள் மலர்விழி.

''டோலோ லிங் போரில் ஈடுபட்டிருந்த வீரர்களில் பலர் ஓடுதல், தாண்டுதல், குதித்தல், எறிதல் போன்ற விளையாட்டுகளில் தேர்ந்தவர்கள்.''

''எப்படிப்பட்டவர்களெல்லாம்—நம் படையில் இருந்திருக்கிறார்கள்? என்றாள் மலர்விழி.

''இருந்தது மட்டுமல்ல, இறந்துமிருக்கிறார்கள். டோலோ லிங் போர்க் குழுவில் இருந்தவர்களிலேயே வயதில் இளையவர் லெப்டினன்ட் பர்வீன் தொமார்.

''என்ன வயது தாத்தா?''

''இருபத்து மூன்றுதான். டோலோ லிங் மலை மீட்புப் போர் தொடங்கிய ஜூன் 12ஆம் நாளுக்கு முதல் நாள் அனைத்து வீரர்களுமே தங்கள் குடும்பத்திற்குக் கடிதம் எழுதி நண்பர்களிடம் கொடுத்துத் தாங்கள் திரும்பி வரா விட்டால், கடிதத்தை அஞ்சலில் சேர்த்து விடும் படிக் கூறிச் சென்றார்களாம். படை வீரர்களின் நிலைமையைப் பாருங்கள் என்று கூறி நிறுத்தினார். மூக்குக் கண்ணாடியைக் கழற்றித் தன் வேட்டி முனையால் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''என்ன தாத்தா ஆச்சு? பதறினாள் மலர்விழி

''ஒன்றுமில்லையம்மா? கதையைக் கேளுங்கள். என்று கம்மிய குரலில் தொடர்ந்தார்.

# வெற்றியின் தொடக்கம்

ஜுன் மாதம் 12-ஆம் நாள் வானம் இருண்டு கிடந்தது. வானம் மட்டுமா? மலைப் பகுதியுந்தான் யாரும் யாரையும் அடையாளம் கண்டு கொள்ள முடியாது. எல்லா நிறங் களுமே தத்தம் அடையாளத்தை இழந்து கருப்பாகவே காணப்பட்ட நேரம். அப்போது மணி இரவு எட்டு. எட்டு மணி என்றால் இருட்டாகத் தானே இருக்கும்? என்றான் மணி.

"உண்மைதான். ஆனால், இங்கே உள்ளதைப் போல் மலை முகட்டில் மாலை 5-45 அல்லது 6-00 மணிக்கெல்லாம் இருட்டி விடாது. தாமதமாகத்தான் இருள் பரவும்.

இராஜ புத்தானா துப்பாக்கிப் படை, தாக்குதல் இலக்கிலிருந்து ஆயிரம் அடி தூரத்தில் ஆயத்தமாக நின்று கொண்டிருந்தது. போர் தொடங்கப் போகிறது. படைப் பிரிவுத் தலைவர் பேசுகிறார்.

"என்ன பேசினார்? நம் தலைவர்கள் தேர்தல் மேடை களில் பேசுகிறார்களே அப்படியா?"

"அப்படியுமல்ல, அதிகமாகவும் அல்ல. நீங்கள் விரும்பியதை நான் கொடுத்திருக்கிறேன், இனி, நான் விரும்புவதை நீங்கள் எனக்குக் கொடுக்க வேண்டும்." என்கிறார்.

அவர் எதை விரும்பினார் தாத்தா?"

"அவர் விரும்பியது வெற்றி" அவர்கள் விரும்பிக் கேட்டது கூடுதல் படை, கருவிகள் நேருக்கு நேர் மோதும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. இத்தாக்குதலுக்கு முன்னோடியாக நான்கு மணி நேரத்திற்முன்னதாகவே மலைமுகட்டில் தீபாவளி கொண்டாட பட்டிருந்தது.

"தீபாவளியா? இனிமேல்தானே வரவிருக்கிறது?

"தாத்தா சிரித்துக் கொண்டார் மணிவண்ணா! தீபாவளி என்றால் என்ன?"

"இனிப்பு...அவன் முடிக்கவில்லை. மலர் குறுக்கிட்டாள். இவனுக்குத் தின்னுவதுதான் நினைவுக்கு வரும்.

"பாருங்கள் தாத்தா! நான் சொல்வதற்குள் இவள் பேசுகிறாள். என்று கூறி மலரை முறைத்தான் மணி.

தீபாவளி என்றால் சிறுவர்களுக்குப் பட்டாசு, இனிப்பு புத்தாடை இவை எல்லாந் தானே! நமது படை டோலோலிங் உச்சியில் 120 பீரங்கிகளைக் கொண்டு பத்தாயிரம் குண்டுகளை வெடித்ததாம் இவ்வளவு குண்டுகளை வெடித்தால் தீபாவளி போல்தானே இருக்கும்?

"ஆமாம், ஆமாம் அமர்க்ளமாக இருந்திருக்கும் என்றான் மணிவண்ணன்.

"பத்தாயிரமா? என்று மலைப்பை வெளிப்படுத்தினாள் மலர்விழி!

குண்டு ஒன்றுக்கு ஐந்து கிலோ டி. என். டி. வெடி மருந்து என்றால், வெடி ஓசை எப்படி இருந்திருக்கும் என்று ஊகம் செய்து கொள்ளுங்கள்.

"யானை வெடிக்கே நாம் அலறுகிறோம். ஐந்து கிலோ வெடி மருந்தென்றால் மலையே கிடு கிடுக்குமே தாத்தா!" என்றாள் மலர்விழி.

"மலை கிடுகிடுக்கத்தான் செய்தது. இந்த ஐம்பதாயிரம் கிலோ வெடி மருந்தைக் கொண்டு புதுடில்லியை கூட முற்றிலுமாக அழித்து விடலாமாம்.

"ஐயோ...! என்றனர் இருவரும்.

"இந்தத் தாக்குதலில் மலை உச்சியில் எதிரிகள் அமைத்திருந்த 'பங்கர்' என்னும் பதுங்கு குழிகள் எல்லாம் அழிந்து விட்டதாம்."

"வேண்டும் அவர்களுக்கு" என்றான் மணி.

நம் படையின் ஆயத்தமே அருமையாக இருந்தது.

"தங்களை ஊக்கப்படுத்திக் கொள்வதற்காகத் தத்தம் அணிகளுக்கு இதிகாச மறவர்களின் பெயர்களைச் சூட்டிக் கொண்டார்கள் நம் வீரர்கள்."

"என்ன பெயர் வைத்துக் கொண்டார்கள் தாத்தா?"

"மாபாரதக் கதை வீரர்களின் பெயர்களைத்தான் சூட்டிக் கொண்டார்கள்."

"துரியோதனன், கர்ணன் என்றா?"

"துரியோதனன் வீரன்தான் என்றாலும் கதைப்படி அவன் தீயவன். அவன் பெயரை யாராவது வைத்துக் கொள்வார்களா?"

"கர்ணன் மாவீரனாயிற்றே?" என்றாள் மலர்விழி.

"மாவீரன்தான். பாண்டவர்களின் உடன் பிறந்தவன் கூட. ஆனால் அவன் சேர்ந்த அணி அவனுக்குப் பெருமை சேர்ப்பதாக இல்லையே! நல்லவரேயானாலும் நல்லவர் களோடு கூடியிருந்தால்தான் பெருமை. பொல்லாதவர் களோடு கூட்டு சேர்ந்தால் சாயக் கடையில் பெய்த மழை தான். நல்லவர்கள் நல்லவர்களாகவே கருதப்பட வேண்டு மானால் அவர்கள் பொல்லாதவர்கள் பக்கத்தில் போகவே கூடாது. நம் படை வீரர்கள் தங்கள் அணிகளுக்கு அபிமன்யு, பீமன், அர்ச்சுனன் என்ற பெயர்களைத்தான் சூட்டிக் கொண்டார்கள்.

"பிறகு என்ன செய்தார்கள்?"

"மலைச் சிகரத்தை நோக்கி ஏறத் தொடங்கினார்கள். அப்போது ரஜபுத் ரைஃபில் பிரிவு அதிகாரியான விஜயந் என்பவர் தனது வாக்மென்னில் 'பார்டர்' என்ற திரைப் படத்திலிருந்து பாடலை ஒலிபரப்பினாராம்."

"சண்டைக்குப் போகும்போது சினிமா பாட்டெல்லாம் பாடலாமா தாத்தா?"

"எல்லா சினிமாப் பாடல்களையும் பாட மாட்டார்கள். மறவர்களுக்கு உணர்வூட்டக்கூடியது என்பதால் தான் 'பார்டர்' பாட்டை ஒலிபரப்பினார். இதிலொன்றும் தவறில்லை. அந்தக் காலத்திலேயே போருக்குப் போகும் போது பாடிக் கொண்டே போகும் பழக்கம் இருந்திருக்கிறது. இருந்தும் வருகிறது. இதற்கு வழிநடைப் பாட்டு என்று பெயர்."

"வேதாரண்யத்தில் உப்பெடுக்கச் சென்ற போராட்டத்தின் போதுகூட பாடிக் கொண்டேதான் சென்றார்களாம்— எங்கள் ஆசிரியர் கூறினார்" என்றான் மணிவண்ணன்.

"அது என்ன பாட்டு தாத்தா?" என்றாள் மலர்.

அதுவா "கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" என்று தொடங்கும் நாமக்கல் கவிஞரின் பாடல் அது.

பாரதியார் பாட்டு இல்லையா என்றாள் மலர்விழி.

"நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையின் இந்தப் பாடல் அண்ணல் காந்தியடிகளின் கொள்கைக்கும், போராட்டத்திற்கும் மிகப் பொருத்தமாக இருந்ததால், வேதாரண்யம் 'உப்பு' சத்தியாகிரகப் போராட்டத் தலைவர் ராஜாஜி இப்பாடலை வழிநடைப் பாடலாகப் பாட அனுமதியளித்தார்.

"இராமலிங்கம் பிள்ளையா யார் அவர்?" என்றாள் மலர்.

"தமிழ்க் கவிஞர்—சிறந்த ஓவியர். தமிழ்நாட்டு அரசின் முதல் அரசவைக் கவிஞர். நமது தலைமைச் செயலகக்

கட்டடத்திற்கு அவர் பெயரைத்தான் சூட்டியிருக்கிறது நமது அரசு.

"என்ன தாத்தா நம்மால் மலைமேல் ஏறிப் போகவே முடியவில்லை' என்றான் மணிவண்ணன்.

"என்ன சொல்கிறாய் என்றாள் மலர்விழி."

"கதையை விட்டு அடிக்கடி மாறிவிடுகிறோமே அதைத் தான் சுட்டிக்காட்டுகிறார் தம்பி. சரி. பீரங்கிப் படை குண்டுமழை பொழிந்தது என்றேனில்லையா?"

ஆமாம். நம் வீரர்கள் ஏறும்போது பீரங்கியால் சுட்டால், குண்டுக்கு என்ன இவர் இந்திய வீரர் என்று அடையாளமா தெரியும்? அதனால் பீரங்கித் தாக்குதல் நிறுத்தப்பட்டது. தாக்குதல் அணி தன் பணியைத் தொடங்க ஆயத்தமாயிற்று. ஒரு அணி நேர்வழியில் எதிரி களை நோக்கிச் சென்றது. அடுத்த அணி ஊடுருவல்காரர் களின் முற்றுகையைத் தகர்த்தெறிய சிகரத்தைச் சுற்றிக் கொண்டு சென்றது. மூன்றாவது அணிதான் கிரெனடியர் அணி.

"அது என்ன செய்தது தாத்தா?"

அதுவா, ஊடுருவல்காரர்களுக்கு உதவுவதற்காக வெளியிலிருந்து புதிய ஆட்கள், உதவிகள் (Supplier) செல் லாமல் தடுக்கும் வேலியாக நின்று கொண்டது.

"எலி, பொறிக்குள் அகப்பட்டதைப் போல் ஆகிவிட் டார்கள் ஊடுருவல்காரர்கள், இல்லையா தாத்தா? என் றாள் மலர்.

சரியாகக் சொன்னாயம்மா? மேலே இருப்பவர்களும் தப்ப முடியாது. கீழே இருந்து உதவியும் போக முடியாது. இடுக்கிப்பிடி என்பார்களே, அந்தப் பிடிக்குள் எதிரிகளைச் சிக்க வைத்துவிட்டது நமது ராணுவத்தின் வியூகம்.

"பின்னர் என்ன நடந்தது தாத்தா?"

"தாக்குதல்தான்! நேருக்கு நேரான சண்டை! மேஜர் குப்தா என்பவர் தலைமையில் டோலோலிங் உச்சிக்கு அருகில் நின்று தாக்கிற்று நம் படை. இத்தாக்குதலின் போது மேஜர் குப்தாவும், அவருடன் ஆறு வீரர்களும் வீரச் சாவை அணைத்துக் கொண்டனர்."

அடடா! என்றான் மணி.

அச்சச்சோ என்றாள் மலர்.

இறந்தவர்களில், "டோலோ லிங்கைக் கைப்பற்று வோம் என்றும் அங்கே சந்திக்கலாமென்றும் லெப்டினென்ட் இரவீந்திர நாத்திடம் நம்பிக்கையோடு கூறிப் புறப்பட்ட பண்வர் சிங்கும் ஒருவர். இப்படித்தான் போர்க்களத்தில் சில வீரர்களின் வினை விளைவு இருக்கும். வீரம் விளைத்த வர்கள் இருக்க மாட்டார்கள்" ஆடுவோமே பள்ளுபாடு வோமே.

ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று... என்று நம்பிக்கையோடு பாடிய பாரதி, விடுதலை பெற்று 1947. ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 15-ஆம் நாள் நாமெல்லாம் ஆடிப் பாடியபோது இல்லை. ஆனால் பாரதியின் நம்பிக்கை பழுது படாமல் வெற்றி பெற்றிருந்தது என்றார் தாத்தா.

தீரம், திட்டமிடல், போர் என்னும் திண்மை, அறிவு ஆற்றலால் டோலோ லிங்கை நம் படைகள் கைப்பற்றின. இச்சிகரத்தைக் கைப்பற்றிய மூன்றாம் நாளே, அதை யொட்டியிருந்த அனைத்து முனைகளும் நம் படையின் கைவசம் வந்து விட்டன.

இப்போரில் நம் படைகளைப் போல் பல மடங்கு எண் ணிக்கையுள்ள ஊடுருவல்காரர்கள் இறந்தார்கள். ஒரிசா பேரழிவு. சூறாவளியால் உயிரிழந்து எங்கும் பரவிக்கிடந்த மனிதர், கால் நடைகளைப் போல், டோலோலிங் சிகரத்தில்

எதிரிகளின் உடல்கள் சிதறிக் கிடந்தன. தோராயமாக ஐம்பது உடல்களாவது இருக்கும் என்பது ஒரு கணக்கு.

பகைவர்களை அழித்த பின் அவர்களிருந்த இடங்களை பார்வையிட்டபோது உடல்களைப் போன்றே உணவுப் பொருள்களான நெய் டின்கள்; அன்னாசிப் பழங்கள், இராணுவப் பண்ணையிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த வெண்ணெய், தேன் ஆகியவையும் சிதறிக்கிடந்தனவாம். நம் ராஜபுத்தானா படைப் பிரிவினர் சிதைந்து கிடந்த நெய்யைக் கொண்டு தங்கள் குளிருக்குச் சூடேற்றிக் கொண்டார்களாம்.

அதன் பின் என்ன நடந்தது தாத்தா?

நதிகள் கடலில் கலக்கின்றன என்பது தெரியுமில்லையா?

ஆமாம். எல்லா நதிகளுமே வெள்ளம் பெருக்கெடுத்தால் கடலில்தான் கலக்கின்றன.

எந்த நதியின் வெள்ளமும் நிரந்தர நீரோட்டமில்லாததாக இருந்தால் நேரே ஓடி கடலில் கலந்து விடுவதில்லை.

ஏன்? எப்படி?

நதிகள் கடலில் கலக்கும் இடத்தை முகத்துவாரம் என்பார்கள். அந்த முகத்துவாரம் 'ஜீவ நதிகள்' என்னும் எப்போதும் நீர் ஓடிக் கொண்டிருக்கும் நதிகளைத் தவிர்த்து மற்றவை ஆற்று நீரோட்டம் நின்றதும் அலைகள் மோதுவதால்,

மணல் மூடி அடைபட்டுவிடும். அதனால் மழைக் காலத்தில் ஆறுகளில் வெள்ளம் பெருகி வரும்போது முகத்துவாரம் மேடிட்டிருப்பதால் வெள்ளம் தேங்கி கரையோரங்களில் பரவும். இதனால் பாதிப்புக்கு உள்ளாகும் குடிசை மக்கள் முகத்துவாரத்தை வெட்டி வழி ஏற்படுத்திக்

கொடுப்பார்கள். சில அடி அகலம் வழி செய்தாலே அடுத்த சில மணி நேரத்தில் தேங்கிய வெள்ள நீர் வடிந்தோடி கடலில் கலந்துவிடும். ஒரு அடி அகல வழியைப் பல நூறு அடி அகலப் படுத்திக் கொண்டுவிடும் வெள்ளம். அப்படித் தான் போரில் வெற்றி குவிவதும். ஒரு முக்கிய நிலையைக் கைப்பற்றி விட்டால் போதும் வென்றவர்களுக்கு ஊக்கம் ஊற்றெடுத்துவிடும். தோல்வியடைந்தவர்களின் மனவலி குன்றிவிடும். வெற்றி அவர்களுடைய தோளிலிருந்து 'தொப்'பென்று குதித்து எதிர்த்தரப்பை நோக்கி ஓடிவந்து விடும்.

ஆமாம் தாத்தா நான் கூட முதலில் கணக்கில் முதல் மதிப்பெண் பெற்றேன். ஆசிரியர்கள் எல்லாம் பாராட்டி னார்கள். ஒன்றில் முதலாவதகே வந்ததற்கே இப்படிப் பாராட்டுகிறார்களே எல்லாப் பாடத்திலும் முதலாவதாக வந்தால் எவ்வளவு பாராட்டு கிடைக்கும் என்று எண்ணி அதிக நேரம் அக்கறையோடு படித்தேன். இப்போது வகுப் பில் நான்தான் முதல் மாணவி என்றாள் மலர்விழி பெருமை யாக.

என்ன மணி! உன் கதை எப்படி? என்று கேட்டார் தாத்தா.

இப்பொழுதுதான் முற்றுகையிட்டிருக்கிறேன் தாத்தா! விரைவில் வெற்றி பெறுவேன் என்றான் மணி.

தேர்தலில் போட்டியிடுபவர்களின் நம்பிக்கையைப் போலிருக்கக்கூடாது.

அது என்ன தாத்தா போட்டியிடுபவர்களின் நம் பிக்கை?

வேறொன்றுமில்லை. காப்புத்தொகையைக் கூடக் கைப்பற்ற முடியாதவர்கூட. வாக்குப்பெட்டியின் முத்தி ரையை உடைக்கும் வரை தான் வெற்றி பெறப்போவ தாகப் பேசிக் கொண்டிருப்பார். அதைச் சொன்னேன்.

தாத்தா! என்னை அப்படி நினைக்காதீர்கள். முதல் மாணவனாக நானும் வந்து காட்டுகிறேன் என்றான்.

சரி. இப்போ நீங்கள் நடந்து காட்டுங்கள் என்று கூறி சிரித்தார் தாத்தா.

சரி தாத்தா என்று கூறிப் புறப்பட்டார்கள் பேரப் பிள்ளைகள்.

## புலி மலை...!

மறுநாள், தாத்தா தான் ஊருக்குப் புறப்படும் எண்ணத்தைத் தன் மகள் பூங்காவனத்திடம் வெளிப்படுத்தினார். இதை முதன்முதலாகக் கேட்ட முல்லை, ஓடி வந்து தாத்தா கையைப் பற்றிக் கொண்டு ஊருக்குப் போகக் கூடாது. இங்கேயேதான் இருக்க வேண்டும் என்று கெஞ்சினாள். ஆமாம் அப்பா! என்ன அவசரம்? இன்னும் கொஞ்சம் நாள் தங்கிவிட்டுத்தான் போங்களேன். வந்து அப்படி என்ன நாட்களாகி விட்டன? மாதா மாதம் வந்து போகும் நீங்கள் கடந்த இரண்டு மூன்று மாதங்களாக வரவே இல்லையே என்று தன் மனக்குறையை நேரம் கிடைத்ததே என்று வெளியிட்டுவிட்டாள்.

முல்லை மற்றவர்களுக்கெல்லாம் தாத்தா ஊருக்குப் போகப் போவதாகக் கூறிய செய்தியைப் பரப்பிவிட்டாள். அடுத்த நொடி முத்து வந்துவிட்டான். அவனைத் தொடர்ந்து மணிவண்ணனும் கடைசியாக மலர்விழியும் தாத்தா அம்மாவிடம் பேசிக் கொண்டிருந்த அடுப்பறைக்கே வந்து விட்டார்கள். இந்த நால்வர் அணி தாத்தா ஊருக்குப் போகக்கூடாதென்ற ஓரே கோரிக்கையை வைத்துப் போராட்டக்காரர்கள் முற்றுகையிடுவதைப் போல் சூழ்ந்து நின்றார்கள்.

நான் வந்து மூன்று நாட்கள் முடிந்துவிட்டதே! உங்களுக்கும் விடுப்பு முடியப் போகிறது. அடுத்த விடுமுறையின் போது வந்து பதினைந்து நாட்கள் தங்கிவிடுகிறேனே! என்றார் தாத்தா.

அதெல்லாம் முடியாது, கார்கில் கதையைக்கூட முழுதாக முடிக்கவில்லை என்றான் மணிவண்ணன்.

அதைத்தான் நேற்றே முடித்துவிட்டோமே!

டோலோ லிங்கை மட்டுந்தானே பிடித்திருக்கின்றோம் முக்கியமான புலி மலையிடங்கூடப் போகவில்லையே என்றாள் மலர்விழி.

அதுதான் கூறினேனே டோலோ லிங்கைப் பிடித்தால். மற்றதை எல்லாம் விரைவாகப் பிடித்துவிடலாமென்று, எல்லா இடத்தையும் நம் படை பிடித்துவிட்டதே! அங்குமிங்குமாக மறைந்திருந்த சில தீவிரவாதிகளையும் பாக்கிஸ்தான் திரும்பி வந்துவிடும்படி கூறிவிட்டதே!...

கதை கிடக்கட்டும் தாத்தா, உங்களை இன்று ஊருக்குப் போக விடமாட்டோம் என்றாள் மலர்விழி.

குளித்துவிட்டுத் தலையைத் துவட்டியபடி உள்ளே வந்த மாணிக்க வாசகம், என்ன தாத்தாவிடம் வம்பு செய்கிறீர்கள்? போங்க, போய் காலையில் செய்யவேண்டியதைச் செய்யுங்கள் என்று அதட்டினார்.

நாங்கள் வம்பு ஏதும் செய்யவில்லை. தாத்தா ஊருக்குப் போகப் போகிறாராம். நீங்களே சொல்லுங்க அப்பா! தாத்தா போகக் கூடாது என்று முறையீடு செய்தான் மணிவண்ணன்.

சொல்லுங்கப்பா, சொல்லுங்கப்பா என்று தொடர் முழக்கமிட்டனர் முல்லையும், முத்துவும்.

என்ன மாமா இவர்கள் கூறுவது உண்மைதானா?

ஆமாம் மாப்பிள்ளை சும்மா பார்த்துவிட்டுப் போகலா மென்றுதான் வந்தேன். வந்து மூன்றுநாட்களாகி விட்டதே, அதனால்தான் புறப்படலாமென்றிருக்கின்றேன் என்றார் தாத்தா.

மைத்துனர் என்ன உங்களைப் பிணையிலா அனுப்பி யிருக்கார்? தங்கச்சிதான் காலக் கெடு வைத்து அனுப்பி யிருக்கா? பேரன் பேத்திகள்தான் மறியல் செய்கிறார்களே, அவங்க ஆசைப்பட்டபடி தங்கிச் செல்லுங்களேன் என்றார் மாணிக்க வாசகம்.

ஆமாம் அப்பா! தங்குங்கள் போகலாம். ஏங்க... நீங்கள் இன்று தொலைபேசியில் அண்ணாவுக்குக் கூறி விடுங்கள். அப்பா இன்று அங்கு வரமாட்டாரென்று தன் கணவருக்கு ஆணை பிறப்பித்தாள் அன்னம்.

சரியம்மா! இன்று போகவில்லை. ஆனால் புதன் அறிவன் காலையில் புறப்பட்டுவிடுவேன். அப்போது மீண்டும் தடை சொல்லக் கூடாது என்று கூறிவிட்டு வெளியே வந்தார் தாத்தா.

முல்லையும் முத்துவும் ஏ...ஏ...என்று கூச்சலிட்டபடி தோட்டத்திற்கு ஓடினார்கள் பல் துலக்க.

அப்பா உங்களுக்கு வெந்நீர் எடுத்து வைக்கின்றேன் குளித்து விடுகிறீர்களா என்று கேட்டாள் உரத்த குரலில்.

சரியம்மா என்றார் தோட்டத்துப் பக்கமாக நடந்தபடி ஏதோ நினைத்தவராக திரும்ப உள்ளே வந்தார் தலையை வாரிக்கொண்டு தன் அறையை விட்டு வெளியே வந்த மாப்பிள்ளையைப் பார்த்து மறக்காம சொல்லி விடுங்கள். இன்று வருவதாகக் கூறி வந்தேன். போகவில்லை என்றால் என்னவோ ஏதோ என்று தவிப்பார்கள்.

நீங்கள் ஒன்றும் கவலைப்படாதீர்கள் மாமா! நான் மறந்துவிட மாட்டேன். பேசிவிட்டு இரவு வந்ததும்

உங்களிடம் கூறுகிறேன். என்று உறுதி கூறினார் மாணிக்க வாசகம்.

நல்லது என்று கூறிவிட்டுக் குளிக்கப் போனார் தாத்தா. மலர்விழியும். மணிவண்ணனும் விக்கெட்டை வீழ்த்தியவர் களைப் போல் இரண்டு உள்ளங்கைகளையும் மோதி மகிழ்ச்சி கொண்டாடினார்கள். அக்கா! இன்று தாத்தாவை விடக்கூடாது. கார்கில் கதையை காலையிலேயே தொடங்கச் சொல்வோம் என்றான் மணி. சரி என்று ஒப்புதல் தந்தாள் மலர்விழி.

காலைச் சிற்றுண்டி முடிந்தது. தாத்தா சாய்வு நாற்காலியில் சென்று உட்கார்ந்தார். சற்று நேரத்திற் கெல்லாம் நால்வர் அணி தாத்தா முன் வந்து உட்கார்ந்து விட்டது. தன்னை செய்தித்தாள் படிக்கக்கூட விட மாட்டார்கள் போலிருக்கிறதே என்று கருதிய தாத்தா மணிவண்ணனை அழைத்தார். இங்கு தானே இருக்கின் றேன் என்ன வேண்டும் தாத்தா? எங்கே உன் நண்பன் அகமது? அவனையும் அழைத்து வர வேண்டியது தானே? போய் கூட்டி வா என்று அனுப்பிவைத்தார். அவன் வெளியே சென்றதைப் பார்த்ததும் முல்லையும் முத்துவும் அப்புறம் வரலாம் என்று விளையாட வெளியே ஓடினார் கள். கிடைத்த இடைவெளியில் செய்தித் தாளைப் புரட்டினார் தாத்தா சிறிது நேரத்தில் அகமதுவுடன் மணிவண்ணன் வந்து விட்டான். மறு நொடி பொடிசுகளும் வந்து விட்டார்கள். செய்தித் தாளை மடித்து வைத்து விட்டு கதை சொல்ல நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"தாத்தா சிங்கம்—முயல் கதை சொல்லுங்கள் என்றாள் முல்லை. எனக்கு சிங்கமும் நான்கு மாடுகளும் கதை சொல்லுங்கள் என்றான் முத்து.

சும்மா இருங்க! உங்கக் கதையை எல்லாம் இப்போது சொல்ல முடியாது. கார்கில் கதையைத்தான் கூறுவார்கள்.

நீங்களும் கேளுங்க—இதில்தான் சண்டையெல்லாம் வரும் - கேட்க நல்லா இருக்கும். இல்லை என்றால் எழுந்து ஓடுங்க நாங்க கார்கில் கதை கேட்கின்றோம் என்றான் மணி. தாத்தா சொல்லும் கதையையே நாங்களும் கேட்கிறோம் என்று கூறி அமைதியானார்கள் சிறுவர் இருவரும்.

கதையைத் தொடங்கும்படி அவசரப்படுத்தினான் மணிவண்ணன்.

என்ன சொல்வது என்று இழுத்தார் தாத்தா. டோலோ லிங்கைப் பிடித்தாயிற்று. மற்றதைப் பிடித்த கதையைக் கூறுங்க தாத்தா!

புலி மலை முக்கியமானது என்றீர்களே அதைப் பிடித்த கதையைக் கூறுங்கள் தாத்தா என்றாள் மலர்விழி.

ஊடுருவல்காரர்கள் பல சிகரங்களைப் பிடித்து வைத்திருந்தார்கள் இராணுவ முதன்மையான இடங்களுள் ஒன்றுதான் புலி மலை. ஆனால், மற்ற சிகரங்களை அவர்கள் பதுங்குமிடமாகப் பயன்படுத்தி வந்தார்கள். ஓரிடத்தில் விரட்டினால், மற்றொன்றில் போய்ப் பதுங்கிக் கொள்வார்கள். இப்படி நம் படைகளுக்குப் பிடிபடாமல் ஆட்டம் காட்டிக் கொண்டிருந்தார்கள். ஒரு சதுர கி. மீ பரப்பில் சுமார் இருபது சிகரங்கள் இருப்பதால் அவர்களுக்கு வசதியாக இருந்தது. டோலோ லிங்கைப் பிடித்த பின் 'மார்போல' என்ற முனையைத் தாக்கிக் கைப்பற்றினார்கள்.

எனக்கொரு ஐயம் என்றாள் மலர்விழி.

என்னம்மா? சொல். என்றார் தாத்தா.

பாக்கிஸ்தானுக்கும், ஊடுருவல்காரர்களுக்கும் உதவுவதைப் போல் நம் படைக்கு யாரும் உதவவில்லையா என்றாள் மலர்.

நம் படைக்கு மக்கள் உதவத்தான் செய்கிறார்கள். தீவிரவாதிகளைப் போல் துப்பாக்கி ஏந்தியல்ல. அதற்குத்

தேவையுமில்லை. மனத்தளவு ஆதரவே போதுமானது தான். எதிரிகளுக்குத் துணை போகாதிருப்பதே பேராதரவு. கார்கில் பகுதியில் வாழும் ஷியா முசுலிம்களும் புத்தமதத்தினரும் நம் படைக்கு ஆதரவாக உள்ளனர்.

ஷியா முசுலிம் என்றால் யார் தாத்தா?

அவர்களா...? அவர்கள் முசுலிம்களில் ஒரு பிரிவினர், இந்துக்களில் சைவர் வைணவர் என்றில்லையா அதைப் போல். மதம் ஒன்று. இனம் வேறு. பாக்கிஸ்தானில் ஷியா முசுலிம்களை சன்னி பிரிவினர் கொல்கின்றார்கள். இந்தி மொழி பேசுபவர்களையும் முகர்ஜிகளையும் பஞ்சாபியர் மிரட்டி வைக்கிறார்கள்.

''பஞ்சாபியரா?'' நம்ம நாட்டுக்காரங்க எப்படி அங்கே சென்று இப்படிச் செய்கிறார்கள்? என்றான் மணி.

பாக்கிஸ்தானிலும் பஞ்சாப் உண்டு. அவர்கள் தாம் அப்படிச் செய்பவர்கள். அது மட்டுமல்ல, பலூச்சிகள், பக்துன்கள் அடிக்கடி நடந்து கொண்டுதானிருக்கிறது. பாக்கிஸ்தான் வன்முறையாளர்களின் வளர்ப்பிடமாகி விட்டது.

மனித அழிவில்தான் சில ஆட்சித் தலைவர்களின் நிகழ் காலமும் எதிர் காலமும் அடங்கியிருக்கிறது. பாக்கிஸ்தான் இந்தியாவில் காலிஸ்தான் பிரிவினை வாதிகளை ஊக்கி, ஊட்டி வளர்த்து உசுப்பி விட்டதால் அங்கே ஆயிரம் பேர்களுக்கு மேல் உயிரிழந்திருக்கிறார்கள். காஷ்மீர் போர்களில், ஊடுருவலில், கலவரத்தில் மட்டில் பதினைந்தாயிரம் பேர்களுக்கு மேல் பலியாகி இருக்கிறார்கள்.

பதினைந்தாயிரமா...? அதிர்ச்சியோடு கேட்டாள் மலர்விழி.

ஆமாம். இங்கே ஒரு உயிர் போனாலே நாம் எவ்வளவு கவலைப்படுகிறோம். போரினாலும், கலவரங்களாலும்

வாழ்க்கையின் நலன்களைத் துய்க்காமலேயே எவ்வளவு இளம் உயிர்கள் காற்றோடு கலந்துவிட்டிருக்கின்றன!

சண்டையே மோசம் தாத்தா!

செத்து விடுவாங்களா? அப்புறம் வரவே மாட்டாங் களா? என்றனர் முல்லையும் முத்துவும் அழாத குறையாக.

பின்னே என்னவாம்? என்றான் மணிவண்ணன். அப்படி யென்றால் இந்தக் கதை எங்களுக்கு வேண்டாம். வா முல்லை. நாம் போய் விளையாடலாம். இது நல்ல கதையே இல்லை என்று அழைத்தான் முத்து. ஆமாம். ஆமாம். இது வேண்டாம் என்று எழுந்தாள் முல்லை. இருவரும் சேர்ந்து வெளியே ஓடினார்கள்.

தாத்தா தொடங்கினார். திராஸ் சிகரங்களை மீட்டால்தான் லே I ஏ தேசிய நெடுஞ்சாலையை எதிரிகள் கைக்குப் போகாமல் காக்க முடியும். இந்தியப் படை மீட்ட டோலோ லிங்கிலிருந்து புலி மலை நான்கு கி. மீட்டர் தொலைவில் இருக்கிறது. இது ஊடுருவல்காரர்களின் பிடி யில் இருந்தது. இதை மீட்பது தான் தற்போது இந்திய ராணுவத்தின் முக்கிய இலக்கு. இதற்கென உத்தியை வகுத்தது நமது இராணுவம். டோலோ லிங்கைக் கைப் பற்றிய பட்டறிவை இதற்குப் பயன்படுத்திக் கொண்டது.

தரை வழித் தாக்குதலைத் தொடங்குவதற்கு முன் ஊடுருவி இருப்பவர்களின் எண்ணிக்கையைக் குண்டு வீசி குறைக்க வேண்டும் என்பதுதான் அந்த உத்தி.

எதிரி எதிர்பார்க்கும் திசையில் செல்லக் கூடாது. புது வழியில் சென்று தாக்க வேண்டும் என்பது பட்டறிவு. பதினெட்டு கிரனேடியரின் கட்டளை. அலுவலர் கர்னல் குஷார் தாகூர், புலிமலை தாக்குதல் எளிதானதல்ல என் பதை நன்கு உணர்ந்திருந்தார். முன்னர் சென்ற சீக், படைப் பிரிவினர் எதிரிகளிடம் செம்மையாக வாங்கிக் கட்டிக்

கொண்ட செய்தி அவர் அறியாததல்ல. அதனால் திட்ட மிடுவதில் அவர் தவறு செய்யக் கூடாதென்பதில் உன்னிப் பாக இருந்தார்.

ஹெலிகாப்டர்களிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்படங் களையும், இராணுவ வரைபடங்களையும் நுட்பமாக ஆய்வு செய்தார். எப்படி செல்ல வேண்டும், எங்கிருந்து தாக்கு தலைத் தொடங்க வேண்டும் என்பதையெல்லாம் முடிவு செய்து கொண்டார். எதிரிகள் எதிர் பார்த்திருக்கும் வழியை ஒதுக்கி விட்டு, நினைத்துப் பார்க்க முடியாத, இந்த திசையிலிருந்து வரவே முடியாது என எண்ணும் பக்கத்தி லிருந்து மலை மேல் ஏற வேண்டும் எனத் தீர்மானித்துக் கொண்டார். இந்த வகையில் நுழைய உகந்தது கிழக்குச் சரிவுதான். எதிரிகளுக்கு இனி சரிவு தானே. இந்த வழியில் சிகரத்தை எட்டுவது எளிதல்ல. ஆனால் இடர்களைச் சந் திக்க நேர்ந்தாலும், உயிரிழப்பைக் குறைக்கலாம் என்பதும் மற்றொரு காரணம். பாதை செங்குத்தானது. ஆனால் இலக்கை அடைய அதுவே தோதானது.

நாள் காட்டியின் ஏடு புரண்டது. ஜூலை முதல் தேதி முறுவலித்தது. பதினெட்டு கிரனேடியர் விண்களை ஏவி (Rocket Laiwnchers) களையும், இயந்திரத்துப்பாக்கி, சக்தி வாய்ந்த குண்டுகள் ஆகியவற்றை மேலே கொண்டு வந்தார்கள். தாக்குதலுக்காகக் குறிக்கப்பட்ட ஜூலை மூன்றாம் நாள், தனக்குத் தெரியாமல் உலகத்தில் எதுவுமே நடக்க முடியாதென்று வெப்பச் சூரியன், தன்னிடம் பச்சைக் கொடி இல்லாததால் 'சிவப்புக் கொடியையே காட்டி தொடங்குங்கள் என்று கூறாமல் கூறி மறைத்தான். திருட்டுத்தனமாக நுழைந்தவர்களைத் தாக்க இருட்டுதான் ஏற்றது. பீரங்கிகள் பேசத் தொடங்கின.

"இங்கே எத்தனை பீரங்கிகள் தாத்தா?"

கணக்குக் கேட்டான் மணிவண்ணன்.

பத்தோ இருபதோ அல்ல. நூற்று முப்பத்தாறு பீரங்கிகள். இடி முழக்கம் போல் எதிரிகளின் இதயங்களையே அதிர வைத்தன. எவ்வளவு நெஞ்சுரம் பெற்றவரையும் நிலை குலைய வைக்கும் அதிரடித் தாக்குதல் அது. இனி இங்கிருந்தால் பிழைக்க முடியாதென இறங்கி ஓடவைக்கும் முயற்சி தான் இது. அவர்களை ஓட விட்டு வேடிக்கைப் பார்ப்பதா நோக்கம்? இல்லை. தாக்கி அழிக்க வேண்டும். இந்தியப் படையின் ஆற்றலும் ஆண்மையும் எப்படிப் பட்டதென உணரச் செய்ய வேண்டுமல்லவா? மூன்று (கம்பெனிகள்) பட்டாளம் மலை மேல் ஏறத் தொடங்கின. அனைத்தும் ஒரே பாதையில் அல்ல. இரண்டு அணிகள் கிழக்குப் பகுதி வழியாகவும், ஒரு அணி தென் கிழக்கு வழியாகவும் புறப்பட்டன. எதிரிகளின் பதுங்கு குழிகள் 'டங்' முனையில் ஏவுகணைகள் மூலம் தாக்கித் தகர்க்கப் பட்டன. எதிரிகளும் லேசுப்பட்டவர்களாக இல்லை பிழைக்க முடியாதென்றால் கடுமையாக எதிர்த்துத் தானே ஆக வேண்டும் அதைத்தான் செய்தார்கள் அவர்கள்.

இங்குள்ள ஊடுருவல்காரர்களுக்கு மேற்குப் பகுதியில் காலர், இந்தியா கேட், ஹெல்மெட் முகடுகள் தாம் உதவி வரும் பாதை, இவற்றை இந்தியப் படைகள் கைப்பற்றி விட்டால் மேலே நிலை கொண்டுள்ள எதிரிகளின் பாடு திண்டாட்டந்தான். அதனால் இம் மூன்று நிலைகளையும் தங்கள் கட்டுப்பாட்டிலேயே வைத்துக் கொள்ள அவர்கள் கடுமையாகப் போராடினார்கள். ஹெல்மெட் முகடுக்காக நடந்த போரில் நம் தரப்பிலேயே 15 வீரர்களை இழக்க வேண்டியிருந்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள் போர் எப்படி இருந்திருக்குமென்று.

புலிமலைப் போர் வியூகம் நல்ல பலனைக் கொடுத்தது. முன்னேற்பாடான நடவடிக்கைகளால் வெற்றி நம் திசையில் திரும்பியது. இரவு நேரத் தாக்குதலில் பகைவர்கள் பலமிழந்து போனார்கள். மிகச் சரியாக இலக்கைத் தாக்கக்

கூடிய லேசர் குண்டுகளை வீசித்தான், ஊடுருவல்காரர் களுக்கு உதவிகள் வராமல் தடுக்க முடிந்தது.

''லேசர் குண்டுகளா?'' என்றான் மணிவண்ணன்.

இவையெல்லாம் அறிவியல் வளர்ச்சியின் சில படிகள் தான். பணமிருந்தால் எவ்வளவோ சாதிக்கலாம். நம்மிடம் மனித வளமிருக்கிறது அறிவு வளமிருக்கிறது.

''இவைகளை வைத்துப் பணத்தைச் சம்பாதிக்க வேண் டியதுதானே? என்றாள் மலர்விழி.

நீரும் நிலமும் இருந்துவிட்டால் மட்டில் நெல் விளைந்து விடாது. நாற்று விட விதை நெல்லும் வேண்டும். நான் சொன்னேனே லேசர் குண்டு அதன் விலை என்னவென்று தெரியுமா?

'எங்களுக்கு எப்படித்தெரியும்?' உங்களுக்குத் தெரியுமே சொல்லுங்க தாத்தா. என்றான் மணிவண்ணன்.

ஒரு கோடி ரூபாய்!

ஒரு குண்டின் விலையா இது? என்றாள் மலர்.

ஆமாம், ஆமாம், ஆமாம் போதுமா? என்றார் தாத்தா.

''புலிமலையைப் பிடித்து விட்டார்களா தாத்தா?''

என்ன மணி. மயக்கத்திலிருக்கின்றாயா? நமது படை பதினோரு மணிநேரம் கடுமையாகப் போராடித்தான் கைப் பற்றினார்கள் பதினெட்டாவது கிரனெடியர் கூர்க்காப் படையின் கர்னல் லலித் ராய் தலைமையில் காயம் பட்டுங் கூட மருத்துவத்திற்குக் கூடச் செல்லாமல், களத்தில் நின்று போரை முன்னின்று நடத்தினார். பதினாறாயிரம் அடிக்கு மேல் அமைந்திருக்கும் காலோபர் பகுதியில் நாற்பத்து மூன்று அரண்களை நமது பீரங்கிகளும், விமானங்களும் தாக்கித் தவிடு பொடியாக்கின.

புலிமலை வெற்றி நம் படைக்கு மேலும் மனத் தெம்பைக் கொடுத்தது. இந்திய வீரர்களின் போர்த்திறம் உலகின் நோக்கில் உயர்ந்து நின்றது. இந்தச் சிகரப் போரில் கிரனேடியர் அணி காட்டிய துணிவையும், திறமை யையும் மெச்சி நமது இராணுவத் தலைமை சிறப்பு விருதை அறிவித்துப் பாராட்டைத் தெரிவித்தது.

புலிமலை வெற்றியைத் தொடர்ந்து 4590 சிகரம் 4700 சிகரம்; நாய் சிகரம்; 4812 சிகரம்; 5287 சிகரம்; 4927 சிகரம் என்று அடுக்கடுக்காக எதிரிகளிடமிருந்து சிகரங்களை மீட்டனர் நம் வீரர்கள்.

தாத்தா 4590, 4812 என்றெல்லாம் காவலர்களைப் போல் எண்ணால் குறிப்பிடுகிறீர்களே, அவற்றுக்குப் பெயரே கிடையாதா?

அவ்வளவு சிகரங்களுக்கும் பெயர் வைத்து மாளாதென்றோ என்னவோ, சிகரங்களின் உயர அளவையே குறியீடாக வைத்துக் கொண்டார்கள்.

இந்த எண்கள் குறிப்பது அடிக்கணக்கா, மீட்டர் அளவா? கிலோ மீட்டரா?

அடியும் அல்ல, கிலோ மீட்டரும் அல்ல. மீட்டர் தான். இவ்வளவு கிலோ மீட்டர் உயரத்தில் மலையும் இல்லை, இருந்தாலும் இப்படி மனிதர் சாதாரணமாக போய்விடவும் முடியாது. அது கீ.மீ. ராக இருந்தால் எவ்வளவு தூரம் தெரியுமா? இங்கிருந்து டில்லிக்கே போய் திரும்பி வந்து விடலாம். அவ்வளவு உயரத்துக்கு விமானங்கள் பறக்க முடியாது. விண் கலங்கள் தான் செல்ல முடியும்.

அவ்வளவு உயரத்தில் காற்றே இருக்காதல்லவா? என்றாள் மலர் விழி.

ஆமாம். எனக்கும் தெரியும் ஏதோ நினைவில் கேட்டு விட்டேன் என்று தன் அறியாமைக்குத் திரை விரித்தான் மணிவண்ணன்.

ஊடுருவல்காரர்கள் தாங்கள் கைப் பற்றியிருந்த சிகரங்களிலிருந்து, பாக் பிரதமர் ஷரீப் வேண்டுகோளுக் கிணங்கி வெளியேறி விட்டதாக அப்பா கூறினாரே!''

தாத்தா கூடத்தான் கூறினார்கள் என்றாள் மலர்விழி.

சரியான இடத்தில் உட்கார்ந்து விட்டோம் யாரும் நம்மை அசைக்கவோ, அகற்றவோ முடியாதென்ற எண்ணத்தில் இறுமாந்திருந்த ஊடுருவல் காரர்களின் செருக்கு, டோலோலிங், திராஸ், புலிமலை எல்லாம் நம் படையின் கைக்கு வந்து விட்டதால் தகர்ந்து போயிற்று.

இனி நிலைக்கவும் முடியாது, பிழைக்கவும் முடியாது என்ற நிலையில் தான் வெளியேறினார்களேயன்றி, நீதிக்குக் கட்டுப் பட்டோ, வேண்டுகோளுக்கு இணங்கியோ வெளியேறினார் என்று நம்ப முடியாது.

''ஏன் அப்படி?''

இந்தக் கேள்விக்குப் பதில் கூற வேண்டுமானால் மீண்டும் நாம் தொடங்கிய இடத்திற்கே செல்ல வேண்டும். அவ்வளவு ஆழமான கேள்வி இது.

சுருக்கமாகக் கூறுங்களேன் தாத்தா.

சொல்கிறேன். சொல்லாவிட்டால் கதை முடியாதே!

## நண்பன்...?

1947-ஆம் ஆண்டு தளபதி அக்பர் தலைமையில் பாக்கிஸ்தான் நமது காஷ்மீருக்குள் நுழைந்ததல்லவா?

ஆமாம். நேரு தான் நம் படைகளை முன்னேற அனுமதிக்காமல், ஐ.நா. அவையிடம் புகார் கூறினர் என்றீர்கள். ஐ.நா. சபை தேர்தல் நடத்தி மக்கள் கருத்

தறிய வேண்டுமெனத் தீர்மானம் கூட கேட்டதாகக் கூறினீர்கள்.

அதைத்தான் பாக்கிஸ்தானும் அமெரிக்காவும் இருக்கமாகப் பிடித்துக் கொண்டன. பாக்கிஸ்தான் இந்தியா மீது படையெடுத்த போதெல்லாம், பாக்கிஸ்தானைத் தான் ஆதரித்தது, ஆயுதமும் கொடுத்தது.

அமெரிக்கா ஏன் நம்மை ஆதரிக்கவில்லை? நமக்கும் அதற்கும் சண்டை ஏதுமில்லையே?

உண்மைதான். இந்தியா, யாரோடும் எப்போதும் மோதலை விரும்பியதில்லை. சண்டைக்கு நின்றதில்லை. அப்படி இருக்க, இந்தியா ஏன் எங்கோ உள்ள அமெரிக்காவிடம் சண்டையிடப் போகிறோம்.

பின்னர் எதற்காக அமெரிக்கா நம்மை எதிர்க்கும் பாக்கிஸ்தானையே ஆதரிக்க வேண்டும்?

அமெரிக்கா ஒரு இராணுவக் கூட்டமைப்பை ஏற்படுத்தியிருந்தது. அதில் இந்தியா சேரவில்லை. மாறாத கூட்டு சேரா நாடுகள் என்ற அமைப்பில் இந்தியா இடம் பெற்றிருந்தது. பாக்கிஸ்தான் அமெரிக்கா பக்கம் காய்ந்து விட்டது. அதனால் ஆதரிக்க வேண்டிய கட்டாய நிலை அமெரிக்காவுக்கு ஏற்பட்டது.

ஓகோ...இங்கே கட்சிகள் தேர்தல் கூட்டணி ஏற்படுத்திக் கொண்டிருப்பதைப் போல்,நாடுகளின் கூட்டணியா?

ஆமாம். நேட்டோ என்றும், சீட்டோ என்றும் கூட்டணிகள் ஏற்பட்டன. இவை வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டியின் அடையாளங்களாக இருந்தன. அணு ஆயுத நாடுகளுள் அமெரிக்காவும், சோவியத் ரஷ்யாவும் முதன்மை நாடுகளாக விளங்கின. இவை இரண்டுக்கும் உலக நாட்டாண்மை, யாருக்கு என்பதில் போட்டி

ஏற்பட்டது. மேலும் அடிப்படைக் கொள்கையில் இவை கிழக்கு மேற்காக விளங்கின.

'அது என்ன கொள்கை?'

அமெரிக்கா பற்றிநிற்பது தனியுடைமைக் கொள்கை உருசியம் கடைப்பிடித்தது. பொதுவுடைமைக் கொள்கை. இந்தியா பொதுவுடைமைக் கொள்கையை ஏற்றுக் கொண்டநாடு அல்ல என்றாலும் ரஷ்யா இந்தியாவோடு நெருங்கிய நட்புறவு பூண்டிருந்தது.

அப்படியானால் நண்பன் என்ற முறையில் ரஷ்யா உதவியிருக்க வேண்டுமே?

உதவத்தான் செய்தது. நமது ஐந்தாண்டுத் திட்டங் களுக்கெல்லாம் ருஷ்யாதான் வழிகாட்டி நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் சோவியத்—இந்தியா நட்புறவின் அடையாளந்தான். போர்க்காலங்களிலும் உருசியம் தனது ஆதரவை வெளிப்படையாகவே. இந்தியாவுக்கென அறிவித்திருக்கிறது. ஐ. நா பாதுகாப்பு அவையிலும் தமக்கு ஆதரவாகவே செயல்பட்டிருக்கிறது.

அப்படியா தாத்தா! ரஷ்யா நமது நல்ல நண்பன்தான் என்றான் மணிவண்ணன்.

கதையை விட்ட இடத்திற்குப் போகலாமா என்றாள் மலர்விழி.

இதற்கு முன் நடந்த போர்களின் போதெல்லாம் பாக்கிஸ்தானையே ஆதரித்து வந்த அமெரிக்கா, கார்கில் போரில் பாக்கிஸ்தானை ஆதரிக்கவில்லை.

ஏன் தாத்தா...?

கார்கிலில் பாக்கிஸ்தான் செய்தது அப்பட்டமான அத்துமீறல்.

அப்படி என்றால்?

1972 ஆம் ஆண்டு இந்திய பிரதமர் இந்திரா காந்திக்கும் அன்றைய பாக்கிஸ்தான் பிரதமர் பூட்டோவுக்கும் இடையில் கையெழுத்தான சிம்லா ஒப்பந்தம், இந்த ஆண்டின் தொடக்கத்தில் நமது பிரதமர் வாஜ்பாய்—பாக்—பிரதமர் நவாஸ் ஷெரீப் இணைந்து வெளியிட்ட லாகூர் பிரகடனம் இவற்றையெல்லாம் மீறிய செயல் அது. அதாவது காஷ்மீர் பிரச்சினையைப் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும். ஒப்புக் கொள்ளப் பட்ட எல்லைக் கோட்டை மதித்து நடக்க வேண்டும். படைகள் எல்லை தாண்டக் கூடாது என்பது தான் கருத்து.

பின்னர் ஏன் பாக்கிஸ்தான் கார்கிலுக்குத் தன் படை வீரர்களை அனுப்பியது?

இதைத்தான் அமெரிக்கா தவறென்று சுட்டிக் காட்டியது.

பாக்கிஸ்தான் அதற்கு என்ன பதில் கூறியது?

கார்கிலில் பாக்கிஸ்தான் படைவீரர்களே இல்லை. அங்கே போர் புரிபவர்கள் எல்லாம் காஷ்மீர் விடுதலை வீரர்களே என்று சுட்டுவிரலால் சூரியனை மறைப்பதைப் போல் பேசியது.

ஆனால் அமெரிக்கா பாக்கிஸ்தானின் அண்டப் புளுகு ஆகாச புளுகுகளையெல்லாம் நம்பவில்லை. கார்கில் ஊடுருவலிலும், காஷ்மீரில் நடைபெறும் வன்முறைகளிலும் பாக்கிஸ்தானின் கைகள் நீண்டிருப்பதை அது அறிந்திருந்ததால், வெளிப்படையாகவே பாக்கிஸ்தானை எச்சரித்து விலகியிருக்கும்படியும், ஊடுருவியிருப்பவர்களைத் திரும்பி அழைத்துக் கொள்ளும்படியும் அறிவுரை கூறியது.

இப்படிக் குற்றம் செய்யும் பாக்கிஸ்தானை வேறெந்த நாடும் ஏனென்று கேட்கவில்லையா?

பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மன் போன்ற நாடுகளும் பாக்கிஸ்தானுக்கு அறிவுரை வழங்கின. நம் மண்ணில் ஐயாயிரம் சதுர கிலோ மீட்டருக்கு மேல் சீனாவுக்கு வழங்கி நட்பை பலப்படுத்திக் கொண்டிருந்ததே அந்தச் சீனா கூட இந்த முறை ஒதுங்கிக் கொண்டது.

பாவம் பாக்கிஸதான். அதற்குத்துணையே இல்லை.

பாவமல்ல— பாவி என்றான் மணிவண்ணன். தன்னை யாரும் ஆதரிக்கவில்லை என்று தெரிந்த பின் பாக்கிஸ்தான் பின்வாங்கி விட்டதா?

அப்படி யொன்றும் எளிதில் செய்து விடவில்லை. கார்கில் போர் அணு ஆயுதப் போராக முற்றிவிடக்கூடா தென்று, பாக்கிஸ்தானை ஊடுருவல் காரர்களைத் திரும்பப் பெறும்படி அமெரிக்கா நெருக்கடி கொடுத்தது. நாவாஸ் ஷெரிபே அமெரிக்கா சென்று பில் கிளின்டனோடு பேச வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது.

"அவ்வளவு நடந்ததா?.'

எவ்வளவோ நடந்தது.

"அமெரிக்க மத்திய படைத் தலைமைத் தளபதி ஆன்டனி ஜின்னி பாக்கிஸ்தானுக்கே வந்து சென்றார். ஷெரீபின் தனித்தூதர் முன்னாள் பாக். செயலர் நியாஸ் இந்தியா வந்து பேசிச் சென்றார்.

பாக்கிஸ்தான் ராணுவ செய்தித் தொடர்பாளர் பிரிகேடியர் ரஷித் குரேஷி அமெரிக்கப் பத்திரிகையிடம் பேசும்போது கார்கிலில் பாக். ராணுவம் சண்டையில் ஈடுபட்டிருப்பதாக ஒப்புக் கொண்டார். இப்படி நிலைமை பாக்கிஸ்தானுக்கு எதிராகத் திரும்பியதால்தான் பாக்கிஸ் தான் பிரதமர் ஊடுருவல்காரர்களை திரும்பி விடுமாறு அழைப்பு விடுத்தார்.

அவர் அழைத்தவுடன் ஊடுருவல் காரர்கள் எல்லாம் திரும்பி விட்டார்களா? என்றாள் மலர்விழி.

நம் படைகள் தாம் அவர்களை ஓட ஓட விரட்டி விட்டதே என்றான் மணிவண்ணன்.

அப்படியும் ஆங்காங்கே சிலர் மறைந்திருக்கத்தான் செய்தார்கள். எஞ்சியிருந்தவர்கள் உடனே திரும்பி விட இசையவில்லை.

என்னதான் சொன்னார்கள்? என்றாள் மலர்விழி.

தீவிரவாதிகளில் நான்கு குழுக்களின் பெயர்களைத் தானே கூறினேன். மொத்தம் இருபதுக்கும் மேற்பட்ட குழுக்கள் இருந்தன. அக்குழுக்களில் ஒன்றின் தலைவர் சலாவுதீன் என்ன கூறினார் தெரியுமா?

என்ன கூறினார்?

"அமெரிக்காவின் பேச்சைக் கேட்டுக் கொண்டு ஷரீப் கார்கிலிலிருந்து வெளியேற ஒப்புக் கொண்டாலும், நாங்கள் வெளியேற மாட்டோம். இந்தியப் படையை எதிர்த்துப் போரிட்டு மாண்டாலும் மாள்வோமேயன்றிப் பின் வாங்க மாட்டோம்" என்றார் அவர்.

திமிர் பிடித்த ஆளாக இருப்பானோ என்றான் மணி.

இதையும் கேள் என்று தொடர்ந்தார் தாத்தா ஊடுருவலை விலக்கிக் கொள்வது குறித்து கருத்தறிய ஒரு கூட்டத்தைக் கூட்டினார் நவாப் ஷரீப். அக் கூட்டத்திற்குப் பாக்கிஸ்தானின் இராணுவத் தளபதி பர்வஸ் முஷரப்புடன் பதினொரு தீவிரவாதக் குழுத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

அவர்கள் என்ன கூறினார்கள்?

கர்கத் உல் முஜாஹிதீன் என்னும் தீவிரவாதக் குழுவின் தலைவர் பசலூர் ரஹ்மான், "அமெரிக்கா மீது எங்களுக்கு

நம்பிக்கை இல்லை'' என்று கூறினார். இவற்றை எல்லாம் மீறி 6-7-1999 அன்று பாக்கிஸ்தான் நாடாளுமன்றத்தில், அந்நாட்டு வெளியுறவுத் துறை இணையமைச்சர் முகமது சித்திக்கான் கஞ்சு, ''கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டி இந்தியப் பகுதிக்குள் நுழைந்த முகாஜிதீன்களைத் திரும்பி வருமாறு அழைப்பு விடுப்பாம்'' என்றார்.

முகாஜிதீன் என்றால் யார் தாத்தா? என்றான் மணிவண்ணன்.

நாம் தீவிரவாதிகள், ஊடுருவல் காரர்கள் என்கி றோமே அவர்களைத்தான் பாக்கிஸ்தான் முகாஜிதீன்கள் என்று கூறுகிறது. முகாஜிதீன் என்றால் இசுலாமியப் போராளி என்று பொருள்.

அவ்வளவு தானா? என்றாள் மலர்விழி. பாக். பிரதமர் நவாஸ் ஷெரீப் அமெரிக்க அதிபர் பில் கிளின்டனிடம் ஒப்புக் கொண்டபடி முகாஜிதீன்களைத் திரும்பி வரும்படி அழைப்பு விடுத்தார். இதற்கிடையில் நமது அரசு ஊடுருவல்காரர்கள் வெளியேற காலக் கெடு வைத்தது பாக்கிஸ்தான் மேலும் ஓரிரண்டு நாட்கள் கூடுதலாகக் கேட்டது. குறித்த காலக் கெடுவுக்குள் வெளியேறாத வர்களைப் பகையாளியாகக் கருதி நடவடிக்கை எடுப்போம் என்று எச்சரித்தார் நமது இராணுவ அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ்.

அதற்குப் பின் எல்லாரும் பாக்கிஸ்தானுக்கே ஓடிப் போய் விட்டார்களா?

போயே போய் விட்டார்கள்? என்றார் தாத்தா. ஆய்! நாம் வென்று விட்டோம் என்று இரு கைகளையும் உயர்த்தி கூச்சலிட்டான் மணிவண்ணன்.

என்ன மணி கூச்சல்...? அம்மா அடுப்பறையிலிருந்தே குரல் கொடுத்தாள். ஒன்றுமில்லை அம்மா என்று பதில்

கூறிவிட்டு சீனச் சண்டையில் நம் வீரர்கள் செய்ததைப் போல் கார்கில் போரிலும் செய்திருப்பார்களே, அதைச் சொல்லுங்களேன் என்று தாத்தாவிடம் கேட்டான் மணி.

தாத்தா இந்தப் போரில் எத்தனை பேர் மாண்டிருப் பார்கள் என்று வினவினாள் மலர்விழி.

நம் வீரர்கள் மட்டில் 407 பேர் வீர மரணம் அடைந் துள்ளனர். 650 வீரர்கள் காய முற்றுள்ளனர். சிலர் காணாமலும் போயிருக்கலாம்.

பெரியவங்க எப்படித் தாத்தா காணாமற் போய் விடுவார்கள்?

அதுவா...? எதிரிகளின் பிடியில் சிக்கியிருக்கலாம். போரில் மாண்டு உடல் கிடைக்காமலிருக்கலாம். நமது வீரர் மேஜர் சரவணன் போரில் எதிரிகளால் சுடப்பட்டு மாண்டவர். அவர் உடல் நாற்பது நாட்களுக்குப் பின்னரே மீட்கப்பட்டது. இப்படிப்பட்டவர்களைத்தான் காணமற் போனோர் கணக்கில் சேர்ப்பார்கள்.

ஒரு வீரர் இருக்கின்றார், இல்லையா என்பதே தெரியா விட்டால் அந்தக் குடும்பம் என்ன பாடுபடும்? என்று மனம் கசிந்தாள் மலர்விழி.

நீ கூறியதைப் போன்றதோர் நிலைமை தமிழ்நாட்டு வீரர் ஜெயவேல் குடும்பத்திற்கே ஏற்பட்டது.

எல்லாம் தமிழ்நாட்டு வீரர்களுக்குத்தானே ஏற்படு கிறது ஏன் தாத்தா? என்று தன் உள்ளுணர்வை வெளிப் படுத்தினான் மணிவண்ணன்.

நம் தமிழ் வீரர்களுக்கு மட்டுந்தான் இப்படி எல்லாம் ஏற்படுகிறதென்பதில்லை. போர்க்களத்தில் இப்படியெல் லாம் நடப்பது புதுமையில்லை. இரு தரப்பிலும் இப்படி நிகழ்வதுண்டு.

நீங்கள் கூறினீர்களே சரவணன், ஜெயவேல் இவர்களைப் பற்றிக் கொஞ்சம் கூறுங்கள் தாத்தா.

எனக்குத் தெரிந்த விவரங்களைக் கூறுகிறேன். இன்று இந்த நிலையில் கதையை முடிவுக்குக் கொண்டுவந்து, பின்னர் நேரத்திற்கேற்ப இரவோ, மறுநாளோ தொடரலாம். சரிதானே என்றார் தாத்தா.

இதை மட்டில் கூறிவிடுங்கள் தாத்தா என்றாள் மலர்.

என்னம்மா? கேள் என்று அனுமதியளித்தார் தாத்தா.

## சிறியதென்று ஒன்று...!

உலகத்திலேயே இரண்டாவது பெரிய நாடு இந்தியா. அதனோடு சிறிய நாடான பாக்கிஸ்தான் அடிக்கடி சண்டைக்கு வருகிறதே அதற்கு எப்படி அவ்வளவு பலமும் துணிவும் வந்தது என்பதுதான் எனக்குப் புரியவில்லை என்றாள் மலர்.

''அதிகாரி வீட்டு கோழிமுட்டை அம்மியை உடைக்கும்'' என்றொரு பழமொழியே உண்டு. தனக்குப் பக்க பலமும் எதிராளியிடம் பலவீனம் இருப்பதாகவும் தெரிந்தால் எவருக்கும் துணிவு பிறக்கும், இசுரேலைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?

அது ஒரு நாடென்று தெரியும்.

ஆமாம் மிகச் சிறிய நாடு. 1948ஆம் ஆண்டுதான் அந்த நாடே உருவாயிற்று. அந்த நாட்டை அரபு நாடுகள் கூட்டாக எதிர்த்துத் தாக்கின. அண்டை நாடு எகிப்து, இசுரேலைவிட பெரிய நாடு. போரில் இசுரேல்தான் வென்றது.

அமெரிக்கா எப்படிப்பட்ட நாடு? வல்லரசு அல்லவா? வியட்நாமில் அது தோல்வி முகத்தோடுதானே திரும்ப நேர்ந்தது. சின்னஞ்சிறு கியூபா அமெரிக்காவைக் கண்டு அஞ்சவில்லையே! அளவு அல்ல முக்கியம். ஆற்றலும் படைக்கலன் மற்றும் பக்க துணையும்தான் போருக்கு உதவுபவை.

நம் நாட்டோடு ஒப்பிடும்போது பாக்கிஸ்தான் சிறியது தான். ஆனால் அமெரிக்கா அதற்கு அளவில்லாமல் ஆயுதங்களை வழங்கி கொம்பு சீவிவிட்டது. அந்தத் தெம்பில்தான் பாக்கிஸ்தான் அடிக்கடி நம்மோடு மோதும் துணிவைப் பெற்றது.

பாக்கிஸ்தானும் அணுகுண்டு வைத்திருக்கிறதாமே?

ஆமாம். சீனாவின் உதவியோடு அணுகுண்டு தயாரித் திருக்கிறது.

நமது நட்பு நாடு ரஷ்யா, நமக்கு ஆயுதம் ஏதும் கொடுக்கவில்லையா?

கொடுத்தது. ஆனால் பாக்கிஸ்தானைப்போல் ஆயுதத் திற்கு நாம் அதிகமாகப் பணம் செலவிடவில்லை.

ஏன்...? நாம் பாக்கிஸ்தானைவிட ஏழைகளா?

அப்படி இல்லை. இந்தியா போரை விரும்பாத நாடு. 'சமாதான சகவாழ்வு' என்பது அதன் கொள்கை. நமது நாட்டின் தந்தை அண்ணல் காந்தியடிகள் துன்புறுத்தா கொள்கையைத்தான் நமக்குக் கற்பித்துச் சென்றுள்ளார். நேரு காலத்திலிருந்தே இந்தியா படைச் செலவைக் குறைத்தே வைத்திருந்தது. அதுதான் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

என்ன தாத்தா இது? போர் வேண்டாம், படைப் பெருக்கம் வேண்டாம், ஆயுதம் வேண்டாம் என்று நாம் மட்டில் சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா? அதனால்

தானே அந்தக் குட்டி நாடு நம்மை அடிக்கடி வலுச் சண்டைக்கு இழுத்துக் கொண்டிருக்கிறது? உணர்ச்சி வயப்பட்டுப் பேசினான் மணிவண்ணன்.

மணி! நீ ஏன் கோபப்படுகிறாய்? நீ சின்னப்பிள்ளை உன்னால் எல்லாவற்றையும் புரிந்துகொள்ள முடியாது.

எனக்கும் புரியும் தாத்தா? படைக்காக நாம் எவ்வளவு செலவு செய்கிறோம், பாக்கிஸ்தான் எவ்வளவு செலவு செய்கிறது?

புரிந்தாலும் புரியாவிட்டாலும் இதைக் கேட்டுக் கொள். 1989-90ஆம் ஆண்டின் நமது நாட்டு வரவுசெலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்ட நிதி குறித்து பி. ஜி வர்கீஸ் என்பவர் ஒரு கட்டுரை எழுதினார்

பத்து ஆண்டுகளுக்கு முன் யாரோ எழுதிய கட்டுரைக்கு இப்பொழுது என்ன தாத்தா வந்தது?

நமது அரசுக்கு ஆயுத பலத்தைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணமிருந்தாலுங்கூட. பொருளாதார அறிஞர் களும், நோக்கங்களும் எதிர்ப்புக் குரல் கொடுத்து அரசை இக்கட்டான நிலைமைக்கு ஆட்படுத்தினார்கள் மக்கள் நலப் பணிகளைச் சுருக்கி—ராணுவத்திற்குச் செலவிடுவது தவறு என்று குரல் கொடுத்து, மக்கள் எண்ணத்தை அரசுக்கு எதிராக திருப்புவதுபோல் இருந்தது அவர்களு டைய பேச்சும் எழுத்தும்.

அப்படிப்பட்டவர்களும் இருந்தார்களா?

இல்லாமல் என்ன? எதற்கும் இரண்டு பக்கங்கள் உண்டல்லவா? யாருக்குமே தீங்கு எண்ணாத காந்திக்கே எதிரி இருந்திருக்கின்றானே...?

ஆமாம். எண்ணற்ற யூதர்களைக் கொன்று குவித்து உலகப் போருக்கே வித்திட்ட இட்லருடன் கூட்டு சேர ஆட்களும்—நாடுகளும் இருந்தனவே என்றாள் மலர்விழி.

படைச் செலவைக் குறைக்க வேண்டுமென்று அறிவுரை கூறியவர்களின் கூற்றைப் பொறுக்க முடியாத நிலையில், அந்நாள் பிரதமர் ராஜீவ் காந்தி "பாதுகாப்புச் செலவைக் குறைக்க வேண்டுமென்று யாராவது சொன்னால் அது தேச விரோதமாகும்'' என்று கடுமையாகவே எச்சரித்தார்.

அவர் சொன்னது சரிதான் என்று பாராட்டு தெரிவித்தான் மணி. அவசரப்படாதே. 1989-90ஆம் ஆண்டு இந்தியாவின் வரவு செலவு திட்டத்தில் என்ன நடந்தது தெரியுமா? பாதுகாப்புச் செலவு நிதி ஒதுக்கீடு 13,200 கோடியிலிருந்து 13,000 கோடி ரூபாயாகக் குறைக்கப் பட்டது.

ஏன் தாத்தா அப்படிச் செய்தார்கள்?

முதற் காரணமாகக் கூறப்பட்டது "நிதி நெருக்கடி'' இரண்டாவது காரணமிருக்கிறதே அதுதான் கொடுமை யான கணிப்பு.

என்ன காரணம் அது? மலர்விழி கேட்டாள்.

''குறுகிய கால அடிப்படையில் ஆபத்துக்கள் அதிக மில்லை என்பதுதான் அந்தக் காரணம்.'

யார் தாத்தா இதைக் கண்டுபிடித்தது?

அரசியல் நோக்கங்களும், பொருளாதார, நிபுணர் என்பவர்களுந்தாம். இதைவிட ஒரு வேடிக்கையான கருத்து, இல்லை, இல்லை எதிர்பார்ப்புகூட இவர்களிடம் இருந்திருக்கிறது.

அது என்ன தாத்தா?

''நம்முடைய பாதுகாப்புச் செலவைக் குறைத்தால் பாக்கிஸ்தானும் சீனாவும் இதை நல்ல அறிகுறியாகக் கருதலாம்'' என்பதுதான் அந்த எதிர்பார்ப்பு.

தாத்தா அப்படி எழுதிய கட்டுரையாளர் வர்கீஸ் தானே? அவர் இருக்கிறாரா?

ஏன் கேட்கிறாய்? நீ ஓடிப்போய் கேள்வி கேட்கப் போகிறாயா? என்றாள் மலர்.

கேட்டால் சொல்லிவிடுவார்களாக்கும்? இதெல்லாம் பெரியவங்க சமாச்சாரம் போடாப் போ என்று நல்லெண்ணெய் விளம்பரம்போல் பேசி அனுப்பிவிட மாட்டார்களா? என்றான் வெறுப்போடு.

இன்னும் கேளுங்கள். இந்திரா காந்தி அம்மையார் இந்தியத் தலைமை அமைச்சராக இருந்தபோது பிராஸ்டாக்ஸ், 'செக்கர் போர்ட்' என்று இராணுவ ஒத்திகை நடத்தினார்கள். அதைக்கூட குறைகூறினார்கள். இந்திரா காந்தி தனது செல்வாக்கைப் பெருக்கிக்கொள்ள இப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார் என்று குற்றம் சுமத்தியவர்களும் இருந்தார்கள்.

இப்படிப்பட்டவர்கள் எப்போதும் இருப்பார்கள் போலும்? என்று கூறிய மணிவண்ணனை நோக்கி "என்ன தருமி" என்று சிரித்தாள் மலர்விழி.

வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்ய இந்தியா செய்தது வேறொன்றுமில்லை. பாதுகாப்புச் செலவைக் குறைத்ததுதான். 1986-87இல் உள்நாட்டு உற்பத்தியில் இராணுவத்திற்கென 3.6% நிதி ஒதுக்கப்பட்டது. "உலக்கைத் தேய்ந்து உளிப்பிடி ஆனது" என்பார்களே அப்படித்தான் நமது பாதுகாப்பு நிதி ஒதுக்கீடும் இளைத்துக்கொண்டே வந்தது.

இளைத்துக்கொண்டே வந்ததா? என்ன தாத்தா?

ஆண்டுதோறும் நமது பாதுகாப்புச் செலவு குறைந்து கொண்டே வந்தது என்பதைத்தான் அப்படிச் சொன்னேன். பாருங்களேன் 1989-90இல் 3.16%; 1990-91இல் 2.88%;

1991-92இல் 2.65% ; 1992-93இல் 2.49% ; 1993-94இல் 2.49% ; 1994-95இல் 2.24%; 1995-96இல் 2.21% ; 1996-97இல் 2.09% இப்படி இறங்கு வரிசையில்தான் சென்று கொண்டிருந்தது.

ஏன்தான் இப்படிச் செய்கிறார்களோ? என்று உளம் நொந்து கூறினான் மணிவண்ணன்.

அன்னிய நெருக்குதல்தான் காரணம், நமது முன்னாள் நிதி அமைச்சர் மன்மோகன் சிங், "பாதுகாப்புத் துறையை அதிக முதன்மை இல்லாதத் துறையாகக் கருதுவதாகவும், அதற்கான செலவுகளைக் குறைப்பதாகவும் அனைத்து நாட்டு செலாவணி நிதியத்திடம் (International Monitory Fund) உறுதிகூறி பாதுகாப்புச் செலவைக் குறைத்ததாகக் கூட ஒரு குற்றச்சாட்டு உண்டு.

பாக்கிஸ்தானும் இப்படித்தான் செய்கிறதா? அதன் இராணுவச் செலவு எவ்வளவு தாத்தா?

அந்த நாட்டின் வருவாய் அடிப்படையில் பார்த்தால். பாக்கிஸ்தானின் படைச் செலவு நம்மைவிட அதிகந்தான், விழுக்காட்டளவில்......

விழுக்காடு என்றால் என்ன தாத்தா?

அது தெரியாதா? உனக்கு பெர்சென்ட் (Percent) என்றால் தெரியுமென்று நினைக்கின்றேன்.

"அது தெரியும்."

விழுக்காடு என்றால் அதுதான் பொருள். நூற்றுக்கு இவ்வளவு ருபாய் என்பது கணக்கு. தமிழ்நாட்டுப் பிள்ளைகளுக்குத் தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலத்தில் விளக்கம்கூற வேண்டியிருக்கிறது என்று பெருமூச்சு விட்டார் தாத்தா.

## பாதுகாப்புச் செலவு...?

நம் நாடு அதன் ஆண்டு வருவாயில் நூற்றுக்கு இரண்டு ரூபாய் நாற்பத்தேழு காசு செலவிடும்போது, பாக்கிஸ்தான் நான்கு ரூபாய் எண்பத்தாறு காசுகளைச் செலவிடுகிறது. ஏறத்தாழ இரண்டு மடங்கு. சரியாகக் கூறுவதானால் 98% அதிகம்!

ஐயோ...! நாம் சாப்பாட்டிற்குச் செலவிடுகிறோம். பாக்கிஸ்தான் சண்டைக்குச் செலவிடுகிறது. அப்படித் தானே?

அப்படித்தான் என்று வைத்துக்கொள்ளேன்.

பாக்கிஸ்தானே இவ்வளவு செலவு செய்கிறதே—நம்மை விடப் பெரிய நாடான சீனா எவ்வளவு செலவு செய்யும்?

சீனாவா...? அது பதினொரு விழுக்காடு செலவு செய்கிறது. பணக்கார நாடான அமெரிக்கா பத்து விழுக்காடு செலவு செய்கிறது.

போதும்! போதும்! நம்மோடு வம்புக்கு வந்த நாடு களைப் பற்றித்தான் தெரிந்துகொள்ள கேட்டேன்.

நூற்றுக்கு இவ்வளவு என்று கூறினீர்களே அது எவ்வளவு ரூபாய் இருக்கும் தாத்தா.

உள்ளதை உள்ளபடி எந்த அரசும் இதையெல்லாம் வெளிப்படையாகக் கூறாது. ஏதோ ஒரு இதழில் படித்த தைக் கூறுகிறேன். 1996ஆம் ஆண்டு கணக்குப்படி பாக்கிஸ்தான் 3.7 பில்லியன் டாலரும், இந்தியா 10.4 பில்லியன் டாலரும் படைக்காகச் செலவிட்டிருக்கின்றன.

ரூபாய் எவ்வளவு என்று கூறுங்கள் தாத்தா...? கெஞ்சலாகவும், கொஞ்சலாகவும் கேட்டான் மணி வண்ணன்.

எல்லாவற்றையும் நானே கூறிக்கொண்டிருக்கிறேனே? உங்கள் மூளைக்கும் வேலை கொடுங்கள். பில்லியன் என்றால் எவ்வளவு? டாலருக்கு எவ்வளவு ரூபாய் என்பதையெல்லாம் கண்டுபிடித்து எனக்குச் சொன்னால்தான் இனி கதை நகரும். அதுவரை இடைவேளை. என்ன... நீங்கள் நகரலாமே என்று சிரித்தார் தாத்தா.

நல்லா மாட்டிக்கொண்டோம். இப்ப என்ன செய்வது? பள்ளிக்கூடம் இருந்தாலும் டீச்சரையாவது கேட்கலாம்...? வா அப்பாவைக் கேப்போம் என்றாள் மலர்விழி. சரி என்று உடன்பட்டான் மணி. இருவரும் அப்பாவை நாடி ஓடினார்கள்.

அப்பாடா...! என்று சாய்ந்தார் தாத்தா. சிறிது நேரத்திற்குப் பின் ஏதோ கேட்கலாமென்று திரும்பி வந்தாள் மலர். தாத்தா கண்ணை மூடிக்கொண்டிருந்தார். தூங்குகிறாரா? கண்ணை மூடிக்கொண்டு சிந்திக்கின்றாரா? என்று புரிந்துகொள்ள முடியாமல் தயங்கித் தயங்கி நின்றவள் ஏதோ நினைத்தவளாக திரும்பிப் போய் விட்டாள். அப்பா எங்கே என்று அம்மாவைக் கேட்டுக் கொண்டிருந்தான் மணி.

ஏன் திடீரென்று அப்பாவைத் தேடுகிறீர்கள்? காசு எதற்கேனும் வேணுமா? பணம் தேவைப்பட்டால்தானே பாசத்தோடு அப்பாவைத் தேடுவீர்கள்? என்றாள் அம்மா.

போங்கம்மா...! நாங்க வேறெதற்கும் அப்பாவைத் தேடமாட்டோமா? என்று சிணுங்கினாள் மலர்.

ஏண்டி இதற்கெல்லாம் சிணுங்குகிறாய்? ஏதோ ஒரு பேச்சுக்குச் சொன்னேன். அதைப் போய் பெரிசா எடுத்துக் கொண்டு கண்ணைக் கசக்குகிறாயே! இப்ப எதுக்கு அப்பாவைத் தேடுகிறீர்கள்?

எங்களுக்கு ஒரு கணக்குத் தெரியணும்.

என்ன கணக்கு? உங்க டீச்சரைக் கேட்கவேண்டியது தானே? என்றாள் அம்மா?

இது ஒன்றும் வகுப்பு கணக்கு இல்ல. என்றான் மணி. பின்ன என்ன கணக்காம்? அம்மா.

தாத்தாதான் தெரிந்துகொண்டு வந்து கூறுங்கள் என்று சொன்னார். பில்லியன் என்றால் என்ன? டாலருக்கு எத்தனை ரூபாய்? உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங் களேன்! என்றான் மணி.

ஆமாம் என்னைக் கேளுங்கள்! நான் எக்னாமிக்ஸ் புரபசர் வேலை பார்க்கிறேன். என் படிப்பும் அறிவும் தான் அடுப்பறையில் உப்பு புளியோடு கரைந்துபோச்சே! என்று வெறுத்துப்போய் கூறினாள் அன்னம். இளங்கலை படித்துப் பட்டம் பெற்றவளாயிற்றே இருக்காதா வெறுப்பு. அப்பா வெளியே போய்விட்டார். பக்கத்து வீட்டு மாமா குரல் கேட்கிறது. அவரைப் பிடியுங்கள் சொல்வார் என்று வழி காட்டினாள் அம்மா அன்னம்.

இருவரும் தங்கள் சிக்கலுக்குத் தீர்வு கிடைத்துவிட்ட தென்ற நம்பிக்கையோடு ஓடினார்கள்.

அப்பொழுதுதான் உடுப்பை மாட்டிக் கொண்டு புறப்பட்டுக்கொண்டிருந்தார் அன்பரசன். மலரும் மணியும் வருவதைப் பார்த்து வாங்க வாங்க! என்ன செய்தி? வேகமாக ஓடிவருகிறீர்கள் என்று கேட்டபடியே மனைவிக்கு குரல் கொடுத்தார் அன்பரசர்.

என்ன வரவேற்பெல்லாம் பலமாக இருக்கிறதே யார் வந்திருக்கா? என்று கேட்டவாறு கூடத்திற்கு வந்தாள் பூங்காவனம். இருவரையும் பார்த்ததும் ஓ...நீங்களா? வாங்க, என்ன இரண்டு மூன்று நாட்களாக இந்தப் பக்கமே வரக்காணோம் என்றாள்.

இல்ல...அக்கா என்ற மலரை நோக்கி...என்ன இல்லை? உங்க தாத்தா வந்ததிலிருந்து இந்த வீட்டுப் பக்கமே திரும்பவில்லை என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டாள்.

தாத்தாவிடம் கதை கேட்டுக்கொண்டிருந்தோம். அதனால்தான் வரவில்லை என்று உண்மை விளம்பி (Approver) ஆனான் மணிவண்ணன்.

வந்ததே வந்தீங்க உட்காருங்கள். நீங்கள் வராமல் எங்களுக்குப் பொழுதுபோவதே கடினமாக இருந்தது. விடுமுறைதானே. உட்கார்ந்து கேரம் ஆடுங்கள். அக்கா வேலைகளை எல்லாம் முடித்துவிட்டாள். இனி ஓய்வுதான்.

சாரி அங்கிள்! எங்களுக்கு ஒரு பிராபளம் முதலில் அதைத் தீர்த்துவையுங்கள் என்றாள் மலர்.

என்ன ஐயம்? மன்னன் செண்பகராம பாண்டியாருக்கு ஏற்பட்டதைப் போன்றதா? என்றார் அன்பரசன்.

பில்லியன் என்றால் என்ன? முதலில் இதைக் கூறுங்கள் என்றான் மணிவண்ணன்.

ஆமாம் அங்கிள் உடனே சொல்லுங்கள்? என்ன... பில்லியனைப் பற்றிக் கேட்க ஆரம்பித்துவிட்டீர்கள்? அமெரிக்காவில் ஏதாவது சொத்து வாங்கப் போகிறீர்களா? இல்லை கடன் வாங்கப் போகிறீர்களா?

அதெல்லாம் இல்லை. தாத்தாவுக்குக் கூறவேண்டும். கார்கில் கதையில் ஆயுதம் வாங்க நிதி ஒதுக்கியது குறித்து வருகிறது. அதில் ரூபாய் என்றில்லாமல் பில்லியன் டாலர் என்று வருகிறது. 3.7; 10.4 பில்லியன் டாலர் என்றால் எவ்வளவு ரூபாய் என்று தெரியவேண்டும். உங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாமென்றுதான் வந்தோம். கொஞ்சம் சொல்லுங்களேன் என்றான் மணிவண்ணன்.

''பிளீஸ்!'' என்றாள் மலர்விழி.

இப்போ என்னையும் சரியான சிக்கலில் மாட்டிவிட்டு விட்டீர்களே! படித்ததுதான் இப்போ சரியாக நினைவு இல்லை. ஐந்து லட்சமா ஐம்பது லட்சமா அதுதான் சந்தேகமாக இருக்கிறது. எதையும் தேடிப் பார்த்துக் கூறவும் நேரமில்லை. அவசரமாக வேறு போகவேண்டி யிருக்கிறது. அக்காவைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங் களேன். அவங்களுக்கு மறந்திருக்காது என்று கூறிவிட்டு, பிழைத்தோமென்று சொல்லிக் கொள்ளாமலேயே வெளி யேறி விட்டார் அன்பரசன். மோட்டார் சைக்கிள் புறப் படும் ஒலி கேட்டு என்ன புறப்பட்டு விட்டாரா? அப்படி என்ன அவசரம் சொல்லிக் கொள்ளாமல் போகிறார் என்றாள் பூங்காவனம்.

அக்கா! எங்கள் கேள்விக்குப் பதில் கூற முடியாமல், உங்களைக் கேட்கச் சொல்லிவிட்டு ஓடிப்போய்விட்டார் என்றான் மணி.

அப்படி என்ன கேள்வி கேட்டீர்கள்?

ஒரு பில்லியனுக்கு எவ்வளவு ரூபாய் என்றுதான் கேட் டோம். அக்காவைக் கேளுங்கள் என்று கூறிவிட்டுப் போய் விட்டார் என்றாள் மலர்.

இப்படி ஏதாவது சிக்கல் வந்தால் ஓடிப்போய் ஒளிந்து கொள்ள அவங்களுக்கு அலுவலகம் இருக்கு. அகப்பட்டுக் கொண்டவர்கள் நாங்கதானே என்று சிரித்தாள் பூங்காவனம்.

அக்கா! அக்கா உங்களுக்குத்தான் தெரியுமே சீக்கிரம் சொல்லுங்களேன்?

சரியாக நினைவில்லை. ஒரு கோடியாக இருக்குமோ...? என்றாள் ஐயத்துடன்.

போச்சு... கடைசியாக உங்களைத்தான் நம்பி இருந் தோம் நீங்களும் இப்படிக் கூறிவிட்டீர்களே என்றான் மணி வண்ணன்—அழாத குறையாக.

கவலைப் படாதீங்க. எப்படியாவது உங்கள் கேள்விக்கு நானே பதிலைக் கண்டுபிடித்து கூறுகிறேன் சரிதானே?

''எங்களுக்குப் பதில் தெரிந்தால்தான் ஆச்சு... வேறு யாரைக் கேட்டால் தெரியும்? சற்று நேரம் சிந்திக்கிறாள். இருங்கள். என் கல்லூரி தோழி ஒருத்தி இருக்கிறாள். அவளைக் கேட்டால் தெரியும் என்று கூறி தொலைபேசி இருக்கும் இடத்தை நோக்கி ஓடிய பூங்காவனம். தொலை பேசி எண்களை அழுத்தினாள். மணி ஒலித்தது. காத்தி ருந்தாள். அடுத்த முனையில் பேச்சு கேட்டது.

நான்தான் பூங்காவனம் பேசுகிறேன். எப்படி இருக் கிறாய்? இப்படி வழக்கமான நலன் கேட்டல், பழைய நினைவுகள் பறிமாற்றங்களுக்குப் பின் ஒரு பில்லியன் என்றால் எவ்வளவு என்று கேட்டாள். எதிர் முனையி லிருந்து பதில் நேரடியாகக் கிடைக்கவில்லை. அதற்குப் பதில் உன்னிடம் நியூ செஞ்சுரி டிக்ஷனரி இருக்கா என்று பதில் கேள்விதான் வந்தது.

ஏன்டீ...! நான் என்ன கேட்டேன், நீ என்ன கேட் கிறாய்?

அதற்காகத்தான் கேட்கிறேன். டிக்ஷனரி இருந்தால் அதில் 'பி'யில் தேடிப்பார் இருக்கும்.

உன் பழைய புத்தி இன்னும் மாறவே இல்லையே ஏன்டி என்னை வேலை வாங்க வேண்டுமா? நீயே கூறினால் என்னவாம்?

ஏன்டி... நீ எதற்கடி டிக்ஷனரி வைத்திருக்கிறாய்? சிலந்தி கூடுகட்டவா? செல் சாப்பிடவா? திறந்துதான்

பாரேன். படித்த படிப்பை கொஞ்சமாவது பயன்படுத்து. சதா ஆசையே சுத்திக்கொண்டிருக்காதே.

இரு இரு உன்னை அப்புறம் பேசிக் கொள்கிறேன். வைத்து விடட்டுமா? என்று கூறியபடி போனை வைத்து விட்டு வந்தாள்.

என்ன அக்கா அவங்களுக்கும் தெரியவில்லையா?

சொல்லாம சொல்லியிருக்கா? உன்னிடம் டிக்ஷனரி இருக்கு இல்ல, ஓடிப்போய் எடுத்து வாங்க.

வாய்மூடும் முன்னரே வாயு மைந்தனைப்போல் பாய்ந்தோடி எடுத்து வந்தான் மணி.

பூங்காவனம் புரட்டினாள் அகராதியை. அக்கா டிக்ஷனரியில் 'மீனிங்' தானே இருக்கும். இது கணக்கு ஆயிற்றே— இருக்குமா? தன் ஐயத்தை வெளியிட்டான் மணிவண்ணன்.

இருக்கும். பில்லியன் என்பது எண் அல்லவே, சொல் தானே? 'பி' எழுத்தில் தொடங்கும் சொல் வரிசையில் தேடினால் கிடைக்கும். என் தோழி சரியாகத்தான் சொல்வாள்.

மலர்விழியும் பூங்காவனமும் தேடுகிறார்கள். இதோ இருக்கு. சிறுமியைப்போல் கூச்சலிட்டாள் பூங்காவனம். மலர்! தொலைபேசியிடம் இருக்கே அந்தக் குறிப்பேட்டையும், எழுதுகோலையும் எடுத்துவா.

மலர் ஓடிப்போய் எடுத்து வந்தாள்.

குறித்துக்கொள் ஒன்று சைபர். இன்னும் எட்டு சைபர் போட்டுக்கோ.

குறித்து விட்டாயா என்று கேட்டாள் பூங்காவனம். இந்தா அக்கா. குறிப்பேட்டைக் கொடுத்தாள் மலர்விழி. தேர்வு முடிவை தகவல் பலகையில் ஊன்றிப் பார்ப்பதைப் போல் எட்டிப் பார்த்தான் மணி.

ஒன்று, பத்து என்று எண்ணி 1,00 00,00,000 அப்பாடா கிடைத்து விட்டது. ஒரு மில்லியன் என்பது நூறு கோடி. இன்னொன்றும் இருக்கிறது. பிரிட்டன், பிரான்சு 1948 முதல் கையாளும் ஒரு லட்சம் கோடி-என்றும் பில்லியன்.

அக்கா! ஒரு கோடி லட்சம் வேண்டாம். நூறு கோடியை எடுத்துக் கொள்வோம் - கணக்குப் போட சுலபமாக இருக்கும்.

இன்னும் என்ன கணக்கு? என்றாள் பூங்காவனம்.

3.7 பில்லியன் டாலருக்கும் 10.4 பில்லியன் டாலருக்கும் எவ்வளவு ரூபாய் என்று கணக்குப் பார்க்க வேண்டும். ஒரு டாலருக்கு எத்தனை ரூபாய்?

அதுவா? நம்ம ரூபாய்க்கு நூறு காசு என்பது நிலையானது. ஆனால் அமெரிக்கன் டாலருக்கு இணையான ரூபாய் இருக்கிறதே அது நிலையானதல்ல. நாட்டின் நாணய மதிப்புக்கு ஏற்ப கணக்கு ஏறும், இறங்கும்.

அது என்ன விலைவாசியா? அப்படியே வைத்துக் கொள்ளேன். இப்போ டாலருக்கு 43.50 ரூபாய் இருக்கலாம்.

1996-ஆம் ஆண்டில் ஒரு டாலருக்கு எத்தனை ரூபாய் என்பது சரியாகத் தெரியவில்லை. சரி. நாற்பது ரூபாய் என்று கணக்கு வைத்துக் கொள்வோம்.

அக்கா! ரூபாய் கணக்கில் சொல்லி விடுங்களேன். சரியான ஆளப்பா நீ. எல்லா வேலையையும் என்னிடமே வாங்கிக் கொள்கிறாயா? சரி. உட்கார்ந்தே போடுவோம் வாருங்கள்.

மூவரும் உட்கார்ந்து கணக்குப் போட்டார்கள். 3.7 பில்லியன் பெருக்கல் நூறு கோடி = 370 கோடி. முன்னூற்று எழுபது கோடி டாலர் பெருக்கல் நாற்பது = 370 × 40 =

14,800 கோடி. 10.4 பில்லியன் டாலருக்கு நாற்பத் தோராயிரத்து அறுநூறு கோடி ரூபாய். குறித்துக் கொள்ளுங்கள்.

குறித்துக் கொண்டோம் அக்கா — 'ரொம்ப தேங்க்ஸ்' என்றாள் மலர்விழி. உம் நன்றியை மறந்து விட்டீர்கள் என்றாள் பூங்காவனம்.

நாங்களா...? என்றனர் இருவரும். பதறாதீர்கள். தமிழில் நன்றி என்று கூறாமல் தேங்க்ஸ் என்று கூறினீர் களே அதைச் சொன்னேன்.

ஓகோ...! நன்றி. நாங்கள் போய் வருகிறோம். புறப் பட்டனர் இருவரும்.

என்ன தம்பி! வேலை முடிந்ததும் வேங்கை போல் பாய்கிறாய்?

கோபித்துக் கொள்ளாதீர்கள் அக்கா! நாங்கள் அப்புறமா வருகிறோம். கேரம் ஆடலாம்—வரட்டுமா? பதி லுக்குக் காத்திராமல் பறந்தான் மணிவண்ணன். மலர் விழியும் நடந்தாள். வீட்டிற்குத் திரும்பியதும் அம்மாவிடம் குறிப்பைக் காட்டினான். அதற்குள் மலர்விழியும் வந்து விட்டாள். அக்கா நம்மால் கண்டுபிடிக்கவே முடியாதென்று நினைத்திருப்பார் தாத்தா. இல்லையா? என்றான் மணி. அவன் பேச்சில் பூரிப்புப் பொங்கியது.

கொண்டு போய் தாத்தாவிடம் காட்டலாம் வா என் றாள்மலர்விழி. பொறுங்கள். இப்பொழுதுதான் கண்ணயர்ந் திருக்கிறார் தாத்தா. அவர் தூக்கத்தைக் கலைக்காதீர்கள். மகள் வீடாயிற்றே இரண்டு நாள் ஓய்வாக இருந்து விட்டுப் போகலாம் என்று வந்தால், அவரை விடாமல் தொல்லைப் படுத்துகிறீர்களே என்று கடிந்து கொண்டாள் அன்னம்.

நாங்கள் என்ன தொல்லை கொடுத்தோம். கதை கேட் டோம். இது ஒரு தொல்லையா? அம்மாவின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தான் மணி.

உன்னால் மட்டில் எதிர் பேச்சு பேசாமல் இருக்க முடியாதே! போங்க! போய் வேறு வேலை இருந்தால் பாருங்கள் என்று கூறி தன் வேலையைப் பார்க்கத் தொடங்கினாள் அன்னம்.

வா அக்கா... என்று மலரை அழைத்தான் மணி. அவசரமாக திரும்பிய அம்மா, போய் தொலைக்காட்சியை அலற விடாமல் அடக்கமாக வைத்துக் கேளுங்கள் என்று எச்சரிக்கை விடுத்தாள்.

சரி அம்மா என்றாள் மலர்விழி. தொலைக்காட்சியைத் திருகினான் மணி. அதில் தேர்தல் காலத்தில் சிலர் கட்சி மாறுவதைப் போல் காட்சிகள் மாறிக் கொண்டிருந்தன. மலர்விழி காட்சியைச் சுவைத்த அளவுக்கு மணிவண்ணன் சின்னத் திரையில் ஒன்றவில்லை. அவனுடைய எண்ணமெல்லாம் சுவர்க் கடிகாரத்தின் முள் சுழற்சியிலேயே பதிந்திருந்தது. தாத்தா எப்பொழுது எழுந்திருப்பார் என்பது தான் அவனுடைய எதிர்பார்ப்பு.

உலகில் யாருக்காகவும் காத்திருக்காத ஒன்றுண்டென்றால் அது நேரந்தான். மாந்தர்தான் அதற்காகக் காத்திருக்க வேண்டும். பகல் ஒரு மணியைக் கடந்து பெரிய முள் சுற்றிச் சுற்றி வந்தது. இப்பொழுது ஒன்று பத்து. தாத்தா எழுந்து வெளியே வந்தார். விக்கெட் கீப்பரைப் போல் (பந்து காவலர்) விழிப்பாய் இருந்த மணி தாத்தா தாத்தா என்று ஓடினான்.

என்ன தம்பி! நான் சொன்னதைச் செய்துவிட்டீர்களா? என்றார் தாத்தா. நாங்கள், சொன்னதைச் செய்தோம், செய்ததைச் சொல்கிறோம் என்றான் மிடுக்காக.

அப்படியா...! பலே! ! என்றார் தாத்தா! அவருடைய எதிர்பார்ப்பு தோல்வி கண்டிருந்ததை, பேரப் பிள்ளைகளின் முயற்சி தந்த மகிழ்ச்சி முறியடித்துவிட்டது. பையிலிருந்த துண்டுக் காகிதத்தை எடுத்துக் கொடுத்தான் மணி.

மூக்குக் கண்ணாடியைக் கொண்டு வா பார்ப்போம் என்றார் தாத்தா. மறு நொடி, ஓடிப்போய் கண்ணாடியைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்தபடி தாத்தா முகத்தையே பார்த்தபடி நின்றான்.

சரியாகத்தான் இருக்கும் போலிருக்கிறது. இந்தா கொண்டுபோய் உள்ளே வை சாப்பிட்டபின் பார்ப்போம் என்று சீட்டையும், கண்ணாடியையும் அவனிடம் கொடுத்து விட்டு புழக்கடைப் பக்கம் போனார் தாத்தா.

## படைபலம்?

மதிய உணவு முடிந்தது. தாத்தா சாய்வு நாற்காலியில் வந்து உட்கார்ந்துவிட்டார். மணியும் மலரும் குறித்துக் கொடுத்திருந்த சீட்டை மறுமுறையும் பார்த்தார். இப்போது அவர் முகத்தில் மகிழ்ச்சி குடியேறியிருந்தது. கன்னத்தில் சுருக்கம் விழ உதடு பக்கவாட்டில் நீண்டது.

கையையும் வாயையும் அவசர அவசரமாகத் துடைத்தபடிஓடிவந்த மணி தாத்தா! தொடங்கலாமா என்றான்.

உண்ட உணவு உள்ளே இறங்கட்டும் உட்கார் என்றார் தாத்தா.

இறங்கிவிட்டது தாத்தா! என்றான் மணி.

“கொஞ்சம் பொறு! தொலைக்காட்சி செய்தியைக் கேட்டுவிட்டுத் தொடங்கலாம் என்று கூறி, செய்தித்தாளை எடுத்தார் தாத்தா. மணிவண்ணனுக்கு நேரம் நகர்ந்தது. வாக்களித்துவிட்டு முடிவுக்காக ஒரு மாதம் காத்திருந்தவர்கள் எண்ணத் தொடங்கியவுடன், நிலைமையை அறிந்து கொள்ள அங்குமிங்கும் அலைவதைப் போல்,

நிலைகொள்ள முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான் மணி. முற்பகல் வேலைகளை முடித்த மனநிறைவோடு ஓய்வெடுக்கப் போனாள் அன்னம். அம்மா பக்கத்திலேயே அமைதியாகப் படுத்து, பள்ளி நூலகத்திலிருந்து கொண்டு வந்திருந்த புத்தகத்தைப் புரட்டினாள் மலர்விழி!

தொலைபேசி மணி ஒலித்தது. ஓடிப்போய் எடுத்தான். மறுநொடி 'டப்'பென்று வைத்துவிட்டு; சே! இந்த ராங்கால் தொல்லை பெரிசா போச்சு என்று நொந்தபடி திரும்பி வந்து தொலைக்காட்சியை வெறித்தபடி பார்த்துக் கொண்டிருந்தான். எப்பொழுதுதான் இந்தச் செய்திகளெல்லாம் முடியுமோ என்று அவன் உள்மனம் பேசியது.

சுவர்க் கடிகாரத்தின் சின்னமுள், ஏழை பணக்காரன் வீட்டிற்குள் நுழைவதைப் போல் மெல்ல நகர்ந்து மூன்றை எட்டியது. பணக்காரர்களின் வாழ்க்கையைப் போல் பெரியமுள் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. செய்திகள் முடிந்துவிட்டன. மணி மூன்றாகிவிட்டது மலர்விழியை அழைத்துக் கொண்டு தாத்தாவிடம் ஓடினான் மணி வண்ணன்

என்ன மணி மூன்றாகிவிட்டதா? என்றார் தாத்தா.

இந்தி, ஆங்கிலம், தமிழ் எல்லா செய்திகளுமே முடிந்துவிட்டன தாத்தா என்றான் மணி.

சரியான ஆள் நீ! மணியைக் கேட்டால் செய்தி எல்லாமே முடிந்துவிட்டதென்கிறாய். சரி வந்து உட்காருங்கள் என்றதும் உட்காரப் போனவன், சீட்டை எடுத்துத் தாத்தாவிடம் நீட்டியபடி நின்றான். நீ உட்காரப்பா எனக்கு நினைவு இருக்கிறது என்றுகூறி உட்கார வைத்தார். சீட்டை மீண்டும் ஒருமுறை பார்த்துவிட்டு இதை எப்படிக் கண்டு பிடித்தீர்கள்? என்று கேட்டார்.

அதுவா தாத்தா! பக்கத்து வீட்டு அக்கா ஆங்கில அகராதியில் பார்த்து, டாலர் கணக்கையும் போட்டுக் கொடுத்தார்கள். டிக்ஷனரியில் இருக்குமென்று தெரிந்திருந்தால், நாங்கள் எப்பொழுதோ கண்டுபிடித்திருப்போம் என்றனர் இருவரும்.

எதையும் ஊன்றிப் படிக்கும் பழக்கத்தையும், கூர்ந்து நோக்கும் இயல்பையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அகராதியில் வேறு பல செய்திகளையும் கொடுத்திருப்பார்கள். அவை மாணவர்களுக்குப் பயன்படும். நீங்களும் ஓய்வு நேரத்தில் அகராதியைப் புரட்டிப் பாருங்கள். தமிழில் "கண்டதைக் கற்றால் பண்டிதனாகலாம்" என்றொரு பழமொழிகூட உண்டு, தெரியுமா?

கதையைத் தொடங்கலாமா தாத்தா?" என்றான் மணி. உன்னைக் கண்காணிப்பாளர் வேலைக்குத்தான் அனுப்ப வேண்டும். வேலை வாங்குவதில் எவ்வளவு கருத்தாக இருக்கின்றாய் நீ. சரி... தொடங்குவோம். செலவுக் கணக்கைப் பார்த்தீர்களா? நாம் பாக்கிஸ்தானைப் போல் இரண்டரை மடங்கு செலவு செய்கிறோம் இருந்தாலும், பற்றாக்குறை, சில நுட்பமான கருவிகளை நம்மால் வாங்க முடியவில்லை.

"ஏன் அப்படி என்றாள் மலர்விழி."

ஆள்பலமும்—படைக்கலன்களும் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தாலும்கூட நமது நாட்டின் எல்லை அளவோடு ஒப்புநோக்கும்போது பற்றாக்குறை ஏற்படுகிறது. பாக்கிஸ்தானுக்கு அமெரிக்காவிடமிருந்து கிடைத்த மிக நுட்பப் போர்க் கருவிகளால் பாக்கிஸ்தான் கையோங்கிய நிலையில் இருக்கிறது.

நாம் ஏன் அப்படிப்பட்ட நுட்பமான கருவிகளை வாங்கவில்லை?

நமக்கு ஆயுதங்களை விற்க அண்யமாக உள்ள நாடு களிடமிருந்து தேவையானவற்றை வாங்கிக் கொண்டு தானிருக்கின்றோம். கார்கில் போரில் வெற்றிக்கு வழி கோலிய மிராஜ் விமானங்களை பிரான்சு நாட்டிலிருந்தும் போபர்சு பீரங்கியை சுவீடன் நாட்டிலிருந்தும்தான் நாம் வாங்கினோம். நாம் பணம் கொடுத்தாலும் ஆயுதங் களைக் கொடுக்க வேண்டுமே?

ஏன் காசு கொடுத்தால்—ஆயுதம் கொடுக்க வேண்டியது தானே?

மற்ற பொருள்களைப் போல், போர்க் கருவிகளை வாங்கிவிடமுடியாது. கருவிகளை உற்பத்தி செய்து வைத்திருந்தாலும், விற்பதற்கு அந்த நாட்டு அரசு அனுமதியளித்தால்தான் விற்க முடியும், நாம் வாங்கவும் முடியும்.

கேட்டால் கொடுக்க மாட்டார்களா?

வேண்டியவர்களாக இருந்தால் கொடுப்பார்கள். தங்களை விஞ்சி விடுவார்கள் என்ற அச்சமிருந்தால் அந்த நாட்டுக்கு ஆயுதங்களை விற்க மாட்டார்கள். இதெல்லாம் பெரிய செய்திகள்—இப்போது உங்களுக்கு வேண்டாம்.

இராணுவ பலத்தில் இந்தியாவும்— பாக்கிஸ்தானும் எந்த நிலையில் உள்ளன? மலர்விழி கேட்டாள்.

இதெல்லாம் இராணுவ இரகசியங்கள். இவற்றை எல்லாம் வெளிப் படையாக அறிவிக்க மாட்டார்கள். என்றாலும் மக்களிடம் நம்பிக்கையும்— அச்சமின்மையும் ஏற்பட வேண்டுமென்பதற்காக ஒரு கணக்கைக் கொடுப் பார்கள்.

மிலிட்டரி பேலன்ஸ் 97-98 கொடுத்திருக்கும் தகவல் இது :—

| | படை / கலன்கள் | இந்தியா | பாக்கிஸ்தான் |
|---|---|---|---|
| 1. | தரைப்படை | 9,80,000 | 5, 20,000 |
| 2. | டாங்கிகள் | 3314 | 2120 |
| 3. | பீரங்கிப் படை | 4175 | 1590 |
| 4. | விமானப் படை | 1,10,000 | 45, 000 |
| 5. | போர் விமானங்கள் | 777 | 429 |
| 6. | ஹெலிகாப்டர்கள் | 34 | 20 |
| 7. | கப்பற் படை | 55.C00 | 22, 000 |
| 8. | நீர்மூழ்கிக் கப்பல்கள் | 17 | 9 |
| 9. | அதிரடி போர்க் கப்பல்கள் | 6 | 3 |
| 10. | துணை போர்க்கப்பல்கள் | 18 | 8 |

அட! இந்தியா எல்லாவற்றிலுமே பாக்கிஸ்தானைவிட அதிகமாகத்தான் வைத்திருக்கிறது. இருந்தாலும் பாக்கிஸ்தான் நம்மிடம் அடிக்கடி வாலாட்டுகிறதே...எப்படி?

காரணங்கள் பல உண்டென்றாலும் ஒன்றைச் சொல்கின்றேன். சின்னக் குழந்தைகள் எதையாவது கேட்டு அழுதால், ஐந்து கண் பூதம் வருகிறதென்று அச்சுறுத்துவதில்லையா? அப்படிப் பாக்கிஸ்தானில் மக்கள் தேவையை நிறைவு செய்ய முடியாத ஆட்சியாளர்களுக்கும், எல்லா அதிகார பலத்தோடும், வசதிகளோடும் வாழ நினைக்கும் இராணுவத் தலைமையினருக்கும், மக்களைக் குறை கூற வாய் திறக்கவிடாமல் மடக்கி வைத்திருக்க அவர்களுக்குக் காட்டக் கிடைத்திருக்கும் பூச்சாண்டி இந்தியாதான். நம்மைச் காட்டியும், நமக்கெதிராக மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி விட்டுத் திசை திருப்பியுந்தான் பாக்கிஸ்தான், தன் நாட்டு மக்களின் தேவைகளை நிறைவேற்றித் தர முடியாத தன் இயலாமையை மூடி மறைத்துக்கொண்டு வருகிறது.

நல்ல ஏமாற்றுக் காரர்களாக இருப்பார்கள் போலிருக்கிறதே என்றாள் மலர்விழி.

அங்கே பொருளாதாரம் அதல பாதாளத்திற்குச் சென்று கொண்டிருக்கிறது. பாக்கிஸ்தான் ஆட்சி தலையே மூழ்கும் கடனிலும், அனைத்து நாட்டுப் பொது நிதியத்தின் உதவியிலுந்தான் ஓடிக் கொண்டிருக்கிறது.

அப்படித்தானா? என்றார்கள் இருவரும்.

கடந்த பத்தாண்டுகளில் இன்டர் நேஷனல் மானிட்டரி பண்டு என்னும் உலக நாடுகள் பொது நிதியத்திலிருந்து பதினேழு முறை அவசரக் கடனுதவி பெற்றிருக்கிறது. அதே காலத்தில் நாற்பத்தைந்து முறை தன் நாட்டு நாணயத்தின் மதிப்பைக் குறைத்திருக்கிறது பாக்கிஸ்தான்.

இந்தியா அப்படிச் செய்யவில்லையா? உலகில் மிகச் சில நாடுகளைத் தவிர்த்து, பல நாடுகளிலும் நாணய மதிப்புக் குறைப்பு நடந்திருக்கிறது. இந்தியாவிலும் நடந்திருக்கிறது. ஆனால் இத்தனை முறைகளல்ல.

## பீரங்கி ...?

போபர்ஸ் பீரங்கிதான் இந்தச் சண்டையில் பயன் படுத்தப் பட்டதாமே? அப்புறம் வழக்கு இலஞ்சம் என்றெல் லாம் கூட தொலைக்காட்சியில் சொன்னாங்களே அது என்ன தாத்தா? என்றாள் மலர்விழி.

வழக்கெல்லாம் வேண்டாம் தாத்தா—பீரங்கி எப்படி வெடிக்கப்படுகிறது என்பதை மட்டில் கூறுங்கள் என்றான் மணிவண்ணன்.

உங்களுக்கு அது தெரிந்தால் போதும் போபர்ஸ் விவகாரமெல்லாம் வேண்டாம்.

சரி தாத்தா என்றாள் மலர்விழியும்.

கார்கிலில், எல்லைக் கோட்டை ஒட்டியிருக்கும் இந்திய நிலைகளிலிருந்து 130. எம். எம். பீரங்கியால் சுடுகிறார்கள்.

எம். எம். என்றால் என்ன தாத்தா?

"பள்ளிக் கணக்குப் போடப் பயன்படுத்துகிறோமே அளவுச் சட்டம் (Scale) அதிலிருக்குமே.

எம். எம். என்றால் மில்லி மீட்டர். இது தெரியாதா என்றாள் மலர்விழி.

அவ்வளவு நீளந்தானா இருக்கும் பீரங்கி? படங்களில் பார்த்தால் பெரியதாகத் தெரிகிறதே!

மணி! விளையாட்டு பீரங்கிதான் நீ கூறும் நீளத்தில் இருக்கும். போரில் பயன்படுத்தும் பீரங்கியின் வாய் விட்டத்தின் அளவு இது.

இந்தப் பீரங்கி எவ்வளவு தூரம் தாக்கும் தாத்தா?

நீங்கள் கூறுவது போபர்ஸ் பீரங்கி தானே?

இல்லை. அது இல்லை. 'இந்தியன் பீல்டு கன்'. (Indian Field Gun) எனப்படும் பீரங்கி. இது போபர்ஸ் பீரங்கியை விடக் குறைந்த ஆற்றலுடையது.

கட்டபொம்மன் சினிமாவில் காட்டுகிறார்களே அப்படிப்பட்டதாக இருக்குமா?

அந்தப் பீரங்கிகளெல்லாம் இந்தக் கால போர்களுக்கு ஒத்து வராது. இனி அவை காட்சிப் பொருளாகத்தான் இருக்கலாமே தவிர. களத்திற்குப் போக முடியாது. கார்கில் களத்தில் பீரங்கியால் சுடுவதென்பது நாம் பட்டாசு கொளுத்துவதைப் போன்றதல்ல. அதற்கான நடைமுறைகள் உண்டு.

அவை என்ன தாத்தா?

விமானப் படைமூலம் திரட்டப்பட்ட தகவல் அடிப் படையில் கட்டளை முகாமிலிருந்து களத்திற்குத் தகவல் தரப்படும். அவர்கள் கூறும் திசையில் சுடவேண்டும். கிடைக்கும் செய்தியைப் பதிவு செய்து கொண்டு' செய்தியைப் பெற்றவர், பீரங்கியைக் கையாள் பவருக்குத் தெரிவிப்பார். அவர் சுட வேண்டிய திசை நோக்கிப் பீரங்கியை நிலைப்படுத்துவார். மீண்டும் கட்டளை முகாமி லிருந்து தகவல் வரும். அதைப் பெற்றவுடன் சுடும்படி ஆணை பிறப்பிப்பார். பீரங்கி வெடிக்கும்.

ரொம்ப சத்தம் கேட்கும் இல்லையா தாத்தா?

கேட்கத்தான் செய்யும். நாம் வெடிக்கும் பட்டாசே காதைச் செவிடாக்கிவிடும் போலிருக்கிறதே, பீரங்கி வெடிச் சத்தம் கொஞ்சமாகவா இருக்கும்? பீரங்கி வெடிக் கும் போது நாம் பக்கத்தில் இருந்தோமானால், பல்லிழந்து செவிடாகித்தான் வருவோம். அப்படியா? காதைப் பொத்திக் கொண்டு, வாயைத் திறந்து வைத்துக் கொண் டிருந்தால் பிழைத்துக் கொள்ளலாம்.

பீரங்கியிலிருந்து வெளிப்படும் குண்டு அரைமணித் துளியில் இலக்கை தாக்கிவிடும். இந்தப் பீரங்கிக் குண்டு ஒன்றின் விலை எவ்வளவு தெரியுமா?

பட்டாசு விலையைப் போல் நூறு மடங்கு இருக்குமா? இதன் விலையைப் பட்டாசு விலையோடு ஒப்பிடவே கூடாது. பீரங்கிக் குண்டு ஒன்று பன்னிரண்டாயிரத்து எழுநூறு ரூபாய்; தெரியுமா?

அவ்வளவா! என்று அதிர்ந்து போனாள் மலர்விழி. இதற்கே இப்படி வாயைப் பிளக்கிறீர்களே, போபர்சு பீரங்கிக் குண்டின் விலை இதைவிட அதிகமாயிற்றே! சண்டை என்றாலே காசைக் கொட்டித்தான் ஆக வேண்டும்.

இந்தப் போருக்கு எவ்வளவு செலவாகியிருக்கும்? சரியாகக் கூறமுடியாது. ஏறத்தாழ ஆறாயிரம் கோடி ரூபாய் செலவாகியிருக்கலாம்.

எவ்வளவு பணம் பாழாகியிருக்கிறது? என்றாள் மலர்.

பணத்தை விடு. எவ்வளவு உயிர்கள் பறிக்கப்பட்டிருக்கின்றன? எத்தனைக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன? நாட்டின் வளர்ச்சி எவ்வளவு கீழே போயிற்று? மனிதம் இல்லாத மனிதர்களால் உலகின் அமைதி எவ்வாறெல்லாம் கெடுக்கப்பட்டிருக்கிறது. முன்னேற்றமே அல்லவா முடங்கிப் போகிறது?

ஆமாம் தாத்தா! உலகில் சண்டை மட்டில் இல்லாதிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

இதற்காகத்தானே நேரு பாடுபட்டார். இன்று உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவர் என்று யார் இருக்கிறார்கள்? இந்தக் கேள்வியுடன் அமைதியானார் தாத்தா. பிள்ளைகள் சிறிது நேரம் அமைதியாகவே உட்கார்ந்திருந்தார்கள்.

ஏன் உட்கார்ந்திருக்கின்றீர்கள்? கதைதான் முடிந்து விட்டதே. வேறு வேலை இருந்தால் போய்ப் பாருங்கள் என்றார் தாத்தா.

இல்லை கதை முடியவில்லை. இன்னும் இருக்கிறது. ஒரு பகுதிதான் முடிந்திருக்கிறதென்றாள் மலர்.

நமது படை எல்லா முனைகளையும் கைப் பற்றி ஊடுருவல் காரர்களை வெளியேற்றி வெற்றிக் கொடி நாட்டி விட்டதே! எஞ்சியிருந்த ஒரு சிலருக்கும் ஜூலை 16-ஆம் நாளை கெடு வைத்து எல்லாரையும் வெளியேற வைத்து விட்டதே.

போர் முடிந்துவிட்டதென்பதென்னவோ சரிதான் ஆனால். நமது வீரர்களைப் பற்றி ஒன்றும் கூறவில்லையே?

கதை என்னும் வெள்ளம் முகத்து வாரத்தை இன்னும் உடைக்கவில்லையே தாத்தா என்றான் மணி

என்ன மணி! என் கதையை என்னிடமே விடுகிறாய்? சரி தமிழ்நாட்டு வீரர்களில் வீரப்போர் புரிந்து மாண்டவர்களைப் பற்றிப் பார்ப்போம். நேரமிருந்தால் மற்றவர்களைப் பற்றியும் கூறுகிறேன்.

அப்படியே செய்யுங்கள் தாத்தா என்றனர் இருவரும். முதன்முதலாக யாரிடமிருந்து தொடங்குவது என்றுதான் சிந்திக்கின்றேன். என்றார் தாத்தா.

எல்லாரும் நம்ம வீரர்கள்தானே தாத்தா. இதில் முன்னென்ன பின்னென்ன?

சரி. நினைவுக்கு வருபவர்களைப் பற்றி வரிசையாக கூறிவிடுகிறேன். குடிக்க அம்மாவிடம் வெந்நீர் வாங்கி வருகிறீர்களா?

இதோ கொண்டுவருகிறேன் என்று ஓடினான் மணி. அம்மா! அம்மா! தாத்தாவுக்குக் குடிக்க வெந்நீர் வேண்டும்!

இந்தா, கொண்டுபோய் கொடு என்று கொஞ்சமாக வெந்நீர் கொடுத்தாள் அன்னம்.

என்னம்மா இவ்வளவு கொஞ்சமாக கொடுக்கின்றீர்கள்?

கொண்டுபோய் கொடு சிற்றுண்டியும் தேநீரும் கொண்டு வருகின்றேன் அதிகமாக வெந்நீர் குடித்து விட்டால் இதையெல்லாம் வேண்டாம் என்று கூறிவிடுவார்கள் என்று விளக்கம் கூறினாள் அன்னம்.

அப்படியானால் எல்லாவற்றையும் ஒன்றாகவே எடுத்துச் செல்வோமே என்றான் மணி.

அதுவும் சரிதான். கொஞ்சம் பொறு. இதோ வந்து விடுகிறேன். உங்களுக்கும் எடுத்துவைக்கிறேன் மூன்று பேருமே சாப்பிட்டபடியே பேசுங்களேன் என்று கூறி மூன்று தட்டுகளில் சிற்றுண்டியை வைத்து அம்மூன்றையும் மற்றொரு பெரிய தட்டில் வைத்துக் கொடுத்தாள் அன்னம். அம்மா! தண்ணீரும் வெந்நீரும் நீங்க எடுத்து வாங்க. சாப்பிட்டபின் தேநீர் கொடுங்க என்றான் மணி.

அப்படியே செய்வோம். நீ எடுத்துச் செல். நான் வருகிறேன் என்று அவனை அனுப்பிவைத்தாள். தட்டோடு சென்ற மணிவண்ணனைப் பார்த்து என்னப்பா இதெல்லாம்? என்றார் தாத்தா சிற்றுண்டி—அம்மா தான் கொடுத்தார்கள் இந்தாருங்கள்—சாப்பிடுங்கள் என்று தட்டை எடுத்துவைத்தான். அப்படியானால் கதை நாளை தான் தொடரப்படும்.

ஏன் தாத்தா?

உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டு என்பது பழமொழி தெரியுமா? என்றார் தாத்தா. மூவரும் சிரித்தனர்.

# களம் - 3

## விமானிகளின் வீரம்

### நிசிகேதன்

நமது படைகளின் நடவடிக்கைகள் எல்லாம் நமது எல்லைக்குள்ளேயேதான் என்றாலும் பாக்கிஸ்தான் தனது எல்லையிலிருந்தே நம் பகுதிக்குள் பீரங்கியாலும், ஏவு கணைகளாலும் சுட்டுக்கொண்டுதானிருந்தது. ஊடுருவி யுள்ள தங்களது ஆட்கள் மீதான நமது படைகளின் வேகத்தை மட்டுப்படுத்துவது இத்தாக்குதலின் முதலாவது நோக்கம் கடந்த மே 27-ஆம் நாள் மிக். 27 போர் விமானத்தை ஓட்டிச் சென்றார் ஃபிளைட் லெப்டினன்ட் கே. நிசிகேதா. விமானத்தில் பழுது ஏற்பட்டுவிட்டது. அது நிலைகுலைந்துதள்ளாடியது. இனியும் விமானத்திற் குள்ளேயே இருந்தால் பிழைக்க முடியாதென்ற முடிவுக்கு வந்த நிசிகேதன் வெளியே குதிக்கின்றார்.

ஐயய்யோ... கீழே விழுந்தால் கால் ஒடிந்து உயிருக்கே ஆபத்தாச்சே என்று அலறினான் மணிவண்ணன்.

''விமானத்திலிருந்து குதிப்பவர்கள் இப்படியெல்லாம் ஏற்படும்படியா குதிப்பார்கள்? பாராசூட் என்று கேள்விப் பட்டிருப்பாயே அதை விரித்துக்கொண்டு குதித்தால் அடி படாது. விண்ணிலிருந்து ஒரு பறவை சிறகை விரித்தபடி இறங்குவதுபோல் இதுவும். நிசிகேதனுக்கு இப்படி ஏதும் விபத்து ஏற்பட்டுவிடவில்லை. ஆனால், அவர் பாகிஸ்தான் படைவீரர்கள் அவரைப் பிடித்துச் சென்றுவிட்டனர். அப்படியும் அவர் தன் துப்பாக்கியால் எதிரிகளை நோக்கிச்

கூடத்தான் செய்தார். அவர்கள் பலர். இவரோ தனி ஆள். அவர்கள் சுற்றி வளைத்துக் கொண்டனர், வேறு வழியின்றி சரணடைந்தார்.

நம் எல்லைக்குள் பாக்கிஸ்தான் படையினர் எப்படி வந்து இவரைப் பிடித்தனர் ?

நமது விமானம் பறந்தது என்னவோ நம் எல்லைக்குள் தான். பழுதாகி விழுந்தபோது அது பாக்கிஸ்தான் எல்லைக்குள் சென்றுவிட்டது. நிசிகேதன் சென்ற விமானம் திரும்பாததால், அவரைத் தேடி மிக்-21 விமானத்தை ஸ்க்வாட்ரன் லீடர் (விமானப் படையின் ஒரு குழுத் தலைவர்) ஓட்டிச் சென்று தாழ பறந்து தேடினார்: அந்த விமானத்தைப் பாக்கிஸ்தான் 'ஸ்டிங்கர்' என்னும் அமெரிக்கத் தயாரிப்பு ஏவுகணைமூலம் சுட்டு வீழ்த்தியது. அதை ஓட்டிச் சென்ற விமானப் படைக் குழுத் தலைவர் ஏ. அகூஜா உயிரிழந்தார். அவருடைய உடலைப் பின்னர் பாக்கிஸ்தான் நம்மிடம் ஒப்படைத்தது. ஒப்பற்ற ஒரு வீரரின் உயிரையும் விமானத்தையும் இழந்தோம் நாம்.

## சிட்டுக் குருவியின் சீரான பணி

நாம் இலக்கியங்களில் படித்த போர்களில் குறிப்பிடப் பட்டது நாற்படை, காலாட்படை, யானைப் படை, குதிரைப் படை, தேர்ப்படை என்பவை அப்படைப் பிரிவுகள். அந்த நாற்படைக் காலம் மலையேறிவிட்டது. இது முப்படைக் காலம். பொதுவாக காலப் போக்கில் கூடும் என்பதுதான் மரபு. ஆனால் படைக் கணக்கு மட்டுந் தான் குறைந்திருக்கிறது. தற்போது தரைப்படை, கடற் படை மற்றும் விமானப் படைகள்தாம் வழக்கில் உள்ளன. தரைப் படைக்கு மிக்க உதவியாகவும், எதிரிகளின் இதயத் துடிப்பை அதிகப்படுத்துவதாகவும் கருதப்படுவது விமானப்

படை. போரின் வெற்றி தோல்வியை உறுதி செய்வதில் விமானப் படையின் பணி சிறப்பிடம் பெறுகிறது

'ஒற்று' என்று முன்காலத்தில் கூறப்பட்டதே— அதைத்தான் தற்போது உளவு என்று கூறுகிறோம். ஆதியில் ஆட்கள் மட்டுமே உளவறிந்தார்கள். தற்போது ஹெலிகாப்டர்களும், விமானங்களும்கூட அப்பணியைச் செய்கின்றன. அப்படி கார்கிலில் ஊடுருவி மலை முகடுகளில் பதுங்கு குழிகளை அமைத்துக் கொண்டிருந்த எதிரிகளின் மறைவிடங்களைக் கண்டறிவதில் ஈடுபட்டது நமது விமானப் படையின் ஹெலிகாப்டர் ஒன்று, அதில் பறந்து பணி செய்தவர்கள்தாம் சூல்ஃபி மற்றும் 'ஓக்' என்பவர்கள்.

இவர்கள் குண்டு போட மாட்டார்களா? என்றான் மணிவண்ணன்.

குண்டுபோடும் ஹெலிகாப்டர்கள் வேறு, இவர்கள் ஓட்டிச் சென்று உளவறியும் ஹெலிகாப்டர்தான். எதிரிகளிருக்கும் இடங்களை கண்டறிந்து, படமெடுத்து வந்து தகவல் தருவதுதான் இவர்கள் பணி. உளவறியப் பயன்படுத்தப்படும் குட்டி ஹெலிகாப்டர்தான் ராணுவ சீட்டா.

சீட்டா என்றால் சிறுத்தையல்லவா? என்றாள் மலர். ஆமாம் இந்த விமானத்தின் செயல், பாய்ச்சல் சிறுத்தைக்கு ஒப்பானது. பிரெஞ்சு நாட்டிடமிருந்து வாங்கப்பட்டிருக்கும் இந்தவகை ஹெலிகாப்டர்களை நமது ராணுவம் 'லாமா' என்றும் குறிப்பிடுகிறது. இதைத்தான் உளவறிய ஓட்டிச் சென்றார்கள். இதற்கு இரண்டு இயந்திரங்கள் உண்டு.

அது எதற்கு இரண்டு?

பணியில் ஈடுபட்டிருக்கும்போது எதிரிகள் தாக்குதலுக்கு ஆட்பட்டால், ஒன்று பழுதானாலும், மற்றதை இயக்கிப்

பறந்து வரலாமல்லவா இதற்காகத்தான். விமானங்களுக்கும்கூட இரண்டு இயந்திரங்கள் உண்டு.

கார்க்கில் 5140 முனையில் வேவு பார்க்கச் சென்ற ஹெலிகாப்டரை ஓட்டிச் சென்றவர் சூல்ஃபி. நிலைகளை படமெடுப்பவர் ஓக். இவர்கள் வேவு பார்த்துப் படம் எடுப்பதற்காக தாழ்வாக பறந்திருக்கிறார்கள். விடுவார்களா எதிரிகள்? படங்களை எடுத்துக் கொண்டு திரும்பும் போது எதிரிகள் இலக்கின்றீர் சரமாரியாக சுட்டுத் தள்ளியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நேரங்களில் தான் ஓட்டுபவரின் திறமை வெளிப்படும். சூல்ஃபி அப்படி ஓடித்து குண்டுகளிலிருந்து தப்ப முயன்றார். சுடுவது நின்றபாடில்லை. டோலோலிங் பகுதி அது. அங்கிருந்த ஒரு மறைவான சிறிய ஹெலிகாப்டர் இறங்கு தளத்தில் இறக்கி விட்டார்கள். எதிரிகள் சுட்டு ஓய்ந்தவுடன், இரவில் அவர்கள் எதிர்பாராத நேரம் பார்த்துப் புறப்பட்டு வந்தார்கள்.

''கரணம் தப்பினால் மரணம்'' என்பார்களே விமானங்களை ஓட்டிச் செல்பவர்களுக்கே மிகச் சரியாக பொருந்தும் சூல்ஃபியும், ஓக்கும் சென்று எதிரிகளின் பங்கர்களைப் படம் எடுத்து வந்தது நமது தாக்குதல் வியூகம் வகுக்கப் பெரிதும் உதவியாக இருந்தது. விமானத் தாக்குதல்களையும், பீரங்கித் தாக்குதல்களையும் துல்லியமாக மேற்கொள்ள முடிந்தது. தரைப்படை வீரர்களை முகடுகளுக்கு அனுப்பும் வழியை முடிவு செய்து, உயிரிழப்பைக் குறைக்க முடிந்தது.

வெல்டன் சூல்ம்பி, ஓக் என்றான் மணிவண்ணன்.

'' நீ என்ன படைத் தளபதியா? நீ போய் வெல்டன் சொல்கிறாய்.'' என்றாள் மலர்.

பாராட்டு எங்கிருந்தும் வரலாம். வீரர்களைப் பாராட்டினால் தான், அவர்களுடைய குடும்பங்களைப் பாதுகாப்

போம் என்ற நம்பிக்கையை ஊட்டினால், அவர்களின் ஆற்றல் கூடும் வீரம் விளையும் என்றார் தாத்தா.

தாத்தா இன்னும் சொல்லுங்கள் என்றான் மணி வண்ணன். மாண்ட நம் மறவர்களைப் பற்றிக் கூறுவதாகக் கூறிவிட்டு. இந்தக் கதையை முதலில் கூறி விட்டேன் இல்லையா?

சொல்லுங்க - எல்லாவற்றையுமே சொல்லுங்கள். எல்லாரும் இந்திய வீரர்களே. நமது உரிமையை, நாட்டின் மானத்தைக் காப்பவர்களே என்றாள் மலர்.

உண்மைதான். நான் வீரர்களைப் பிரித்துப் பார்க்க வில்லை. தமிழக வீரர்களைப் பற்றிய குடும்பவரலாறுதான் எனக்குக் கொஞ்சம் தெரிந்தது. அதனால் தான் முதலில் அவர்களைப் பற்றி கூறி விடலாமென்றெண்ணினேன்.

சரி, கூறுங்கள் தாத்தா என்றான் மணிவண்ணன்.

மீண்டும் சிறிதுநேரம் சிந்தித்தார். பின் தொடங்கி னார்.

## மாண்ட மறவர்கள்

## மேஜர் சரவணன்

நல்லது, என்ற சொல்லை தன்னோடு ஒட்ட வைத்துக் கொண்டிருந்தாலும் நாகப்பாம்பு தம்மை அச்சுறுத்துவதில் முதன்மையானது. படமெடுத்து எழும்பி நிற்கும் நிலையில் அதனைப் பார்க்கும் எவரையும் அச்சம் ஆட்கொண்டு விடும். பாம்பென்றால் படையும் நடுங்கும். என்னும் பழ மொழி பட்டறிவில் விளைந்து வந்தது தான். அப்படிப்பட்ட அச்சத்தை ஏற்படுத்தும் நாகப் பாம்பை அடிக்க அஞ்சிய வர்கள் தங்கள் அச்சத்தை மறைக்கும் மாற்றாக, அதை

அடிக்கவே கூடாதென்றும், அடித்தால் என்ன விளைவெல்லாம் ஏற்படும் என்பதற்குப் பல இட்டுக் கட்டிய கதைகளையும் உலவ விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

பாம்பை அடித்துக் கொன்றுதான் ஆக வேண்டுமா? மலர் விழி கேட்டாள்.

பாம்பும் ஓர் உயிரினம். இயற்கை அதன் தற்காப்பிற்காகப் பல்லை யொட்டி, நச்சுப் பையை வைத்திருக்கிறது. பாம்பு நம்மால் இன்னலுறும்போது நம்மைக் கடிக்க, நஞ்சேறி, நாம் உயிர் துறக்கின்றோம். பாம்பு கடித்தால் உயிர் போகும் என்ற அச்சம், அதை நம்முடைய பகையாகக் கருதவும், பார்த்தவுடன் கொல்ல வேண்டுமென்ற எண்ணத்தையும் ஏற்படுத்தி விட்டது. நல்ல பாம்பு மட்டுமல்ல எந்த பாம்பும் நம்மைத் தேடி வந்து கடிப்பதுமில்லை. கொல்ல நினைப்பதுமில்லை. நாம் எப்படிப் பாம்பைக் கண்டு அஞ்சுகிறோமே, அப்படித்தான் பாம்பும் நம்மைக் கண்டு அஞ்சுகிறது. தப்பும் முயற்சியில்தான் நம்மைக் கொத்தத் துணிகிறது.

என்ன தாத்தா படை வீரர்களைப் பற்றிக் கூறுங்கள் என்றால், பாம்பைப் பற்றிக் கூறுகிறீர்கள்? என்றான் மணிவண்ணன். சொல்கிறேன், இப்பொழுது இங்கொரு பாம்பு வருவதாக வைத்துக் கொள்வோம் நீ என்ன செய்வாய் சொல், என்றார் தாத்தா.

ஐயோ! பாம்பா? வீல் என்று கத்திக் கொண்டு வெளியே ஓடி விடுவேன் என்றான் மணிவண்ணன்.

ஒரு எட்டு வயது சிறுவன் ஒரு நாகப் பாம்பை அடித்துக் கொன்றால் அவனைப் பற்றி என்ன நினைப்பீர்கள்? என்று கேட்டார் தாத்தா.

ஒன்றும் நினைக்க மாட்டேன் நான். ஏனென்றால் எட்டு வயது பையன் நாகப் பாம்பைக் கொல்வதென்பது கதைகளில் மட்டுமே நடக்கக் கூடியது என்றாள் மலர்.

அது தானே! பையனாவது பாம்பை அடிப்பதாவது என்று ஒத்தூதினான் மணி.

நான் கூறுவது நடந்த கதை. புராணக் கதை அல்ல.

உண்மையாகவா நடந்தது? என்று அச்சம் கலந்த வியப்போடு கேட்டாள் மலர்.

ஆம் அவன் தந்தை அவனை வளர்த்த முறை அப்படி? அச்ச விதையை அவன் மனத்துள் ஊன்றவில்லை அவர்.

யார் அந்தப் பையன்? அவன் பெற்றோர் யார்? அவனுக்கும் கார்கில் போருக்கும் என்ன தொடர்பு?

தொடர்பு இருப்பதால்தானே இப்பொழுது கூறுகிறேன் அந்த வீரச் சிறுவனின் பெயர் சரவணன். அவன் தந்தை இராணுவத்தில் லெப்டினன்ட் கர்னலாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பெயர் ஏ. மாரியப்பன் தாயார் பெயர் அமிர்தவல்லி சரவணனின் பெரியப்பாகூட இராணுவத்தில் பணியாற்றி மேஜராக ஓய்வு பெற்றவர்.

அவர் பெயர் என்ன தாத்தா?

இரத்தினம் சரவணனின் சகோதரி சித்ராகூட இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றவே விரும்பினார். இப்போது மலர் குறுக்கிட்டாள் "பார்த்தாயா மணி! பெண்கள் படையில் சேர முடியாது என்றாயே?"

அதுதான் தாத்தா அப்போதே சொல்லிட்டிங்களே. இப்போது ஏன் குறுக்கே பேசுகிறாய்? என்றான் மணி. தாத்தா தொடர்ந்தார். ஆனால் அவர் அப்படிச் செய்ய முடியாதபடி நண்பரொருவர் தடுத்துவிட்டார்.

சரி தாத்தா சரவணனைப் பற்றிக் கூறுங்கள்? சரவணன் 1972-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10-ஆம் நாள் இராமேசுவரத்தில் பிறந்தார். தந்தை இராணுவத்தில் பணியாற்றியதால் அவரால் ஒரே ஊரில் கல்வி கற்க முடிய

வில்லை தந்தை பணியாற்றிய பெல்காம்; கண்ணனூர்; குருதாஸ்பூர் கயா என ஊர் மட்டுமல்ல மாநிலமே மாறி மாறிப் படித்தார். கடைசியாகத் தந்தை இலங்கைக்குச் சென்று திரும்பிய அமைதிப் படையில் பங்கேற்றபின் பெங்களூர் வந்தார்.

அவரைத் தொடர்ந்து அவர் மரணமும் பெங்களூர் வந்திருப்பதை யார் அறிவார்? ஒரு நாள் சரவணனின் தந்தை மாரியப்பன் சாலை விபத்தில் சிக்கி உயிரிழந்தார். ஒரு ராணுவ வீரருக்கு ஏற்பட்ட அவலமான இறப்பு இது.

''அச்சச்சோ?'' என்றாள் மலர். அப்புறம் என்றான் மணி. தந்தை மறைந்தபின் அவர்கள் குடும்பத்திற்குப் பெங்களூரில் என்ன வேலை இருக்கிறது? சொந்த ஊரான திருச்சிக்கு வந்தனர் குடும்பத்தினர். சரவணன் திருச்சி செயின்ட்ஜோசப் கல்லூரியில் பொருளாதாரம் படித்தார்.

பிறந்தது ராமேசுவரம் என்றீர்களே? பிறந்தது என்னவோ ராமேசுவரந்தான். சொந்த ஊர் திருச்சிதான். அவர் தந்தை தான் பல இடங்களில் பணியாற்றி இருக்கிறாரே?

சரவணன் நல்லா படிப்பாரா தாத்தா? இது மணி வண்ணன் கேள்வி நன்றாகப் படித்தது மட்டுமல்ல. பல திறமைகளையும் அவர் கொண்டிருந்தார். இயல்பாகவே அவர் பெற்றிருந்த நல்ல பண்புகள் அவருக்குத் துணை செய்தன.

செயற்கரிய செய்வதில் ஆர்வம் அதிகமுள்ளவராக இருந்தார். மாணவனாக இருந்த போதே மலையேற்றம், காடுகளில் பயணமென வீரச் செயல்களில் ஈடுபட்டவர்.

கல்லூரியில் தேசிய மாணவர் படையில் சேர்ந்து பயிற்சியும் பெற்றிருந்தார். இவ்வளவுதான் என்று எண்ணி விடாதீர்கள். கல்லூரி மாணவர் பேரவைத் தலைவராகவும்

தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாரென்றால் அவருடைய தலைமைத் தன்மையைத் தெரிந்து கொள்ளலாமே?

கெட்டிக்காரர்தான் சரவணன் என்றாள் மலர்.

ஒரு முறை காட்டுப் பயணம் மேற்கொண்டிருந்தனர் மாணவ மாணவியர் கூடவந்த மாணவியால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டபோது, அவளைத் தன் தோளில் சுமந்து பத்து கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்தாராம் இவர்.

அவ்வளவு தூரமா? முடியுமா தாத்தா என்றாள் மலர். பத்து கி. மீ. என்பது மிகைப் படுத்தப்பட்டதென்றே வைத்துக் கொள்வோம். ஒரு கிலோ மீட்டர் தூரம் என்றா லும்கூட அது என்ன சாதாரண செயலா?

நம்மால் பத்து மீட்டர் தூரமே தூக்கிக் கொண்டு நடக்க முடியாதே என்றான் மணி.

உண்மைதான். சரவணன் படித்த கல்லூரியின் முதல்வர் அருள் தந்தை முனைவர் ஜான் பிரிட்டோ என்ன கூறினார் தெரியுமா?

என்ன கூறினார்?

"சரவணன் ரொம்ப பண்பான பையன். மிகவும் திறமைசாலி அவன் எங்கள் கல்லூரியில் படித்தது எங்களுக் கெல்லாம் பெருமை தரக் கூடியது." என்று கூறினார். இதைத்தான் பாராட்டு புகழ் என்று கூற முடியும். உண்மை யில் சரவணன் ஒரு புகழ்த் தோன்றல்தான்.

சரி தாத்தா அவர் படையில் சேர்ந்து செய்த பணி பற்றிக் கூறவில்லையே!

தந்தையின் இராணுவப்பணி சரவணனின் எண்ணத்தை ஈர்த்தது. தானும் தனது பெரியப்பா, அப்பாவைப் போன்று படைவீரனாக வேண்டுமென்று விரும்பினான்

சரவணன். அந்த எண்ணம் பட்டுப் போகாமல் பசுமையாக வளர்ந்து வந்தது. 1992-ஆம் ஆண்டு பட்டப் படிப்பை முடித்தவுடன் ஒரு தனியார் நிறுவனத்தில் அங்காடி (Marketing Depht) துறையில் பணியாற்றினார்.

படையில் சேர விரும்பிய சரவணன், அதற்காக மூன்று முறை எஸ்.எஸ்.சி. என்னும் தேர்வை விடாப் பிடியாக எழுதி மூன்றாவது முறை தேர்வு பெற்றார்.

எல்லாக் கல்லூரியிலும் அந்தத் தேர்வு உண்டா தாத்தா? மணிவண்ணன் கேட்டான்.

அது கல்லூரி நடத்தும் தேர்வல்ல. இராணுவத்தில் சேர்வதற்கான தகுதி காணும் தேர்வு. அதில் வெற்றி பெற்றால் இராணுவத்தில் சேர்த்துக் கொள்வார்கள். சரவணனும் அப்படித்தான் இராணுவத்தில் சேர்ந்தார்.

அப்படியா...? நான் இராணுவத்தில் சேர வேண்டுமென்றாலும் தேர்வு எழுத வேண்டியிருக்குமா?

சாப்பிட்டு உடம்பை மட்டில் தேற்றிக் கொண்டால் போதும் என்று எண்ணியிருந்தாயா? என்றாள் மலர். தாத்தா தொடர்ந்தார். பயிற்சி எல்லாம் முடித்து 1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பதினோராம் நாள் சரவணன் பீகார் படைப் பிரிவில் (Regiment) இரண்டாம் நிலை லெப்டினட்டாக சேர்ந்தார். தன் திறமையால் படிப்படியாக லெப்டினன்ட் கேப்டன், மேஜர் எ[illegible]கே ஆண்டுகளில் உயர்ந்து விட்டார்

போர்க்களத்தில் இவர் எப்படிச் செயல்பட்டார்? சரவணன் போர்க்களத்தில் தலைக்கவசம் அணிந்து கொள்ள மாட்டாராம். ''ஏதோ ஒரு துப்பாக்கிக் குண்டில் என் பெயர் எழுதப்பட்டிருக்கும். அந்தப் புல்லட் நிச்சயம் என் உயிரைக் குடிக்கத்தான் போகிறது. கவசம் போட்டாலும் தப்பிக்க முடியாது என்று தன் தோழர்களிடம்

கூறுவாராம். எப்படி அவர் உயிரை நினைத்தார் என்பதை அவருடைய இச்சொற்கள் தெளிவுப்படுத்துகின்றன பாருங்கள்'' சாவைக் கண்டு அவர் அஞ்சவில்லை. அதை வரவேற்கவே காத்திருந்தார்.

போர்களத்திற்குப் போகும் சில மாதங்களுக்கு முன்னர் தன் தாய்க்கு அவர் எழுதிய கடிதத்தில் குறப்பிட்டது இது ''அம்மா! எங்கள் ரெஜிமென்டை காஷ்மீருக்கு அனுப்புகிறார்கள். ரொம்ப நாளாக நான் எதிர்பார்த்திருந்த வாய்ப்பு இது. உலகம் முழுதும் என்னைப் பற்றிப் பேசும்படி சாதனை செய்யப் போகிறேன்.'' இது வெற்றுரையல்ல. வீரவுரை சொன்னபடி செய்துவிட்டார் சரவணன்.

கார்கிலில் எல்லையை மீட்பதற்காக அனுப்பப்பட்ட படையணியில் கள பலியானவர் சரவணன். படாலிக்ஜுபர் பகுதியை மீட்பதற்காக நடந்த போரில் ஊடுருவல் காரர்களைச் சுட்டு வீழ்த்தியபடி விரைந்து முன்னேறிய வரை எதிரிகளின் குண்டு முதலில் கையைக் காயப்படுத்தியது. அதனால் அஞ்சவோ அயரவோ இல்லை. தொடர்ந்து முன்னேறினார். காயப்பட்டிருப்பதைப் பார்த்த மேல் அலுவலர் இவரைத் திரும்பிவிடும்படி கூறினார்.

திரும்பி வந்து விட்டாரா?

திரும்பி வரவா அவர் களத்திற்குப் போனார்? தொடர்ந்து முன்னேறினார்.

''குண்டடிபட்ட காயத்தோடு எவ்வளவு கஷ்டப் பட்டுப் போயிருக்கார்? அவங்களுக்கு வலியே தெரியாதா தாத்தா? போரிடும் வேகத்தில் வலியுணர்வு தோன்றுவதில்லை. வலியைப் போர்வீரர்கள் பொருட்படுத்துவதில்லை. சரவணன் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந்த போது. பகைவனின் துப்பாக்கிக் குண்டொன்று பின்னாலிருந்து வந்து அவருடைய மண்டைக்குள் புகுந்தது.

அடுத்து சில நொடிகளில் அவருடைய ஆவி வெளியேறி விட்டது. ஒரு மாவீரனை வீரமரணம் மணந்து கொண்டு விட்டது.

"தாத்தா அவருக்குத் திருமணமாகி விட்டதா?... அது தான் கூறினேனே அவரை வீர மரணம் மணந்து கொண்ட தென்று... அவருக்குத் திருமணம் செய்ய அவருடைய தாயும் உறவினரும் முயற்சி மேற்கொண்டிருந்த நேரந்தான் அது. பெண் பார்க்கும் படலம் தொடங்கியிருந்தது. இது குறித்துப் போர் தொடங்கும் முன்னர் அவருடைய தாயார் கடிதம் எழுதியிருந்தார். அவரும் ஜுலை மாதம் விடுப்பில் வரும்போது பெண்ணைப் பார்ப்பதாக எழுதி யிருந்தார். அதற்குள் மரணம் அவரை மணந்துகொண்டு விட்டது.

பாவம் தாத்தா சரவணன் என்றாள் மலர்விழி.

இதில் இன்னொரு கொடுமை என்ன தெரியுமா?

"என்ன தாத்தா? இருவரும் பதற்றத்துடன் கேட்டனர்.

மேஜர் சரவணனின் உடல் அப்போது கிடைக்கவே இல்லை. ஆனால் இறந்து விட்டதாக செய்திமட்டில் அவருடைய தாயாருக்குத் தரப்பட்டது. உடல் வராததால் அந்த பெற்ற மனத்தின் ஓரத்தில் ஒரு நம்பிக்கை. தன் மகன் களத்தில் எங்கேனும் போர் புரிந்து கொண்டிருப் பானோ என்று ஆனால் ஒரு மாத காலம் கடந்து மீட்கப் பட்ட சரவணனின் உடல் திருச்சிக்குக் கொண்டு வரப்பட்ட போது அந்தத் தாயின் நம்பிக்கை தகர்ந்து தரைமட்ட மாயிற்று.

திருச்சியில் சரவணனின் உடலுக்கு மத்திய எரி சக்தி அமைச்சர் அரங்கராசன் குமார மங்கலம் உட்பட பல அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும் அஞ்சலி செலுத்தினர். அவர் குடும்பத்திற்கு தமிழக அரசு ஐந்து லட்சம் நிதி

உதவியது. மரணத்திற்குப்பின் மேஜர் சரவணனுக்குக்கடந்த ஆகஸ்ட் பதினைந்தில் வீர சக்கர விருது வழங்கப்பட்டது.

மேஜர் சரவணன் இன்று நம்மிடையே இல்லை. ஆனால் அவருடைய வீரம் விளைத்த புகழ் நாடெங்கும் பரவியிருக்கிறது. வாழ்ந்தபோது கிடைத்ததைவிட, வரலாறான பின் அவர் புகழ் மனம் வீசுகிறது. நாடே அவரைப் பற்றிப் பேசுகிறது.

## முகிலன் சுப்ரமணியன்

கார்கிலில் ஊடுருவியவர்கள் உச்ச அளவாகப் பார்த்தாலும் ஓராயிரம் பேர் இருக்க மாட்டார்கள். ஆனால் அவர்களை அப்புறப்படுத்த இந்தியா கொடுத்த விலை அதிர்ச்சியளிக்கக் கூடிய அளவுக்கு அதிகம். உயிரிழப்பு, பொருளிழப்பு போலவே இந்தியா இரண்டு விமானங்களையும் ஒரு எம். ஐ. ஹெலிகாப்டரையும் இழந்துள்ளது. நாம் ஹெலிகாப்டரை மட்டில் இழக்கவில்லை. அதைப் போர்க் களத்திற்கு ஓட்டிச் சென்று கடந்த மே மாதம் இருபத்தெட்டாம் நாள் எதிரிகளின் நிலைகள் மீது குண்டு மழை பொழிந்து நாற்பதுக்கும் மேற்பட்ட பகைவர்களைக் கொன்ற ஃபிளாட் லெப்டினென்ட் முகிலனையும் இழந்து விட்டோம். ஊடுருவல்காரர்களைக் கொன்ற இவரைப் பாக்கிஸ்தான் பகுதியிலிருந்து பாய்ந்து வந்த ஏவுகணை தாக்கி வீழ்த்தி விட்டது.

கடமை உணர்வும், கள்ளங் கபடற்ற உள்ளமும் பொறுமை, எளிமைக்கு இலக்கணமாகவும் வாழ்ந்தவர் முகிலன். உடலை நல்ல நிலையில் வைத்துக் கொள்ள நாள்தோறும் பத்து கி. மீ. தூரம் ஓடுவாராம் முகிலன்.

தமிழ்நாட்டிலுள்ள கோட்டூர் தான் பூர்வீகம் என்றாலும் தந்தை பெல்காமிலுள்ள ஜிந்தால் தொழிற்

சாலையில் பணியாற்றியதால். தந்தை குடியேறியிருந்த பெல்காமில் 1972 ஆம் ஆண்டு, மார்ச் மாதம், எட்டாம் நாள் பிறந்தார். பி. எஸ். சி. படித்து முடித்ததும் 1991ஆம் ஆண்டில் விமானப் படையில் சேர்ந்தார்.

உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவரின் திருவுருவச் சிலையைக் கூட கன்னட நாட்டில் திறக்கக் கூடாதென்னும் 'மீன் சினை' மனத்தினர் வாழும் கன்னட நாட்டு நங்கை பீனா என்பவரைக் காதலித்துக் கைப்பிடித்தார் முகிலன். காதலொன்று தானே எல்லா எல்லைகளையும் கடந்து செல்வது - நிலைப்பது! 1996 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் நாள் திருமணம் செய்து கொண்ட முகிலன் - பீனா இணையருக்கு 'துருவா'தான் ஒரே மகன்.

உத்தரப் பிரதேசம் 'சர்சலா' என்ற இடத்தில் பணியி லிருந்த வரை, கார்கிலில் நெருக்கடி ஏற்பட்டதும் களத் திற்கு அனுப்பி வைத்தது. விமானப் படைத் தலைமை! மே17-ம் நாள் ஸ்ரீநகர் புறப்பட்டவர், அடுத்த பதினோராம் நாள் வீர மரணமடைந்து விட்டார். கிடைசியாக அவர் தன் துணைவியாருக்குக் கூறியது! பீனா! நான் எல்லைப் பகுதிக்குச் செல்கிறேன். திரும்பி வருவது உறுதியில்லை. பத்திரமாக இரு. துருவாவையும் பார்த்துக் கொள். தைரிய மாக இரு என்பது தான்.

## லெப். கர்ணல் நடராஜ்

டுமீல்! டுமீல்! டுமீல்! இப்படிப்பட்ட ஒலி போர் முனை யில் கேட்பதொன்றும் புதுமையல்ல. ஆனால் வீட்டிற்குள் கேட்டால்...?

கொள்ளைக்காரர்கள் நுழைந்து சுட்டிருப்பார்கள் என் றான் மணி. அதெல்லாம் பீகாரில் தான் நடக்க முடியும். தமிழ்நாட்டில் துப்பாக்கி வெடிப்பது அப்படியொன்றும் எளி

தல்ல. இங்கே கத்தி, கடப்பாறை, உருட்டுக் கட்டைதான் ஆயுதம். மணி! இப்படிச் சிறுவன் ஒருவன் அடிக்கடி வீட்டில் விளையாட்டுத் துப்பாக்கியால் சுட்டுக் கொண்டிருப்பான். அவனுக்கு விருப்பமான விளையாட்டுப்பொருளே துப்பாக்கி தான். அந்தச் சிறுவனுக்குப் பரிசளிக்க விரும்பும் உறவினர்கள் கூட துப்பாக்கியைத்தான் பரிசாக வாங்கித் தருவார்களாம். அந்த அளவுக்கு அவன் 'துப்பாக்கி விரும்பியாக' இருந்தான்.

''யார் தாத்தா அச்சிறுவன்?''

கார்கில் போரில் வரலாறான லெப் கர்னல் நடராஜ் தான் அந்தச் சிறுவன். அவனுடைய தாத்தா பெரிய காவல் அலுவலர்.

''காவல் அலுவலரா? வாட்ச் மேனா தாத்தா?''

ஏனப்பா வாட்ச்மேன் தான் உனக்குப் பெரிய அலுவலரா? காவல் என்றால் போலீஸ் என்று பொருள். இப்போதெல்லாம் காவல் நிலையம் என்று பெயர்ப் பலகை வைத்திருக்கின்றார்களே பார்த்ததில்லையா? அவர்கள் பயன்படுத்தும் மூடுந்து, கூடுந்து, பேருந்து - மகிழுந்து களிலெல்லாம் கூட காவல் என்று எழுதப்பட்டிருக்கிறதே.

அது என்ன தாத்தா உந்து உந்து என்கிறீர்கள்? புரியவில்லையே? என்றாள் மலர்விழி.

ஜீப், வேன், பஸ், பிளஷர் கார் என்றால் புரிகிறதே அது எப்படி? அப்படிச் சொல்லிச் சொல்லிப் பழக்கப் பட்டதால் புரிந்து கொள்கிறோம். நான் சொன்னதையும் அடிக்கடி பயன்படுத்தினால் புரியாமல் போய் விடுமா என்ன? ஆங்கிலேயனை வெளியேறச் சொன்னோம். அது வரலாறானது. ஆனால் தமிழைப் புறக்கணித்தோமே அது அவலமானது - அவமான மானது.

அக்கா நீ... சும்மா இரு. கதை வேறு எங்கோ மாறிப் போகிறது என்றான் மணி.

தமிழைப் பற்றிப் பேசினால், உன்னைப் போல் சிலருக்குப் பிடிப்பதில்லை. நம்மில் பலர் இன்னும் அடிமைகளாகத்தானிருக்கிறோம். ஆங்கிலத்திற்கு

இல்லை தாத்தா எனக்குத் தமிழ் பிடிக்கும். அக்காதான் ஆங்கிலத்தில் படிக்கிறாள். கதை மாறுகிறதே என்று தான் சொன்னேன். நடராஜின் தாத்தா வி. நடேசன், அவர் காலத்தில் சந்தனக்கட்டைக் கடத்தல் வீரப்பனாக விளங்கிய ஜம்புலிங்கம் என்பவனைச் சுட்டுக்கொன்று பிரிட்டிஷ் அரசின் மிக உயர்ந்த விருதான 'மாமன்னர்' விருதைப் பெற்றவர்.

ஓகோ அதுதான் இவர் துப்பாக்கிப் பிரியரானதற்குக் காரணமோ? என்றாள் மலர்விழி.

அது மட்டுமல்ல. அவருடைய தந்தையும் ஒரு இராணுவ வீரர்தான். கார்க்கில் பகுதியிலேயே பிரிகேடியராகப் பணியாற்றியவர்.

கார்கிலிலா என்றான் மணி. ஆம். ஆனால் நீ நினைப்பதைப் போல் நடந்து முடிந்த போரிலல்ல. அவருடைய பணிக் காலத்தில். இப்போது அவருக்கு வயது என்ன தெரியுமா? எழுபது காக்கி உடையில் தாத்தாவையும், தந்தையையும் பார்த்துப் பார்த்து நடராசனுக்கும் அதன் மீதும், துப்பாக்கி மீதும் பற்று ஏற்பட்டுவிட்டது. சிறுவயதிலேயே தனது தந்தையைச் சீருடையில் பார்க்கும்போதெல்லாம் அப்பா என்று அழைக்காமல், இராணுவ வீரர்கள் அழைப்பதைப் போல் 'சார்' என்றுதான் அழைப்பார்.

சீருடை என்றால் என்ன தாத்தா? புரியும்படி சொல்லுங்கள் என்றாள் மலர்.

புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தானே ஆங்காங்கே சில தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துகிறேன். சீருடை என்றால், அவரவர் தொழிலுக்குரிய உடை. அதாவது யூனிஃபார்ம். இப்பொழுது புரிகிறதா? தமிழை யும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நாம் வாழ்வது இங்குதான்— இங்கிலாந்திலல்ல.

சரி தாத்தா! இனிமே கேட்க மாட்டேன். கதையைக் கூறுங்கள்.

நடராஜின் முன்னோர் வாழ்ந்த ஊர் நாகப்பட்டினம். ஆனால் இவர் பிறந்தது சென்னையில்தான். இவருடைய பிறந்த நாள் 18-6-1961. பெங்களூர் பள்ளியில்தான் படித் தார். பி.எஸ்.சி கணிதம் படிக்க சென்னை, நந்தனத்தில் உள்ள கல்லூரியில் சேர்ந்தார். ஆனால் அங்கே அவரு டைய கல்லூரிக் கல்வி ஓராண்டோடு முடிந்துவிட்டது.

ஏன் தாத்தா? நல்லா படிக்கவில்லையா? அப்படி யெல்லாம் இல்லை. இராணுவத்தில் சேர்ந்துவிட்டார் அங்கிருந்தபடியே அதே பட்டப்படிப்பை வெற்றிகரமாக முடிந்துவிட்டார் தெரியுமா?

படிப்பில் மட்டுமல்ல, விளையாட்டிலும் நடராஜ் புலிதான். டேராடூன் இராணுவ (அகாதெமியில்) கல்லூரி யில் விளையாட்டில் முதலிடத்தைப் பெற்றவர் நடராஜ்.

இராணுவத்தில் செகண்ட் லெப்டினன்ட் என்ற பதவி யில் சேர்ந்தவர், முறையாகப் பதவி உயர்வுகளைப் பெற்றார். பஞ்சாபில் காலிஸ்தான் கேட்டு கலகம் செய்து கொண்டிருந்த பித்தான் வாலே கூட்டத்தை ஒடுக்க இந்திரா காந்தி தலைமை அமைச்சராக இருந்த காலத்தில் சீக்கியர்களின பொற்கோவிலுக்குள் புகுந்ததே நமது படை அந்த நீல நட்சத்திர நடவடிக்கையிலும், நாகாலாந்து தீவிரவாதிகளை ஒடுக்க எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக் யிகையிலும் பங்கேற்றவர் நடராஜ். அது மட்டுமல்ல, 1982-

83- ஆம் ஆண்டில் 'லடாக். பகுதியில் கட்டுப் பாட்டுக் கோட்டிற்கருகில் சீனப் படை நடமாட்டத்தைக் கண் காணிக்கும் பொறுப்பிலும் இவர் சிறப்பாகச் செயல்பட்டு 'சேனா' பதக்கத்தைப் பெற்றிருக்கிறார்.

இவருக்குத் திருமணமாகி விட்டதா தாத்தா? திருமணம் முடிந்து விட்டது. இவரது மனைவி பெயர் சுபத்ரா. ஒன்பது வயதாகும் அனிஷ் ராகவனும், இரண்டு வயது பூஜாவும் இன்று தந்தையை இழந்திருக்கும் பிள்ளை கள் இவருடைய மனைவி சுபத்ரா, புகழ் பெற்ற தமிழறிஞர் முனைவர் நாவலர், சோமசுந்தர பாரதியாரின் கொள்ளுப்பேத்தி. இந்த நாவலர் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்பித்தவர். கம்பராமாயணம் குறித்து அறிஞர் அண்ணாவோடு சொற் போர் புரிந்தவர். 'மாரி வாயில்' என்னும் மிகச் சிறந்த பாட்டு நூல் படைத்தவர்.

நடராஜ் உறவினர்களிடமும், நண்பர்களிடமும் மிக அன்பாகப் பழகுவாராம். மனைவி மக்களிடம் மிக்க பாசமாக இருந்தார். விடுமுறையில் வீட்டிற்கு வந்தால் வெளியே அங்கே இங்கே என்று அலைந்து திரிய மாட்டார். தோட்டத்தில் மரம் செடிகளை நடுவதில் ஈடுபட்டு விடுவார்.

அவர் வீடு எங்கே இருக்கிறது தாத்தா?

வீடா? சென்னை தாம்பரம் அருகே மாடம் பாக்கத்தில் இருக்கிறது. இவருடைய குடும்பத்திற்காகத் தமிழக அரசு சென்னை திருவான்மியூரில், வால்மீகி நகரில் கட்டப் பட்டுள்ள வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் உயர் வருவாய்ப் பிரிவில் பதினொரு லட்சம் மதிப்புள்ள வீட்டைக் கொடுத்திருக்கிறது.

நல்லதைத்தான் செய்திருக்கிறது நமதரசு என்றாள் மலர்.

போரில் வீர மரணம் அடைந்த சில மாதங்களுக்கு முன்னர்தான் நடராஜ் கர்னலாகப் பதவி உயர்வு பெற்றிருந் தார். போர் தொடங்கிய போது இவர் லக்னோவில்தான் இருந்தார். இவரைப் போர்க்களத்திற்கு அனுப்பவில்லை தலைமை. இவரே வலியுறுத்திக் கேட்டுப் போர்க்களம் செல்லும் வாய்ப்பைப் பெற்றார். ஸ்ரீநகருக்கு மேற்கே எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகேயுள்ள குப்வாரா என்னும் பகுதியில் போரில் ஈடுபட்டிருந்த போது தான் உயிரிழந்தார்.

எப்படி அவர் இறந்தார் என்றான் மணிவண்ணன்.

போர்க்களம் புக வாய்ப்பு கேட்டபோதே அவர் தன்னால் மிகச் சிறந்த சாதனை புரிய முடியும் என்று கூறித்தான் வாய்ப்பைப் பெற்றார். அந்தச் சொல்லைக் காக்கும் வண்ணம் அவர் செயல்பட்டார். குப்வாராவில் எதிரிகளின் முகாம்களை அழித்தார். ஊடுருவல்காரர் களைச் சுட்டு வீழ்த்தியபடி அடுத்த முகாமை நோக்கி முன்னேறினார்கள். வீரர்களை முன்னே அனுப்பாமல் தானே முதலில் சென்றார். அடுத்த முகாமுக்குள் நுழைகிறார். அங்கே ஒரு ஊடுருவல்காரன் இறந்தவனைப் போல் தரையில் கிடக்கின்றான். பிணம் எண்ணெண்ணி மேலும் முன்னேறும்போது, அவன், பாசாங்கு நிலை கலைந்து இவரை நோக்கிச் சுட்டான். நடராஜ் மார்பிலும், முகத்திலும் குண்டுகள் பாய்ந்தன. அந்த நிலையிலும் அவனைச் சுட்டுக் கொன்ற பின்னரே நடராஜ் உயிர் விட்டார்.

வஞ்சகமாக வல்லவா அவரைக் கொன்றிருக்கின்றான் அந்தக் கொடியவன்? அங்கலாய்த்தாள் மலர்விழி.

நடராஜ் கர்னலாகப் பதவி உயர்வு பெற்ற செய்தியைத் தன் தந்தைக்குத் தொலைபேசியில் தெரிவித்தாராம். அப்போது தந்தை இது ஒன்றும் பெரிதில்லை, இன்னும் சாதிக்க வேண்டும் என்றாராம்.

அவரும் இராணுவ வீரரல்லவா அதுதான் அப்படிக் கூறியிருக்கிறார். அதற்கு நடராஜ் என்ன கூறினாராம்?

'கவலைப்படாதீர்கள்! நான் ஜெனரலாகவே வருவேன் என்றாராம்.'

'அது பெரிய பதவியா தாத்தா?

ஆமாம். ஆனால் அதைவிடப் பெரிய பதவியைத் தன் வீரத்தின் மூலம் பெற்றுவிட்டார் நடராஜ். மக்களின் இதய இருக்கையில் உட்கார்ந்துவிட்டார். நன்றிப் பெருக்கில் நாடே அவர் நினைவைக் கண்ணீரில் நனைத்தது. அவருடைய இறுதி ஊர்வலத்தில் எவ்வளவு மக்கள் பங்கேற்று நன்றி கலந்த வீரவணக்கத்தைச் செலுத்தினர்? தாயார் வத்சாவின் துயரத்தை மக்கள் கண்ணீரால் துடைத்தனரே!

## லெப்டினென்ட் கர்னல் விசுவநாதன்

உலகம் இரண்டு பெரும் போர்களைச் சந்தித்திருக்கிறது. 1914-ஆம் ஆண்டில் தொடங்கிய முதல் உலகப் போருக்கும், 1938-ஆம் ஆண்டில் தொடங்கி நடைபெற்ற இரண்டாம் உலகப் பெரும்போருக்கும் இந்தியாவில் படைக்கு ஆள் சேர்ந்தது எப்படி என்று கேள்விப் பட்டிருக்கின்றீர்களா?

இல்லையே! சொல்லுங்களேன் தெரிந்து கொள்கிறோம். என்றனர் மலரும், மணியும்.

எனக்கும் சரியாகத் தெரியாது. உலகப்போர் முதன் முதலாக ஏற்பட்டபோது நான் பிறக்கவே இல்லை. இரண்டாவது உலகப்போர் தொடங்கிய போது நான் குழந்தையாகத்தானிருந்தேன்.

அப்ப, நீங்களும் எங்களைப் போலத்தானா?

ஆமாம். எங்களுடைய அம்மா, அப்பா கூறக் கேட்டதைத்தான் உங்களுக்குக் கூறப் போகிறேன்.

என்ன கூறினார்கள்? சொல்லுங்க தாத்தா என்றனர் இருவரும்.

"சண்டைக்கு ஆள் எடுக்கிறார்கள். சேர விருப்பம் உள்ளவர்கள் எல்லாம் வரலாம் என்று பறை கொட்டியோ தமுக்கு அடித்தோ ஊர்த் தலையாரி தெருத் தெருவாகக் கூவிச் செல்வாராம். படையில் சேர விரும்பும் இளைஞர்கள் அவர் பின்னால் சென்றால், இராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் அதிகாரி அவர்களை அழைத்துச் சென்று விடுவாராம்.

அவர்களுக்குத் தேர்வு எல்லாம் கிடையாதா தாத்தா?

அப்போது ஆள் கிடைத்தால் போதுமென்ற நிலையாம். ஆள் பழுதில்லாமல் இருந்தால் போதுமாம். உயரம். எடையைப் பற்றியெல்லாம் பார்ப்பதில்லையாம்.

இப்போதும் அதேபோல் செய்தால் நான் கூட சேர்ந்துவிடுவேன் என்றான் மணிவண்ணன்.

தம்பி! இனி அந்தக் காலம் திரும்பி வராது. அது மட்டு மல்ல. எந்தக் காலத்திலுமே உன்னைப் போன்ற சிறுவர் களை படையில் சேர்த்துக் கொள்ளமாட்டார்கள்.

ஏ......ஏ என்று கைக் கொட்டி நகைத்தாள் மலர்.

"பார் நான் பெரியவனாக ஆனபின் என்ன செய்கிறேன் என்று?" அறைகூவல் விடுத்தான் மணிவண்ணன். தாத்தா தொடர்ந்தார்.

போர் முடிந்தபின் படைக்கு ஆள் சேர்க்க முக்கிய நகரங்களுக்கு. ஆளெடுப்பு இராணுவ அலுவலர்கள் வந்து

முகாமிட்டு ஆட்களைத் தேர்வு செய்வார்கள். அவர்கள் வருகை குறித்து விளம்பரம் செய்யப்படும். பெரும்பான்மை யான பெற்றோர் தம் பிள்ளைகளைப் படையில் சேர அனுமதிப்பதில்லை.

அதனால் சில இளைஞர்கள் பெற்றோரிடம் கோபித்துக் கொண்டு, சொல்லிக் கொள்ளாமல்கூட படையில் சேர்ந்து விடுவார்கள். சிலர் குடும்ப வறுமையினால், படையில் சேருவதுமுண்டு.

மணி! நீ எப்படி? சொல்லிக்கொண்டா? சொல்லாமலா?

இப்போது சொல்ல மாட்டேன். அப்போது பார் என்றான் மணி.

லெப்டினென் கர்னல் விசுவநாதன் ஏன் படையில் சேர்ந்தார் தெரியுமா?

சொன்னால்தானே தெரியும் என்றான் மணி.

விசுவநாதனின் குடும்பம் ஏழ்மையானது. வேதம் ஓதும் மரபினரான அவருக்குத் தாயார்—தம்பி உண்டு. இவர்களைக் காப்பாற்ற வேண்டும். தம்பியை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்ற ஆசை, கடமை உணர்வால் உந்தப்பட்டுத்தான் அவர் தமது பதினாறாவது வயதிலேயே பட்டாளத்தில் சேர்ந்துவிட்டார்.

பதினாறு வயதிலேயா? அப்படி என்றால் +2 படிக்கும் வயதுதானே தாத்தா என்றாள் மலர்விழி.

ஆமாம். பாய்ஸ் மிலிட்டரி என்று கூறுவார்கள். குறைந்த வயதிலேயே தேர்வு செய்து நன்கு பயிற்சியளிப் பார்கள். பயிற்சி முடிந்த பின்னர்தான் இவர்களைப் படைப் பிரிவில் சேர்த்துக் கொள்வார்கள்.

அப்படியா?

ஆமாம். விசுவநாதன் பயிற்சி முடித்துப் படையில் சேர்ந்தவர். பதவி உயர்வு பெற்றவர். டோலோலிங் போரில் ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு முன்னேறும் போது? பகைவர்களால் சுடப்பட்டு உயிரிழந்தார். முதலில் களமிறக்கப்பட்டவர்களுக்குப் பகைவர்களைப் பற்றிய முழுத் தகவல்கள் கிடைத்திருக்கவில்லை. அதனால்தான் தொடக்கத்தில் உயிர்ச்சேதம் அதிகமாக இருந்தது. நம் படை முன்னேறும்போது எதிரிகள் நான்கு பக்கங்களி லிருந்தும் மறைந்திருந்து தாக்கி இருக்கிறார்கள். குண்டு எந்தப் பக்கமிருந்து வருகிறதென்பதைக்கூட உய்த்துணர முடியாத நிலை. இவர்களை இழந்த பின்னர்தான் நம் படை வேறு உத்தியைக் கையாண்டு டோலோலிங்கைக் கைப்பற்றியது.

மகளை இழந்த தாயார் கனகம்மாள் "தம் மகன் எதிரி நாட்டுடனான போரில் மாண்டிருந்தால் ஆறுதலடைந் திருப்பேன்" என்று மனம் கவல்கின்றார்.

ஏன் தாத்தா! இது எதிரி நாட்டுடனான போர் இல்லையா? மலர்விழி கேட்டாள்.

இப்போது நடந்தது எதிரிகளுடனான போர்தான் எதிரி நாட்டோடு நடந்த போர் அல்ல என்று முடித்தார் தாத்தா.

## சத்ருகன்சிங்

இந்தியா விடுதலை பெற்றபின் உருவான மாநிலங்களில் ஒன்று அரியானா. அங்கு சந்திர் மந்திர் இராணுவக் குடி யிருப்பு (கன்டோன்மென்ட்) மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டிருக்கிறார் ஒரு வீரர். பெயர் சத்ருகன்சிங். பீகார் படையணியில் நமது வீரர் சரவணன் தலைமையின்கீழ் பணியாற்றியவர் இவர்.

விடுமுறையில் சென்று குடும்பத்தைப் பார்க்கும் ஆவலோடு கையிருப்புப் பணம் முப்பத்தைந்தாயிரத்தையும் எடுத்து வைத்துக் கொண்டார். மறுநாள்தான் பயணம். விறுவிறுப்பான உச்சக் கட்ட காட்சியின்போது மின்சாரத் தடையால் தொலைக்காட்சி நின்றது போன்ற நிலை சத்ருகன்சிங்கிற்கு.

என்ன ஆயிற்று தாத்தா?

ஒன்றும் ஆகவில்லை. அவருடைய ஊர்ப் பயணம்தான் தடை பட்டது.

ஏன்?

சற்றும் எதிர்பாராத வகையில் இவருடைய அணிக்குக் கார்கிலுக்குச் செல்லுமாறு கட்டளை வந்தது. சிங்குக்கு விடுமுறை அனுமதிக்கப் பட்டிருந்தது. அவர் திட்டமிட்ட படி ஊருக்குப் புறப்படலாம் என்றிருந்தபோது இப்படி ஒரு தடை என்றால் எப்படி இருக்கும் மனம்? சத்ருக்கனின் மனச்சோர்வை அறிந்தார் அணித் தலைவர் சரவணன், அவரை அழைத்தார். நேருக்கு நேராக முகத்தைப் பார்த்த படி கேட்டார்.

"எந்தக் காரணத்திற்காகப் படையில் சேர்ந்தாயோ, அதைப் புறக்கணிக்க விரும்புகிறாயா?" என்றார். அடுத்த நொடி அவரிடமிருந்து ஆணி அடித்தாற்போல் பதில் வருகிறது. "என் விடுமுறையை ரத்து செய்கிறேன். கார்கில் களத்திற்கு வருகிறேன்."

ஒரு வீரனிடமிருந்து இப்படிப்பட்ட பதில்தானே வரும். வரவேண்டும்! வந்தது. சேமிப்புப் பணத்தையும் கையோடு எடுத்துக் கொண்டு போர் முனைக்குச் செல்கிறார். சரவணன் தலைமையில் கதிரவன் மேற்றிசையில் முன்னேறிய நேரத்தில் சற்றே சாய்வான மலை முகட்டில் ஊடுருவல்காரர்களைத் தேடிப் புறப்படுகிறது படையணி

அதிக நேரங்கூட ஆகவில்லை, வந்தேறிகளான ஊடுருவல் காரர்கள் வசதியாக உட்கார்ந்து கொண்டு குண்டு மாரி பொழிகிறார்கள். அதைப் பொருட் படுத்தாமல் முன்னேறு கிறார்கள். சிங்கும் முன்னேறியவர்களுள் ஒருவர். தன் தரப்பு வீரர்கள் ஒவ்வொருவராக எதிரிகளால் சுடப்பட்டு வீழ்கிறார்கள்.

தன்னோடு பழகியிருந்த நண்பர்கள் தன் கண் முன்னே குண்டடி பட்டு மாள்வதைக் கண்ட சத்ருகன்சிங் உள்ளம் கலங்குகிறது. இனி அவர்களோடு பேசமுடியாது, பழக முடியாது. ஏன், பார்க்கவே முடியாது. ஒரு கணம் அவர் செயலற்றவராகிறார். இதைப் பார்க்கின்றார் அணித் தலைவர் சரவணன். சிங்! வீழ்ந்தவர்களைப் பற்றிக் கவலைப்படாதே! சுட்டுக்கொண்டே முன்னேறு எனக் கட்டளையிடுகிறார். அடுத்த நொடி சரவணன் தலைக்குள் மூன்று குண்டுகள் தஞ்சம் புகுகின்றன. தலைவன் தன்னையே தாய்நாட்டிற்குக் கொடுத்துவிட்டான்! சத்ருகன் சிங் எஞ்சியவருள் 'ஒருவர். அவர் காலையும் எதிரி களின் குண்டுகள் ஊடுருவி வெளியேறுகின்றன. இனி தானும் பிழைக்கப்போவதில்லை என்ற முடிவுக்கு வருகிறார். கையில் சேமிப்புத் தொகை முப்பத்தையாயிரம் இருக்கிறது. அது எதிரிகளின் கைகளுக்குப் போய்விடக்கூடாதே என்று எண்ணுகிறார். தன்னுடன் இருந்த நண்பனிடம் எடுத்து நீட்டுகிறார். நண்பா! நான் பிழைக்கப்போவதில்லை. இந்தப் பணத்தை நீ என் குடும்பத்திற்கு உதவும்படி எப்படி யாவது சேர்த்துவிடு என்று கூறுகிறார்.

தொகையை நண்பன் வாங்கிக்கொள்ளவில்லை.

"ஏன் தாத்தா?

நண்பன் பேசவில்லை. ஒரு பார்வைதான் பார்த்தான். அந்தப் பார்வை, அடப்போடா! சாவு என்ன உனக்கு மட்டுந்தான் சொந்தமா? தலைவர் உட்பட இத்தனை பேர் உயிரைப் பலிவாங்கியவர்களைப் பழிவாங்கி நானும் உயிர்

விடத்தான் போகிறேன் என்று கூறுவதுபோலிருந்தது. குண்டுகள் பேசும் களத்தில் குரல் பேச்சுக்கு ஏது நேரம்? நண்பன் காத்திருக்கவுமில்லை சத்ருகன்சிங் கூறியதைக் கருத்தில் நிறுத்தவுமில்லை. சுட்டுக்கொண்டே முன்னேறி னார். அந்தோ! நண்பனின் பார்வையில் தொக்கி நின்ற வினாவுக்கு சிங் கண் முன்னேயே விடை கிடைத்துவிட்டது. நண்பனும் குண்டடிபட்டு அவர் கண் முன்னேயே ஆவி துறக் கின்றான்.

ஊடுருவல்காரர்கள் இவரை நோக்கிச் சுடுவதை நிறுத்தவில்லை. அவர்களிடம் சிக்கிவிடக்கூடாதென்பதற் காக ஒரு தந்திரத்தைக் கையாள்கிறார். இறந்து பட்டதைப் போல் தரையில் கிடக்கிறார். கையில் இருந்த உணவு, பனிநீரைக் கொண்டு உயிர் போகாமல் பாதுகாத்துக் கொண்டு, மனத்தைத் தளரவிடாமல் தவழ்ந்தே செல் கிறார். பத்து இரவு பகல்கள் இவருடைய அவல நிலை யைக் கண்டுங்காணாதபடி கடந்துவிட்டன. அவை தத்தம் கடமையில் வீரர்களைப் போன்றே கண்ணுங்கருத்துமாக இருந்துவிட்டன போலும். எப்படியோ சத்ருகன்சிங் காப்பாற்றப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு விட்டார்.

சத்ருகன்சிங் அடிபட்டுப் பிழைத்துத் தவழ்ந்து வருவதை அறியாமல்: அந்த அணியினர் அனைவருமே போரில் மாண்டுவிட்டதாகக் கருதி, அவருடைய குடும்பத் திற்குத் தகவல் அனுப்பப்பட்டு விட்டது. ஆனால் மாண்டவர் மீண்ட கதையாக, அழுதவர்கள் ஆறுதல் பெற, இல்லை, ஆனந்தக் கூத்தாட சிங் பத்து நாட்களுக்குப் பின் காப்பாற்றப்படுகிறார். அவரை மருத்துவமனையில் சேர்த்தபோது, அவருடைய காயங்களில் புழுக்கள் நெளிந்து கொண்டிருந்தனவாம்.

ஐயய்யோ! எவ்வளவு வலித்திருக்கும்? என்றாள் மலர்விழி.

போர்வீரர்களுக்கு வலி, இறப்பு எல்லாம் எதிர்பார்த்திருக்கும் அவலங்கள். அவற்றைத் தாங்கிக்கொள்ளும் மன உறுதிதான் அவர்களை வீரர்களாக்குகிறது. மருத்துவ மனையில் படுக்கையில் கிடக்கிற நேரத்திலும் தான் பிழைத்தது குறித்து சிங் என்ன கூறினார் தெரியுமா?

'தெரியுமே!' தன்னைக் காப்பாற்றிய இறைவனுக்கு நன்றி என்று கூறியிருப்பார்.

தன்னம்பிக்கையற்றவர்கள் பொதுவாக அப்படித்தான் கூறுவார்கள். இறைவனை வணங்குவதையே மிகப்பெரும் கடமையாகக் கருதுபவார்கள் கட்டாயமாக அப்படித்தான் கூறுவார்கள். ஒரு வீரனின் உள்ளத்திலிருந்து வரும் சொற்கள் வேறுவிதமாகத்தானிருக்கும். இறைவனுக்கு நன்றி கூறுவதோடு அமைந்துவிடாது அவர்களுடைய வேட்கை!

என்னதான் கூறினார்? கூறிவிடுங்களேன் தாத்தா? என்றான் மணிவண்ணன்.

"மீண்டும் போரிடுவதற்காக மறு பிறவி எடுத்துள்ளேன்" என்றுதான் சத்ருகன்சிங் கூறினார்.

சத்ருகன்சிங் வாழ்க! என்றான் மணிவண்ணன்.

ஜெய் ஜவான்! என்றாள் மலர்விழி!

போர் மறையட்டும். அமைதி நிலவட்டும் என்றார் தாத்தா!

## தொகை தொகையாய் வீரர்கள்

**நாயக் காமராஜ் :**

இந்திய இராணுவத்தில் இராக்கெட் (ஏவுகணை) பிரிவில் பணியாற்றிய இவர், தஞ்சை மேம்பாலம் சிவாஜி நகரைச் சேர்ந்தவர்.

1984-ஆம் ஆண்டில் தான் படையில் சேர்ந்தார். ஐந்தாண்டுகளுக்கு முன் தனலட்சுமி என்பவரை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார். நான்கு வயது வெங்கி டேசனுக்குத் தந்தையான இவரைக் கார்க்கில் போர் காவு கொண்டுவிட்டது. இவருடைய ஈகத்தை (தியாகத்தை) மக்கள் மனத்துள் தேக்கிக் கொண்டார்கள். தமிழக அரசும், கட்சிகளும்கூட நிதி உதவி செய்துள்ளன இவர் குடும்பத் திற்கு. இவருடைய மனைவி தனலட்சுமிக்குத் தமிழக அரசு வேலை வாய்பும் அளித்துள்ளது. காமராஜின் வீரத்திற்கும், ஈகத்திற்கும் இது விலையல்ல நன்றி!

**பூசிமலைப் பழனி :**

ஆரணி வட்டத்தில் அடங்கிய கண்ணமங்கலத்திற்கு அருகிலுள்ள கிராமம் பூசிமலைக் குப்பம். இந்தக் கிராமத் திற்கு ஒரு வரலாற்றுப் பெருமை உண்டு தமிழ் நாட்டில் இருந்து பட்டாளத்தில் சேர்ந்தவர்களுள் இந்தக் கிராமத் தார் அளவு வேறு இடத்திலிருந்து சேர்ந்திருப்பார்களா என்பது ஐயமே! ஆயிரத்து இருநூறு மக்கள் தொகைக் கொண்ட இக் கிராமத்திலிருந்து சென்று நூறு பேர் இப் போதும் படையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அறுபது வீரர்கள் ஓய்வு பெற்றிருக்கிறார்கள் என்றால் அது பெருமைதானே!

நடராஜன்-கமலம் இணையரின் மூன்று மகன்களில் நடுப் பிள்ளையான பழநி, 1994-ஆம் ஆண்டில் தான் படை யில் சேர்ந்தார். துப்பாக்கிச் சுடும் பிரிவில் இவர் பணியாற் றியதால் 'கன்னர் பழநி' என்று இவரைக்குறிப்பிடுவார்கள். இவர்களுடைய தம்பி தங்கப்பனும் பட்டாளத்தில்தான் சோந்திருக்கிறார்.

படையில் சேரும் முன்னரே 1992-ஆம் ஆண்டு பூங்கா வனம் என்பவரைக் காதலித்து மணம் புரிந்துகொண்டார்.

ஒரே மகன் விக்னேஷ். சாவு என்றால் என்னவென்று தெரிந்து கொள்ள முடியாத வயது. தனலட்சுமிக்கோ வாழ்க்கையின் வாயிற் படியிற் நிற்கும் அகவை! காலம்இவர்களுடைய இல்லறத்தை நெடுங்கதையாக எழுதாமல் சுருக்கிச் சிறுகதையாக எழுதிவிட்டது. அரசு நிதி உதவியிருக்கிறது. அமைச்சரும், அதிகாரிகளும் வந்து அஞ்சலி செலுத்திச் சென்றார்கள். மக்கள் திரண்டு வந்து துன்பத்தில் பங்கு பற்றினார்கள். என்றாலும் ஆறுதலடைய முடியவில்லையே!

**சிப்பாய் செந்தில் :**

உயிர் மீது பற்றுக் கொண்டவர்கள் படையில் சேர மாட்டார்கள். செந்தில் உயிரை விடவும் வீரத்தை விரும்பியவர். "சாக துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால் அளவு" என்பது பழமொழி. ஆனால் சாவே தன்னை நெருங்க அஞ்சும் என்ற ஆண்மை வீரத்தின் வெளிப்பாடு தான். செந்திலுக்கு அப்படிப்பட்ட ஆண்மை, நெஞ்சுரம், நம்பிக்கை இருந்தது. இல்லையென்றால் போர்க் களத்தில் காலூன்றிக் கொண்டு, இப்படியொரு மடலைக் குடும்பத்திற்கு எழுத முடியுமா?

என்ன எழுதினார் தாத்தா?...

"சீக்கிரம் போர் முடிந்து விடும் ஊருக்கு விரைவில் வருவேன்." என்பதுதான் அவர் எழுதிய கடைசி கடிதத்தின் முக்கிய சொற்றொடர். அந்தக் கடிதம் தந்தை தங்கராசுவின் கையில் கிடைத்த பத்து நாட்களுக்குள்ளேயே செந்தியின் மரணச் செய்தியல்லவா மாரடித்துக் கொண்டு 'தந்தி' யாக வந்து சேர்ந்தது.

செந்தில், தேனி மாவட்டத்தைச் சேர்ந்த பண்ணைபுரம் அருகிலுள்ள கரியணம் பட்டியைச்சேர்ந்தவர். ஏழ்மையான குடும்பம். அதனால்தானே தாய் விஜயாவும் தங்கை

ராதிகாவும் கேரள மாநிலத்தில் தோட்டத் தொழிலாளி களாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்? இந்த நிலையில் இவர் + 2 படித்ததே பெரிய செயல்தான்!

1995-ஆம் ஆண்டு படையில் சேர்ந்து, ஊட்டி வெலிங் டன் இராணுவப் பயிற்சி மையத்தில் பயிற்சியை முடித்து 'மெட்ராஸ் ரெஜிமெண்ட்' என்னும் படைப் பிரிவில் பணி யேற்று ஜம்மு-காஷ்மீர் பகுதியில் பணியாற்றி வந்தார். கார்க்கில் பகுதியில் ஊடுருவல்காரர்களை விரட்டியடித்த வேளையில்தான் வீரமரணம் இவரை அணைத்துக் கொண்டது.

**செல்வகுமார் :**

இவரும் தேனி மாவட்டம் சின்னமானூர் அருகிலுள்ள ஊத்துப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர்தான். தந்தை இராஜசேகரன். பசவந் ரெஜிமெண்டிலிருந்து கார்கில் களத் திற்குச் சென்ற செல்வக்குமார் திரும்பவே இல்லை. உடல் கூட உடனடியாகக் கிடைக்கவில்லை. இறந்ததன் அடை யாளமாக 'கலயம்' தான் வீட்டிற்கு வந்தது.

உயிர் துறப்பதே உறுத்தலானதுதான். அதிலும் உடல் கூட கிடைக்கவில்லை என்றால்...?

அவலத்தின் ஆழம் அளக்க முடியாதது.

**செயவேலு :**

வேலூர் மாவட்டம் கண்ணமங்கலம் அருகிலுள்ளது காட்டுகா நல்லூர் கிராமம். இருபத்தைந்தாண்டுகள் படையில் பணியாற்றிய தனபாலின் பெயரன்தான் ஜெயவேலு. மாசிலாமணி—சாந்தி இணையரின் ஒரே மகன் இவர். மூன்று அக்காள் இவருக்கு 1975-ஆம்ஆண்டில் பிறந்து 1993-ஆம் ஆண்டு +2 படித்துக் கொண்டிருந்தபோது படையில் சேர்ந்தார். மருவத்தூர் ஆதிபராசக்தியின் அடியவரான இவருக்கு இப்போது இறப்பில்லை என்று

'சாதகம்' கூறியதாம். அதை நம்பி மாண்டுவிட்ட மகன் நல்லபடியாக திரும்பி வரவேண்டுமென்று வெள்ளி சனிக் (காரி) கிழமைகளில் குடும்பமே நோன்பிருந்திருக்கிறது.

கார்கில் போர் முனைக்குப் புறப்படும் முன்னர் நெடு நேரம் தொலைபேசியில் பேசியிருக்கிறார் செயவேலு. இனி எங்கே பேசப் போகிறாய், பேசிவிடு என்று உள்ளுணர்வு உந்தியது போலும்?

போர்க்களத்திலிருந்தே வீட்டிற்கு மூன்று மடல்கள் எழுதியிருக்கிறார். அவை வாரம் ஒன்றாக வந்து சேர்ந் திருக்கின்றன. நான்காவது மடலை குடும்பம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. அந்தோ? கடிதத்திற்குப் பதிலாக ஜெயவேலு போரில் மாண்ட செய்திதான் வந்தது.

கடந்த ஜூன் திங்கள் ஐந்தாம் நாள் கார்கில் போரில் தாய் நாட்டிற்காகத் தன்னுயிர் ஈந்தார் ஜெயவேலு என்ற செய்தியோடு, உடலைக் கண்டுபிடிக்க முடியவில்லை. என்னும் துணைச் செய்தியும் தொத்திக்கொண்டு வந்திருந் தது. இந்தச் செய்தியில்தான் குடும்பத்தாரின் நம்பிக்கையும் தொத்தித் தொங்கிக் கொண்டிருந்தது.

அதன் தாக்கந்தான் நோன்பும், சோதிடமும். செய்தி தவறாக இருந்து மகன் திரும்பி வரமாட்டானா என ஏங்கியது பெற்றமும்-தவித்தது உற்றார் உள்ளம். அவர் களுடைய தவிப்பை முடிவுக்குக் கொண்டு வரத்தானோ என்னவோ, முப்பத்தேழாவது நாள் படை உந்து ஒன்று காட்டுகா நல்லூர் கிராமத்திற்கு வந்து ஜெயவேலு இல்லத்தின் முன் வந்து நின்றது

மகன்தான் வருகிறான் என்றெண்ணி குடும்பமே ஆவலோடு வெளியே ஓடிவந்தது. ஜெயவேலு வந்து விட்டார். ஆம். பிணமாக அதிர்ந்து போயிற்று குடும்பம். குடும்பம் மட்டுமா ஊரேதான்!

அமைச்சர், ஆட்சித் தலைவர், இருபது இராணுவ வீரர்கள் ஊர் மக்கள்; ஏன், பள்ளி மாணவ மாணவிகள் உட்பட திரண்டு வந்து வீர வணக்கம் செலுத்தி உடலை அடக்கம் செய்தனர்.

ஜெயவேலுவின் உடல்தான் அடக்கமாயிற்று உணர்வு? எண்ணற்ற உள்ளங்களில் உயிரோட்டமாகிவிட்டதே!

## மேஜர் பத்மபாணி ஆச்சார்யா!

"போர் என்பது வாழ்வில் கிடைத்தற்கரிய பெருமை! நாட்டுக்காக உழைப்பதற்கு போர் வீரனாவதைவிட வேறு நல்ல வழி ஏதேனும் உண்டா? நான் தரைப் படையில், அதிலும் பெயர் பெற்ற ராஜ்புத்தரனா துப்பாக்கிச் சுடும் படைப் பிரிவில் இடம் பெற்றிருப்பதில் பெருமைப் படுகிறேன்.

தலைமைத் தளபதியும், தலைமை அமைச்சரும் கார்கில் வந்தது எங்களுக்கு ஊக்கமளிக்கிறது. அருள் கூர்ந்து இறப்பதைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். அது எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஒன்று." என்று தன் தந்தைக்கு மடல எழுதியிருக்கிறார் ஒரு மாவீரர். எவ்வளவு மனத் தெளிவு! தெம்பு பார்த்தீர்களா?

யார் தாத்தா அந்த வீரர்?

அவர் பெயர் மேஜர் பத்மபாணி ஆச்சார்யா! வயது அப்படியொன்றும் அதிகமில்லை. முப்பத்தொன்றுதான். 1996-இல் சாருலதா என்பவரைத் திருமணம் புரிந்து கொண்டார். மனைவி கருவுற்றிருக்கின்றார். தன் குழந்தையைப் பார்க்கும் பேறு கிட்டாமற் போய்விட்டது பத்மபாணிக்கு!

தலைமைத் தளபதி வாழ்த்துக் கடிதம் அனுப்பி பெருமைப்படுத்திய குழுவில் இவரும் ஒருவர். டோலோலிங் மீட்புப் போரில் நேருக்கு நேரான மோதலில் நான்கு ஊடுருவல்காரர்களைக் கொன்று, வீரமாணத்தை ஏற்றுக் கொண்டவர்தான் பத்மபாணி ஆச்சார்யா!

கடந்த ஆகஸ்ட் 15-இல் மகாவீர் சக்ர விருது வழங்கி இந்திய அரசு பெருமைபடுத்தியதே அந்த ஒன்பது ஒளி மணி களுள் பத்மபாணி ஆச்சார்யாவும் ஒருவர். பெருமைக்குரிய இந்த இரண்டாவது சிறப்பு வீர விருதைப் பெற்ற ஒன்பது வீரர்களுள் அறுவர் இந்த விருதை நேரில் பெற்றுக்கொள்ள வரமுடியாத இடத்திற்குப் போய்விட்டவர்கள் என்பது தான் நெஞ்சைத் தைக்கும் முள்ளான செய்தி.

மற்ற எட்டு பேர் யார் தாத்தா?
அவர்களா? கேப்டன் கெங்குருசு,
லெப்டினென்ட் நாங்குரம்
மேஜர் சொனம் வான்ச்சுக்,
மேஜர் விவேக் குப்தா
மேஜர் ராஜேஷ் அதிகாரி
கேப்டன் அனுஜ் நய்யார்
லெப்டினென்ட் பல்வந் சிங்
நாயிக் தீகேந்திர குமார்

## நீதி வழியே தெரியும் நெஞ்சங்கள்

தாத்தா எனக்கொரு Doubt (ஐயம்) கொஞ்சம் Klear பண்ணுங்களேன். (தீர்த்து வையுங்கள்.) என் கிறாள் மலர்விழி. கேட்க வேண்டுமென்று எண்ணுவதை யெல்லாம் கேட்டு விடுங்கள். நாளை நான் ஊருக்குப் புறப்பட்டு விடுவேன் என்றார் தாத்தா.

இந்தச் சண்டைக்கு மட்டில் ஆயிரக்கணக்கான ரூபாய் கள் செலவாகி இருக்கிறதே இவ்வளவு பணத்திற்கு என்ன செய்வார்கள்? யாரிடம் வாங்குவார்கள்? இதுதான் நான் கேட்க விரும்பியது என்றாள் மலர்.

போருக்கான பணத்தை மக்கள்தான் தரவேண்டும். அவர்களிடமிருந்துதான் வரியாகவும், நன்கொடையாகவும் அரசு திரட்டுகிறது. நன்கொடையாக மட்டும் ஒரு போருக் குத் தேவையான நிதியைத் திரட்டி விடமுடியாது. வரி வருமானத்திலிருந்துதான் போருக்கு நிதியை ஒதுக்க வேண்டும். பொதுவாகவே நிதி உதவி செய்யும் உலக நிறுவனங்களானாலும் சரி, நாடுகளானாலும் போர்ச் செலவுக்கென கடன்கூட கொடுப்பதில்லை. வளர்ச்சிப் பணி களுக்குத்தான் நிதிஉதவியைப் பெறமுடியும். எதிர்பாராது ஏற்படும் போர்ச் செலவுக்கென தனியாகவும் வரி விதிக் கலாம்.

இப்போது அப்படிச் செய்தார்களா?

இப்போதைக்கு இல்லை. எதிர்வரும் வரவு-செலவு திட்டத்தில் புதிய வரி அல்லது வரி உயர்வு இருக்கலாம் என்றார் தாத்தா.

நன்கொடை என்றீர்களே, கார்கில் போருக்காக எவ்வளவு கிடைத்தது தெரியுமா தாத்தா?

போர் என்றாலே மக்களிடம் ஒரு எழுச்சி ஒற்றுமையும் இயற்கையாகவே ஏற்படும். திராவிட நாடு கோரிக்கை யையே சீனப் போரின்போது கைவிட்டு, தனது நாட்டுப் பற்றை வெளிப்படுத்தியது தி.மு.க. 1965 பாக்கிஸ்தான் போது மக்கள் தங்கள் கையிருப்பு தங்க நகைகளை அரசுக் குக் கடனாகக் கொடுத்தார்கள். இது சீனப் போரின் போதும் நடந்தது. பங்களாதேஷ் அகதிகளுக்காக வருவாய் பில்லைகளை (Revenue Stamps for Refugee) மாதா

மாதம் ஊதியப் பதிவேட்டில் ஒட்டியிருக்கிறோம். ஆனால் கார்கில் போர்க்காலத்தில் மக்கள் காட்டிய ஆர்வ அளவுக்கு முன் எப்போதும் ஏற்பட்டதில்லை.

1971-ஆம் ஆண்டு நடைபெற்ற பாக்கிஸ்தான் போரின் போது, கலைஞரவர்கள்தான் தமிழக முதல்வராக இருந்தார்கள். அப்போதும் அரசு போர்நிதி திரட்டியது தமிழகத்தின் சார்பில் கலைஞர் அன்றைய இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியிடம் ஏழு கோடியைத் தான் போர்நிதியாகக் கொடுத்தார். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டால் அன்றும் தமிழகந்தான் நிதியளிப்பதில் முன்னே நின்றது.

இப்போது எவ்வளவு திரட்டினார்கள் தாத்தா?

ஏறத்தாழ ஐம்பத்தாறு கோடி ரூபாய்!

அவ்வளவா? மற்ற ஸ்டேட்ஸ் எவ்வளவு கலைக்ட் செய்தது தாத்தா?

இந்தப் போரின்போதும் நன்கொடையளித்ததில் தமிழகந்தான் முதலிடத்தைப் பிடித்திருக்கிறது. இந்திய அரசுக்குக் கிடைத்த போர்நிதி மொத்தம் 160 கோடி. அதில் தமிழகத்தின் பங்குமட்டில் முப்பத்தைந்து கோடி ரூபாய்!

போரில் வீரமரணம் அடைந்த வீரர்களின் குடும்பங்களுக்கு உதவுவதிலும், வீரவணக்கம் செலுத்துவதிலும்கூட முன் எப்போதும் இல்லாத அளவு மக்களும், கட்சிகளும் மத்திய மாநில அரசுகளும் அதிக அக்கறை காட்டி, உண்மையான உணர்வோடு செயல்பட்டிருக்கிறார்கள். அரசு கொஞ்சமும் கஞ்சத்தனமின்றி இலட்சக்கணக்கில் நிதி உதவியிருக்கிறது— வீடு கொடுத்திருக்கிறது— இன்னும் கூடுதலாக அரசு வேலைகூட கொடுத்திருக்கிறதே!

இறந்துபட்ட வீரர்களின் குடும்பங்களைத் தேடி ஓடி அமைச்சர்களும், பெரிய பெரிய அதிகாரிகளும் கட்சித் தலைவர்களும், பொதுமக்களும் ஆறுதல் கூறியிருக்கிறார்களே! இப்படியெல்லாம் முன்னர் நடந்ததில்லையே!

போர்நிதி அளிப்பதிலும் மக்கள் காட்டிய அக்கறை, ஆர்வம் கரை புரண்டதே!

யார் யார் நிதி கொடுத்தார்கள் தாத்தா? ஆலை முதலாளிகளும், கட்சிகளும், அரசு அலுவலர்களும் — திரைத் துறையினரும் பிற செல்வந்தர்களும் கொடுத்திருக்கின்றார்கள். இவற்றையெல்லாம்விட இல்லாதவர்கள் கொடுக்க முன்வந்தார்களே அதுதான் பெரிது. அவர்கள் கொடுத்த நிதி குறைவாக இருக்கலாம். அவர்கள் மனம், முனைப்பு இருக்கிறதே அது கார்கில் புலி மலையைப் போல பல மடங்கு உயர்வானது.

தாத்தா 'தாத்தா' அவர்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன் என்றனர். மலரும் மணியும்.

நீங்கள் கேட்காவிட்டாலும் அவர்களைப் பற்றிக் கூறத்தான் இருந்தேன் கேளுங்கள்.

சென்னையில் ஒரு முதியோர் இல்லம். விச்ராந்தி என்று பெயர். இங்குதான் தமிழைத் தவிர்த்து. வேற்று மொழியில் பெயர் வைத்துக் கொள்வதைப் பெருமையாகக் கருதும் போலித்தனம், அறியாமை. உணர்வின்மை புதராக மண்டி வேரோடிக் கிடக்கிறதே அது கிடக்கட்டும். அந்த முதியோர் இல்லத்தில் தொண்ணூற்றெட்டு பாட்டிமார்கள் இருந்தார்கள். ஆதரிப்பாரின்றி விடுதியில் தங்கியிருப்பவர்களிடம் பணம் இருக்க வழி ஏது? என்றாலும் போர் நிதிக்குக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் மேலிட்டதால் ஒரு வழியைக் கண்டுபிடித்தார்கள்.

என்ன செய்தார்கள் தாத்தா?

ஒருநாள் உண்ணாதிருந்தார்கள்!

அதனால் என்ன?

அவர்கள் ஒருநாள் பட்டினிக் கிடந்ததால் விடுதியில் அன்றைய உணவு தயாரிப்புச் செலவு ரூ 1700/ மிச்சமாயிற்று, அத்தொகையைப் போர் நிதிக்குக் கொடுத்தார்கள். கொடுக்க விரும்பியபோது பசி கூட விலகி வழி விட்டது.

அருமை தாத்தா! என்றான் மணி.

சென்னை தரமணி, அயன்புரம். இராயபுரம் ஆகிய இடங்களில் உள்ள ஸ்பாஸ்டிக் சொசைட்டியின் மனவளம் குன்றிய குழந்தைகள் கூட இருபத்தையாயிரம் ரூபாய்களை நன்கொடையாகக் கொடுத்திருக்கின்றார்கள்.

இமாச்சலப் பிரதேசத்தில் தர்மசாலா சாமுண்டி தேவி கோவில் வாசலில் பிச்சை எடுத்தவர்கள், தங்கள் திருவோட்டில் சேர்ந்திருந்த காசை அப்படியே அள்ளிக் கொடுத்தார்களாம் போர் நிதித் திரட்டியவர்களிடம்.

இராஜஸ்தானிலுள்ள ஜெய்ப்பூரில் வேனி பிரகாஷ் சங்கீதா திருமணம் உறுதியாயிற்று, மணப் பெண்ணின் தந்தை மகளுக்கு மணப் பரிசாக ரூ 21000/ கொடுத்தார். மணமகன் தன் பங்காக மேலும் ஐயாயிரம் சேர்த்து போர் நிதிக்கு இருபத்தாராயிரமாகக் கொடுத்துவிட்டார். மணக் கொடை கேட்டு மகளிரைக் கொலை செய்பவர்களிடையே இப்படியும் சிலர்!

ஹிண்டால் ஜனதா கல்லூரி விரிவுரையாளர் சிபானி மிஸ்ரா. இவருக்கு 30-6-99 இல் திருமணம் நடந்தது,

திருமணத்திற்கு முன் தான் அணிந்திருந்த நகைகளைக் கழற்றி போர் நிதிக்குக் கொடுத்து விட்டாள்,

கடலூர் தமிழ் வளர்ச்சி இயக்கம் அரசு போர் நிதித் திரட்ட அறிவிப்பு விடுக்கும் முன்னரே தனது உறுப்பினர் கட்டணச் சேமிப்பிலிருந்து கார்கில் போர் நிதிக்குத் தன் உணர்வை வெளிபடுத்தும் வகையில் ஆயிரம் ரூபாயை அனுப்பி வைத்தது. தமிழ் நாட்டில் இலட்சக் கணக்கில் கையிருப்பு வைத்திருக்கும் இலக்கிய அமைப்பு எதற்கும் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்த நிலையில், இந்த அமைப்புதான் வழிகாட்டியாக நிதி அளித்தது.

இப்படி, இல்லாதவர்கள் கூட உணர்வு உந்துதலால் உதவியிருப்பது மக்களிடம் ஏற்பட்டுள்ள மாபெரும் எழுச்சியின் அடையாளந்தான்.

டில்லி செஞ்சிலுவைச் சங்கத்தில் 1962 ஆண்டுக்குப் பின் இரத்தம் வழங்க மக்கள் திரண்டு வந்து கொடுத்திருக்கிறார்கள். தேவையில்லை என்று வந்தவர்களைத் திருப்பி அனுப்பும் அளவுக்கு ஆர்வம் பொங்கி வழிந்திருக்கிறது.

ஒரிசா மாநிலம் குலிம்பட் வாழ்சுதான் சந்த்ரா மகாபத்ரா. உடல் ஊனமுற்று. மூன்று சக்கர நாற்காலியின் உதவி கொண்டு நடமாடுபவர் அவர் தன் ஒரு கண்ணையும் சிறுநீரகத்தையும் போர் வீரருக்குக் கொடுக்க முன் வந்திருக்கின்றார்.

மாணவர்கள் நிதித் திரட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இளைஞர்கள் படையில் சேர, ஆளெடுப்பு அலுவலகத்தில் திரண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட உணர்வும், உதவியுந் தான் எல்லையில் போரிடும் வீரர்களுக்கு மன உறுதியையும்

ஊக்கத்தையும் கொடுக்கின்றது. கையில் படைக்கருவி மனத்துள் மக்கள் நம் பக்கமிருக்கின்றார்கள் என்ற நம்பிக்கை வேறென்ன ஒரு வீரன் வெற்றி பெற?

## பங்களித்தால் என்ன பழுது?

இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்குமிடையே நடந்து முடிந்த போர்களிலேயே, கார்கில் போரில்தான் இந்தியா முழு வெற்றி பெற்றிருக்கிறதென்கிறார் முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர். சொல்லப் போனால், இந்தியாவின் திறமை போர்முனையில் மட்டுமன்றி, அயலுறவு முறையிலும் பெருவெற்றி பெற்றுள்ளதென்று பெருமிதத்தோடு கூறலாம்.

இந்தியத் தலைமை அமைச்சர் மாண்பமை அட்டல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் கார்கில் போரில் களமிறங்கிப் போர் புரியவில்லையே தவிர, இந்தப் போரை நடத்திய முறையில் படைத் தலைவர்களைப் போன்றே அவர் வகுத்த அரசியல் வியூகமும் நல்ல பலனையே கொடுத்திருக்கிறது. ஒருமுனையில் படையும், மறுமுனையில் அரசு உத்தியால் (ராஜதந்திரம்) தலைமை அமைச்சரவர்களும் வென்றிருக்கின்றார்கள் என்றால், அதை எவரும் வெற்றுப் புகழுரை என்று விலக்கிவிட முடியாது

மாண்பமை தலைமை அமைச்சர் வாஜ்பாய் அவர்கள் என்னதான் செய்துவிட்டார்? என்று எளிதாகக் கேட் போர்க்குப் புரியும்படிக் கூறுவதானால், சுருக்கமாக இரண்டு செயல்களைக் கூறலாம். முதலாவது, கார்கிலில் ஊடுருவியிருந்த பாக்கிஸ்தான் படையினரும், அவர்தம் துணைகொண்டு உள்ளே நுழைந்த ஆப்கன் கூலிப்படையின ரும், தாங்கள் தங்கித் தாக்குவதற்கு ஏதுவாகவும், எதிர்ப்

பவரை தாக்குவதற்குப் பாதுகாப்பாகவும் இடங்களைத் தேர்ந்தெடுத்து நிலை கொண்டிருந்தார்களல்லவா?

ஆமாம். முன்பே கூறினீர்கள்.

அவர்களை வெளியேற்றுவதென்பது அவ்வளவு எளிதல்ல என்பதை நமது படை. பேரிழப்பிற்குப் பின்னரே உணர்ந்தது. அவர்கள் ஊடுருவி பதுங்குக் குழிகளை அமைத்துக் கொண்டிருப்பதோ மலைமுகடு; அவர்களை வெளியேற்ற வேண்டிய நம் படைகளோ கீழே இருந்து பதினெட்டாயிரம் அடிவரை சறுக்கும் பனிபடர்ந்த பாறை களைப் பற்றி அங்குலம் அங்குலமாக ஏறிச்செல்லவேண்டும். அவர்களுடைய பதுங்குமிடமும் துல்லியமாகத் தெரியாத நிலை. இப்படிப்பட்ட சூழலில், நம் தரப்பில் ஆளிழப்பை மட்டுப்படுத்தவும், இலக்கை அடையவும், தரைப்படைக்குப் பக்க துணை இன்றியமையாதது என்று எடுத்துரைத்து விமானப் படையைக் களமிறக்கக் கோரியபோது நமது பாதுகாப்புக் குழு அதற்கு மறுத்துவிட்டதல்லவா ?

ஆமாம். முன்னரே கூறினீர்கள்.

மீண்டும் நம் படைத் தலைவர் வி. பி. மாலிக் நிலைமையை விளக்கியபோது, தலைமை அமைச்சர் வாஜ்பாய் அவர்கள்தான், 'சரி' என்று அனுமதியளித்தவர். கடந்த இருபத்தேழு ஆண்டுகளுக்குப்பின் நமது விமானப் படை போர்ச் செயலில் ஈடுபட்டதே அது யாரால்? பனிக் காலம் நெருங்கும் செப்டம்பர் மாதத்திற்குள் ஊடுருவல் காரர்களை வெளியேற்ற முடிந்ததே எப்படி? கார்கில்போர் கால எல்லையின்றி நீளவிடாமல் முடிக்க முடிந்ததே அது யாரால்? வாஜ்பாய் அவர்கள் அளித்தஅனுமதியாலல்லவா?

இன்னொன்று என்ன தாத்தா?

சொல்கிறேன். ஊடுருவல்காரர்களுக்குத் தேவையான தளவாடங்கள், ஆட்கள், வெடிப் பொருட்கள், உணவு எல்லாம் எல்லையை ஒட்டி பாக்கிஸ்தான் அமைத்திருந்த முகாம்களிலிருந்துதான் அனுப்பப்பட்டு வந்தது என்று கூறினேன் அல்லவா?

ஆமாம். சொன்னீர்கள். அதைத் தடுத்து ஊடுருவல் காரர்களின் வலிமையைக் குறைத்தால்தான் நம் படைகள் மேலே செல்ல எளிதாகும் என்றும் கூறினீர்கள்.

இப்படி உதவிகள் வருவதை நம் எல்லைக்குள் நின்று கண்காணித்துத் தடுப்பதற்குப் பதில் எல்லை தாண்டிச் சென்று அவர்களது முகாமையே அழித்துவிட்டால் வேலை விரைவாகவும், எளிதாகவும் முடிந்துவிடுமல்லவா? அதனால் பாக்கிஸ்தானுக்குள் நுழைந்து தாக்க அனுமதிக்க வேண்டு மென்றது நம் படை. மாண்புமிகு இராணுவத் துறை அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ்கூட ஒருமுறை இதைக் கூறி பாக்கிஸ்தானை எச்சரித்தார். ஆனால் நமது தலைமையமைச்சர் அவர்களோ, எக்காரணம் கொண்டும் நமது படை எல்லைக் கோட்டைத் தாண்டவே கூடாது என்று கண்டிப்பான ஆணை பிறப்பித்து விட்டார்.

''போங்க தாத்தா! வாஜ்பாய் ஏன் அப்படிக் கூறினார்? நம் நாட்டிற்குள் பாக்கிஸ்தான் நுழைந்திருக்கும்போது, பதிலுக்கு நம் படை நுழைந்தால் என்ன தப்பு?'' என்றான் மணிவண்ணன்.

மணிவண்ணா! உன்னைப்போல்தான் பலரும் எண்ணி னார்கள்? அப்படிச் செய்திருந்தால் அது பெருந் தவறாகிப் போயிருக்கும். நம்மைக் கடித்த நாயை நாம் திருப்பிக் கடித்த கதையாகி இருக்கும்.

என்ன தாத்தா சொல்கிறீர்கள்? புரியவில்லையே? என்றாள் மலர்.

நாம் பாதையில் செல்லும்போது ஒரு வெறி நாய் நம்மைக் கடிப்பதாக வைத்துக் கொள்வோம். அதற்காக நாம் அந்த நாயைப் பதிலுக்கு நாம் திருப்பிக் கடிப்போமா?

அப்படி யார் தாத்தா செய்வார்கள்? என்றாள் மலர்.

கல்லாலோ. கழியாலோதான் அடிப்போம் என்றான் மணி.

அதைத்தான் செய்தார் வாஜ்பாய் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒரு குற்றத்திற்கு, இன்னொரு குற்றம் பதிலாகி விடாது.

விளக்கமாகக் கூறுங்கள் தாத்தா என்றாள் மலர். இப்படிக் கூறினால் புரிந்து கொள்வீர்கள் என்று நினைக்கின்றேன். இரண்டு வீட்டாரின் தோட்டங்கள் ஒன்றையொட்டி மற்றொன்று. ஒரு தோட்டத்துக் காரருக்குக் கொஞ்சம் ஆசை அதிகம். ஆசை உந்த, அவர் அடுத்தவர் தோட்டத்தில் ஓரடி தன் பகுதிக்குள் வருமாறு வேலி அடைக்கிறார். அடுத்தவர் சும்மா வா இருப்பார்? என் தோட்டத்தில் நீ வேலி அடைக்கிறாய். தள்ளிப் போ! என்று கூறுகிறார். வாய்ச் சொல் மிக கையோங்கும் நிலை உருவாகிறது. தன் நிலத்தில் அத்து மீறுகிறானே என்று ஒருவருக்கு அதிகமாக சினம் உண்டாகிறது. இவர் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் அடுத்தவர் கருமமே கண்ணகி வேலியைக் கட்டுகிறார். மண்ணுக்குரியவர் வேலியைப் பிடுங்கி எறிகிறார்.

அது சரிதானே தாத்தா?

அதுவரை சரிதான். அதற்கும் மேலாகச் சென்று அவரைத் தாக்கினால்...?

அவரும் திருப்பி அடிப்பரர்—மண்டை உடையும் மருத்துவமனைக்குச் செல்ல நேர்ந்திருக்கும்? என்றான் மணி. போலீஸ்! அது வராதா? என்றாள் மலர்.

அதுதான் நடந்தது. அத்து மீறிய வரை அடித்து விட்டார். மண்டை உடைந்தது. தன் உரிமையைக் காத்துக் கொள்ளத் தாக்கியவர் இப்போது குற்றவாளியாகி விட்டார். அத்து மீறியவர் குற்றமற்றவராகி விட்டார். தாக்கியவர் சிறைக்குள்— தாக்கப்பட்டவர் வெளியில் இருப்பார்களில்லையா? பார்ப்பவர்கள் என்ன கூறுவார்கள்? "என்ன இருந்தாலும் இவர் இப்படி அடித் திருக்கக் கூடாது. எவ்வளவு ரத்தம்! எத்தனை பெரிய காயம்? உயிர் போயிருந்தால் என்ன ஆவது? இப்படித்தான் ஊர்வாய் உரைக்கும். அவர் அத்துமீறிய செயல் அனுதாபத்தில் அடியோடு மறந்தே போய் விடும். அடிப்பட்டவர் சார்பாகவே ஊர் பேசும்—சட்டம் வாதிடும்—நீதி கேட்கும். இதை அப்படியே இந்தியா—பாக்கிஸ்தான் எல்லைச் சிக்கலோடு பொருத்திப் பாருங்கள் அடித்தவர் நிலைக்கு நம் இந்தியா ஆட்படுவது அழகாகுமா? என்று கேட்டார் தாத்தா.

ஆமாம் தாத்தா! எல்லை தாண்ட வேண்டாமென்று நமது பிரதமர் கூறியது சரிதான் என்றாள் மலர்.

இன்று உலக நாடுசுளும் இந்தியாவைப் பார்த்து இப்படித்தான் கூறுகின்றன. அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் நமது தன்னடக்கத்தை வெளிப்படையாகவே புகழ்ந்திருக்கிறார். பாக்கிஸ்தான் ஆதரவு என்ற நிலையிலிருந்து அமெரிக்காவின் பார்வையில் நடுநிலை தோன்றியிருக்கிறது. பாக்கிஸ்தானின் குற்றச் செயல் பளிச்சென

பல நாடுகளுக்கும் தெரிகிறது. இந்தியா மேற்கொண்டிருந்த் நடவடிக்கைககள் தவிர்க்க முடியாதவை என்ற உணர்வு தோன்றுகிறது. பாக்கிஸ்தானைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்திய நிலை. ஊடுருவல்காரர்களைத் திரும்ப அழைத்துக் கொள்ளும்படி பாக்கிஸ்தானை நட்பு நாடுகளே நெருக்கின.

ஆமாம் தாத்தா முன்பு கூட கூறினீர்கள் என்றான் மணி.

இது பாக்கிஸ்தானுக்கு ஏற்பட்ட படைத் தோல்வியை விட பெரிய தோல்வியாகி விட்டது. உலகம் இன்று பார்க்கும் பார்வையே வேறு! அதில் மதிப்பு மறைந்து வெறுப்புத்தான் வெளிப்படுகிறது. இது வெற்றியல்லவா? வாஜ்பாய் அவர்கள் எடுத்த சரியான முடிவின் பலனல்லவா? இதை வாஜ்பாய் அவர்களின் வெற்றி என்று கூறாமல், வேறு எப்படிக் கூறுவது?

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும். (குறள் 466)

என்னும் குறளுக்கு வாய்பாய் அவர்களின் முடிவுகளே பொருத்தமான பொருளுரை அல்லவா?

# களம் - 4

## துப்பாக்கி வீரர் சஞ்சய்குமார்

வறட்சியின் சாயல் படிந்த இராசபுதன மண்ணுக்கு ஒரு மரபுண்டு. வெள்ளையர்கள் ஆண்ட நாள் தொட்டே இம் மண்ணின் மைந்தர்கள் படையில் சேர்வதில் பேரார்வமும் பெருமையும் கொண்டிருந்தவர்கள்.

இமாச்சல பிரதேசம், பிலாஸ்பூர் மாவட்டத்தில் ஒரு சிறு கிராமம் பாக்கெய்ன். இந்தச் சிறிய கிராமத்தில் பிறந்த ஒருவர் கார்கில் போரில் வீரச் செயல் புரிந்து, அதற்கென அரசின் மிகப்பெரிய வீர விருதான பரம்வீர் சக்கரவை இந்திய விடுதலை நாளில் பெறுவார் என எவருமே எண்ணி இருக்கவில்லை. அந்த வீர மகன் தன் கிராமத்து வீட்டில் தான் ஓய்வில் இருந்தார். அப்போது அவரை, அவருள் அடங்கிக் கிடக்கும் வீரம் விளைத்த வினையாற்றலை ஊரார் உணர்ந்திருக்கவில்லை. 1999 - ஆகஸ்ட் 15 ஆம் நாளைய செய்தித் தாள்களில் தங்கள் கிராமத்து படைவீரர் சஞ்சய்குமாரின் படம் இடம் பெற்றிருப்பதைப் பார்த்த போது, அனைவருமே வியப்புக்குள் விழிகளை உலர்த்திக் கொண்டார்கள்! ஏன்? எதற்கு? எப்படி? என்று அடுக்கடுக்கான வினாக்கள் அவர்களுடைய வேலைக்கே வேலி கட்டித் தடுத்து விட்டது.

வாடகை உந்து ஓட்டியான சஞ்சய்குமார் படையில் சேர ஒரு முறை இரு முறையல்ல மூன்று முறை முயன்றே படையில் சேர்ந்தார். புறக்கணிக்கப் படுபவர்களே கூட சூழ்நிலை உந்துதலால் புரட்சி விரர்களாகி விடுவர் என்பதற்கு சஞ்சய்குமார் நல்ல எடுத்துக் காட்டு. வெளியே பேசப் படாமற் போயிருந்தாலும் சஞ்சய் குமாரின் வீரச்செயல், படையினரிடையே பரவலாகப் பெருமையாகப் பேசப் பட்டது.

கார்கில் களம். ஜம்மு & காஷ்மீர் - 13வது படைப்பிரிவு செயலில் இறக்கப்படுகிறது. அத் துப்பாக்கிப் படையில் ஒருவர் தான் சஞ்சய் குமார். நடவடிக்கையில் ஈடுபட்ட போது இவருடைய அணியினர் வீழ்த்தப்பட்டனர். சஞ்சய் தனித்து விடப்பட்ட நிலை. நேரந்தான் ஒரு வீரனுக்குச் செயற்கரிய செய்யும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது, அந்த வாய்ப்பு அப்போது சஞ்சய்குமாருக்குக் கிடைத்தது. தனியொரு ஆளாக அவர் தாக்குதலைத் தொடுத்தார். பாக்கிஸ்தானியரின் பதுங்கு குழியை நோக்கி முன்னேறுகிறார். எதிரிகளின் குண்டு இவருடைய காலையும் இடுப்பையும் தாக்குகிறது. அந்த நிலையிலும் அஞ்சாமல் எதிரியிடமிருந்தே ஒரு விசைத் துப்பாக்கியைப் பறித்துச் சுடுகிறார். இவருடைய தாக்குதலில் முன்னரே பதுங்குகுழி பாழானது. இப்போது எஞ்சிய எதிரிகளும் இவரால் சுட்டு வீழ்த்தப்பட்டு விட்டார்கள். சஞ்சய்குமாருக்கு மிக உயர்ந்த படை விருதை அளித்தது பொருத்தந்தானே?

## யோகேந்திர சிங் யாதவ்

குமாவாவோன் படைப் பிரிவில் பணியாற்றி, தற்போது விவசாய வேலையைப் பார்த்து வரும் இராம் கரன் யாதவ்—சாந்த்ரா இணையரின் மகன் யோகேந்திர சிங்

யாதவ். படையில் சேரும் ஆர்வத்தால் பள்ளிப் படிப்பை விட்டவர். பத்தொன்பதே வயதான இந்த இளம் வீரர், ஆற்றலை வெளிப்படுத்தி அருஞ்செயல் புரிந்து மிக உயர்ந்த படை விருதான பரம்வீர் சக்கரத்தைப் பெற்றிருக்கிறார். காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட யாதவுக்கு மருந்தைவிட இந்த வீரப்பதக்கம் காயத்தை ஆற்றவல்லது.

பதினெட்டாவது கைக்குண்டு எறியும் படையில் இடம் பெற்று கார்கில் போர்முனைக்குச் சென்ற யோகேந்திர சிங் புலி மலையைக் கைப்பற்றும் போரில் தோள் பட்டையில் பலமான காயம்பட்டார். தொங்கும் தோளை, வாரால் தூக்கிக் கட்டிக் கொண்டு அஞ்சாமல் அயராமல் போரிட்டார். இவர் கண்ணெதிரிலேயே ஆறுதோழர்கள் குண்டடி பட்டு வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்கள். ஒரு தோள் உதவாத நிலை! எதிரியின் துப்பாக்கியை மின்னல் வேகத்தில் பறிக்கின்றார். படசட வெனச் சுடுகிறார். தன் தோழர்களைக் கொன்ற கொலைக்காரர்களைப் பழிவாங்கி விட்டார். கையெறி குண்டை வீசி எதிரியின் பதுங்கு குழியையும் அழித்தார். மலையில் உருண்டார். மருத்துவ மனையில் இவர் உடலில் ஒன்றிரண்டல்ல, பதினைந்து துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த காயங்களுக்கும் மருந்திட வேண்டியிருந்தது.

## கேப்டன் விக்ரம் பத்ரா

ஜம்மு—காஷ்மீர் 13-வது துப்பாக்கிப் படைப் பிரிவில் இடம்பெற்று கார்கில் போர் முனைக்குச் சென்றவர் இவர். 5140 முனையைக் கைப்பற்றுவதில் காட்டிய வீரம் எதிரிகளையே மலைக்க வைத்தது. இமாச்சல பிரதேசத்தில் பாலம்பூர் ஐம்பதாயிரம் மக்களைக் கொண்ட ஊர். இப்

போது அந்த நகரின் மக்களின் உள்ளங்களில் இடம்பெற்று பெருமையோடு பேசப்படுவது இவர் பெயர்தான். பிறக்கும் பிள்ளைகளுக்கு விக்ரம் என்றே பெயரிட விரும்புமளவுக்கு விளைவை ஏற்படுத்தியிருக்கிறது இவருடைய வீரச்செயல். எம்.பி.ஏ. தேர்வு எழுத வேண்டுமென்று எண்ணிய இளைஞர்களை ஐ.எப்.ஏ தேர்வு எழுதும் ஆர்வலர்களாக மாற்றும் அளவுக்கு இவர் விளைந்த வீரம் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

4875—முனையைக் கைப்பற்றும் போரில் காயமடைந்த தன் அணி வீரரைக் காப்பாற்ற முனைந்தபோதுதான் இவர் கொல்லப்பட்டார்.

இந்திய அரசு இவருடைய வீரத்தை மெச்சி முதல்தரப் படைவிருதான பரம் வீர் சக்ரா விருதை வழங்கிப் பெருமைப்படுத்தியிருக்கிறது.

மறமும் அறமும் மறக்கக்கூடாதவை அல்லவா. செயற்கரிய செய்தவருக்கு அரசு சிறப்புச் செய்திருக்கிறது? நன்றி காட்டும் நற்செயல் தொடரட்டும்.

## கேப்டம் ஙெ. கெங்குருஸ்

நாகாலாந்தில் கோகிமாவிலிருந்து ஓகாவிற்குச் செல்லும் வழியில் உள்ள சிற்றூர் நெர்கெமா. போர்க்குணம் கொண்ட மக்கள் வாழும் ஊர். பிரிவினை வாதிகளின் அச்சுறுத்தலுக்கஞ்சி தம் மக்கள் இந்தியப் படையில் சேர யாரும் அனுமதிப்பதில்லை. அரசு அலுவலகத்தில் கடைநிலை ஊழியராகப் பணியாற்றிய நெய்செலி கெங்குருஸ், தன் மகன் நெகிஜாகு கெங்குருஸ் படையில் சேருவதை விரும்பவில்லைதான். ஆனாலும் அவர் படையில் சேர்ந்தார். 2- இராசபுத்தானா துப்பாக்கிப் படைப் பிரிவில்

பணியாற்றியபோது தமிழக வீரர் ராபர்ட்சன் என்பவரும் இவருடன் கோகிமாவில் பணியாற்றி வந்தார். இளம் வீர ரான செங்குருசிடம் தந்தை பாசத்தோடு பழகியவர் கர்னல் ராபர்ட்சன். குடும்பத்தாரும் நண்பர்களும் இவரை நெபு என்றும் வடநாட்டுப் போர் வீரர்கள் 'நிம்பு சாப்' என்றும் அழைப்பார்கள்.

கார்கில் களத்திற்குச் செல்லுமாறு செங்குருசுக்கு கட்டளை வந்தது. திராஸ் பகுதியில் ஒரு முனையைக் கைப்பற்றும் பணி இவர் பங்கு பெற்றிருந்த அணிக்குக் கொடுக்கப் பட்டிருந்தது.

செங்குருசும், அதிரடிப் படை வீரர்களும் மலை முனை யில் ஒரு கயிற்றைக் கட்டி அதன் மூலம் உச்சிக்குச் செல்ல முடிவெடுத்தனர். வழுக்குப் பாறை குளிரோ—10⁰ கீழே உயரமோ 16000 அடி அந்தப் பணியைத்தானே முன் வந்து ஏற்றுக் கொண்டார். காலனிகளைக் கழற்றி எறிந்தார். மேலே சென்றார். எதிரிகளை நோக்கி விசைத் துப்பாக்கியை இயக்கினார். எதிரிகள் திருப்பித் தாக்கினர். குண்டு மழை பொழிந்தனர். நான்கு ஊடுருவல்காரர் களைக் கொன்று தீர்த்தார்.

எதிரிகளின் துப்பாக்கிக் குண்டு செங்குருசை தாக்கு கிறது. செங்குத்தான முகட்டிலிருந்து இருநூறடி பள்ளத் தில் விழுகிறார் செங்குருசு. அதன்பின், இவர் ஏற்படுத்திக் கொடுத்த அடித்தளத்தால் இவருடைய அணி அந்த முனையைக் கைப்பற்றுகிறது.

வெற்றிக்குப்பின் இவரைத் தேடுகிறார்கள். அந்தோ செங்குருசு பிணமாகக் கிடக்கக் கண்டு வாய்விட்டு அலறு கிறார்கள். "நிம்பு சாகேப்! இது உன்னுடைய வெற்றி!" உண்மைதானே இல்லையென்றால் உயர்ந்த விருதான மகாவீர் சக்ரா விருது வழங்கப்பட்டிருக்குமா?

## கேப்டன் மனோஜ் குமார் பாண்டே

லக்னோ கோமதி நகரில் வசிக்கும் ஜி.சி. பாண்டேயின் மகனான இவர் கார்கில் போர்க்களத்தில் எதிரிகளின் பதுங்கு குழியைத் தகர்த்தது, அவர்களை நிலைகுலயச் செய்தார்.

எதிரிகளோ இவரை விட்டு வைக்கவில்லை. மலையுச்சியில் தனி ஆளாக நின்று இவர் காட்டிய வீரத்தைப் பாராட்டி இந்திய அரசு இவருக்கு பரம்வீர் சக்ர விருதை வழங்கியிருக்கிறது.

போரில் பாண்டே மாண்டார்! ஆனால் புகழாக அவர் நின்று விட்டார். இழப்பீடாக இவர் குடும்பத்திற்குப் பத்து லட்சம் நிதி வழங்கப்பட்டது. வீட்டு மனை, நிதி என்றெல்லாம் வந்து குவிந்தாலும், மனோஜ் படையில் சேர்ந்ததன் பயனாக அவருக்கு வழங்கப்பட்ட பரம்வீர் சக்ர விருதையே பாண்டே குடும்பத்தார் உயர்வாக கருதுகிறார்கள்.

## லான்ஸ் நாயக் சபிபுல்லா

சென்னை, பொறியியல் பிரிவின் பதினான்காவது அணியில் லான்ஸ் நாயக்காகப் பணியாற்றியவர் சபிபுல்லா. கார்கில் போரைத் தொடர்ந்து ஊடுருவல்காரர்கள் லஜோரி, பூஞ்ச், கார்கிலில் கண்ணி வெடிகளைப் புதைத்திருந்தார்கள். அவற்றை அப்புறப் படுத்தும் பணியில் ஈடுபட்டு நம் படைகளுக்கு வழி ஏற்படுத்திக் கொடுக்க முனைந்திருந்த போது, கண்ணி வெடிக்கே பலியாகி விட்டார்.

தருமபுரி மாவட்டம், காவேரிப் பட்டணம் இ.பி.எஸ். நகரைச் சேர்ந்த சபிபுல்லா 1981-ஆம் ஆண்டு படை

வீரராகச் சேர்ந்தார். மூன்று குழந்தைகளுக்குத் தந்தை யான இவருடைய மனைவிக்கு அரசு ஐந்து லட்சம் நிதியுதவி அளித்துள்ளது. இந்த வீரரை ஈன்றளித்த சையத்உமர்—சர்புன்னிசா இணையரை நாடு நன்றியோடு நினைவு கூறும்.

## சிப்பாய் ஜஸ்விந்தர்சிங்

கார்கிலில், இந்தியப் படையின் தாக்குதல் வேகம் பெற்றிராத வேளை! மே-21-ஆம் நாள். புலிமலையில் ஊடுருவல்காரர்களின் நிலை குறித்து ஆராயச் சென்ற குழுவில் இவரும் ஒருவர். இவரை நோக்கி ஊடுருவல்காரர் கள் கடுமையாகச் சுடுகிறார்கள். இரண்டு தொடைகளிலும் குண்டு நுழைந்து விட்டது. அந்த நிலையிலும் சோர்வடை யாமல் தொடர்ந்து முன்னேறுகிறார். தொடர்ந்து பாய்ந்த எதிரியின் குண்டுகள் அவர் ஆவியைப் போக்கி விட்டன.

பதினேழு வயதில் படையில் சேர்ந்த ஜஸ்வந் சிங்கின் இருபது வயதே ஆன இளம் மனைவி குர்தியால் கௌர் கணவரைக் காணக் காத்திருந்தார். அந்தோ! அவர் உடலைத் தாங்கிய பேழைதான் அவர் இல்லத்திற்கு வந்தது.

## ஹவில்—மேஜர் யஷ்வீர்சிங் தோமார்

டோலோலிங் முகடைக் கைப்பற்றும் போரில் தொண்ணூறு வீரர்கள் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களுள் பதினொரு வீரர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் வியப்பாக இருக்கிறதல்லவா? ஆனால் அதுதான் உண்மை. உத்தரபிரதேசம், பாக்பத் மாவட்டம் சிஞ்சியில்

வாழும் அகவை முதிர்ந்த (70) கிர்வார்சிங் தோமார் தனது இரண்டு பிள்ளைகளைப் படைக்குக் கொடுத்திருக் திருக்கிறார். இருவரில் ஒருவர்தான் தோமார். இவருடைய அணியில் பாதிக்கும் மேற்பட்டோர் காயமடைந்து விட்டார்கள். அந்தக் கொடுமையைப் பொறுக்க முடியாத தோமார்—தன் அணியினரிடமிருந்த எறி குண்டுகளைத் திரட்டினார். எதிரிகளை நோக்கி எறிந்தார். அவர்களுடைய பாதுகாப்பு மறைவிடத்தைத் (பங்கர்) தகர்த்தெறிந்தார். அந்த வெற்றியோடு வீர மரணமடைந்தார். பத்து, பதினொன்று வயதே ஆன அவருடைய மகன்கள் உதய், பங்கஜ், களம் காண காலத்தை எதிர் நோக்கி இருக்கிறார்கள்.

## லெப்டினென்ட் கெய்ஷிங் கிளிஃபோர்டு நங்குரம்

கால்பந்து விளையாட்டுக் குழுத்தலைவராக விளங்கிய நங்குரம் தந்தை மணிப்பூர் காசி இனத்தவர். தாய் நாகா இனத்தவர், 1997-ஆம் ஆண்டு படையில் சேர்ந்தவர் கார்க்கில் போர் முனைக்குச் சென்றார். 4812. முனையைக் கைப்பற்றும் பொறுப்பு இவருடைய அணிக்கு ஒப்படைக்கப் பட்டிருந்தது. ஒருவார சண்டைக்குப் பின் ஜூலை முதல் நாள் இரவு ஐம்பதே மீட்டர் நெருக்கத்தில் இருந்தனர். நம் படையினர் எதிலும் முன்னிற்கும் இயல்பு இவருடையது. அந்த இயல்பு இங்கேயும் முன் வந்தது. எதிரிகளின் பதுங்குக் குழியை நோக்கிப் பாய்ந்தார். கையெறி குண்டை வீசினார். பகைவர்களோடு கை கலந்து போரிட்டார். ஒன்றை அழித்து விட்டு அடுத்ததை நோக்கி முன்னேறினார்

அப்போது எதிரிகளின் குண்டு இவருடைய மார்பைத் துளைத்தது. வீரம் தாய் நாட்டு மண்ணில் விதையாகப் புதைந்தது.

நங்குரம் இராணுவக் கல்லூரியில் பயின்ற காலத்திலேயே தன்னை விடப் பெரிய குத்துச் சண்டை வீரனை வீழ்த்திய பெருமைக்குரியவர். அப்போதே அடிபணியாத வைராக்கியம் அவருக்கிருந்தது. ஜூலை முதல் நாள் இரவும் அதுதான் நிகழ்ந்தது, அவர் பணியவில்லை. மடிந்தார். அவர் வீரத்தால் தந்தை கெய்ஷிங் பீட்டருக்கும் பெருமை தான். மகன் மகாவீர்சக்ர விருதைப் பெற்றதால் அது இரட்டிப்பானது. ஆனால்-உள்ளத்தில் ஊடுருவிய இழப்பு இன்னல், விலகாமல் வேர் விட்டு விட்டதே!

## சௌரவ் காலியா

ஹிமாச்சல் பிரதேசத்தின் பாலம்பூர் மண்ணின் மைந்தர். மே 14-ஆம் நாள் கார்கிலில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த அணியில் இவரும் ஒருவர். இந்த அணியினரைத்தான் பாக்கிஸ்தான் படையினர் பிடித்துச் சென்று இருபது நாட்களுக்கும் மேலாக வைத்திருந்து கொடுமை படுத்திக் கொன்று விட்டார்கள். உலகம் ஒப்புக் கொண்ட போர் நெறிகளையெல்லாம் புறக்கணித்த பாக்கிஸ்தான் படை, விலங்கைப் போல் இவர்களைக் கொன்றிருக்கிறார்கள். பிறப்புறுப்பு கூட சேதப்படுத்தப்பட்டிருந்தது. ஊடுருவல் பற்றி உருப்படியான தகவல் தந்தது. இந்தப் படைக் குழுதான். இவரைப் போன்றே தகவல் திரட்டச் சென்ற

லெப்டினென்ட் அமித் பரத்வாஜ் காணாமற் போய் விட்டார்.

தாய் நாட்டிற்காக உயிர் தந்த வீரர்கள் பலர். மேஜர் விவேக் குப்தா, எம். கே. பாண்ட, லெப்டினென்ட் கே. பட்டாச்சாரியா, கேப்டன் ஆதித்திய மிஸ்ரா, வீரர் அப்துல் சத்தார், லேன்ஸ் நாயக் முகேஷ் குமார், லெப்டினென்ட் ஹஷிமுதீன், கேப்டன் அனுஜ் நய்யார். இப்படி எண்ணற்றோர் மறைந்தும் மறையாத மாவீரர்கள்.

## மானம் காக்கும் போரில் ஊனம் ஆனவர்கள்

களம்பட்ட வீரர்களைப் போன்றே, காயம் பட்ட வீரர்களும் இரங்கலுக்குரியவர்களே! அவர்களை எதிர்காலம் வினாக் குறியோடு விரைத்துப் பார்க்கிறது. களத்தில் காட்டிய துணிவை இவர்களால் காலத்திடம் காட்ட முடியவில்லை. சிலரிடம் அச்சம் ஊடுருவல் நடத்தியிருக் கிறது. கைகால் முடமாகிப் போன அந்த வீரர்களின் போர்வலி, களம் காண முடியாத கையறு நிலை கண் கலங்கச் செய்கிறது. குமுகாயத்தின் பார்வை கோணலாகி நோக்குமோ என்றும் சிலர் கவல்கின்றனர்.

இருபத்தெட்டே வயதான லான்ஸ் நாயக் இராஜேந்திர சிங் ராஜபுத்தனா துப்பாக்கிச் சுடும் பிரிவில் களம் சென்று, தன் காலை இழந்திருக்கிறார். பிறக்கப் போகும் பிள்ளை தன் தந்தையோடு ஓடிப் பிடித்து விளையாட முடியாதே!

ஹவில்தார் துர்க்சிங். இவரும் அதே படைப் பிரிவில் களம் சென்று காலை இழந்திருக்கிறார். இனி துப்பாக்கி ஏந்த முடியாதென்ற எண்ணம் இவரை ஈட்டியாகக் குத்து கிறது. மனைவி, மூன்று மக்களன்றி சொத்து என்று எதுவு மில்லாத இவரது எதிர் காலம் மங்கிக் கிடப்பதாக மயங்கு கிறார்.

நேபாளியான இருபத்தெட்டு வயதான சிப்பாய் லோக் பகதூர் லாமாவும் கார்கில்போரில் காலை இழந்து விட்டார். இரண்டு குழந்தைகளின் எதிர்காலம் தன்னைப் போல் முட மாகி விடக் கூடாதென்ற அக்கறையால், காலத்தின் அறை கூவலை நம்பிக்கையோடு ஏற்க அணியமாகிறார்.

நாயக் கிருஷ்ண குமார் யாதவ் கார்கில் போரில் கை, காலை இழந்து விட்டார். இதற்கு உயிரையே இழந்திருக் கலாமென நொந்து போகிறார். முப்பத்து நான்கு வயதாகி விட்டது. பெற்றோர், மனைவி, மூன்று மக்கள் என்ற பெரிய குடும்பம். இழப்போ பெரிது. எதிர்காலமே மன உறுதியோடு போர் தொடுப்பதாக உள்ளது.

(ரைஃபிள்) துப்பாக்கி வீரர் முகமது ஆசாத் இருபத்தேழு வயதுதான். திருமணம் உறுதி செய்யப்பட்டிருந்தது. போரில் கையை இழந்துவிட்டார் எனத் தெரிந்ததும் பெண் வீட்டாரின் உறுதி தளர்ந்துவிட்டது. உத்திரப் பிரதேசம் காஜியாபூரில் உள்ள ஒன்பது பேர் கொண்ட குடும்பத்தை இவரது ஊதியந்தான் ஊட்டி வளர்த்து வந்தது. இப்போது துண்டிக்கப்பட்ட இவருடைய கையே வினாவாகி விழிகளைக் கலங்கச் செய்கிறது.

துப்பாக்கிப் படைப்பிரிவில் பணியாற்றி கையை இழந்திருக்கும் **வீரர் ஆஷிக் ஹுசைன் கான்,** வறுமை துரத்தப் படையில் சேர்ந்தவர். குழந்தைகளையும், உடன்பிறந்தவரையும் படிக்க வைக்க பணம் வேண்டுமே என்று தன்னிரக்கப்படுகிறார். எதிர்காலத்தை எண்ணி மலைத்துப் போகிறார்.

இமாசலப் பிரதேசத்தைச் சேர்ந்த குண்டு எறியும் படைவீரர் கிரனேடியர் **தீலிப் சிங்குக்கு** இருபத்திரண்டு வயது தானாகிறது. கார்கிலில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் ஒரு கண், ஒரு கையை இழந்திருக்கிறார். பத்து பேர் கொண்ட பெரிய குடும்பம். தன்னை மறந்து குடும்பத்திற்காகக் கவலைப் படுகிறது இவர் மனம்.

**சிப்பாய் அவொஜொலி அங்காமி** கையை இழந்தாலும் நம்பிக்கையை இழக்கவில்லை இவர். நாகா படைப்பிரிவில் (ரெஜிமென்ட்) துப்பாக்கி வீரர். கார்கில் போர் இவருடைய இரண்டு கைகளையுமே எடுத்துக் கொண்டு விட்டது. நாகாலாந்துக் காரரான அங்காமி தனது இருபதாவது வயதில் படையில் சேர்ந்தார். ஒன்பது பேர்களைக் கொண்ட குடும்பம் இவருடைய ஊதியத்தைக் கொண்டு நாட்களை நகர்த்திக் கொண்டிருந்தது. இனி? பார்க்கிறேன் எதிர்காலத்தையும் ஒரு...! ஐயோ அவை இரண்டுமே அல்லவா இழக்கப்பட்டிருக்கிறது!

12 ஜாட் படைப் பிரிவு **சிப்பாய்** ஸ்ரீ **பகவான்!** கார்கில் போரில் 12000 அடி உயரத்தில் ஒரு நிலையைக் கைப்பற்றும் நடவடிக்கையின் போது ஏற்பட்ட விபத்தில் இவருடைய

முதுகுத் தண்டு முறிந்து போயிற்று விளைவு இவருடைய உடல் செயல்படவில்லை. ஆனால் அவர் மனம்?

கூர்க்கா துப்பாக்கிப் படைப் பிரிவில் கார்கில் களத்திற்குச் சென்றவர் ஹவில்தார் சுனில் குமார் லிம்பு போரில் ஏற்பட்ட முதுகுத் தண்டுக் காயத்தால் இடுப்புக்குக் கீழே உடல் இயங்கவில்லை. என்றாலும் வாழ்ந்து காட்டித் தானே ஆக வேண்டும்?

பேராசை, மாந்தநேயம் மரித்த தன்மை இவற்றால் ஏற்படும் போர் எத்துணை கொடியது? உயிரிழந்தவர்களை விட, ஊனமுற்றுக் காலமெல்லாம் வாழ்வோடும் வறண்ட மனத்தவர்களோடும் போராட இவர்களுக்கெல்லாம் மன உறுதியையும், உதவிகளையும் வழங்கும் பொறுப்பு, அவர்கள் எந்த நாட்டுக்காகத் தத்தம் உடலுறுப்புக்களை இழந்தார்களோ, அந்த நாட்டு மக்களுக்கே உண்டு.